# உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும்

# உலக நெருக்கடியும் அமைதிக்கான வழிமுறையும்

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இமாம்,
வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் ஐந்தாவது கலீஃபா
ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்களின்
சொற்பொழிவுகள் மற்றும் கடிதங்களின் தொகுப்பு

இஸ்லாம் இன்டர் நேஷனல் லிமிடெட்

**ULAGANERUKKADIYUMAMAIDIKKAANAVAZHIMURAIYUM**

**Tamil Translation of the book**

**'World Crisis and the Pathway to Peace'** (English)

**A Compilation of Speeches and Letters of**

# Hadhrat Mirza Masroor Ahmad[aba]

**Imam and the Head of the worldwide Ahmadiyya Muslim Jama'at**

**Fifth successor to the Promised Messiah[as]**

First Edition : 2015 (1000 Copies)

Second Edition : 2017 (5000 Copies)

Published by : Noor-ul- Islam Department
Qadian, Punjab 143 516

Printed at : Fazl-e-Umar Printing Press-Qadian, 143 516
Distt Gurdaspur, Punjab, India

Copy right : Islam international Publication Ltd

**Noor-ul-Islam Toll Free No : 1800-3010-2131**

**Tamil Toll Free No : 1800-425-40000**

**For further information please visit**

**www.alislam.org**

**www.ahmadiyyamuslimjamaat.in**

**www.ahmadiyyamuslimjamaat.in/feedback**

# பொருளடக்கம்

நூலாசிரியரைப் பற்றி ........................................ 9
முன்னுரை ........................................ 13
அறிமுகம் ........................................ 15

# சொற்பொழிவுகள்

1. உலக நெருக்கடியின் மீது இஸ்லாமிய பார்வை ........................ 21
2. ஒருவரது நாட்டுப் பற்று மற்றும் அன்பு பற்றிய இஸ்லாமிய போதனைகள் ........................................ 41
3. அணு ஆயுதப் போரினால் ஏற்படும் பேரழிவுகளும் முழுமையான நீதியின் அத்தியாவசியத் தேவையும் ........................................ 59
4. நாடுகளுக்கிடையே நல்லுறவுகள் மட்டுமே அமைதிக்கான வழியாகும் ........................................ 83
5. உலகளாவிய ஒற்றுமையே அமைதிக்கான திறவுகோல் ........ 113
6. முஸ்லிம்கள் தங்களை மேற்கத்திய சமூகத்தினருடன் இணைத்துக் கொள்ள முடியுமா?........................................ 135
7. இஸ்லாம் அமைதியையும், கருணையையும் கொண்ட ஒரு மார்க்கம் ........................................ 155
8. உலக அமைதி இக்காலத்தின் முக்கியத் தேவையாகும் ......... 175
9. உலக சமாதானமும் பாதுகாப்பும்-இக்காலத்தில் நெருக்கடி தரும் பிரச்சனைகள் ........................................ 191
10. உலகளாவிய சீர்கேட்டின் காலத்தில் சமாதானத்தின் திறவுகோல்கள் ........................................ 207

# உலக தலைவர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்கள்


1. புனித 14-வது போப் பெனடிக்ட் அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம் ............ 227
2. இஸ்ரேலிய பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதம் ............ 235
3. ஈரான் இஸ்லாமிய கொள்கை அரசின் அதிபருக்கு எழுதப்பட்ட கடிதம் ............ 241
4. அமெரிக்க அதிபருக்கு எழுதப்பட்ட கடிதம் ............ 247
5. கனடா நாட்டின் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதம் ............ 253
6. இரு புனித பள்ளிவாயிலகளின் காப்பாளர் சவூதி அரேபிய மன்னருக்கு எழுதப்பட்ட கடிதம் ............ 259
7. சீன மக்கள் குடியரசின் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதம் .......... 265
8. பிரட்டன் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதம் ............ 271
9. ஜெர்மன் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதம் ............ 277
10. ஃபிரான்ஸ் குடியரசின் அதிபருக்கு எழுதப்பட்ட கடிதம் ........... 283
11. மாட்சிமை மிகு பிரிட்டன் மகாராணி மற்றும் காமன் வெல்த் கூட்டமைப்பின் தலைவிக்கு எழுதப்பட்ட கடிதம் ............ 291
12. ஈரான் இஸ்லாமிய குடியரசின் உச்ச தலைவருக்கு எழுதப்பட்ட கடிதம் ............ 299
13. ரஷ்ய கூட்டமைப்பின் அதிபருக்கு எழுதப்பட்ட கடிதம் ............ 305

சொற்களின் விளக்கம் ............ 311



Ḥaḍrat Mirza Masroor Ahmad
Khalīfatul-Masīḥ V[aba]

# நூலாசிரியரைப் பற்றி

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஆகிய ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வலுவான உதவியைக் கொண்டு அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் ஆன்மீகத் தலைவர் ஆவார்கள். இவர்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கொள்ளுப் பேரரும் அன்னாரின் ஐந்தாவது கலீஃபாவும் ஆவார்கள்.

இவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்த ரப்வா என்ற நகரில் 1950-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ஆம் நாள் மர்ஹூம் மிர்ஸா மன்ஸூர் அஹ்மது மற்றும் நாஸிரா பேகம் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார்கள். பாகிஸ்தானில் ஃபைஸலாபாதிலுள்ள விவசாய பல்கலைக் கழகத்தில் தனது முதுகலைப் பட்டப் படிப்பை முடித்தவுடன், இஸ்லாமிய பணிகளுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்தார்கள். இவர்களின் தன்னலமற்ற தொண்டு செய்யும் ஆர்வம் இவர்களை 1977-ல் ஆப்பிரிக்காவிலுள்ள கானாவுக்கு கொண்டு சென்றது. அங்கு பல ஆண்டுகள் அஹ்மதிய்யா முஸ்லிம் பள்ளிக்கூடங்களில் முதல்வராகப் பணியாற்றினார்கள். 'சலாகா' (**Salaka)-**வில் அஹ்மதிய்யா முஸ்லிம் உயர்நிலைப் பள்ளியை துவக்க உதவினார்கள். அப்பள்ளியின் முதல்வராகவும் முதல் இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார்கள்.

இவர்கள் 2003-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 22-ஆம் தேதி உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் கலீஃபாவாக ஆயுட்காலத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து, 200-க்கும்

மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள பல கோடி உறுப்பினர்களைக் கொண்ட ஓர் உலகளாவிய ஆன்மீக அமைப்பிற்கு, ஆன்மீக மற்றும் நிர்வாகத் தலைவராக இருக்கிறார்கள். இவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பின் அனைத்து பதிப்புத் துறைகள் வாயிலாகவும், ஊடகங்கள் வாயிலாகவும் இஸ்லாத்தின் சமாதானத் தூதை உலக அளவில் பரப்பும் பிரசாரத்தை மேற்கொண்டார்கள். இவர்களது தலைமையில் அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் உலக அளவிலான கிளைகளும், இஸ்லாத்தின் உண்மையான சமாதான போதனைகளை பிரதிபலிக்கும் பிரச்சாரங்களை முனைப்புடன் மேற்கொண்டன. உலக அளவில் அஹ்மதி முஸ்லிம்கள் **‘அமைதி’** என்னும் பிரசுரங்களை கோடிக்கணக்கில் முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம்கள் அல்லாத மக்கள் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் விநியோகித்தனர். மேலும் சர்வ சமய மாநாடுகளை நடத்தியும், திருக்குர்ஆனின் கண்காட்சிகளை நடத்தியும் அதன் உண்மையான புனித போதனைகளை சமர்ப்பித்தார். இந்தப் பிரச்சாரம் உலகளாவிய ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தது; மேலும் இஸ்லாம் ஓர் அமைதி மார்க்கம் எனவும், தான் வசிக்கும் நாட்டின் மீது பற்று, மனித குலத்திற்கு சேவை செய்தல் ஆகியவற்றைப் பறைசாற்றுகிறது எனவும் அவை கூறின.

2004-ஆம் ஆண்டு கலீஃபா வருடாந்திர தேசிய அமைதி மாநாட்டைத் துவக்கினார்கள். இதில் அனைத்து தரப்பு மக்களும் பங்கேற்று, அமைதி மற்றும் மத நல்லிணக்கத்தை நிலைநாட்டுவதற்கான பல யோசனைகளைப் பகிர்ந்து கொண்டார்கள். ஒவ்வோர் ஆண்டும் இந்த மாநாடு பல அமைச்சர்களையும், அரசியல்வாதிகளையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், மத தலைவர்களையும் மற்றும் முக்கிய பிரமுகர்களையும் ஈர்க்கிறது.

கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் உலக அளவில் பயணம் மேற்கொண்டு மனித நேயம் மேம்படுவதற்கு தொண்டு செய்கிறார்கள். கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தலைமையில் அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயம், உலகின் பின் தங்கிய பகுதிகளில் பல பள்ளிக்கூடங்களையும், மருத்துவமனைகளையும் கட்டியுள்ளது. அவை உயர்தரமான வசதிகளை வழங்குகின்றன.

கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வலுவான உதவியைக் கொண்டு அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் தற்போது இங்கிலாந்திலுள்ள இலண்டனில் வசிக்கிறார்கள். உலகளாவிய அஹ்மதி முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைவர் ஆவார்கள். அமைதி மற்றும் இரக்கம் என்ற புத்துணர்வு செய்தியுடன் இஸ்லாத்தின் தாக்கத்தை ஏற்படுத்த அரும்பாடுபடுகிறார்கள்.

# முன்னுரை

இஸ்லாத்தின் நோக்கமே மனிதனுக்கு தன் அளவிலும் அவனைப் படைத்தவன் அளவிலும் அமைதியை அடைவதற்கான வழியை கற்றுத் தருவதேயாகும். 1400 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மனித குலத்திற்கு இந்த போதனையின் முறையை தொடக்கி வைத்தார்கள். அவர்கள் இந்தத் தூதுச் செய்தியை முடிந்த அளவுக்கு பரவலாக சென்றடைய எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார்கள். மேலும் அவர்களின் காலத்தில் இருந்த பெரும் மன்னர்களுக்கும் தலைவர்களுக்கும் குறிப்பாக தனிப்பட்ட முறையில் கடிதங்களை எழுதினார்கள். இஸ்லாத்தின் தூய போதனைகளை அவர்கள் பின்பற்றினால் அவர்கள் அமைதி மற்றும் நற்பேற்றினால் இரட்சிக்கப்படுவார்கள் எனக் கூறினார்கள்.

இக்காலத்தில், இந்த யுகத்தில் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் முன்னறிவிப்பின்படி, இறைவன் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலைஹிஸ் ஸலாம்) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான, மிகவும் நன்றியுணர்வுள்ள ஓர் ஊழியராக அனுப்பி, மக்கள் மனதில் இறைநம்பிக்கையை புத்துயிர் பெறச் செய்து படிப்படியாக அவர்களின் மனதில் இறை அன்பை வளர்த்து, அதன் மூலமாக அவர்கள் அமைதி வழியைக் கற்று அழிவை தவிர்க்கச் செய்தான்.

ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் ஐந்தாவது கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வலுவான உதவியைக் கொண்டு அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள், சமீப காலத்தில் உலக தலைவர்களுக்கு கடிதங்களை அனுப்பியுள்ளார்கள். இப்பணி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1400

ஆண்டுகளுக்கு முன் செய்த பணியின் தொடர்ச்சியேயாகும். கலீஃபா இறைவன் தன் அளப்பற்ற அருளாலும், கருணையாலும் மக்கள் மனதில் இந்தத் தூதுச் செய்தியை ஏற்றுக் கொள்ள வைப்பானாக. ஆமீன்.

**முனீருத்தீன் ஷம்ஸ்**

**கூடுதல் வகீலுத் தஸ்னீஃப்**

**இலண்டன்**

# அறிமுகம்

உலகம் ஒரு அதிர்ச்சியான காலங்களைக் கடந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வாரமும் உலக பொருளாதார சீரழிவு தொடர்ந்து பல்கிப் பெருகி ப்யங்கரமான ஆபத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. இரண்டாம் உலகப் போருக்கு சற்று முன்னுள்ள காலத்திற்கேற்ப உள்ள சூழல் தற்போது உள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இவை முன் எப்போதுமில்லாத வேகத்தில் இந்த உலகத்தை ஒரு பயங்கரமான மூன்றாம் உலகப் போருக்கு இட்டுச் செல்வதாக இருக்கிறது. இது கட்டுக்குள் இல்லாமல் செல்வதாக பரவலாக ஓர் 12எண்ணம் உள்ளது. யாராவது ஒருவர் தலையிட்டு தீர்க்கமான ஒரு வழிகாட்டுதலை தர மாட்டார்களா என்றும், அது தங்களது மனதையும் இதயத்தையும் கவரும் விதமாக, அமைதிக்கான வழியை நோக்கி செல்லும் ஒரு பாதை உள்ளது என நம்பிக்கையூட்டும் விதமாக இருக்குமா? என்றும் மக்கள் எண்ணுகிறார்கள். அந்த அணு ஆயுதப் போர், மோசமான விளைவுகளை உருவகி யாரும் எண்ணிப் பார்க்க முடியாத பயங்கரமான அழிவுகளை ஏற்படுத்தக் கூடியது.

இதோ, இந்த நூலின் வாயிலாக உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் ஆன்மீகத் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் வழங்கிய **‘வழிகாட்டுதல்களின் தொகுப்பை’** வழங்குகிறோம். மேலும் அவர்கள் கடந்த பல ஆண்டுகளாக நிகழ்வுகள் முடிவுறா நிலையில், விளைவு எதை நோக்கி செல்கிறது என்பதையும், உலகம் இந்த நிலைக்கு எப்படி வந்தது என்பதையும் சிந்திக்கும்படி, அவர்கள் உலகிற்கு துணிவுடன் கூறினார்கள். மேலும் எப்படி அழிவைத் தவிர்க்கலாம் என்று இந்த ‘உலக கிராமத்தில்’ வாழும் மக்கள் அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான வழிமுறையை வகுக்க வேண்டும் என விளக்கி இருக்கிறார்கள். உலகிற்கு அமைதிக்கான உத்தரவாதம் வேண்டும் என்றால் ஒரே வழி, பணிவு மற்றும் நீதியை நிலை நாட்டுவதுதான் என கலீஃபா அவர்கள் வெளிப்படையாக அறிவிக்கிறார்கள். மேலும் தாழ்மையுடன் இறைவன் பக்கம் திரும்ப வேண்டும் என்றும் மனிதன் மனித நேயம் உள்ளவனாக வேண்டும் என்றும் பலம் வாந்தவர்கள் பலவீனமானவர்களை மரியாதையுடனும் நேர்மையாகவும் நடத்த வேண்டும். ஏழைகளும் நன்றியைக் காட்டுபவர்களாகவும் உண்மை வழியைப் பின்பற்றுபவர்களாகவும் இருக்க வேண்டும். மேலும்

அனைத்து மக்களும் பணிவுடனும், முழு ஈடுபாட்டுடனும் படைத்தவன் பக்கம் திரும்ப வேண்டும் எனவும் கூறுகிறார்கள்.

அவர்கள் எல்லாருக்கும் கவனமூட்டுவது என்னவென்றால், இந்த அழிவிலிருந்து மீள்வதற்கான வழி நாடுகள் தங்களுக்கிடையேயுள்ள தொடர்புகளில் நீதியை அவசியம் கடைபிடிக்க வேண்டும். அவர்களுக்கிடையில் ப்கைமை என்றாலும் கூட அவர்கள் கண்டிப்பாக நீதியை நிலைநாட்ட வேண்டும். ஏனெனில் எதிர்காலத்தில் ஏற்படும் பகைமை நீங்க இது ஒன்றுதான் வழி என கடந்த கால வரலாறு நமக்குப் பாடம் புகட்டி இருக்கிறது. இதுதான் நிரந்தர அமைதியை உருவாக்குகிறது. திருக்குர்ஆனின் இத்தகைய போதனைகளைத்தான் கலீஃபா அவர்கள் உலக நாடுகளின் தலைவர்களுக்கு எழுதியுள்ள கடிதங்களில் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

“உங்களைப் பள்ளிக்கு செல்ல விடாது தடுத்தார்கள் என்ற பகைமையினால் நீங்கள் வரம்பு மீறாதீர்கள். நேர்மையிலும் இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுங்கள். பாவம், வரம்பு மீறுதல் ஆகியவற்றில் ஒருவருக்கொருவர் உதவாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் தண்டனை கடினமானது.” ***(திருக்குர்ஆன் அதிகாரம் 5 வசனம் 3)***

## இஸ்ரேல் நாட்டு பிரதமருக்கு கலீஃபா அவர்கள் எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

“எனவே உலகை, உலகப் போரின் பிடியில் கொண்டு செல்வதை விட உலக அழிவிலிருந்து காப்பாற்ற முடிந்த அளவு முயற்சி செய்யுங்கள் என்பதே எனது வேண்டுகோள். பிணக்குகளை படைபலத்தால் தீர்ப்பதை விட பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க முயல வேண்டும். இதன் மூலம் நமது வருங்கால சந்ததியினருக்கு ஊனம், இயலாமையை பரிசளிப்பதை விட வளமான ஒளிமயமான எதிர்காலத்ததை பரிசளிக்கலாம்.’’

## கலீஃபா அவர்கள் ஈரான் இஸ்லாமிய குடியரசின் அதிபருக்கு உறுதியாகக் கூறியது இதுவாகும்:

“தற்போது உலகில் பெரும் போராட்டங்களும், அமைதி யின்மையும் இருக்கின்றன. சில இடங்களில் சிறிய அளவிலான போர்கள் நடக்கின்றன. இன்னும் சில இடங்களில் வல்லரசு நாடுகள் அமைதியை நிலைநாட்டுகிறோம் என்று போர்களை நடத்துகின்றன.

ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுக்கு உதவுதல் அல்லது எதிர்த்தல் என்ற வகையில் செயல்படுகின்றன. ஆனால் நீதியின் தேவைகள் முழுமையாகவில்லை.**இப்போதைய உலக சூழ்நிலையை மிகவும் வேதனையுடன் காண்போமென்றால், இன்னுமோர் உலகப் போருக்கான அடிக்கல் முன் கூட்டியே நாட்டப்பட்டுள்ளதைக் காணலாம்.''**

**கலீஃபா அவர்கள் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு இவ்வாறு கூறினார்கள்:**

" இரண்டாம் உலகப் போர் ஏற்பட முக்கியக் காரணங்கள் 'லீக் ஆஃப் நேஷன்ஸ்' தோல்வியடைந்ததும், 1932-ல் உருவான பொருளாதார நெருக்கடியும்தான் என்பதை அனைவரும் நன்கறிவோம். இப்போதுள்ள பொருளாதார சீரழிவுக்கும் 1932-ல் ஏற்பட்டதற்கும் அநேக ஒப்புமை உள்ளதாக பிரபல பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர். அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சினைகள் சிறிய நாடுகளுக்கிடையில் மீண்டும் போரின் பக்கம் இழுத்துச் செல்வதை நாம் பார்க்கிறோம். உள்ளுக்குள் உள்ள வெறுப்பு, மன நிம்மதியின்மை ஆகியவை இந்த நாடுகளுக்குக்கிடையில் பரவலாக இருக்கிறது. இது அரசில் உள்ள அதிகார வர்க்கத்தினருக்கு சில அதிகாரங்களை வழங்கும். இவர்கள் நம்மை உலகப் போருக்கு இட்டுச் செல்வார்கள். சிறிய நாடுகளுக்கிடையில் ஏற்படும் மோதல்களை அரசியல் மற்றும் நிர்வாகத் திறமையின் மூலம் களையாவிடால், இது உலகில் பல நாடுகளில் புதிய குழுமங்களையும், கூட்டணிகளையும் ஏற்படுத்திவிடும். இதுதான் மூன்றாம் உலகப் போர் வெடிக்க முதல் காரணமாக அமையும். எனவே உலகின் முன்னேற்றத்தின் பக்கம் கவனம் செலுத்துவதை விட இந்த அழிவிலிருந்து இவ்வுலகைக் காப்பாற்ற மிக முக்கியமாக அவசர, அவசியமாக நாம் முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்பதே நான் நம்பும் விஷயம். மனித சமுதாயம் அதன் ஏக இறைவனை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே அவசர தேவையாக உள்ளது. அவன்தான் நம்மைப் படைத்தவன். மனித குலம் உயிர் வாழ அவன்தான் உத்தரவாதம். இல்லையெனில் இவ்வுலகம் தன்னைத்தானே மிக விரைவில் அழிவை நோக்கி வேகமாக இட்டுச் செல்லும்."

**சீன மக்கள் குடியரசின் பிரதமர் வென் ஜியாபாவ் (Wen Jiabao)** அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

“எனது வேண்டுகோள், உலக நாடுகளின் தலைவர்கள் அறிவுப்பூர்வமாக நடந்து, சிறிய அளவிலானபிரச்சினைகள் வெடித்து உலக அளவிற்கான பிரச்சனை ஆகாமல் நாடுகளுக்கும், மக்களுக்குமிடையே விரோதத்தை ஏற்படுத்த அனுமதிக்க வேண்டாம் என்பதேயாகும்.”

**பிரிட்டன் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:**

“வெறுப்பின் நெருப்பை ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு திசையிலும் நம்மால் முடிந்த அளவு முயன்று அணைக்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். இதில் நாம் வெற்றி கண்டுவிட்டால் மட்டுமே வருங்கால சந்ததியினருக்கு ஒளிமயமான எதிர்காலத்தின் உத்தரவாதத்தை வழங்க முடியும். அவ்வாறில்லாமல் **இந்த செயலில் நாம் தோல்வி கண்டு விட்டால் அணு ஆயுதப் போரால், நமது செயலால் வருங்கால சந்ததியினர் மோசமான விளைவுகளை சந்திப்பார்கள்** என்பதில் நம் மனதில் எந்த சந்தேகமும் வேண்டாம். உலகப் பேரழிவுக்கு இட்டுச் செல்கின்ற தம் முன்னோர்களை அவர்கள் மன்னிக்க மாட்டார்கள். வளரும் நாடுகளிலும் வளர்ந்த நாடுகளிலும் **தனது தாக்கத்தை செலுத்தும் நாடுகளில் பிரிட்டனும் ஒரு நாடு** என்பதை உங்களுக்கு மீண்டும் நினைவூட்டுகின்றேன். நீங்கள் விரும்பினால் சமத்துவம், நீதி ஆகியவற்றை நிறைவு செய்வதன் மூலம் இந்த உலகை நீங்கள் வழி நடத்தலாம். **உலக அமைதியை நிலை நாட்டுவதில் பிரிட்டனும், உலக வல்லரசுகளும் தங்களது கடமையை ஆற்ற வேண்டும்.** எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கும் வல்லரசு நாடுகளுக்கும் இந்த செய்தியை புரிய வைப்பானாக.’’

எனவே எங்களது மனமார்ந்த வேண்டுகோள் இதுதான். இதில் தொகுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் ஆபத்தான காலத்தில் இப்போதுள்ள மனித குலத்திற்கு வழிகாட்டியாக நிரூபணமாகும். நீதி, பணிவு ஆகிய கொள்கைகளின்படி நடந்தும், இறைவன் பக்கம் திரும்பினால் மட்டுமே மனிதன் முடிவில்லா அமைதியினால் அருள்பாலிக்கப்படுவான். ஆமீன்.

**–பதிப்பாளர்**

# சொற்பொழிவுகள்




# உலக நெருக்கடியின் மீது
# இஸ்லாமிய பார்வை

---

## பிரிட்டன் பாராளுமன்றத்தின்
## மக்கள் சபை 2008 –ஆம் ஆண்டு







Ḥaḍrat Mirza Masroor Ahmad, Khalīfatul-Masīḥ V[aba] delivering the keynote address at the House of Commons






Official tour of the House of Commons, courtesy of Justine Greening MP




Seated: Lord Avebury (Liberal Democrats Spokesman for Foreign Affairs), Rt. Hon. Hazel Blears MP (Secretary of State for Communities and Local Government); Ḥaḍrat Mirza Masroor Ahmad, Khalīfatul-Masīḥ V[aba]; Justine Greening MP (Shadow Treasury Minister); Gillian Merron MP (Foreign Office Minister); Councillor Louise Hyams (the Lord Mayor of Westminster). Standing: Jeremy Hunt MP (Shadow Culture Minister); Rafiq Hayat (National Amir AMA UK); Virendra Sharma MP, Rt. Hon. Malcolm Wicks MP (Former Minister at Department for Business, Enterprise and Regulatory Reform); Rob Marris MP, Simon Hughes MP (President of the Liberal Democrats Party); Martin Linton MP; Alan Keen MP.

# முன்னுரை

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள், பிரிட்டன் பாராளுமன்றத்தின் மக்கள் சபையில் 22.10.2008-ஆம் ஆண்டு ஆற்றிய வரலாற்று சிறப்பு மிக்க சொற்பொழிவு

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைமையகமான ஃபஸ்ல் பள்ளிவாயில் அமையப் பெற்றுள்ள மக்களவைத் தொகுதியான புட்னியின் பாராளுமன்ற உறுப்பினர் 'ஜஸ்டின் கிரீன்ஸ்' அவர்கள் அஹ்மதிய்யா கிலாஃபத்தின் நூற்றாண்டு விழா நிறைவை கவுரவிக்கும் வகையில் இந்த வரவேற்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்றவர்களில், ஜில்லியன் மேரோன் எம்பிரைட் ஹானரபுள் ஹேஸல் பிளியர்ஸ் M.P, ஆலன் கீன் M.P டோமினிக் கிரீவ் M.P, சைமன் ஹுயுக் M.P, லார்ட் எரிக் ஏவுர்ரி மற்றும் கண்ணியமிக்க பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் மற்றும் உயர் கல்வியாளர்கள் அடங்குவர்.

# உலக நெருக்கடியின் மீது இஸ்லாமிய பார்வை

அளவற்ற அருளாளனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்......

ஒரு மார்க்க அமைப்பின் தலைவருக்கு சில வார்த்தைகளை இங்கு கூற அனுமதித்துள்ள கண்ணியமிக்க விருந்தினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கவுரவ உறுப்பினர்கள் ஆகிய அனைவருக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜஸ்டின் கிரீனிங் அவர்களுக்கும் நன்றி கூற நான் கடமைப்பட்டுள்ளேன். அவர் தமது தொகுதியைச் சேர்ந்த ஒரு சிறிய மார்க்க அமைப்பிற்காக – அதன் கிலாஃபத் நூற்றாண்டையொட்டி இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதற்காக பெருமுயற்சி எடுத்துள்ளார். இது அவரது பெருந்தன்மையும், திறந்த மனப்பான்மையையும் தனது தொகுதியைச் சார்ந்த பல்வேறு சமூகத்தவரின் உணர்வுகளைக் குறித்த அவரது அக்கறையையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஒரு சிறிய மார்க்க அமைப்பாக இருந்தாலும், இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை பின்பற்றிவாறு அதன் பிரதிநிதியாக அது விளங்குகிறது. மேலும் இங்கிலாந்தில் வாழ்கின்ற ஒவ்வோர் அஹ்மதியும் தனது நாட்டின் மீது மிகுந்த பற்று கொண்டு அதனை நேசிக்கின்ற குடிமகனாவார் என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். இது, **‘நாட்டுப் பற்று இறைநம்பிக்கையின் ஓர் அம்சமாகும்’** என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களுக்கு வழங்கிய அறிவுரையின் விளைவாகும்.

இக்காலத்தில் மஸீஹ் ஆகவும், வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியாகவும் நாங்கள் நம்புகின்ற அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் இஸ்லாத்தின் போதனைகளை விரிவாக

விளக்கியும் வலியுறுத்தியும் கூறியுள்ளார்கள். தமது வாதத்தைக் குறித்து அறிவிக்கும்போது இறைவன் தம் மீது இரண்டு பொறுப்புகளை சுமத்தியிருப்பதாகவும் அவற்றுள் ஒன்று, இறைவனுக்குத் தர வேண்டிய உரிமை எனவும், மற்றொன்று இறைவனது படைப்பினங்கள் மீதான உரிமை எனவும் கூறினார்கள். மேலும் படைப்பினங்கள் மீதான உரிமைகளை நிறைவேற்றுவதே மிகக் கடினமும் நுட்பமுமான சவாலாகும் என்றும் அவர்கள் கூறினார்கள்.

ஒருவேளை நீங்கள் கிலாஃபத்தைப் பற்றி அச்சப்படலாம். இது போன்ற தலைமையை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றில் ஏற்கனவே நிகழ்ந்ததைப் போன்ற போர்கள் நிகழ்த்தப்படும் காலம் மீண்டும் வந்து விடுமோ என்றும் நீங்கள் நினைக்கலாம். ஆனால் நான் உங்களுக்கு உறுதி தருகிறேன். இஸ்லாத்தின் மீது இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டபோதிலும், அஹ்மதிய்யா கிலாஃபத் எப்போதும் உலகில் அமைதி, நல்லிணக்கத்தின் கொடியை ஏந்திச் செல்லக் கூடியதாகவே அறியப்படும். இதன் உறுப்பினர்கள், தாம் வாழும் நாட்டிற்கு நன்றியுணர்வு மிக்கவர்களாகவே விளங்குவார்கள்-இன்ஷா அல்லாஹ். அஹ்மதிய்யா கிலாஃபத் மஸீஹ் மற்றும் மஹ்தியின் பணிகளை தொடந்து செய்வதை தனது கடமையாகக் கருதுகிறது. எனவே கிலாஃபத்தைக் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வலியுறுத்திக் கூறிய, மேற்கூறிய அந்த இரண்டு கடமைகளை நிறைவேற்றுவதன் பக்கமே இந்த கிலாஃபத் அதன் உறுப்பினர்களின் கவனத்தைத் திருப்புகின்றது. அதன் மூலம் உலகில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்ட முயற்சி செய்கிறது.

நேரத்தைக் கருத்தில் கொண்டு இப்போது நான் எனது உரையின் பக்கம் வருகின்றேன். கடந்த சில நூற்றாண்டுகளை நாம் நடுநிலையுடன் ஆய்வு செய்து பார்த்தால், அப்போது நடைபெற்ற போர்கள் மார்க்கப் போர்கள் அல்ல என்றும் அவை புவி-அரசியல் காரணங்களுக்காக நிகழ்த்தப்பட்ட போர்களே என்றும் நாம் அறிவோம். இன்றும் கூட நாடுகளுக்கிடையே மோதல்களும், பகைமையும் ஏற்படக் காரணம் பிரதேச, அரசியல், மற்றும் பொருளாதார நலன்களேயாகும்.

இன்றைய நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு பார்க்கும்போது உலக நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதார

மாற்றங்கள் ஓர் உலகப் போரை ஏற்படுத்தி விடுமோ என நான் அஞ்சுகிறேன். ஏழை நாடுகள் மட்டுமல்ல பணக்கர நாடுகள் கூட இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே அழிவின் விளிம்பிலிருந்து மனிதகுலத்தைப் பாதுகாக்க வேண்டியதும், இப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு தேட வேண்டியதும் வல்லரசு நாடுகளின் கடமையாகும்.

வளர்ந்த நாடுகளின் மீதும் வளரும் நாடுகளின் மீதும் தனது செல்வாக்கை உபயோகிக்க முடிந்த நாடுகளுள் பிரிட்டனும் ஒன்றாகும். எனவே நீங்கள் நினைத்தால் நடுநிலையுடன் நீதியின் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் இவ்வுலகிற்கு நீங்கள் வழிகாட்ட முடியும். பிரிட்டன் பல நாடுகளை ஆட்சி செய்த சமீப கால வரலாற்றை நாம் பார்க்கும்போது, நீதியையும், மார்க்க சுதந்திரத்தையும் நிலைநாட்டியதில் ஓர் உயர்ந்த முன்மாதிரியை அது விட்டுச் சென்றிருப்பதை நாம் காண முடிகிறது. குறிப்பாக, இந்திய-பாகிஸ்தான் துணைக் கண்டத்தில் பிரிட்டனின் இந்த முன்மாதிரியை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் காண முடிந்தது. நீதி மற்றும் மார்க்க சுதந்திரத்தை நிலைநாட்டுவது தொடர்பாக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கைகளை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் புகழ்ந்து கூறியுள்ளார்கள்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் விக்டோரியா மகாராணியின் வைர விழாவின்போது அவருக்குத் தமது நல்வாழ்த்துக்களை தெரிவித்ததுடன், இஸ்லாத்தின் தூதுச் செய்தியையும் தெரிவித்தார்கள். மேலும் பிரிட்டிஷ் அரசாங்கம் நடுநிலையுடன் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வருவதால் அதன் மீது அருள் புரியுமாறு இறைவனிடம் பிரார்த்தனை செய்து வந்தார்கள்.

எனவே பிரிட்டிஷ் அரசு நீதியைக் கடைபிடிப்பதை நாங்கள் நன்றியுடன் நினைவு கூர்ந்தே வந்துள்ளோம் என்பதை எங்களின் வரலாறு தெரிவிக்கின்றது. மேலும் வருங்காலத்திலும் மார்க்க விஷயங்களில் மட்டுமல்லாமல் எல்லாத் துறைகளிலும் நீதியை நிலைநாட்டுவதை பிரிட்டன் தனது கொள்கையாகக் கொண்டிருக்கும் என நாங்கள் நம்புகிறோம். மேலும் நீங்கள் உங்கள் கடந்த கால நற்பண்புகளை ஒருபோதும் மறக்க மாட்டீர்கள் என நாங்கள் நம்புகிறோம்.

இன்று உலகில் கிளர்ச்சியும் அமைதியின்மையும் காணப்படுகின்றன. சில பகுதிகளில் சிறிய அளவிலான போர்கள் வெடிப்பதையும், அப்பகுதிகளில் அமைதியை நிலைநாட்டி விடுவோம் என்று கூறி வல்லரசுகள் தலையிட்டு வருவதையும் நாம் பார்க்கின்றோம். நீதியின் எதிர்பார்ப்புகளை முறையாக நிறைவேற்றாவிட்டால் இந்த சிறிய போர்களின் தீப்பிழம்புகள் பரவி முழு உலகையும் சூழ்ந்து விடும். எனவே அழிவிலிருந்து உலகைக் காப்பாற்றுமாறு உங்களை நான் பணிவுடன் வேண்டுக் கொள்கிறேன்.

தற்போது நான் உலகில் அமைதி தழைத்திட இஸ்லாம் கூறும் போதனைகளைக் குறித்து அல்லது அந்தப் போதனைகளின் ஒளியில் உலகில் அமைதியை எவ்வாறு நிலைநாட்டுவது என்பது குறித்து இஸ்லாம் கூறும் அறிவுரைகளை சுருக்கமாக எடுத்துரைப்பேன். இந்த அறிவுரைகளை முதலில் பெற்றுக் கொண்ட முஸ்லிம்கள் ஏற்று நடப்பதுடன், உலக நாடுகளும், அரசுகளும், வல்லரசுகளும் இந்த அறிவுரைகளின்படி நடக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும். முன்னெப்போதும் நினைத்திராத அளவுக்கு இன்று உலகம் மிகவும் சுருங்கி, ஓர் உலகளாவிய கிராமம் (Global Village) ஆக மாறி விட்டது. இந்நிலையில் அமைதியை நிலைநாட்டுவதற்கு ஏதுவாக மனித உரிமைகளை பாதிக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் விஷயத்தில் நாம் நமது பொறுப்பை உணர வேண்டும். இத்தகைய முயற்சிகள் அனைத்தும் நேர்மையையும், நீதியின் அனைத்து தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டிருப்பது கட்டாயமாகும்.

இன்றுள்ள பிரச்சனைகளுள் ஒன்று, நேரடியாக இல்லையென்றாலும்,மறைமுகமாக மார்க்கத்தின் காரணத்தால் எழுந்துள்ளது. சில முஸ்லிம்கள் சட்டத்திற்கு விரோதமாக மார்க்கத்தின் பெயரால் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தி, முஸ்லிம் அல்லாத இராணுவத்தினரையும், அப்பாவி மக்களையும், குழந்தைகளையும் கூட கொடூரமாக கொன்று விடுகின்றனர். மேலும் அதே நேரத்தில் அப்பாவி முஸ்லிம்களையும், குழந்தைகளையும் கூட அவர்கள் கொடூரமாகக் கொலை செய்கின்றனர். இந்தக் கொடூரச் செயல்களை இஸ்லாம் அங்கீகரிக்கவில்லை.

சில முஸ்லிம்களால் செய்யப்படும் இந்தக் கொடூரமானசெயல்களின் காரணமாக முஸ்லிம் அல்லாத நாடுகளில்

இஸ்லாத்தைக் குறித்த தவறான எண்ணம் உருவாகியுள்ளது. சமுதாயத்தின் ஒரு பகுதியினர் இஸ்லாத்திற்கு எதிராக வெளிப்படையாகவே பேசுகின்றனர். வேறு சிலரோ வெளிப்படையாகப் பேசாவிட்டாலும் தமது உள்ளத்தில் இஸ்லாத்தைப் பற்றி நல்லெண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை. இவ்வாறு மேற்கத்திய நாடுகளிலும் முஸ்லிம் அல்லாத பிற நாடுகளிலும் உள்ள மக்களின் உள்ளங்களில் முஸ்லிம்களைக் குறித்த அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்தச் சூழல் மாறுவதற்குப் பகரமாக, சில முஸ்லிம்களின் நடத்தையின் காரணமாக சில நேரங்களில் முஸ்லிம் அல்லாதவர்களின் எதிர்நடவடிக்கை மிகவும் மோசமானதாகி விடுகின்றது.

இந்தத் தவறான எதிர்நடவடிக்கைக்கு முதன்மையான உதாரணமாக இஸ்லாத்தின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், இஸ்லாத்தின் தூய மறைநூலான திருக்குர்ஆன் மீதும் செய்யப்படும் தாக்குதல்களைக் கூறலாம். இந்த விஷயத்தில் பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், பிரிட்டனின் அறிஞர் பெருமக்கள் ஆகியோரின் நடைமுறை மற்ற நாட்டு அரசியல்வாதிகளின் நடைமுறையிலிருந்து மாறுபட்டு இருக்கிறது. (அதாவது அவர்கள் இப்படிப்பட்ட தாக்குதல்களை செய்வதில்லை). நான் அதற்காக உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது போன்று பிற மக்களின் உணர்வுகளைக் காயப்படுத்துவதால் வெறுப்பும், காழ்ப்புணர்ச்சியும் அதிகமாகுமே தவிர வேறென்ன நற்பலன் கிடைக்கப் போகிறது? இந்த வெறுப்பு சில பயங்கரவாத முஸ்லிம்களை இஸ்லாத்திற்கு விரோதமான செயல்களை செய்யும்படி தூண்டி விடுகிறது. இதனால் முஸ்லிம் அல்லாதவருக்கு இஸ்லாத்திற்கு எதிரான தமது வெறுப்பை வெளிப்படுத்த மேலும் வாய்ப்பு கிடைத்து விடுகிறது.

எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஆழமாக நேசிக்கின்ற, பயங்கரவாத சிந்தனை இல்லாத முஸ்லிம்கள் (இஸ்லாத்தின் தூதர் மீது செய்யப்படும்) இந்தத் தாக்குதல்களால் மிகவும் புண்படுத்தப்படுகின்றனர். (புண்படுத்தப்படும்) இதில் முதலிடம் வகிப்பது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமையான நற்பண்புகளையும்,

இஸ்லாத்தின் அழகிய போதனைகளையும் உலகின் முன் எடுத்து வைப்பதே எங்களின் மிக முக்கியமான கடமையாகும். நாங்கள் எல்லா நபிமார்களுக்கும் (அலைஹிமுஸ் ஸலாம் – அவர்கள் அனைவர் மீதும் இறைவனின் சாந்தி உண்டாவதாக) மதிப்பளிக்கின்றோம். அவர்கள் அனைவரும் இறைவனால் அனுப்பப்பட்ட இறைதூதர்கள் என நம்புகிறோம். அவர்களுள் எவரைக் குறித்தும் மரியாதைக் குறைவாக நாங்கள் எதுவும் பேசுவதில்லை. ஆனால் எங்கள் இறைதூதர் மீது அடிப்படையற்ற, உண்மையற்ற குற்றச்சாட்டுகளை (பிறர்) கூறும்போது நாங்கள் மிகவும் துன்பமடைகின்றோம்.

இன்று உலகம் மீண்டும் பல அணிகளாய் பிரிந்து வருகிறது. பயங்கரவாதம் அதிகரித்து வருகிறது. பொருளாதார நிலைமை மோசமாகி வருகிறது. எல்லாவித வெறுப்புகளையும் களைந்து அமைதிக்கு அடித்தளமிட வேண்டிய அவசரத் தேவை ஏற்பட்டுள்ளது. இது ஒருவருக்கொருவர் எல்லாவிதமான உணர்வுகளுக்கும் மதிப்பளிப்பதன் மூலமே நடைபெற முடியும். இதை முறையாவும் நேர்மையுடனும் செய்யாவிட்டால் நிலைமை மோசமாகி, கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலைகள் உருவாகி விடும். **பொருளாதாரத்தில் முன்னேறியுள்ள நாடுகள் பின்தங்கியுள்ள நாடுகளைச் சேர்ந்த மக்களை தமது நாடுகளில் குடியேற அனுமதித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அவர்களில் பெரும்பாலார் முஸ்லிம்களாகவும் உள்ளனர்.**

உண்மையில் இந்த மக்களின் உணர்வுகளுக்கும், மார்க்க சிந்தனைகளுக்கும் கூட மதிப்பளிக்க வேண்டும் என்பதே நீதியின் எதிர்பார்ப்பாகும். இதன் மூலமாகவே மக்களின் மன அமைதியை சிதையாமல் வைத்திருக்க முடியும். தனி மனிதனின் மன அமைதி சேதப்படுத்தப்பட்டால் அதனால் சமுதாய அமைதி கெட்டு விடும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நான் ஏற்கனவே கூறியபடி இந்த விஷயத்தில் தலையீடு செய்யாமல் நீதியின் தேவைகளை நிறைவு செய்வதற்காக பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையில் இது திருக்குர்ஆன் கற்றுத் தரும் போதனையாகும். திருக்குர்ஆன் கூறுகிறது: **'மார்க்கத்தில் எவ்வித பலவந்தமும் இல்லை.'** *(திருக்குர்ஆன்2:257)* இஸ்லாத்தின்

இந்த அறிவுரை இஸ்லாம் வாளால் பரப்பப்பட்டது என்ற குற்றச்சாட்டை மறுப்பது மட்டுமல்லாமல் மார்க்கத்தை ஏற்றுக் கொள்வது மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையேயான விஷயமாகும்; அதில் நீங்கள் தலையிடக் கூடாது என்ற அறிவுரையை இஸ்லாம் முஸ்லிம்களுக்கு வழங்குகிறது. ஒவ்வொருவரும் தமது நம்பிக்கைக் கேற்ப வாழலாம். மார்க்கச் சட்டதிட்டங்களைக் கடைபிடிக்கலாம். எனினும் மார்க்கத்தின் பெயரால் செய்யப்படும் ஏதாவது ஒரு செயல் பிறருக்கு துன்பம் தரக்கூடியதாகவோ அல்லது நாட்டின் சட்டத்திற்கு எதிராகவோ இருப்பின், அதற்கு எதிராக அந்த நாடு சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியும். ஏனெனில் ஒரு கொடுஞ் செயல் சடங்கு என்ற பெயரில் எந்த மார்க்கத்தில் செய்யப்பட்டாலும் அது எந்தவோர் இறைதூதராலும் போதிக்கப்பட்டிருக்க முடியாது. இதுவே நாட்டிற்குள்ளும் சர்வதேச அளவிலும் அமைதியை நிலைநாட்டுவதற்குரிய அடிப்படை விதியாகும்.

மேலும் இஸ்லாம் எங்களுக்கு கற்றுத் தருவது என்னவெனில், ஒரு மார்க்கத்தை ஏற்றுக் கொண்டதன் காரணமாக ஒரு சமுதாயமோ ஓர் அமைப்போ அல்லது ஓர் அரசோ அநீதியாக உங்கள் மார்க்க விஷயத்தில் தலையிட்டு, பிறகு நிலைமை உங்களுக்கு சாதகமாக மாறிவிட்டால், பின்னர் அதற்கு எதிராக நீங்கள் காழ்ப்புணர்ச்சியோ, தீய எண்ணமோ ஒருபோதும் கொள்ளக் கூடாது. மாறாக, நீதியை நிலை நாட்ட வேண்டும். திருக்குர்ஆன் கூறுகிறது:

''நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடப்பதை விட்டும் தடுக்க வேண்டாம். எப்போதும் நீதியுடன் நடந்து கொள்வதே இறையச்சத்திற்கு நெருக்கமானதாகும். இறைவனுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் நன்கு அறிகின்றான்.'' *(திருக்குர்ஆன் 5:9)* இதுவே சமுதாயத்தில் நீதியை நிலைநாட்டுவதற்குரிய போதனையாகும். உங்களின் எதிரிகளின் விஷயத்தில் கூட நீதியை விட்டு ஒருபோதும் விலகி விடாதீர்கள்.

இந்த போதனை பின்பற்றப்பட்டதையும் நீதியின் எல்லா எதிர்பார்ப்புகளும் நிறைவு செய்யப்பட்டதையும் இஸ்லாத்தின் ஆரம்ப கால வரலாறு கூறுகிறது. அதற்கான பல எடுத்துக்காட்டுகளை

தற்போது நான் கூற முடியாவிட்டாலும் வரலாறு தரும் சாட்சி என்னவெனில், மக்கா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் மீது கொடுமை இழைத்த தமது எதிரிகளை மன்னித்தது மட்டுமல்லாமல் அவர்கள் தத்தமது மார்க்கத்திலேயே தொடர்ந்து வாழ்வதற்கு அனுமதி வழங்கினார்கள். இன்று பயங்கரவாதத்திற்கு எதிரான போர்களில் மட்டுமல்லாமல், எல்லாப் போர்களிலும் எதிரிகளிடமும் நீதியின் எல்லாத் தேட்டங்களையும் நிறைவு செய்வதால் மட்டுமே அமைதியை உலகில் நிலைநாட்ட முடியும். இத்தகைய அமைதியே நிலைத்து நிற்கக் கூடியதாகும்.

கடந்த நூற்றாண்டில் இரண்டு போர்கள் நடந்தன. அதற்கான காரணிகள் எதுவாக இருந்தாலும் நீங்கள் ஆழமாகப் பார்க்கும்போது ஒரேயொரு காரணி மட்டுமே மிகைத்து நிற்பதைக் காணலாம். அது என்னவெனில், முதல் சந்தர்ப்பத்தில் முறையாக நீதி செயல்படுத்தப்படவில்லை. அதன் விளைவாக அணைக்கப்பட்ட நெருப்பாகக் கருதப்பட்டது எரிந்து கொண்டேதான் இருந்தது. பின்னர் அது திடீரென்று தீப்பிழம்புகளை நீட்டி முழு உலகையும் இரண்டாம் முறையாக சூழ்ந்து கொண்டது. இன்று உலகில் அமைதியின்மை அதிகரித்து வருகிறது. நடைபெற்று வரும் போர்களும், அமைதியை நிலைநாட்டுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் இன்னும் ஓர் உலகப் போருக்கு முன்னோடியாக உள்ளன. மேலும் தற்கால பொருளாதார நெருக்கடியும் சமுதாயப் பிரச்சனைகளும் நிலைமையை மேலும் மோசமாக்குவதற்குக் காரணமாக அமையும்.

உலகில் அமைதியை நிலைநாட்ட திருக்குர்ஆன் சில பொன்னான போதனைகளை வழங்குகிறது. பேராசை பகைமையை வளர்க்கிறது என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். இது சில நேரத்தில் நாடுகளை விரிவுபடுத்துவதன் மூலமாகவோ அல்லது இயற்கை வளங்களை அபகரிப்பதன் மூலமோ அல்லது பிறர் மீது ஆதிக்கத்தை செலுத்துவதன் மூலமாகவோ வெளிப்படுகிறது. இது கொடுஞ் செயலுக்கு இட்டுச் செல்கின்றது. இந்தக் கொடுஞ் செயலானது தமது சுயநல நோக்கங்களுக்காக குடிமக்களின் உரிமைகளைப் பறித்தவாறு அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் சர்வாதிகார ஆட்சியாளர்களால் இழைக்கப் படலாம். எவ்வாறிருப்பினும் இவ்வாறு கொடுமைக்கு ஆளான மக்களின் அழுகுரலும், வேதனையும் சில நேரத்தில் வெளி உலகை நோக்கி எழுகிறது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களுக்கு ஒரு பொன்னான போதனையைத் தந்துள்ளார்கள். அது என்னவெனில், நீங்கள் துன்புறுத்தப்பட்டவருக்கும், கொடுமையிழைப்பவருக்கும் உதவி செய்யுங்கள் என்பதாகும். அநீதியிழைக்கப்பட்டவருக்கு உதவி செய்வது என்பதை எங்களால் புரிய முடிகிறது. ஆனால் துன்புறுத்துபவருக்கு உதவுதல் என்பதன் பொருள் என்ன? என்று நபித் தோழர்கள் கேட்டபோது, அவரது கைகளை கொடுமை இழைப்பதை விட்டும் தடுப்பதற்கு முயற்சி செய்யுங்கள். ஏனெனில் கொடுமையில் எல்லை மீறிச் செல்லும்போது அவர் இறைதண்டனைக்கு ஆளாவார். எனவே கருணை கொண்டு அவரைக் காப்பாற்ற முயற்சி செய்யுங்கள் என்று கூறினார்கள். இந்த போதனையை நாம் சமுதாயத்தின் சிறு அமைப்புகளில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் செயல்படுத்த முடியும். இது தொடர்பாக திருக்குர்ஆன் கூறுகிறது:

''நம்பிக்கை கொண்ட இரு சாரார் தமக்கிடையே சண்டையிட்டுக் கொண்டால் அவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்துங்கள். பிறகு அவர்களில் ஒரு பிரிவினர் வரம்பு மீறினால் அவர்கள் இறைவனின் கட்டளையின் பக்கம் திரும்பும் வரை அவர்களுடன் போர் புரியுங்கள். அவர்கள் திரும்பி விட்டால் அவர்களுக்கிடையில் நீதியையும், நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுங்கள். அல்லாஹ் நீதி செலுத்துபவர்களை நேசிக்கின்றான்.'' *(திருக்குர்ஆன் 49:10)*

இந்த போதனை குறிப்பாக முஸ்லிம்களுக்குத் தரப்பட்டிருப்பினும் இதனைக் கடைபிடிப்பதன் மூலம் உலக அளவில் அமைதியை நிலைநாட்டுவதற்கான அடித்தளம் இட முடியும். அமைதியை நிலைநாட்ட முதல் தேவையாக குறிப்பிடப்பட்டுள்ளது நீதியாகும். அமைதியை நிலைநாட்ட நீதியுடன் செயல்படும் முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்காவிட்டால் வரம்பு மீறும் பிரிவினர் சமாதானத்திற்கு இணங்கும் வரை அனைவரும் ஒன்று சேர்ந்து அவர்களோடு போர் புரிய வேண்டும். வரம்பு மீறும் பிரிவு சமாதானத்திற்கு இணங்கி விட்டால் பின்னர் அவர்களைப் பழிவாங்கக் கூடாது. அவர்கள் மீது தடைகளையோ அல்லது பொருளாதார நிர்பந்தங்களையோ திணிக்கக் கூடாது என்பது நீதியின் தேவையாகும். வரம்பு மீறுபவர் மீது எப்போதும் ஒரு கண் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அவரது நிலைமையை மேம்படுத்தவும் முயற்சி செய்யுங்கள்.

இன்று உலகில் சில நாடுகளில் அமைதியின்மை காணப்படுகிறது. துரதிஷ்டவசமாக அவற்றுள் சில முஸ்லிம் நாடுகளும் உள்ளன. அமைதியின்மையை முடிவுக்குக் கொண்டு வர அந்த நாடுகளில் நீதி முறையாக செயல்படுத்தப்படுகின்றதா என்பதைக் குறிப்பாக வீட்டே (Vito) அதிகாரம் கொண்ட நாடுகள் அலசிப் பார்க்க வேண்டும். ஏனெனில் உதவி தேவைப்படும்போது சக்தி வாய்ந்த நாடுகளை நோக்கியே கை நீட்டப்படுகின்றது. நான் ஏற்கனவே கூறியபடி பிரிட்டிஷ் அரசாங்கம் நீதியை எப்போதும் நிலைநாட்டி வந்திருப்பதற்கு நாம் சாட்சியாவோம். இதுவே இவ்விஷயத்தின் பக்கம் உங்கள் கவனத்தைத் திருப்புவதற்கு என்னை தூண்டியது.

அமைதியை நிலைநாட்ட எங்களுக்கு கற்றுத் தரப்பட்டிருக்கும் போதனை என்னவெனில், பிறரது செல்வத்தை பேராசையுடன் பார்க்கக் கூடாது என்பதாகும். ‘நாம் அவர்களில் சிலருக்கு சிறிது காலத்திற்காக வழங்கியுள்ள பொருள்களின் பக்கம் உமது கண்களைத் திருப்பாதீர். அவற்றின் மூலம் அவர்களை சோதிப்பதற்காகவே அவற்றை அவர்களுக்கு நாம் வழங்கியுள்ளோம்’ எனத் திருக்குர்ஆன் கூறுகிறது. *(காண்க: திருக்குர்ஆன் 20: 132)* பிறரது செல்வத்தின் மீது பொறாமையுடன் பேராசை கொள்வது உலகில் அமைதியின்மை அதிகரிக்கக் காரணமாகி விடுகின்றது. தனிப்பட்ட முறையில் அடுத்தவர் பெற்றிருக்கும் அனைத்தையும் அடைய முயற்சிப்பது முடிவிலாப் பேராசையை ஏற்படுத்தி சமுதாய அமைதி அழிந்து விடுவதற்குக் காரணமாகி விடுகிறது. தேசிய அளவில் பேராசை கொண்டு போட்டியில் இறங்குவது உலக அமைதியை சீர்குலைத்து விட்டது. வரலாறு இதைத்தான் நிரூபிக்கிறது. பிறரது செல்வத்தை விரும்புவது பொறாமையையும், பேராசையையும் தோற்றுவித்து இழப்பிற்குக் காரணமாக அமைந்து விடும் என்பதை அறிவுள்ள எவரும் புரிந்து கொள்ள முடியும்.

எனவே ஒருவர் தனதுவாழ்வாதாரத்தின் பொருள்களின் மீதே கவனம் செலுத்த வேண்டும் என்றும், அவற்றிலிருந்து பலன்பெற முயற்சி செய்ய வேண்டும் என்றும் இறைவன் கூறுகிறான். இன்று பிற நாட்டின் இயற்கை வளங்களிலிருந்து பயன் பெறவே பிற நாட்டின் பகுதிகளை அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாடுகள் அணி சேர்வதும், கூட்டணி அமைப்பதும் சில நாடுகளின் இயற்கை

வளங்களை சுரண்டுவதற்காகவே ஆகும். இது தொடர்பாக அரசாங்க ஆலோசகர்களாகப் பணிபுரிந்த சிலர், பின்னர் எழுதிய தமது நூல்களில் பிற நாடுகளின் வளங்களைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு சில நாடுகள் எவ்வாறெல்லாம் திட்டங்களை மேற்கொண்டன என்பதைப் பற்றி விவரிக்கின்றனர். அவர்கள் தரும் தகவல்கள் எந்த அளவுக்கு உண்மையானவை என்பதை அவர்களே அறிவார்கள். இறைவனும் நன்கறிவான். ஆனால் இத்தகைய விபரங்களைப் படிப்பதனால் ஏழை நாடுகளைச் சேர்ந்த நாட்டுப் பற்று மிக்கவர்களின் உள்ளங்களில் பெரும் துயரம் ஏற்படுகிறது. தீவிரவாதம் வளர்வதற்கும், பேரழிவு தரும் ஆயுதங்களைக் குவிப்பதில் போட்டி ஏற்படுவதற்கும் இதுவே காரணமாகும்.

இன்றைய உலகம் கடந்த காலத்தை விட நிதானமாகவும், விழிப்புணர்வு பெற்றதாகவும், கல்வியறிவில் முன்னேறி இருப்பதாகவும் தன்னைக் கருதுகிறது. ஏழை நாடுகளில் கூட தத்தமது துறைகள் சார்ந்த கல்வியில் தேர்ச்சி பெற்ற மிகச் சிறந்த அறிஞர்கள் உள்ளனர். அவர்கள் உலகில் மிகச் சிறந்த ஆராய்ச்சி மையங்களுடன் இணைந்து பணியாற்றுகின்றனர். இத்தகைய சூழ்நிலையில் கடந்த காலத்தில் கடும் பகைமையை உருவாக்கி பயங்கரமான போர்களுக்கு இட்டுச் செல்கின்ற தவறான வழிகளை விட்டும் தப்பித்துக் கொள்வதற்காகவும் மக்கள் இணைந்து பணியாற்றியிருக்க வேண்டும் என்பதே மனிதனின் எதிர்பார்ப்பு ஆகும். இறைவன் வழங்கியுள்ள அறிவையும், அறிவியல் முன்னேற்றத்தையும் மனித குலத்தின் நன்மைக்காகவும் ஒருவர் மற்றவரது வளங்களிலிருந்து ஆகுமான முறையில் பலன் பெறுவதற்காகவும் பயன்படுத்தி இருக்க வேண்டும்.

இறைவன் ஒவ்வொரு நாட்டிற்கும் இயற்கை வளங்களையும் வழங்கியுள்ளான். அவற்றை பயன்படுத்துவதன் மூலம் இவ்வுலகை அமைதியின் சுவர்க்கமாக மாற்றியிருக்க வேண்டும். இறைவன் பல நாடுகளுக்குப் பலவகையான பயிர்களை விளைவிப்பதற்குத் தகுந்த இயற்கை சூழலையும் தட்ப வெப்ப நிலையையும் பரிசாக வழங்கியுள்ளான். நவீன தொழில் நுட்பங்களை விவசாயத் துறையில் பயன்படுத்துவதற்கு முறையான திட்டங்களை மேற்கொண்டிருந்தால் அதன் மூலம் பொருளாதாரம் வலுப்பெற்றிருக்கும்; பசி, பட்டினி அகற்றப்பட்டிருக்கும். எந்த நாடுகளில் கனிம வளங்கள் உள்ளனவோ அவற்றை நியாய விலையில் வெளிப்படையாகவணிகம் செய்வதற்கு

அனுமதிக்கப்பட வேண்டும். இதுவே இறைவன் விரும்புகின்ற நடைமுறையாகும்.

இறைவன் தனது தூதர்களை மக்களிடம் அனுப்புவதன் நோக்கம், அவர்கள் மக்களுக்கு இறைவனை நெருங்கும் வழியைக் காண்பிக்க வேண்டும் என்பதாகும். அதே நேரத்தில் மார்க்க விஷயத்தில் முழுமையான சுதந்திரம் இருப்பதாகவும் இறைவன் கூறுகிறான். எங்களின் நம்பிக்கையின்படி நற்கூலியும், தண்டனையும் மரணத்திற்குப் பின்னர்தான் என்றபோதிலும் இறைவன் படைத்திருக்கும் அமைப்பின் கீழ் மனிதன் எப்போது அவனது படைப்பின் மீது கொடுமையிழைத்து நீதியையும் நன்னடத்தையையும் அலட்சியப்படுத்துவானோ அப்போது அதன் எதிர் விளைவை இயற்கை விதிகளின் மூலம் இவ்வுலகிலும் அவன் கண்டு கொள்வான். அத்தகைய அநீதிகளுக்கு எதிராக கடுமையான எதிர் விளைவுகளையும் நாம் கண்டு வருகிறோம். அந்த எதிர் நடவடிக்கைகள் சரியானவையா அல்லது தவறானவையா என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. உண்மையில் உலகை வெல்லுவதற்கான ஒரே வழி ஏழை நாடுகளுக்கு அவற்றிற்குரிய அந்தஸ்தை வழங்குவதே ஆகும்.

இன்று உலகில் தோன்றியுள்ள பொருளாதார நெருக்கடியை கடன் நெருக்கடி என்று கூறுகின்றனர். வியப்பாகவே தோன்றினாலும் இதற்கான காரணி ஒன்றுதான். திருக்குர்ஆனின் கட்டளை வட்டியை விட்டு விடுங்கள் என்பதாகும். வட்டி எப்படிப்பட்ட ஒரு சாபம் எனில், அதன் காரணமாக குடும்ப அமைதியும், தேசிய அமைதியும், உலகளாவிய அமைதியும் ஆபத்திற்கு உள்ளாகின்றன. வட்டி வாங்குபவர் ஷைத்தானால் புத்தி பேதலிக்கச் செய்யப்பட்டவரைப் போன்றவராவார் என நாங்கள் எச்சரிக்கப்பட்டுள்ளோம். எனவே அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாமல் இருப்பதற்கு வட்டியைத் தவிர்க்குமாறு முஸ்லிம்களாகிய நாங்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளோம். ஏனெனில் வட்டியின் மூலமாக பணம் வளர்வது போல் தோன்றுகிறது; ஆனால் அவ்வாறில்லை. அதன் உண்மையான விளைவுகள் வெளிப்படும் ஒரு காலம் வந்தே விடுகிறது. மேலும் நீங்கள் வட்டித் தொழிலில் ஈடுபட்டால் அது இறைவனுக்கு எதிரான ஒரு போர் ஆகும். எனவே அதில் நீங்கள் ஈடுபட வேண்டாம் என்றும் நாங்கள் எச்சரிக்கப்பட்டுள்ளோம்.

இன்றைய கடன் நெருக்கடியால் இது தெளிவாகத் தெரிய வருகிறது. ஆரம்பத்தில் தனி நபர்கள் சொத்து வாங்குவதற்காகக் கடன் வாங்கினர். ஆனால் அந்த சொத்தின் உரிமையாளர்களாக அவர்கள் மாறுவதற்கு முன்பே அவர்கள் கடனிலேயே மரணித்தனர். தற்போது அரசுகள் இவ்வாறு கடன் சுமையால் பாதிக்கப்பட்டு புத்தி பேதலித்தவை போன்று உள்ளன. பெரிய நிறுவனங்கள் திவாலாகி விட்டன. சில வங்கிகளும், நிதி நிறுவனங்களும் மூடப்பட்டு விட்டன; அல்லது அவற்றைக் காப்பாற்ற அரசின் நிதியுதவி அளிக்கப்பட்டது. இந்த நிலை பணக்கார நாடு, ஏழை நாடு ஆகிய எல்லா நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது. இந்த பொருளாதார நெருக்கடியைப் பற்றி என்னை விட நீங்கள் நன்கு அறிவீர்கள். முதலீடு செய்தவர்களின் பணம் காணாமற் போய் விட்டது. தற்போது அவர்களை எவ்வாறு, எந்த அளவிற்கு காப்பாற்றுவது என்பது அந்தந்த அரசுகளைப் பொருத்ததாகும். ஆனால் இப்போதைக்கு சில நாடுகளின் குடும்பங்களும், வியாபாரிகளும், அரசாங்கத் தலைவர்களும் இதன் காரணமாக அமைதியை இழந்துவிட்டனர். இந்த நிலை, உலகம் ஏற்கனவே எச்சரிக்கப்பட்ட தனது முடிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்பதை சிந்திக்குமாறு நம்மைக் கட்டாயப்படுத்தவில்லையா? இந்த நிலை எதிர்காலத்தில் என்னென்ன விளைவுகளை தோற்றுவிக்கும் என்பதை இறைவனே நன்கறிவான். இயற்கை வளங்கள் முறையாகவும், நேர்மையாகவும் பயன்படுத்தப்பட்டுத் தூய்மையாகவும், முழுமையாகவும் செய்யப்படும் வியாபாரம் வழங்கும் அமைதியின் பக்கம் வாருங்கள் என எல்லாம் வல்ல இறைவன் கூறியுள்ளான்.

இப்போது இந்த உரையை நான் முடித்துக் கொள்கிறேன். இறைவன் பக்கம் திரும்புவதிலேயே உலக அமைதி இருக்கிறது என்பதை உங்களுக்கு நான் நினைவூட்டிக் கொள்கிறேன். இந்தக் கருத்தை உலகம் அறிந்து கொள்ள இறைவன் செய்வானாக. அப்போதுதான் பிறருக்குரிய உரிமைகளை அவர்களால் நிறைவேற்ற முடியும். இறுதியாக இங்கு வந்து எனது உரையை செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக்க நன்றி.

மொழியாக்கம்: A.Nasir Ahmad




# ஒருவரது நாட்டுப் பற்று மற்றும் அன்பு பற்றிய இஸ்லாமிய போதனைகள்

---


## இராணுவ தலைமையகம்

## கோலென்ஸ், ஜெர்மனி, 2012





Brigadier General Alois Bach of
the German Federal Army
with Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba]




Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] addressing
the German Federal Army





1.



2.



3.



4.

1. Colonel Ulrich, 2. Brigadier General Bach, 3. Colonel Trautvetter, and 4. Colonel I.G. Janke, meeting Ḥaḍrat Mirza Masroor Ahmad, Khalīfatul-Masīḥ V[aba]



# ஒருவரது நாட்டுப் பற்று மற்றும் அன்பு பற்றிய இஸ்லாமிய போதனைகள்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் - அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்.......

அஸ்ஸலாமு அலைக்கும். வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ. அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உங்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

என்னை உங்களது தலைமையகத்திற்கு அழைத்து, ஒரு சில வார்த்தைகளை உங்கள் முன் பேசும் வாய்ப்பை வழங்கிய உங்கள் அனைவருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் முதற்கண் நன்றி கூற விரும்புகிறேன். உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆன்மீக தலைவர் என்ற முறையில் நான் இஸ்லாத்தின் போதனைகளைப் பற்றி பேச விரும்புகிறேன். இருந்தாலும் இந்தத் தலைப்பு மிக விரிவானது. இதை ஒரு நிகழ்ச்சியிலோ அல்லது குறுகிய நேரத்திலோ நிறைவு செய்வது என்பது இயலாத ஒன்றாகும். ஆகவே இஸ்லாம் கூறும் கோட்பாடுகளுள் ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்து உங்கள் மத்தியில் உரையாற்றுவது அவசியமானது எனக் கருதுகிறேன்.

இஸ்லாத்தின் எந்தக் கோட்பாடு பற்றி பேசலாம் என நான் சிந்தித்தபோது, நமது ஜெர்மன் ஜமாஅத்தின் தலைவர் அப்துல்லாஹ் வாகிஸ் ஹவ்ஸர் **(Abdullah Wagishauser)** அவர்கள் 'ஒருவரது நாட்டுப் பற்று மற்றும் அன்பு பற்றிய இஸ்லாமிய போதனைகள்' என்பது பற்றி பேச வேண்டும் எனக் கேட்டுக் கொண்டர். அதுவே நான் முடிவு செய்வதற்கு உதவியது. எனவே இப்போது நான் உங்கள் மத்தியில் இது தொடர்பான இஸ்லாத்தின் போதனைகள் என்ன என்பதை சுருக்கமாக எடுத்துக் கூறுவேன்.

ஒருவர் தம் நாட்டின் மீது கொள்ளும் தேசப்பற்று மற்றும் அன்பு குறித்து சாதாரணமாகப் பேசுவதும் அல்லது அச்சொற்களைக்

கேட்பதும் எளிதான ஒன்றாகும். ஆயினும் இந்த சில சொற்களில் விரிவான, அழகிய, ஆழிய கருத்துகள் பொதிந்துள்ளன. இச்சொற்கள் உண்மையில் எதனைத் தெரிவிக்கின்றன? அவற்றின் தேவை என்ன என்பதைக் குறித்து சிந்தித்துப் புரிந்து கொள்வது சற்று கடினமான செயலே ஆகும். எப்படி இருந்தாலும் இந்த குறைந்த நேரத்தில் இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் ஒருவரது நாட்டுப் பற்று மற்றும் அன்பு குறித்து விளக்க முயற்சி செய்வேன்.

முதன்மையாக இருக்கின்ற அதே வேளையில் இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடு என்னவெனில், ஒருவரது சொற்களும், செயல்களும் எவ்வித இரட்டை வேடத்தையும், நயவஞ்சகத்தையும் ஒருபோதும் வெளிப்படுத்தக் கூடாது. உண்மையான பற்றிற்கு நம்பிக்கையையும், நேர்மையையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்த ஒரு தொடர்பு தேவைப்படுகிறது. அதாவது ஒருவர் எதனை வெளியில் எடுத்துரைப்பாரோ அதுவே அவரது உள்ளத்திலும் இருத்தல் வேண்டும் என்பதையும் அது எதிர்பார்க்கிறது. நாட்டுரிமையைப் பொருத்தவரை இந்தக் கொள்கைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அதனால் ஒருவர் எந்த நாட்டின் குடிமகனாக இருந்தாலும் சரியே - அவர் அந்த நாட்டின் மீது மனப்பூர்வமான தேசப் பற்று கொண்டவராக நம்பிக்கையை நிலைநாட்டுவது அத்தியாவசியத் தேவையாகும். இதற்கு அவர் பிறப்பால் அந்நாட்டு குடிமகனாக அல்லது வாழ்வின் பிற்காலத்தில் தனது குடியுரிமை அந்தஸ்தை‘குடிபெயர்தல்’ மூலமாகப் பெற்றாரா அல்லது வேறு எந்த வழியின் மூலமாகப் பெற்றாரா என்றெல்லாம் பார்க்கத் தேவையில்லை.

நாட்டுப் பற்று என்பது ஓர் உயரிய நற்பண்பு ஆகும். இப்பண்பினை உன்னதமான நிலைமைகளில், சிறந்த முறையில் எடுத்துக் காட்டியவர்கள் அல்லாஹ்வின் தூதர்கள் ஆவர். அவர்களது இறை நேசமும், இறைவனுடனான பிணைப்பும் மிகவும் உறுதி மிக்கதாக இருந்தது. எந்த அளவுக்கென்றால், அவர்கள் எல்லா விவகாரங்களிலும் இறைவனது கட்டளையைக் கவனத்தில் கொண்டு அவற்றை எவ்வகையிலும் நிறைவேற்றப் பாடுபட்டனர். இது அவர்கள் அந்த இறைவனிடம் கொண்ட கடமையுணர்ச்சியையும், அவர்களது பற்றின் உயர்தர நிலைகளையும் விளக்குகிறது. எனவே இத்தகைய பற்றின் முன்மாதிரியை நாமும் கடைபிடித்து நடக்க வேண்டும்.

இன்னும் அதிகமாக விளக்கத்திற்குப் போகும் முன்பாக நாட்டுப் பற்று என்றால் என்ன என்பது பற்றி அறிந்து கொள்வது அவசியமாகும். இஸ்லாத்தின் போதனையின்படி 'பற்று' என்பதன் வரையறையும், உண்மையான பொருளும் என்னவென்றால், ஒருவருடைய வாக்குறுதியை, உடன்படிக்கையை எல்லா சந்தர்ப்பங்களிலும் கடினமான சூழ்நிலை இருப்பினும் சந்தேகத்திற்கிடமில்லாமல் நிறைவு செய்வதாகும். இதுதான் இஸ்லாம் எடுத்துக் கூறும் நம்பிக்கையின் தரம் ஆகும்.

முஸ்லிம்கள் தங்களது வாக்குறுதிகளையும், உடன்படிக்கைகளையும் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும் என்று திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் அல்லாஹ் கூறுகின்றான். ஏனென்றால் அவர்கள் செய்த எல்லா செயல்பாடுகளுக்காகவும் அவர்கள் இறைவனிடம் கேள்வி கேட்கப்படுவார்கள். முஸ்லிம்கள் தங்களின் எல்லா உடன்படிக்கைகளையும் - வல்லமை மிக்க இறைவனுடன் செய்த உடன்படிக்கை உட்பட - ஏனைய எல்லா வாக்குறுதிகளையும் அவற்றின் முக்கியத்துவத்திற்கிணங்க நிறைவேற்றும்படி அறிவுறுத்தப்படுள்ளனர்.

இந்த வகையில் மக்களின் மனதில் ஒரு கேள்வி எழலாம். அதாவது முஸ்லிம்களுக்கு அவர்களின் இறைவனும் அவர்களின் மார்க்கமும் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவையாகும். எனவே அவர்கள் இறைவனுடன் செய்த உடன்படிக்கைக்கே முக்கியத்துவம் வழங்குவர். மேலும் இறைவனுடன் செய்த உடன்படிக்கையை எல்லாவற்றையும் விட மேலானதாக மதித்து அதை நிறைவேற்ற கடுமையாக முயற்சி மேற்கொள்வர். அதனால் ஒரு முஸ்லிம் நாட்டின் மீது கொள்ளும் நாட்டுப் பற்று அவரது நாட்டின் சட்டத்திற்கு மதிப்பளிப்பதாக அவர் எடுத்துக் கொள்ளும் வாக்குறுதி ஆகியவை இரண்டாம் தர முக்கியத்துவம் வாய்ந்தவையாகவே இருக்கும் என்று நினைக்கத் தோன்றும். எனவே அவர் தம் நாட்டின் மீது கொண்ட சில வாக்குறுதியை சில தருணங்களில் தியாகம் செய்யத் துணிந்து விடுவார். (விட்டு விடத் துணிந்து விடுவார்). இந்த கேள்விக்கு பதில் கூறுவதற்காக நான் தூய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ள போதனையைக் கூற நாடுகிறேன்.

‘ஒருவருடைய நாட்டுப் பற்று அவருடைய இறைநம்பிக்கையின் ஒரு பகுதியாகும்’ என்பதே அந்த போதனையாகும். எனவே உண்மையான நாட்டுப் பற்று இஸ்லாத்தின் அடிப்படைத் தேவையாகும். இறைவனையும் இஸ்லாத்தையும் நேசிக்கும் ஒருவர் அவரது நாட்டின் மீதும் நேசம் கொள்ள வேண்டும்.

எனவே ஒருவர் இறைவன் மீது கொள்ளும் அன்புக்கும், நாட்டின் மீது வைத்திருக்கும் பற்றிற்கும் இடையே எவ்வித மோதலும் இருக்க முடியாது. ஒருவர் நாட்டின் மீது கொள்ளும் பற்று இஸ்லாத்தின் ஒரு பகுதியாக இருப்பதால் ஒரு முஸ்லிம், தான் தேர்ந்தெடுத்துள்ள நாட்டின் மீது உயர்தரமான பற்று கொள்ள முயற்சிக்க வேண்டும். ஏனெனில் அது இறைவனை சென்றடைவதற்கும், அவனது நெருக்கத்தைப் பெற்றுத் தருவதற்கும் உரிய வழிகளில் ஒன்றாகும். ஆதலால் ஓர் உண்மையான முஸ்லிம் இறைவனோடு கொண்டுள்ள நேசம், அவர் தம் நாட்டின் மீது வைத்திருக்கும் பற்றை, உண்மையான நேசத்தை வெளிப்படுத்தத் தடையாக இருக்கிறது என்று கருதுவது சாத்தியமற்ற ஒன்றாகும்.

துரதிஷ்டவசமக சில நாடுகளில் மார்க்க உரிமைகள் தடை செய்யப்படுகின்றன. மேலும் அவை முற்றிலும் மறுக்கப்படுவதையும் நாம் பார்க்கிறோம். இப்போது மற்றொரு கேள்வி நம் உள்ளத்தில் எழுகிறது. அதாவது எந்த மக்கள் மீது அவருடைய நாடே அடக்குமுறை செய்கிறதோ அவர்கள் அந்த நாட்டுடன் இன்னும் அதே பாசத்துடனும், பற்றுடனும் தமது தொடர்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்க முடியுமா? நாம் மிகவும் மனவருத்தத்துடன் கூறுவது என்னவெனில், இவ்வாறான நிலைமை பாகிஸ்தானில் நிலவுகிறது. அங்கு எங்களின் ஜமாஅத்திற்கு எதிராக அரசு சட்டமியற்றியுள்ளது. அங்கு அஹ்மதிகளுக்கெதிரான சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அதன் காரணமாக பாகிஸ்தானிலுள்ள எல்லா அஹ்மதி முஸ்லிம்களும் சட்டத்தின் மூலம் ‘முஸ்லிம் அல்லாதவர்கள்’ என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள். அதனால் அவர்கள் தங்களை முஸ்லிம்கள் என்று அழைக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானிலுள்ள அஹ்மதி முஸ்லிம்கள் ஏனைய முஸ்லிம்கள் செய்வது போன்ற இறைவணக்கம் செய்வதிலிருந்தும் தடுக்கப்பட்டுள்ளனர். ஒரு முஸ்லிம் என்று அடையாளம் காணத்தக்க வகையில் இஸ்லாமிய நடைமுறைக்கு அல்லது பழக்கத்திற்கு ஏற்ப செயல்படுவதிலிருந்தும்

அஹ்மதி முஸ்லிம்கள் தடுக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பாகிஸ்தான் அரசாங்கமே எங்களது ஜமாஅத்தைச் சேர்ந்த மக்களுடைய அடிப்படை உரிமையாகிய இறைவணக்கம் செய்வதை பறித்துக் கொண்டுள்ளது. இத்தகைய அடக்குமுறைகள் இருந்தும் கூட அஹ்மதி முஸ்லிம்கள் இது போன்ற சூழ்நிலைகளில் நாட்டின் சட்டத்தைப் பின்பற்ற முடியுமா? அவர்கள் எப்படி தொடர்ந்து தங்களது பற்றை நாட்டின் மீது காண்பிக்க முடியும்? என ஆச்சரியத்துடன் பார்ப்பது இயற்கைதான். இங்கே நான் ஒன்றைத் தெளிவுபடுத்த வேண்டியதுள்ளது. அதாவது இப்படிப்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் ஏற்படும்போது சட்டமும் நாட்டுப் பற்றும் இரண்டு வேறுபட்ட விஷயங்களாகி விடுகின்றன. அஹ்மதி முஸ்லிம்களாகிய எங்களது நம்பிக்கை என்னவென்றால், மார்க்கம் என்பது ஒவ்வொரு தனி நபரையும் சார்ந்த விஷயமாகும். அதனை அவரே கடைபிடித்துக் கொள்கிறார். மேலும் நம்பிக்கை சார்ந்த விஷயத்தில் எவ்வித பலவந்தமும் இருத்தல் கூடாது. எனவே இந்த உரிமையில் எப்போது சட்டம் குறுக்கிடுகிறதோ அப்போது அது சந்தேகத்திற்கிடமின்றி மாபெரும் கொடுமையும், அடக்குமுறையுமாகும்.

காலாகாலமாக இருந்து வரும் இதுபோன்ற, அரசால் அங்கீகரிக்கப்பட்ட அடக்குமுறைகள் உண்மையில் பெரும்பான்மையினரின் கண்டனத்திற்கு உள்ளாகியிருக்கிறது. ஐரோப்பாவின் வரலாற்றை சற்று நாம் பார்ப்போமானால், அக்கண்டத்திலுள்ள மக்களும் மதத்தின் பெயரால் மேற்கொள்ளப்படும் இப்படிபட்ட அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கின்றனர். இதன் விளைவாக ஆயிரக்கணக்கான மக்கள் ஒரு நாட்டிலிருந்து வேறொரு நாட்டிற்கு இடம்பெயர வேண்டியதிருந்தது.

எல்லா நல்லியல்பு கொண்ட வரலாற்றாசிரியர்களும், அரசுகளும், மக்களும் இதை கொடூரமான அடக்குமுறை என்றே கருதுகின்றனர். இத்தகைய தருணங்களில் இஸ்லாம் போதிப்பது என்னவென்றால், அடக்குமுறை எல்லா எல்லையையும் கடந்து, தாங்கிக் கொள்ள முடியாத கட்டத்தை எட்டி விடும்போது ஒருவர் அந்த நகரத்தை, நாட்டை துறந்து அவருக்கு எங்கு சென்றால் அவரது மார்க்கத்தை கடைபிடித்து ஒழுக முடியுமோ அங்கு சென்று விட வேண்டும். இருந்தாலும் இந்த அறிவுறுத்தலிலும் இஸ்லாம்

கூறுவதாவது, எவ்வகையிலும் ஒரு தனி நபர், நாட்டின் சட்டத்தை தம் கரங்களில் எடுத்துக் கொள்ளக் கூடாது. அத்துடன் அவரது நாட்டிற்கு எதிராக எந்த திட்டத்திலோ, சதி செயலிலோ ஈடுபடக் கூடாது.

இஸ்லாத்தின் இந்தக் கட்டளை மிகத் தெளிவானதும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டதும் ஆகும். கொடுமையான அடக்குமுறைகள் தங்கள் மீது இழைக்கப்பட்டாலும் பல இலட்சம் அஹ்மதிகள் தொடர்ந்து பாகிஸ்தானில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் வாழ்வில் பல இன்னல்களையும், கொடுமைகளையும் சந்திக்க நேர்ந்தாலும் அவர்கள் தொடர்ந்து முழுமையான நாட்டுப் பற்றுடனும் உண்மையான நன்றியுணர்வுடனும் தமது நாட்டுடனான உறவைப் பேணி வருகின்றனர். எந்தத் துறையில் அவர்கள் பணிபுரிந்தாலும், எங்கு அவர்கள் குடியிருந்தாலும் நாட்டின் முற்றேற்றத்திற்காக, வெற்றிக்காக தங்களை தொடர்ந்து ஈடுபடுத்திக் கொள்கின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக அஹ்மதிய்யத்தின் எதிரிகள் அஹ்மதிகள் நாட்டின் மீது பற்று கொண்டவர்களாக இருக்கவில்லை என்று குற்றம் சுமத்த முயற்சி செய்கின்றனர். ஆனால் அவர்களால் இதனை நிரூபிக்க முடியவில்லை. இதற்கு ஆதாரமாக எந்தவொரு சான்றையும் அவர்களால் எடுத்துக்காட்ட இயவில்லை. மாறாக, உண்மை என்னவெனில், எப்போதெல்லாம் பாகிஸ்தான் நாட்டுக்காக தியாகம் செய்யும் நிலை ஏற்படுகிறதோ அப்போது அஹ்மதி முஸ்லிம்கள் தம் நாட்டுக்காக தங்களை அர்ப்பணிக்க முன்னணியில் நிற்கிறார்கள். சட்டத்தின் அடிப்படையில் அஹ்மதி முஸ்லிம்கள் பாதிப்புக்கு ஆளாகியிருந்தும் அவர்கள் மற்றெல்லாரையும் விட நாட்டின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு அதன்படி நடப்பவர்களாக இருக்கின்றனர். ஏனெனில் அவர்கள் உண்மையான முஸ்லிம்கள் ஆவர்; உண்மையான இஸ்லாத்தின்படி நடப்பவர்கள் ஆவர்.

நாட்டுப் பற்று பற்றி இஸ்லாம் கூறும் இன்னொரு போதனை என்னவென்றால், மக்கள் எல்லாவிதமான ஒழுங்கீனத்தை விட்டும், விரும்பத்தகாததை விட்டும், கிளர்ச்சியின் ஒவ்வொரு வடிவத்தை விட்டும் தவிர்ந்திருத்தல் வேண்டும். இஸ்லாத்தின் அழகிய மேன்மை மிக்க அம்சம் என்னவெனில், அது ஒரு விஷயத்தைப் பற்றி நமது கவனத்தை ஈர்க்கின்றபோது அதன் கடைசி எல்லையிலுள்ள

அதிபயங்கரமான ஆபத்துகளைப் பற்றி மட்டும் எடுத்துக் கூறுவதில்லை. மாறாக, மனித குலத்திற்கு பங்கம் விளைவிக்கும் ஒவ்வொரு சின்னஞ்சிறு அம்சங்களையும், அவை ஆபத்துகளின் பக்கம் இட்டுச் செல்லும் படிக்கட்டுகளாக இருக்கின்றன என்று நமக்கு எச்சரிக்கை செய்கிறது. எனவே இஸ்லாமிய நெறிமுறைகளை சரியாகக் கடைபிடித்து நடந்தால் எந்தவொரு விஷயமும் கைநழுவி விடாமல் ஆரம்ப நிலையிலேயே தீர்க்கப்பட்டு விடும்.எடுத்துக்காட்டாக, தனி நபரின் பணத்தாசை ஒரு நாட்டிற்கு மாபெரும் இழப்பை ஏற்படுத்த முடியும். பொருள்களின் மீது மக்கள் கொண்ட ஆசை அளவு கடந்து விடுகின்றபோது அவர்களது எண்ணங்கள் நம்பிக்கைக்கு மாற்றமான பல வழிகளில் ஈடுபடுமாறு அவர்களைத் தூண்டுகிறது. இப்படிப்பட்ட செயல்கள் முடிவில் அவரது நாட்டுக்கு எதிரான துரோகச் செயலுக்கு வழிகோலுகின்றன.

இன்னும் சற்று விரிவாகக் கூறுகிறேன். அரபு மொழியில் பகா (Bagha) நாட்டுக்குத் தீங்கிழைக்கும் அல்லது அப்படிப்பட்ட செயல்களைக் குறிக்கும் சொல்லாகும். இவர்கள் தவறான வழிமுறைகளைக் கைக்கொள்வர். அல்லது மற்றவர்களுக்கு கேடு விளைவித்துக் கொண்டிருப்பர். (பகா என்ற சொல்லான) இது ஏமாற்றுபவர்களையும் குறிக்கும். பொருள்களை ஈட்டுவதற்கு தவறான, சட்டத்திற்குப் புறம்பான அல்லது நேர்மையற்ற வழிமுறைகளை கடைபிடிப்பவர்களுக்கும் இச்சொல் பொருந்தும். வரம்பு கடந்து தீங்கிழைக்கும் மக்களுக்கும், நாசம் விளைவிக்கும் மக்களுக்கும் இச்சொல் பொருந்தும்.

இப்படிப்பட்ட வழிமுறைகளைக் கையாளும் இம்மக்களிடமிருந்து நேர்மையான செயல்பாடுகளை எண்ணிப் பார்க்க முடியாது என இஸ்லாம் கூறுகிறது. ஏனெனில் நாட்டுப் பற்று என்பது உயர்வான நல்லொழுக்க நெறிகளோடு பிணைக்கப்பட்டுள்ளது. உயரிய நல்லொழுக்கம் இல்லாவிட்டால் நாட்டுப் பற்று இருக்க முடியாது; அது போன்று நாட்டுப் பற்றி இல்லாமல் நல்லொழுக்கம் இருப்பது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும்.

உண்மையில் மேலான நல்லொழுக்க நெறிகள் குறித்து பல தரப்பட்ட மக்களும் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருப்பர். ஆயினும் இஸ்லாம் மார்க்கம் எல்லா செயல்பாடுகளிலும்

இறைவிருப்பத்தை மட்டுமே மையமாகக் கொண்டுள்ளது. அதனால்தான் முஸ்லிம்கள் எப்போதும் இறைவனை மகிழ்விக்கும் வகையில் நடந்து கொள்ளும்படி போதிக்கப்பட்டிருக்கிறார்கள். சுருக்கமாகக் கூறுவதென்றால், இஸ்லாமியக் கோட்பாட்டின்படி வல்லமை மிக்க இறைவன் எல்லாவிதமான நம்பிக்கை மோசடி மற்றும் கலகம் செய்வதை – அது ஒரு நாட்டுக்கு எதிராக இருந்தாலும், அல்லது ஓர் அரசுக்கு எதிராக இருந்தாலும் சரி – அதனைத் தடை செய்துள்ளான். காரணம் என்னவெனில், கலகம் செய்வது அல்லது நாட்டுக்கெதிராகக் கிளர்ச்சி செய்வது நாட்டின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பங்கம் விளைவிக்கும் செயலாகும்.

உண்மையில் எங்கு உள்நாட்டுக் கலவரங்களும், எதிர்ப்புகளும் தோன்றுகிறதோ அங்கு வெளிப்புற எதிர்ப்பின் நெருப்பை அது மூட்டி விடுகிறது. அப்போது இந்த உள்நாட்டுக் குழப்பத்தை வெளிப்புறத்தார் தமக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்கின்றனர். அதன் விளைவாக இந்தப் ‘பற்றின்மை’யின் முடிவு பரந்ததாகவும் பயங்கரமானதாகவும் இருக்கும். எனவே ஒரு நாட்டுக்கு எந்த வகையில் தீங்கு ஏற்பட்டாலும் அது பகா (Bagha) என்று நான் குறிப்பிட்ட அந்த சொல்லில் அடங்கி விடும். இவற்றையெல்லாம் மனதில் கொண்டு பார்த்தால், ஒருவரது நாட்டின் மீது கொண்ட பற்று என்பது பொறுமையைக் கடைபிடிப்பது, நல்லொழுக்கத்தில் ஈடுபடுவது, நாட்டின் சட்ட திட்டங்களை பின்பற்றி நடப்பது ஆகியவற்றை எதிர்பார்க்கின்றது.

பொதுவாக இந்த நவீன காலகட்டத்தில் பெரும்பாலான அரசாங்கங்களும் மக்களாட்சி நெறிகளின்படி நடத்தப்படுகின்றன. அவ்வாறிருக்கும்போது ஒரு தனி நபரோ, கூட்டமோ ஆட்சி மாற்றத்தை விரும்பினால் அதற்கு முறையான மக்களாட்சி முறைகளையே கடைபிடிக்க வேண்டும். வாக்குப் பெட்டியில் இடப்படும் வாக்குகள் மூலமாக அவர்கள் அதனை வெளிப்படுத்தலாம். தனிப்பட்ட விருப்பம் மற்றும் நாட்டத்தின் அடிப்படையில் வாக்களித்தல் கூடாது. இஸ்லாம் போதிப்பது என்னவென்றால், ஒருவருடைய வாக்கு, நாட்டின் மீது கொண்ட பற்று மற்றும் நேசத்தை சார்ந்ததாக இருத்தல் வேண்டும். அவர் அளிக்கின்ற வாக்கு நாட்டின் நலத்தை மனதிற்கொண்டவாறு அளிக்கப்பட வேண்டும். எனவே ஒருவர் தமது சொந்த தேவைகளைப் பார்க்காமல் எந்த வேட்பாளரிடம் அல்லது கட்சியிடமிருந்து

நன்மையைப் பெறலாம் என்றெல்லாம் எண்ணிப் பார்க்காமல், எப்படிப்பட்ட வேட்பாளர் அல்லது கட்சி தேர்ந்தெடுக்கப்பட்டால் ஒட்டுமொத்த நாட்டின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்பதை நடுநிலையுடன் ஆய்வு செய்து தனது முடிவை எடுக்க வேண்டும்.

அரசாங்கத்தின் திறவுகோல்கள் மிகவும் நம்பி ஒப்படைக்கப்படுபவையாகும். எனவே வாக்காளர் எந்தக் கட்சியை பொருத்தமானதாகவும், தகுதியுடையதாகவும் உண்மையில் கருதுவாரோ அந்தக் கட்சியிடமே அவை தரப்பட வேண்டும். இதுவே உண்மையான இஸ்லாமாகும். இதுவே உண்மையான நாட்டுப் பற்றுமாகும்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்: ''ஒருவரிடம் நம்பி ஒப்படைப்பவற்றை அவற்றிற்கு தகுதியானவரிடமே ஒப்படைக்க வேண்டும் என்றும், மக்களுக்குகிடையில் தீர்ப்பு வழங்கும்போது நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டும் என்றும் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிடுகின்றான்.'' *(திருக்குர்ஆன்4:59)* எனவே ஒருவருடைய நாட்டுப் பற்று வேண்டுவதெல்லாம், ஆளும் அதிகாரம் அதற்குத் தகுதியானர்வர்களிடமே வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்த நாடு முன்னேற்றமடைந்து உலக நாடுகளுக்கிடையில் முன்னணியில் நிற்கும் நிலையை அடைய முடியும் என்பதாகும்.

உலகின் பல இடங்களிலும் மக்கள் அரசின் கொள்கைகளுக்கு எதிராக வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம் ஆகியவற்றில் ஈடுபடுவதை நாம் பார்க்கின்றோம். இன்னும், மூன்றாம் உலக நாடுகளில் இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்கத்தின் தனிநபர்களின் உடைமைகளையும், சொத்துக்களையும் அழித்து சூறையாடுகிறார்கள். அல்லது சேதம் விளைவிக்கிறார்கள். அவர்கள் தாங்கள் கொண்ட நேசத்தின் காரணமாகவே இவ்வாறு செயல்படுவதாகக் கூறினாலும், உண்மை என்னவென்றால், இத்தகைய செயல்களுக்கும், நாட்டுப் பற்று மற்றும் நேசத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. எங்கு எதிர்ப்புகளும் வேலைநிறுத்தங்களும் அமைதியான சூழலில், எவ்வித பயங்கர, நாசத்தை ஏற்படுத்தக் கூடிய வன்முறையும் இல்லாமல் நடக்குமோ, அதுவும் கூட எதிர்மறை விளைவை ஏற்படுத்தவே செய்கின்றன. இதற்குக் காரணம் என்னவென்றால், அமைதியின்

வழியில் நடக்கும் போராட்டங்களும் எதிர்ப்புகளும் கூட நாட்டிக்கு பல இலட்சக்கணக்கில் பொருளாதார இழப்புகளை உருவாக்கி விடுகின்றன.

இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எக்காரணங்களைக் கொண்டும் நாட்டுப் பற்றுக்கு உதாரணமாகக் கொள்ள முடியாது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் கற்பித்த மகத்தான போதனை என்னவெனில், எல்லா சந்தர்ப்பங்களிலும், நாம் அல்லாஹ்வுக்கும், அவனது தூதர்களுக்கும், நாட்டை ஆள்பவர்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். திருக்குர்ஆன் இதே போதனையைத்தான் வழங்குகிறது. எனவே ஒரு நாடு வேலைநிறுத்தம், ஆர்பாட்டம் செய்வதற்கு அனுமதி வழங்கி இருந்தாலும் அது எந்த நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றால் அவர்கள் நாட்டிற்கு எந்த சேதத்தையும், கெடுதியையும், பொருளாதார அளவில் எந்த பாதிப்பையும் எற்படுத்தக் கூடாது.

அடிக்கடி எழுகின்ற இன்னொரு கேள்வி என்னவெனில், மேற்கத்திய நாடுகளின் படைகளில் முஸ்லிம்கள் இணைந்து கொள்ளலாமா? அப்படி சேர்ந்து கொள்ளலாம் என்றால், அப்படைகள் முஸ்லிம் நாடுகளின் மீது நடத்தும் தாக்குதல்களில் கலந்து கொள்ளலாமா? இஸ்லாத்தின் அடிப்படையான கொள்கை என்னவென்றால், எவரும் கொடுஞ் செயலுக்கு துணை போகக் கூடாது. எந்தவொரு முஸ்லிமின் உள்ளத்திலும் இந்த தலையாய கட்டளை இருக்க வேண்டும். ஒரு முஸ்லிம் நாடு முதலில் ஆக்கிரமிப்புச் செயலைச் செய்து, கொடிய அநியாயமான முறையில் நடந்ததன் காரணமாக தாக்கப்பட்டால் அவ்வேளையில் திருக்குர்ஆன் முஸ்லிம் அரசாங்கங்களுக்கு இடும் கட்டளை என்னவெனில், அவர்கள் கொடுஞ் செயல் செய்பவர்களின் கரங்களைத் தடுக்க வேண்டும். இதன் பொருள் என்னவெனில், அவர்கள் அந்த கொடுஞ் செயலைத் தடுத்து அமைதியை நிலைநாட்டப் பாடுபட வேண்டும்.

இத்தகைய வேளைகளில் கொடுமைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகுமானதாகும். ஆயினும் வரம்பு மீறிய அந்த நாடு தன்னைத் திருத்திக் கொண்டு சமாதானத்தைக் கடைபிடித்தால் அந்நாட்டின் மீதும் அந்நாட்டு மக்களின் மீதும் தவறான, பொய்யான குற்றச்சாட்டுகள் அல்லது சாக்குப்போக்குகளை சுமத்தி சிறுமைப்படுத்தவோ அல்லது

தமக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளவோ கூடாது. மாறாக பொதுவான அரசுரிமையும், சுதந்திரமும் மீண்டும் அதற்கு வழங்கப்பட வேண்டும். இராணுவத் தலையீட்டின் நோக்கமே அமைதியை நிலைநாட்டக் கூடியதாக இருக்க வேண்டுமே தவிர சொந்த நலனைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டிருக்கக் கூடாது.

அதே போன்று எல்லா நாடுகளுக்கும் – அவை முஸ்லிம் நாடாக இருந்தாலும் முஸ்லிம் நாடாக இல்லாவிட்டாலும் அவற்றிற்கு கொடுமை இழைப்பதையும் அடக்குமுறை செய்வதையும் தடுப்பதற்கு இஸ்லாம் அனுமதி அளிக்கிறது. எனவே தேவைப்பட்டால் முஸ்லிம் அல்லாத நாடுகள் கூட இந்த நியாயமான நோக்கங்களை நிறைவேற்ற முஸ்லிம் நாடுகள் மீது தாக்குதல் தொடுக்கலாம். முஸ்லிம் அல்லாத நாட்டிலுள்ள முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாத நாட்டின் படைகளுடன் கைகோர்த்து மற்ற நாடுகள் செய்யும் கொடுமைகளைத் தடுத்து நிறுத்தலாம். எங்கு உண்மையில் இத்தகு சூழல் நிலவுகிறதோ, அப்போது முஸ்லிம் படை வீரர்கள் எந்த மேற்கத்திய படையில் அவர்கள் ஓர் அங்கமாக இருந்தாலும் ஆணைகளுக்கு இணங்கவும் வேண்டும். தேவைப்பட்டால் சமாதானத்தை நிலைநாட்ட போர் புரியவும் வேண்டும்.

ஒருவேளை அநியாயமாக மற்றொரு நாட்டை தாக்க நினைத்தால் அது வரம்பு மீறும் ஆக்கிரமிப்புச் செயலாக இருப்பதால் அப்போது அந்த முஸ்லிம் அப்படையிலிருந்து வெளியேறி விட வேண்டும். இல்லையென்றால் அவர் கொடுமையிழைத்தலுக்கு துணை போனதாக ஆகி விடுவார். இந்த முடிவு எடுத்ததன் காரணமாக அவர் தன் நாட்டின் மீது ‘பற்று அற்றவர்’ என்று பொருள் அல்ல. இத்தகைய வேளையில் அவரது நாட்டுப் பற்று அவரிடம் எதிர்பார்ப்பது என்னவெனில், அவர் தனது சொந்த அரசாங்கத்திடம் மற்ற நியாயமற்ற அரசாங்கங்கள், நாடுகள் செய்யும் அதே அடிமட்ட கொடூரங்களை செய்ய வேண்டாம் என ஆலோசனை கூற வேண்டும்.

ஆயினும் இராணுவத்தில் சேர்வது கட்டாயமானது. அதிலிருந்து எவ்வகையிலும் வெளியே வர இயலாது. ஆனால் அவரது மனசாட்சி இதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்றிருந்தால் அந்த முஸ்லிம் அந்த நாட்டை விட்டு வெளியேறி விட வேண்டும். எனினும் அந்நாட்டின் சட்டத்திற்கு எதிராக குரல் எழுப்பக் கூடாது. ஒரு முஸ்லிம் அந்த

நாட்டின் குடிமகன் என்ற முறையில் அந்நாட்டுக்கு விரோதமாக நடந்து, எதிர்ப்பாளர்களுடன் துணை நின்று கொண்டு அந்த நாட்டில் வாழ அனுமதியில்லை. எனவே அவர் அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும். இவைதான் இஸ்லாமிய போதனைகளின் சில அம்சங்களாகும். இவை உண்மையான முஸ்லிம்களை நாட்டின் மீது பற்றும் மற்றும் நேசத்துடன் நடக்க வேண்டிய அவசியத் தேவையின் பக்கம் வழிகாட்டுகின்றன.

எனக்குக் கிடைத்துள்ள நேரத்தில் இத்தலைப்பின் கீழ் நான் சுருக்கமாகவே விஷயங்களை தொட்டுக் காட்டியுள்ளேன். நிறைவாக நான் கூற நாடுவது என்னவெனில், இப்போது இந்த உலகமானது உலகளாவிய கிராமமாக மாறி விட்டது. மனித இனம் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டுள்ளது. எல்லா நாட்டு மக்களும், எல்லா மார்க்கங்களும், கலாச்சாரங்களும் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றன. இப்போதைய தேவை என்னவென்றால், ஒவ்வொரு நாட்டின் தலைவர்களும் எல்லா மக்களின் எண்ணங்களையும், உணர்வுகளையும் கருத்தில் கொண்டு அவற்றிற்கு மதிப்பளிக்க வேண்டும். தலைவர்களும் அவர்களின் அரசாங்கங்களும் மக்களுக்கு துக்கத்திற்கும், ஏமாற்றத்திற்கும் வழிகோலும் சட்டங்களை இயற்றுவதற்கு பதிலாக உண்மை மற்றும் நீதியின் சூழலை வளர்க்கும் சட்டங்களை வளர்க்க பாடுபட வேண்டும்.

அநீதிகள், கொடுமைகள் முற்றாக களையப்பட வேண்டும். அதற்காக உண்மையான நீதி நிலைநாட்டைப்பட வேண்டும். இதை நிறைவேற்ற மிகச் சிறந்த வழி என்னவெனில், உலகம் தன்னைப் படைத்தவனைக் கண்டு கொள்ள முன் வர வேண்டும். ஒவ்வொரு பற்றின் நிலையும் அந்த இறைவன் மீது கொண்ட பற்றுடன் பிணைக்கப்பட வேண்டும். இந்த இலக்கை நாம் அடைந்து விட்டால் உயர்தரமான நாட்டுப் பற்று எல்லா நாட்டு மக்களிடமும் நிலைபெற்றிருப்பதையும் உலகம் முழுவதும் புத்தம் புதிய வழிமுறைகள் சமாதானத்தைப் பெற்றுத் தரத் தோன்றியிருப்பதையும் நாம் சாட்சிகளாக இருந்து நமது சொந்த கண்களாயே காண முடியும்.

நிறைவு செய்யும் முன்பாக, இச்சந்தர்ப்பத்தில் என்னை வரவேற்று எனது உரையை செவிமடுத்ததற்காக உங்கள் அனைவருக்கும் என் நன்றியை உருவாக்குகிறேன். இறைவன் உங்கள்

அனைவருக்கும் அருள்பாலிப்பானாக. இறைவன் ஜெர்மன் நாட்டின் மீது கருணையுடன் நடந்து கொள்வானாக. எனது நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக்க நன்றி.

தமிழாக்கம்:
J.Syed Anwar Ahmad




# அணு ஆயுதப் போரினால் ஏற்படும் பேரழிவின் விளைவுகளும் முழுமையான நீதியின் அத்தியாவசியத் தேவையும்

9–ஆவது ஆண்டு மாநாடு

இலண்டன் யூ.கே, 2012






Ḥaḍrat Mirza Masroor Ahmad, Khalīfatul-Masīḥ V[aba] addressing the 9th Annual Peace Symposium




Mayor of London Boris Johnson presenting His Holiness with a London bus souvenir



Dame Mary Richardson DBE, UK President of SOS Children's Villages, accepting the 'Ahmadiyya Muslim Prize for the Advancement of Peace' from His Holiness






Ḥaḍrat Mirza Masroor Ahmad, Khalīfatul-Masīḥ V[aba]
talking to the overseas Pakistani press regarding world affairs



# முன்னுரை

இங்கிலாந்தில் உள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் 2012 - ஆம் ஆண்டு மார்ச் 24 -ஆம் தேதி இலண்டன் மார்டனில் உள்ள மேற்கு ஐரோப்பாவின் பெரிய பள்ளிவாசலான பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 9-ஆம் ஆண்டு அமைதி மாநாட்டை நடத்தினார்கள். இந்த மாநாடு ஆயிரக்கணக்கான பார்வையாளர்களைக் கவர்ந்தது. இதில் அரசின் அமைச்சர்கள், வெளி நாட்டுத் தூதுவர்கள், பாராளுமன்ற மக்கள் சபை மற்றும் மேல் சபை உறுப்பினர்கள் இலண்டன் மாநகர மேயர், பல உயர் தகுதியினர், வல்லுநர்கள், அண்டை அயலார் மற்றும் பல தரப்பட்ட மக்களும் விருந்தினராக வருகை புரிந்திருந்தனர். இவ்வருட மாநாட்டின் தலைப்பு, **'அனைத்துலக அமைதி'** என்பதாகும். அமைதியை வளர்ப்பதற்காக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் வழங்கும் பரிசு கடந்த மூன்றாண்டுகளாக இம்மாநாட்டின்போது வழங்கப்படுகிறது. இவ்வாண்டு இந்த பரிசை ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அன்னாரை வலுப்படுத்துவானாக) அவர்களால் UK (யூ.கே) வில் உள்ள 'SOS Children's Village' (எஸ். ஓ. எஸ் குழந்தைகள் வில்லேஜ்) என்பதற்கு, உலகம் முழுவதிலுமுள்ள அநாதைகள் மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளின் துயர் துடைக்க தொடந்து எடுக்கும் முயற்சிகளைப் பாராட்டும் விதமாகவும் 'A loving home for every Child' (ஒவ்வொரு குழந்தைக்கும் ஓர் அன்பான இல்லம்) என்பதை நிறைவு செய்ய முயலுவதைப் பாராட்டும் விதமாகவும் இது தரப்பட்டது.

**இதில் வருகை தந்த விருந்தினர்களின் பட்டியல்:**

- மாண்பு மிகு ஜஸ்டைன் கிரீனிங் - M.P போக்குவரத்துத் துறை
- ஜேன் எல்லிஸல் - M.P (பேட்டர்ஸியா)

✸சீமா மல்ஹோத்ரா – M.P (ஃபெல்தாம் மற்றும் ஹெஸ்டன்)

✸டாம் பிரேக் – M.P (கால்ஷல்டன் மற்றும் வெலிங்டன்)

✸ விரேந்திர ஷர்மா – M.P (ஏலிங் மற்றும் சௌஹால்)

✸ லார்டு தாரிக் அஹ்மது – விம்பிள்டன்

✸மாட்சிமை தாங்கிய வெஸ்லே மோமோ ஜான்சன்(லைபீரியா தூதுவர்)

✸ மாட்சிமை தாங்கிய அப்துல்லாஹ் அல்ராதி (ஏமன் தூதுவர்)

✸ மாட்சிமை தாங்கிய மிகுவல் ஸோலானோ லோபெஸ்

✸ மாட்சிமை தாங்கிய மார்டின் ஆதர்டன்: பிராந்திய கடற்கரை தளபதி

✸ கவுன்ஸிலர் ஜேன் கூப்பர் – வாண்ட்வொர்த் மேயர்

✸கவுன்ஸிலர் மில்டன் மெகன்ஸி MBE – பார்கிங் மற்றும் டேஜன்ஹாம் மேயர்

✸ கவுன்ஸிலர் அம்ரித் மான் – ஹோன்ஸ் லோபே

✸ ஸிலோபன் பெனிட்டா – லண்டன் மேயருக்கான சுயேட்சை வேட்பாளர்

✸ பல நாடுகளின் தூதரக அதிகாரிகள் ( இந்தியா, கனடா, இந்தோனேஷியா மற்றும் கினியா)

# அணு ஆயுதப் போரினால் ஏற்படும் பேரழிவின் விளைவுகளும் முழுமையான நீதியின் அத்தியாவசியத் தேவையும்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் தஷஹ்ஹுது, தஅவ்வுஸ் மற்றும் பிஸ்மில்லாஹ் ஆகியவற்றை ஓதிய பிறகு கூறினார்கள்:

எங்களது அனைத்து விருந்தினர்களுக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ. அல்லாஹ்வின் சாந்தியும், சமாதானமும் உங்கள் மீது உண்டாவதாக.

இன்று நமது மதிப்பிற்குரிய விருந்தினர்களை ஒரு வருடத்திற்குப் பின் இந்த நிகழ்ச்சிக்கு வரவேற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இன்று, இங்கு வருகை தந்து உங்களது நேரத்தை பகிர்ந்து கொண்டதற்கு நான் உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சி, **'அமைதிக் கருத்தரங்கு'** என்று அறியப்படுவது பற்றி நிச்சயமாக, உங்களுள் பலருக்கு நன்றாகத் தெரியும். இந்தக் கருத்தரங்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தால், ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்படுகிறது. உலகத்தில் அமைதி நிலை நாட்டப்பட வேண்டும் என்ற எங்களின் குறிக்கோளை அடைய நாங்கள் எடுக்கும் பல முயற்சிகளுள் இதுவும் ஒன்றாகும். இன்று, வருகை தந்திருப்பவர்களில் சில புதிய நண்பர்கள் முதன் முறையாக இந்நிகழ்சிக்கு வருகை தந்துள்ளனர். மற்றவர்களோ பல ஆண்டுகளாக எங்களின் முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்ற எங்களின் பழைய நண்பர்களாவர். எப்படி இருப்பினும் நீங்கள் அனைவரும் நன்கு கற்றறிந்தவர்கள். உலகில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்ற எங்களின் நோக்கத்தை நீங்களும் பகிர்ந்து கொள்வதன் காரணமாகவே நீங்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ளீர்கள்.

இவ்வுலகம் அன்பு, பாசம் மற்றும் நேச உணர்வால் நிரம்ப வேண்டும் என்ற உளமார்ந்த நோக்கத்தோடு இன்று இந்த நிகழ்ச்சிக்கு

நீங்கள் வருகை தந்துள்ளீர்கள். இத்தகைய அணுகுமுறையையும், உயர்ந்த பண்புகளையுமே இன்று உலகில் பெரும்பாலானவர்கள் விரும்புகின்றனர். இதை கருத்தில் கொண்ட காரணத்தால்தான் பல்வேறு சூழ்நிலைகள், நாடுகள், மார்க்கங்கள் ஆகியவற்றைச் சார்ந்த நீங்கள் இன்று என் முன் அமர்ந்திருக்கிறீர்கள்.

நான் கூறியபடி, ஒவ்வோர் ஆண்டும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் இந்த மாநாட்டை நடத்துகின்றபோது உலகின் அமைதி நிலைநாட்டப்படுவதை நமது கண்களால் காண வேண்டும் என்ற அதே உணர்வுகளையும், எண்ணங்களையுமே நாம் அனைவரும் வெளிப்படுத்துகிறோம். எனவே ஒவ்வோர் ஆண்டும் நான் வேண்டிக் கொள்வது என்னவென்றால், எப்போதெல்லாம் உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்குமோ, யாருடனெல்லாம் உங்களுக்கு தொடர்பு கிடைக்குமோ அப்போது அமைதியை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடுங்கள் என்பதாகும். மேலும் அரசியல் கட்சிகளுடன், அரசுகளுடன் தொடர்புடையவர்களும் தத்தமது வட்டத்தில் அமைதியை நிலைநாட்டும் முயற்சியில் ஈடுபட வேண்டும் எனவும் நான் கேட்டுக் கொள்கிறேன். உலக அமைதி நிலவுவதற்கு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு உயர்தரமான, கொள்கைப் பிடிப்புள்ள நல்லொழுக்கப் பண்புகள் இப்போது தேவைப்படுகின்றன என்பதை ஒவ்வொருவருக்கும் அறிய வைக்க வேண்டியது அவசியமாகும்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பொருத்தவரை எங்கு, எப்போது வாய்ப்பு கிடைத்தாலும் நாங்கள் வெளிப்படையாக எங்கள் நோக்கத்தை வெளிப்படுத்துகிறோம். அது என்னவென்றால், வரவிருக்கும் அழிவிலிருந்தும், நாசத்திலிருந்தும் உலகைக் காப்பாற்றிக் கொள்ள ஒரே ஒரு வழி, அன்பு, நேசம், ஒற்றுமை உணர்வு ஆகியவற்றைப் பரவச் செய்வதாகும். அதற்காக நாம் அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும். மிக முக்கியமாக இந்த உலகம் தன்னைப் படைத்தவனை – ஏக இறைவனை கண்டு கொள்ள வேண்டும். ஏனெனில் படைத்தவனைக் கொண்டு கொள்வதே அவனது படைப்பினத்தின் மீது அன்புடனும் கருணையுடனும் நடக்கத் தூண்டுகிறது. அது நம்முடைய ஒரு பண்பாக ஆகி விடும்போது இறைவனின் பண்பை நாம் பெற்றுக் கொள்பவர்களாக ஆகி விடுவோம்.

உலக சமாதானத்திற்காக நாங்கள் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டேயிருக்கின்றோம். நாங்கள் அனுபவிக்கும் வேதனையும், மன உளைச்சலும் துன்பப்படுவதிலிருந்து மனித இனத்தை விடுவிக்க முயற்சி செய்ய வேண்டும் என்றும் அதன் மூலம் நாம் வாழும் இந்த உலகை மிகச் சிறந்த வாழ்விடமாக்க வேண்டும் என்றும் எங்களைத் தூண்டுகிறது. உண்மையில் இந்த நிகழ்ச்சி இந்த குறிக்கோளை அடைவதற்கான பல முயற்சிகளுள் ஒன்றாகும்.

நான் ஏற்கனவே கூறியபடி நீங்கள் அனைவரும் இந்த உயரிய ஆவலைக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் நான் மீண்டும் மீண்டும் அரசியல் தலைவர்களையும், மார்க்கத் தலைவர்களையும் அமைதியை நிலைநாட்டப் பாடுபடும்படி அழைப்பு விடுத்து வருகிறேன். ஆயினும் நமது இந்த எல்லா முயற்சிகளும் இருந்தும் உலகம் முழுவதிலும் கவலையும், குழப்பமும் தொடர்ந்து பரவி வருவதைப் பார்க்கிறோம். இன்றைய உலகில் நாம் பெருமளவில் கிளர்ச்சி, அமைதியின்மை, குழப்பம் ஆகியவற்றைக் காண்கிறோம். சில நாடுகளில் மக்கள் தமக்கிடையே சண்டையிட்டுக் கொள்கின்றனர்; சில நாடுகளில் பொது மக்கள் அசராங்கத்துடன் போரிடுகின்றனர்; அல்லது இதற்கு மாற்றமாக ஆட்சியாளர்கள் தமது சொந்த மக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். தீவிரவாத அமைப்புகளோ தமது சுய நல நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக குழப்பங்களுக்கும் ஒழுங்கீனத்துக்கும் எண்ணெய் வார்க்கின்றனர். அதனால் அவர்கள் அப்பாவிப் பெண்களையும், குழந்தைகளையும், முதியவர்களையும் கண்மூடித்தனமாக கொன்று குவிக்கின்றனர். சில நாடுகளில் நாட்டின் முன்னேற்றத்திற்காக ஒன்றுபடுவதற்குப் பதிலாக அரசியல் கட்சிகள் தமது சுயநலத்திற்காக தமக்கிடையே சண்டையிட்டுக் கொள்கின்றன. சில அரசுகளும், நாடுகளும் பிற நாட்டின் இயற்கை வளங்களின் மீது பொறாமைக் கண் கொண்டு பார்க்கின்றதையும் நாம் காண்கிறோம். உலகிலுள்ள வல்லரசு நாடுகள் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டும் முயற்சியில் தமது ஆற்றலை செலவு செய்கின்றன. இந்தக் குறிக்கோளை அடைவதற்காக அவர்கள் எதையும் விட்டு வைப்பதில்லை.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தோ அல்லது பொதுமக்களான

உங்களில் பெரும்பான்மையினரோ ஒரு நல்ல, மாற்றம் ஏற்படத்தக்க கொள்கைகளை வகுப்பதற்கு ஆற்றலோ, அதிகாரமோ பெற்றவர்களாக இல்லை என்பது தெரிகிறது. ஏனெனில் நம்மிடம் ஆட்சியோ, அதிகாரமோ இல்லை. நாம் நட்புறவு வைத்துள்ள அரசியல் தலைவர்கள் இங்கு நம்முடன் இருக்கும்போது எப்போதும் நமது கருத்துக்களை ஏற்றுக் கொள்கின்ற போதிலும் அவர்களால் இந்தக் கருத்தைப் பேச முடிவதில்லை என்பதை நான் கூற வேண்டியதுள்ளது. மாறாக, அவர்களின் குரல் அமுக்கப்படுகிறது. அவர்கள் தமது கருத்தை எடுத்துக் கூறுவதை விட்டும் தடுக்கப்படுகின்றனர். இதற்குக் காரணம் அவர்கள் வலுக்கட்டாயமாக தமது கட்சியின் நிலைப்பாட்டைப் பின்பற்ற வேண்டியதுள்ளது. அல்லது பிற உலக சக்திகளின் அல்லது கூட்டணிக் கட்சிகளின் வெளிப்புற அழுத்தங்கள் அவர்களை கவலை கொள்ளச் செய்கின்றன.

எப்படியிருந்தபோதிலும் ஒவ்வோர் ஆண்டும் இந்த அமைதிக் கருத்தரங்கில் பங்கேற்கும் நாம் ஐயத்திற்கிடமின்றி அமைதியை நிலைநாட்டிவது தொடர்பான நமது திட்டத்தைக் கொண்டிருக்கிறோம். உண்மையிலேயே அனைத்து மதங்களுக்கிடையிலும், அனைத்து நாடுகளுக்கிடையிலும், அனைத்து இனங்களுக்கிடையிலும் – ஏன் அனைத்து மக்களுக்கிடையிலும் அன்பு, கருணை, சகோதரத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும் என்ற நமது கருத்துகளையும், உணர்வுகளையும் வெளிப்படுத்துகிறோம். துரதிஷ்டவசமாக நமது இந்த உள்ளுணர்வை உண்மையாக மாற்றும் ஆற்றலோ, நாம் எதிர் நோக்கும் விளைவில் வெற்றி பெறத்தக்க அதிகாரமோ, வசதிகளோ நம்மிடம் இல்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இதே அரங்கில் நமது அமைதிக் கருத்தரங்கு நிகழ்ச்சியின்போது உலகில் அமைதியை ஏற்படுத்தும் வழிவகைகள் குறித்து உரையாற்றினேன். ஐக்கிய நாட்டு சபை எப்படி பணியாற்ற வேண்டும் என்பதைக் குறித்தும் அப்போது பேசினேன். அதன் பின்னர் நமது மிகவும் அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய லார்டு எரிக் ஆவ்பெரி (Lord Eric Avebury) இந்த உரை ஐக்கிய நாட்டு சபையிலேயே நிகழ்த்தப்பட்டிருக்க வேண்டும் என கருத்து தெரிவித்திருந்தார். இது, அவர் தமது கருத்துகளை தாராள மனதுடனும், பரிவுடனும் கூறுபவர் என்ற அவரது சிறந்த பண்பைக் காட்டுகிறது.

நான் கூற விரும்புவது என்னவெனில், வெறும் சொற்பொழிவுகள் நிகழ்த்துவதாலோ அல்லது அவற்றைக் கேட்பதாலோ அமைதியை நிலைநாட்டி விட முடியாது; அது மட்டும் போதாது. இந்தத் தலையாய இலக்கை அடைய அத்தியாவசியமான தேவை என்னவென்றால், முழுமையான நீதியையும், நேர்மையையும் எல்லா விஷயங்களிலும் கடைபிடிப்பதேயாகும். திருக்குர்ஆன் அதிகாரம் 4 வசனம் 136 – ல் இது குறித்து ஓர் அழகிய போதனையை – படிப்பினையை வழங்கி நமக்கு வழிகாட்டுகிறது. அது கூறுகிறது:

''நீதியை நிலைநாட்டுவதற்காக உங்கள் சாட்சியம் உங்களுக்கு எதிராகவோ, உங்கள் பெற்றோருக்கு எதிராகவோ, உங்கள் நெருங்கிய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் எதிராகவோ இருப்பினும் நீங்கள் அதனை நிறைவேற்ற வேண்டும்.''

இதுதான் பொதுவான நன்மைக்காக, தனிப்பட்ட ஆசைகளைப் புறந்தள்ள வேண்டும் என்னும் உண்மையான நீதியாகும். இந்த போதனையை ஒட்டுமொத்தமாக சிந்தித்துப் பார்க்கும்போது பணபலம் மற்றும் ஆதிக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நேர்மையற்ற செயல்முறைகள் அனைத்தும் கைவிடப்பட வேண்டும் என்பதை நாம் உணர்வோம். அதற்கு பதிலாக ஒவ்வொரு நாட்டின் பிரதிநிதிகளும், தூதுவர்களும் நேர்மையுடன் நீதியையும், சமத்துவத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்ற ஆவலோடு முன்வர வேண்டும். இதுவே அமைதியை ஏற்படுத்தும் ஒரே வழியாகும். ஐக்கிய நாட்டின் பொது சபையிலும் பாதுகாப்பு கவுன்ஸிலிலும் நிகழ்த்தப்படும் உரைகள் வெகுவாகப் பாராட்டப்பட்டு வரவேற்கப்படுகின்றன. ஆனால் இத்தகைய புகழ் மொழிகள் பொருளற்றவையாகும். ஏனெனில் உண்மையான முடிவுகள் எல்லாம் ஏற்கனவே எடுக்கப்பட்டு விடுகின்றன.

எனவே எங்கு நீதியுடனும், ஜனநாயக வரைமுறைப்படியும் அல்லாமல், பலவந்தத்தின் காரணமாகவோ, வல்லரசுகளின் ஆதரவைப் பெறும் பொருட்டோ முடிவுகள் எடுக்கப்படுகின்றனவோ அங்கு நிகழ்த்தப்படும் இத்தகைய சொற்பொழிவுகள் அனைத்தும் ஒன்றுமற்றவையும், பொருளற்றவையும், வெளியுலகை ஏமாற்ற மேற்கொள்ளப்படும் பாசாங்குமே ஆகும். ஆயினும் இவற்றின் காரணமாக நாம் விரக்தி அடைந்து நமது எல்லா முயற்சிகளையும்

விட்டு விட வேண்டும் என்று இதற்குப் பொருள் அல்ல. மாறாக, நாட்டின் சட்ட வரம்புக்குள் இருந்தவாறு, அப்போதைய தேவைகள் குறைத்து அரசுக்குத் தொடர்ந்து நினைவூட்டி வர வேண்டும். அதைப் போன்று உலக அளவில் நீதி நிலைநிற்பதற்காக இதனை நாம் சுயநல நோக்கம் கொண்ட சக்திகளிடமும் முறையாக எடுத்துக் கூற வேண்டும். அப்போதுதான் உலகம், நாம் அனைவரும் விரும்பும் அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் இருப்பிடமாகத் திகழும்.

எனவே நாம் நமது முயற்சிகளை விட்டு விடக் கூடாது; விட்டு விடவும் முடியாது. கொடுமைக்கும் அநீதிக்கும் எதிராக குரல் கொடுப்பதை நாம் நிறுத்தி விட்டால் பிறகு நாமும் நற்பண்புகள், உயர்படித்தரங்கள் இல்லாதவர்கள் போன்று ஆகிவிடுவோம். நமது குரல்கள் கேட்கப்பட்டனவா? இல்லையா? அவற்றால் தாக்கம் ஏற்பட்டனவா இல்லையா? என்பது முக்கியமல்ல. நாம் மக்களை அமைதியின் பக்கம் தொடர்ந்து அழைத்துக் கொண்டே இருக்க வேண்டும். மார்க்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாடுகளைக் கடந்து மனிதப் பண்புகளை மேம்படுத்துவதற்காகப் பலர் இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்து உலகில் அமைதியையும் இரக்க சிந்தனையையும் பரவச் செய்வதற்காக நிகழ்த்தப்படுகின்ற உரைகளைக் கேட்கவும், அறிந்து கொள்ளவும், உரையாற்றவும் வந்திருப்பவர்களைப் பார்க்கும்போது நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். உங்களால் முடிந்த அளவுக்கு அமைதி நிலை பெற முயற்சி செய்யுங்கள் என உங்கள் அனைவரிடமும் வேண்டிக் கொள்கிறேன். அதன் மூலம் நாம் இந்த மின்னும் நம்பிக்கையின் ஒளியை தொடர்ந்து ஒளிரச் செய்வோம். ஒருநாள் வரும். அப்போது உலகின் எல்லா பகுதிகளிலும் உண்மையான அமைதியும் நீதியும் நிலைநிறுத்தப்பட்டு விடும்.

மனித முயற்சி தோல்வியடையும்போது மனித குலத்தின் விதியை தீர்மானிக்க இறைவன் தனது திட்டத்தை வகுக்கின்றான் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இறைவனின் திட்டம் செயல்படத் துவங்கும் முன்பே, மக்களை அந்த இறைவன் பக்கமும், மனித குலத்திற்கு தொண்டாற்றுவதன் பக்கமும் அவன் கட்டாயப்படுத்துவதை விட, உலக மக்கள் தாமாகவே இந்த முக்கிய விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்த முன் வருவது மிகவும் நல்லதாகும். ஏனெனில் இறைவன் செயல்பட நிர்பந்தித்தால் பிறகு அவனது கடும் கோபம் மனித இனத்தை பயங்கரமாகப் பிடிக்கின்றது.

இன்றைய உலகில், இறைவனின் தீர்ப்பின் அச்சுறுத்தும் அடையாளம் மற்றோர் உலகப் போரின் வடிவில் ஏற்படலாம். இத்தகைய போரினால் ஏற்படும் விளைவுகளும் அழிவுகளும் இந்தப் போருடன் மட்டும் தொடர்புடையவையாக இருக்காது; அல்லது இந்த தலைமுறையோடு மட்டும் முடிந்து விடாது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. உண்மையில் இதன் பயங்கரமான விளைவுகள் பல தலைமுறை வரை தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். இத்தகைய போரின் ஒரு துயரமிகு விளைவு எதுவாக இருக்குமெனில், பிறக்கும் குழந்தைகள் இதனால் பாதிப்புக்குள்ளாகும். தற்போது மட்டுமல்ல; எதிர்காலத்திலும் இது தொடரும். இன்றைய ஆயுதங்கள் எந்த அளவு நாசமானவை என்றால், அவற்றின் தாக்கத்தால், பிறக்கும் குழந்தைகள் தலைமுறை தலைமுறையாக மரபணு அளவிலும், உடலளவிலும் பெரும் குறைபாடுகளைக் கொண்டவையாக இருக்கும்.

இரண்டாம் உலகப் போரின்போது அணு ஆயுதத்தால் தாக்கப்பட்டு அதன் வெறுக்கத்தக்க எதிர் விளைவுகளை எதிர்கொண்ட ஒரு நாடு ஜப்பான் ஆகும். இன்றும் கூட நீங்கள் ஜப்பானுக்குச் சென்று அந்த மக்களை சந்தித்தால் போரின் மீதான அச்சமும் வெறுப்பும் அவர்களின் கண்களிலும் அவர்களின் பேச்சுகளிலும் வெளிப்படுவதைக் காண்பீர்கள். ஆனால் அன்று உபயோகிக்கப்பட்டு பேரழிவை ஏற்படுத்திய அணு ஆயுதங்கள் இன்று சில சிறிய நாடுகளிடம் உள்ள அணு ஆயுதங்களை விடவும் குறைந்த சக்தி கொண்டவையாகும்.

எழுபது ஆண்டுகள் கழிந்து விட்ட பிறகும் கூட இன்றும் ஜப்பானில் பிறக்கும் குழந்தைகளிடம் அணு ஆயுதத்தால் ஏற்படும் பாதிப்புகள் காணப்படுகின்றன. ஒரு மனிதர் துப்பாக்கியால் சுடப்பட்டால் மருத்துவ சிகிச்சையின் மூலம் உயிர் வாழ வாய்ப்பு உள்ளது. ஆனால் அணு ஆயுதப் போர் நிகழ்ந்தால் தப்பித்துக் கொள்ளும் அதிஷ்டம் தாக்குதலுக்குள்ளான பகுதியிலுள்ள எவருக்கும் இல்லை. மாறாக, மக்கள் உடனே மரணித்து சிலைகளைப் போன்று ஆகி விடுவர். அவர்களின் தோல் உருகிப் போய்விடும். குடிநீர், உணவுப் பொருள், தாவர வகைகள் எல்லாம் கதிர்வீச்சின் பாதிப்பால் நச்சுத்தன்மை கொண்டதாக ஆகி விடும். இதனால் எப்படிப்பட்ட நோய்கள் உருவாகலாம் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடியும். எந்த

இடங்கள் நேரடியான தாக்குதலுக்கு உள்ளாகவில்லையோ, எங்கு கதிர்வீச்சின் அளவு குறைவாக உள்ளதோ அந்த இடங்களில் கூட நோய்கள் ஏற்படும் அபாயங்கள் உள்ளன. அங்கு தோன்றும் எதிர்கால சந்ததியினரும் பெரும் ஆபத்துக்கு ஆளாகி விடுவர்.

எனவே நான் கூறியபடி, பேரழிவை எற்படுத்தும் அணு ஆயுதப் போர் நிகழ்த்தப்பட்டால் அதன் விளைவுகள் போரின்போதும், போர் முடிந்த காலத்திற்கும் மட்டுமோ உரியவையல்ல. இந்த பாதிப்பு தலைமுறை தலைமுறையாக தொடர்ந்து கொண்டேயிருக்கும். இவையே இந்தப் போரினால் ஏற்படும் உண்மையான விளைவுகளாகும். எனினும் இன்றும் கூட தன்னலம் கொண்ட அறிவற்ற சிலர் தனது கண்டுபிடிப்புகளின் மீது பெருமை கொண்டு தாம் உருவாக்கியதை உலகிற்குத் தரும் அன்பளிப்பு என்று கூறுகின்றனர்.

உண்மை என்னவெனில், கவனக்குறைவின் காரணமாகவோ அல்லது விபத்துகளின் காரணமாகவோ அணு சக்தி தொழில் நுட்பத்தின் பயன்தரும் அம்சங்கள் எனக் கூறப்படுபவை கூட மிகப் பெரும் அபாயங்களைக் கொண்ட பேரழிவை எற்படுத்தி விடும். ஏற்கனவே 1986-ஆம் ஆண்டு தற்போதைய Ukraine(உக்ரைன்)ல் உள்ள Chernobyl (செர்னோபில்) என்ற இடத்தில் அணு விபத்தால் பேரழிவு ஏற்பட்டதை நாம் கண்டோம். கடந்த ஆண்டு கூட ஜப்பானில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி மற்றும் சுனாமிக்குப் பிறகு அணு அபாயத்தின் எதிர்பார்ப்புடன் போட்டி போட வேண்டிய அச்சத்தில் நாடு மூழ்கி இருந்தது. இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்பட்ட பின் பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் திரும்பவும் குடியமர்த்துவது மிகக் கடினமாகும். அவர்களின் தனிப்பட்ட, மோசமான அனுபவத்தால் ஜப்பானியர்கள் இந்த விஷயத்தில் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கின்றனர். அவர்களின் அச்சமும் பதற்றமும் மிகவும் நியாயமானதேயாகும்.

போரினால் மக்கள் மரணிப்பது தெளிவான தெரிந்த விஷயம்தான். இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் ஈடுபடும்போது அந்த அரசும், மக்களில் சிலரும் கூட போரில் கொல்லப்படுவர் என்பதை நன்கு அறிந்தே இருந்தனர். சுமார் 30 இலட்சம் மக்கள் ஜப்பானில் மரணித்ததாகக் கூறப்படுகிறது. இது மொத்த மக்கள் தொகையில் 4% ஆகும். மக்கள் தொகையின் அடிப்படையில் மற்ற நாடுகளில் அதிகமான விகிதாச்சாரத்தில் மக்கள் மரணித்திருக்கலாம். ஆயினும்

போரின் மீதான வெறுப்பும், பகைமை உணர்வும் பிற நாட்டினரை விட ஜப்பானிய மக்களிடம் அதிகமாக இருப்பதைக் காண முடிகிறது. இதற்குக் காரணம் இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானில் போடப்பட்ட இரண்டு குண்டுகள் ஆகும். இதன் விளைவுகளை இன்று வரை ஜப்பான் அனுபவிக்க வேண்டியதுள்ளது. தனது நகரங்களில் விரைவாக குடியிருப்புகளை ஏற்படுத்தி மக்களைக் குடியமர்த்தியதன் மூலம் ஜப்பான் தனது ஆற்றலையும் மீண்டெழும் திறனையும் நிரூபித்துக் காட்டியுள்ளது. ஆனால் இன்று திரும்பவும் அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால் சில நாடுகளின் பகுதிகள் உலக வரைபடத்திலிருந்தே முற்றிலும் அகற்றப்பட்டு விடும்; அவை முற்றிலும் இல்லாமற் போய்விடக் கூடும் என்பதை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும்.

மிகைப்படுத்தப்படாத மதிப்பீட்டின்படி, இரண்டாம் உலகப் போரில் மரணித்தவர்களின் எண்ணிக்கை சுமார் 6 கோடியே 20 இலட்சம் எனக் கூறப்படுகிறது. இதில் 4 கோடி பேர் பொதுமக்கள் ஆவர். அதாவது இராணுவத்தினரை விட அதிகமாக பொதுமக்கள் மரணித்தனர். ஜப்பானைத் தவிர மற்ற இடங்களிலெல்லாம் பழமையான ஆயுதங்களைக் கொண்டு வழக்கமான முறைப்படிதான் போர்கள் நடந்தன; அப்படி இருந்தும் இத்தகைய பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன.

பிரிட்டன் சுமார் 5 இலட்சம் உயிரிழப்பை சந்திக்க வேண்டியது ஏற்பட்டது. அந்த நேரத்தில் பிரிட்டன் காலனி ஆதிக்கம் செலுத்தியது. இந்தக் காலனி ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளும் பிரிட்டனுக்கு ஆதரவாகவே போரில் ஈடுபட்டன. அவர்களின் இழப்பையும் கணக்கில் எடுத்தால், பலியானவர்களின் எண்ணிக்கை இன்னும் பல இலட்சங்கள் உயரும்.

இந்தியாவில் மட்டும் சுமார் 16 இலட்சம் மக்கள் உயிரிழந்தனர்.

ஆனால் இப்போது நிலைமை மாறி விட்டது. எந்த நாடுகள் பிரிட்டனின் காலனி நாடுகளாக இருந்தனவோ, பிரிட்டிஷ் பேரரசுக்கு ஆதரவாக போர் செய்தனவோ, அந்த நாடுகள் இன்று போர் ஏற்பட்டால் பிரிட்டனுக்கு எதிராகப் போரிடலாம். மேலும் நான் ஏற்கனவே கூறியபடி, சில சிறிய நாடுகள் கூட அணு ஆயுதங்களைப் பெற்றுள்ளன.

அணு ஆயுதங்களைப் பற்றிய சரியான அறிவைப் பெறாத, அல்லது அவர்களின் செயல்களின் விளைவுகளைக் குறித்து எண்ணிப் பார்க்கக் கூட முடியாத மக்களிடம் இந்த ஆயுதங்கள் சென்று சேர்ந்து விடக் கூடும் என்பது மிகப் பெரும் அச்சமாகி விட்டது. உண்மையில் இந்த மக்கள் விளைவுகளைக் குறித்து கவலைப்படாதவர்களும், போர் செய்வதில் மகிழ்ச்சி அடைபவர்களும் ஆவர்.

எனவே வல்லரசுகள் நீதியுடன் செயல்படாவிட்டால், சிறிய நாடுகளின் அதிருப்திகளை களையாவிட்டால், சிறந்த, அறிவுப்பூர்வமான திட்டங்களை வகுக்காவிட்டால் நிலைமை கட்டுப்பாட்டை மீறி விடும். பின்னர் ஏற்படும் விளைவு நமது அறிவுக்கும் கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு இருக்கும். அமைதியை விரும்பும் உலகின் பெரும்பான்மையினர் கூட இந்த அழிவினால் சூழப்பட்டு விடுவர்.

எனவே எனது மனப்பூர்வமான விருப்பம் என்னவென்றால், எல்லா நாடுகளைச் சேர்ந்த தலைவர்களும் இந்த அச்சமூட்டும் உண்மை நிலையைப் புரிந்து கொண்டு, கடுமையான முறையில் திட்டங்களை மேற்கொள்வதற்கு பதிலாக, நிர்பந்தத்தின்மூலம் தனது நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைய முயற்சிப்பதற்கு பதிலாக நீதியை நிலைநிறுத்தக் கூடிய திட்டங்களை செயல்படுத்தப் பாடுபட வேண்டும்.

சமீபத்தில் ரஷ்யாவைச் சேர்ந்த மூத்த இராணுவ தளபதி அணு ஆயுதப் போரினால் ஏற்படக் கூடிய மறைமுக ஆபத்துகள் குறித்து எச்சரிக்கை விடுத்திருந்தார். அவரது கருத்தின்படி இத்தகைய அணு ஆயுதப் போர் ஆசியாவிலோ, வேறு எங்குமோ நிகழாது. அது ஐரோப்பாவின் எல்லைப் புறங்களில் நிகழும்; கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தே இந்தப் போருக்கான துவக்கம் ஏற்படும் எனக் கூறினார். சிலர் இதை அவரது சொந்தக் கருத்து எனக் கூறினாலும் அவர் கூறியது சாத்தியமற்ற ஒன்று என்று நான் கருதவில்லை. மேலும் இத்தைகைய போர் மூண்டால், ஆசிய நாடுகளும் இதில் பங்கு பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்றும் நான் நம்புகிறேன்.

சமீபத்தில் ஊடகங்கள் வாயிலாக பரப்பப்பட்ட இன்னொரு செய்தி, இஸ்ரேல் நாட்டின் உளவுத் துறையான Mossad (மோசாது)

என்பதன் ஓய்வு பெற்ற தளபதியின் கருத்தாகும். பிரபல அமெரிக்கத் தொலைக்காட்சியான CBS-க்கு அவர் அளித்த பேட்டியில், இஸ்ரேல் அரசு ஈரான் மீது போர் தொடுக்க விரும்பியது என்பது தெளிவாகத் தெரிகிறது எனக் கூறினார். மேலும் இத்தகைய தாக்குதல் நடந்தால் எங்கு? எப்படி? இந்தப் போர் முடியும் என்பதைக் கணித்துக் கூற முடியாது என்றும் அவர் கூறியிருந்தார். எனவே எந்தத் தாக்குதலும் தொடுக்கக் கூடாது என அவர் அறிவுரையும் கூறியிருந்தார்.

இது தொடர்பாக எனது கருத்து என்னவெனில், இத்தகைய போர் அணு ஆயுதப் பேரழிவில்தான் முடியும். சமீபத்தில் நான் ஒரு கட்டுரையைப் படிக்க நேர்ந்தது. அதில் அதன் ஆசிரியர் இன்றைய உலகின் நிலைமை பொருளாதார அளவிலும், அரசியல் அளவிலும் 1932-ஆம் ஆண்டின் நிலைமையை ஒத்திருப்பதாகக் கூறியிருந்தார். சில நாடுகளில் மக்கள் அவர்களது அரசியல்வாதிகளின் மீதும் ஜனநாயகத்தின் மீதும் நம்பிக்கையிழந்து விட்டனர். மேலும் பல ஒத்த, ஒப்புமையுடைய விஷயங்கள் எல்லாம் ஒன்றிணைந்து இரண்டாம் உலகப் போர் ஆரம்பிப்பதற்கு சற்று முன் இருந்த அதே நிலையைப் போன்று காட்சி தருகின்றது என்று அவர் கூறியிருந்தார்.

இவரது ஆய்வினை சிலர் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் நான் இதனை ஏற்றுக் கொள்கிறேன். எனவே உலக நாடுகளின் அரசுகள் மிகவும் கவலைப்பட வேண்டும்; இன்றைய நிலையைக் குறித்து அக்கறை கொள்ள வேண்டும் எனவும் நான் நம்புகிறேன். அதே போன்று என்ன ஆனாலும் சரி, பதவியைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள நீதியற்ற சில முஸ்லிம் நாடுகளின் தலைவர்களும் நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையெனில் அவர்களின் செயல்களும், அவர்களின் மூடத்தனமுமே அவர்களின் அழிவுக்குக் காரணமாகி விடும். மேலும் அவர்கள் தம் நாடுகளை மிக பயங்கரமான நாசத்திற்கு இட்டுச் செல்வர்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்த நாங்கள் உலகையும் மனிதகுலத்தையும் எல்லாவிதமான அழிவுகளிலிருந்தும் காப்பாற்ற எங்களால் இயன்ற முயற்சிகளை செய்கிறோம். ஏனெனில் இந்தக் காலத்தின் இமாமை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம். அவர்கள் அல்லாஹ்வால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக அனுப்பப்பட்டுள்ளார்கள். மேலும் அவர்கள் முழு மனிதகுலத்திற்கும்

கருணையாக அனுப்பப்பட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடியாராக வந்துள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளை நாங்கள் பின்பற்றி நடப்பதால் உலகின் நிலைமைக் கண்டு நாங்கள் மிகுந்த வேதனையும், துயமும் கொள்கின்றோம். இந்த வேதனையே மனிதகுலத்தை அழிவிலிருந்தும் துன்பத்திலிருந்தும் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட எங்களை தூண்டுகிறது. எனவே நானும், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்த அனைவரும் உலகில் அமைதியை நிலைநாட்டிவிட வேண்டும் என்ற எங்களது பொறுப்பை நிறைவேற்ற முயற்சி செய்கிறோம்.

அமைதியை மேம்படுத்த நான் எடுத்த முயற்சிகளுள் ஒன்று, குறிப்பிட்ட உலகத் தலைவர்களுக்கு நான் எழுதிய தொடர்ச்சியான கடிதங்களாகும். சில மாதங்களுக்கு முன்னர் நான் போப் பெனடிக்ட் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அது எனது ஓர் அஹ்மதி பிரதிநிதி மூலமாக நேரடியாக அவரிடம் கொடுக்கப்பட்டது. அவர் உலகின் மிகப் பெரும் மார்க்க அமைப்பின் தலைவராக இருப்பதால் அமைதியை நிலைபெறச் செய்ய அயராது பாடுபட வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் நான் கூறிருந்தேன்.

அதே போன்று சமீபத்தில் இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான பகைமை அபாயகரமான கட்டத்தை நெருங்குவதைப் அறிந்த நான் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நித்தன்யாஹு அவர்களுக்கும், ஈரான் அதிபர் மஹ்மூது அஹ்மதி நிஜாத் அவர்களுக்கும் கடிதங்கள் அனுப்பினேன். அதில் நான் அவர்களிடம் மனிதகுலத்தின் நன்மையைக் கருத்தில் கொண்டு முடிவுகள் எடுக்கப்படும்போது அவசரப்படுவதையும், முன்பின் ஆராயாமல் செயல்படுவதையும் விட்டு விட வேண்டும் என்று கூறிருந்தேன்.

மேலும் சமீபத்தில் அதிபர் பராக் ஒபாமாவுக்கும் கனடா அதிபர் ஸ்டீபன் ஹார்பருக்கும் கடிதங்கள் எழுதியிருந்தேன். அதில் அவர்கள் இருவரையும் அமைதியும் ஒற்றுமையும் உலகில் மேம்பட தங்களின் பங்களிப்பை, கடமையை நிறைவேற்றும்படி கூறியிருந்தேன்.

மேலும் நான் பிற அரசுகளின் தலைவர்களுக்கும் எச்சரிப்பதற்காக கடிதம் எழுத இருக்கிறேன். பல தரப்பட்ட தலைவர்களுக்கு அனுப்பப்பட்ட எனது கடிதங்களுக்கு அவர்களின் பார்வையில் ஏதாவது மதிப்பு, முக்கியத்துவம் கொடுக்கப்படுமா என்பது எனக்குத்

தெரியாது. அவர்களின் எதிர்நடவடிக்கை எதுவாக இருந்தாலும் இன்றைய உலகின் அபாயகரமான நிலையைக் குறித்த இலட்சக்கணக்கான அஹ்மதி முஸ்லிம்களின் உணர்வுகளை, மன எழுச்சியை அஹ்மதிய்யா முஸ்லிம் கலீஃபா, ஆன்மீகத் தலைவர் என்ற முறையில் அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய பணியை நான் செய்து விட்டேன்.

நான் இதனை தெரிவிப்பது தனிப்பட்ட அச்சத்தின் காரணத்தால் அல்ல என்பதை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். மாறாக, மனிதகுலத்தின் மீதான உண்மையான நேசத்தினால்தான் நான் இதனைச் செய்துள்ளேன். மனிதகுலத்தின் மீதான இந்த நேசம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளின் விளைவாக எல்லா முஸ்லிம்களிடமும் நிலைபெற்றுள்ளது. நான் ஏற்கனவே கூறியபடி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு மனிதகுலத்திற்கும் அருட்கொடையாகவும், கருணையாகவும் அனுப்பப்பட்டுள்ளார்கள். மனிதகுலத்தின் மீதான எங்களின் நேசம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளின்படி நேரடி விளைவாகும் என்பதைக் கேட்டவுடன் நீங்கள் ஆச்சரிமோ அல்லது அதிர்ச்சியோ அடையலாம். அவ்வாறாயின் முஸ்லிம் தீவிரவாத அமைப்புகள் ஏன் அப்பாவி மக்களை கொன்று குவிக்கின்றனர்? சில முஸ்லிம் நாடுகளின் தலைவர்கள் தமது ஆட்சி அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தமது சொந்த மக்களையே கொன்று குவிப்பதற்கு ஏன் கட்டளையிடுகின்றனர்? என்ற கேள்வி உங்கள் மனதில் தோன்றலாம்.

இத்தகைய தீய செயல்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கு முற்றிலும் மாற்றமானவை என்பதை தெளிவுபடுத்திக் கொள்கிறேன். எந்தச் சூழ்நிலையிலும் பயங்கரவாதத்திற்கோ, தீவிரவாதத்திற்கோ திருக்குர்ஆன் அனுமதி வழங்கவில்லை. எங்களது நம்பிக்கை என்னவெனில், இன்றைய காலத்தில் சர்வ வல்லமைமிக்க இறைவன் காதியானைச் சேர்ந்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகவும், இமாம் மஹ்தி ஆகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முற்றிலும் கட்டுப்பட்டவராகவும் தோன்றச் செய்துள்ளான். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்

இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் அசல், உண்மையான போதனைகளை பரவச் செய்வதற்காக அனுப்பப்பட்டார்கள். ஒருவர் மற்றவருக்கு ஆற்ற வேண்டிய உரிமையைக் கண்டறிந்து அதை மதித்து செயல்படுத்தவே அன்னார் அனுப்பப்பட்டார்கள். மார்க்கத்தின் பெயரால் செய்யப்படும் எல்லாவிதமான போர்களையும் முடிவுக்குக் கொண்டு வர அன்னார் அனுப்பப்பட்டார்கள். ஒவ்வொரு மார்க்கத்தின் தோற்றுனர்கள் மற்றும் நபிமார்களின் மதிப்பை, மாண்பை, கண்ணியத்தை நிலைநாட்ட அன்னார் அனுப்பப்பட்டார்கள். உயர்தரமான நல்லொழுக்க நெறிகளை அடைவதன் பக்கம் கவனமூட்டி, உலகில் அமைதி, நேசம், பரிவு மற்றும் சகோதரத்துவத்தை நிலைநாட்ட அன்னர் அனுப்பப்பட்டார்கள்.

நீங்கள் உலகில் எப்பகுதிக்குச் சென்றாலும் இத்தகைய பண்புகள் எல்லா உண்மையான அஹ்மதி முஸ்லிம்களிடம் ஆழமாகப் பதிந்திருப்பதைக் கண்டு கொள்ளலாம். எந்த பயங்கரவாதிகளோ, தீவிரவாதிகளோ எங்களுக்கு முன்மாதிரி அல்ல; கொடுமையிழைக்கும் முஸ்லிம் சர்வாதிகாரிகளும் எங்களுக்கு முன்மாதிரி அல்ல; மேற்கத்திய சக்திகளும் எங்களுக்கு முன்மாதிரியல்ல. நாங்கள் பின்பற்றும் முன்மாதிரி இஸ்லாத்தை தோற்றுவித்த தூய நபி ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் முன்மாதிரியே ஆகும். எங்களுக்கு வழிகாட்டும் நெறிகள் திருக்குர்ஆனே ஆகும்.

வருத்தத்தைத் தரும் விஷயம் என்னவென்றால், முஸ்லிம்களுள் ஒரு சிலர் முன் வைக்கும் இஸ்லாத்தில், அதன் உண்மையான வடிவம் முற்றிலும் திரித்துக் கூறப்பட்டிருக்கிறது. அத்துடன் அவர்கள் அந்த தீய வழிகாட்டுதலையே கடைபிடித்து நடக்கின்றனர். அதனை நீங்கள் உண்மையான இஸ்லாம் என நம்பிவிடக் கூடாது என்று நான் உங்கள் அனைவரிடமும் கூறிக் கொள்கிறேன். சமாதானத்தை நாடும் பெரும்பான்மையான முஸ்லிம்களின் உணர்வுகளைக் காயப்படுத்தும் அவர்களைக் கொடுமைக்கு இலக்காக்குவதற்கும் அத்தீய நடவடிக்கைகளை உங்களுக்குக் கிடைத்த அனுமதியாகக் கருதக் கூடாது.

திருக்குர்ஆன் எல்லா முஸ்லிம்களுக்கும் மிகப் புனிதமான, மதிக்கத்தக்க வேத நூலாகும். எனவே அதனைப் பழித்துரைப்பது மோசமாகச் சித்தரிப்பது, அதனை எரிப்பது போன்றவை நிச்சயமாக முஸ்லிம்களின் உணர்வை கடுமையாகப் புண்படுத்தக் கூடிய

செயல்கள் ஆகும். அவ்வாறு நடக்கும்போது பயங்கரவாத முஸ்லிம்களின் தரப்பிலிருந்து மிகவும் தவறான, பொருத்தமற்ற எதிர் நடவடிக்கைகளுக்கு அது வழிவகுப்பதை நாம் காண்கிறோம்.

மிக அண்மையில் ஆப்கானிஸ்தானில் நடைபெற்ற இரண்டு சம்பவங்களைப் பற்றி நாம் கேள்விப்பட்டோம். அமெரிக்க இராணுவத்தினர் சிலர் திருக்குர்ஆனை அவமதித்தனர். மேலும் அப்பாவிப் பெண்களையும், குழந்தையும் அவர்களின் வீடுகளிலேயே கொன்றனர். இதைப் போன்று ஓர் இரக்கமற்ற மனிதன், தெற்கு பிரான்ஸில் சில பிரஞ்சு வீரர்களை எக்காரணமுமின்றி சுட்டுக் கொன்றான். சில நாட்களுக்குப் பின் அவன் ஒரு பள்ளிக் கூடத்தில் நுழைந்து மூன்று அப்பாவி யூதக் குழந்தைகளையும் அவர்களின் ஆசிரியரையும் சுட்டுக் கொன்றான்.

இப்படிப்பட்ட செயல்முறைகள் முற்றிலும் தவறானவை. ஒருபோதும் இது சமாதானத்திற்கு வழிகோலாது. பாகிஸ்தானிலும் பிற பகுதிகளிலும் இது போன்ற கொடுமைகள் நாள்தோறும் அரங்கேறுகின்றன. இந்தச் செயல்கள் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு தங்கள் வெறுப்பைக் காட்ட எண்ணெய் வார்த்தது போன்று ஆகி விடுகின்றது. இதன் காரணமாக அவர்கள் தமது நோக்கத்தை அடைய பெரிய அளவில் திட்டங்கள் தீட்டி விடுகின்றனர். எனினும் சிறிய அளவிலான இப்படிப்பட்ட மனிதாபிமானமற்ற செயல்கள் யாவும் தனிநபர் விரோதம், உட்பகைமை ஆகியவற்றின் காரணமாக நிகழ்த்தப்படுபவையல்ல. மாறாக, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் சில நாடுகள் கடைபிடிக்கும் அநீதியான கொள்கைகளே இதற்குக் காரணமாக அமைகின்றன.

எனவே உலகில் அமைதி நிலைபெற முறையான நீதியின் வரையறைகள் ஒவ்வொரு மட்டத்திலும், உலகின் ஒவ்வொரு நாட்டிலும் உருவாக்கப்படுவது அவசியமானதாகும். ஒரு நிரபராதியை எக்காரணமுமின்றி கொலை செய்வது முழு மனிதகுலத்தையும் கொலை செய்வதற்கு சமம் என்று திருக்குர்ஆன் கூறுகிறது.

எனவே ஒரு முஸ்லிம் என்ற முறையில் நான் தெளிவுபடுத்துகிறேன். எந்த வகையிலும் கொடுமையிழைப்பதையோ, அடக்குமுறையை கையாள்வதையோ இஸ்லாம் அனுமதிக்கவில்லை. இது எந்த விதிவிலக்கும் இல்லாத முழுமையான தடையாகும். மேலும்

திருக்குர்ஆன் கூறுகிறது: ஏதேனும் ஒரு நாடோ அதன் மக்களோ உங்கள் மீது கொண்டிருக்கும் பகைமை நீங்கள் அந்த நாட்டுடன் முழுமையான நீதியுடனும் நல்ல முறையிலும் தடுப்பதைத் தடுக்கக் கூடாது. எந்தப் பகைமையும் போட்டி மனப்பான்மையும் பழி தீர்ப்பதற்கும் வரம்பு மீறிச் செயல்படுவதற்கும் உங்களை அனுமதிக்க வேண்டாம். திருக்குர்ஆன் நமக்கு இடும் மற்றொரு முக்கியமான தடை என்னவெனில், பிறரது செல்வங்களையும் வளங்களையும் பேராசை மற்றும் பொறாமைக் கண்கொண்டு பார்க்கக் கூடாது.

நான் சில கருத்துகளையே உங்கள் முன் வைத்துள்ளேன். ஆனால் இவைதான் சமுதாயத்திலும் பரந்த உலகிலும் அமைதிக்கு அடித்தளமிடுவதற்கும் நீதியை நிலைநாட்டுவதற்கும் மிகவும் அவசியமானவை ஆகும். எனது பிரார்த்தனை என்னவெனில், உலகம் இந்த முக்கிய விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அதன் மூலம் வாய்மையும் நீதியுமற்ற மக்கள் அழைத்துச் செல்லும் நாசத்திலிருந்து உலகம் காபாற்றப்பட முடியும்.

நான் இந்த தருணத்தில் சற்று அதிக நேரம் எடுத்துக் கொண்டமைக்காக உங்களிடம் மன்னிப்புக் கோர விரும்புகின்றேன். உண்மை என்னவெனில், உலகில் அமைதியை நிலைநாட்டுதல் குறித்த விஷயம் விரிவான, அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். காலம் கடந்து கொண்டிருக்கிறது. அது அதிகமாவதற்குள் நாம் அனைவரும் முழுக் கவனத்துடன் காலத்தின் கட்டாயத்தை உணர வேண்டும்.

நான் எனது உரையை நிறைவு செய்யும் முன், ஒரு முக்கிய விஷயத்தைக் கூற விரும்புகிறேன். இந்த ஆண்டில் இரண்டாம் எலிசெபத் இராணியின் வைர விழா கொண்டாடப்பட்டு வருவதை நாம் அறிவோம். காலக்கடிகாரத்தை 115 ஆண்டுகள் பின்னோக்கி சுழற்றி 1897-ஆம் ஆண்டை அடைந்தால் அப்போது விக்டோரியா மகாராணியின் வைர விழா கொண்டாடப்பட்டது. அந்த சமயத்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் விக்டோரியா மகாராணிக்கு ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பினார்கள். அந்தச் செய்தியில் இஸ்லாத்தின் போதனைகளை எடுத்துக் கூறியதுடன், அன்னார் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்காகவும், இராணியின் நீண்ட ஆயுளுக்காகவும் இறைவனிடம் வேண்டியிருந்தார்கள்.

அந்தச் செய்தியில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் மகாஇராாணியின் ஆட்சியின் மிகச் சிறந்த பண்பு அந்த ஆட்சியின் கீழ் அனைவருக்கும் மார்க்க சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகும் எனக் கூறியிருந்தார்கள். இன்றைய நிலையில் பிரிட்டிஷ் அரசு துணைக் கண்டம் முழுவதும் ஆட்சி செய்யவில்லை. இருப்பினும் மார்க்க சுதந்திரம் என்ற பண்பு பிரிட்டிஷ் சமூகத்திலும் அதன் சட்டங்களிலும் ஆழமாகப் பதிந்து விட்டது. அதன் மூலம் ஒவ்வொரு மனிதனுக்கும் மார்க்க சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது.

இங்கே மார்க்க சுதந்திரத்திற்கு அழகிய முன்மாதிரியை நீங்கள் இங்கே பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உலகில் அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்ற பொதுவான குறிக்கோளுடன் பல்வேறு மார்க்கங்களையும், நம்பிக்கைகளையும் சேர்ந்தவர்கள் இந்த நிகழ்ச்சியில் ஒன்று கூடியுள்ளீர்கள். எனவே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த சொற்களைக் கொண்டு விக்டோரியா மகாராணிக்காகப் பிரார்த்தித்தார்களோ அதே சொற்களைக் கொண்டு நான் எலிசெபத் மகாராணிக்காகப் பிரார்த்திக்கிறேன்.

ஆற்றலும் கண்ணியமும் மிக்க இறைவனே! இராணியின் அருளுக்குரிய நேசமிக்க ஆட்சியின் கீழ் நாங்கள் வாழ்வது போன்றே நீ அருளைக் கொண்டும் கருணையைக் கொண்டும் இராணியை எப்போதும் மகிழ்ச்சியுடன் வாழ வைப்பாயாக. இராணியின் தாராளமான, நேர்மையான ஆட்சியின் கீழ் அமைதியுடனும், வளத்துடனும் வாழ்வது போன்று நீ இராணியுடன் அன்புடனும், நேசத்துடனும் நடந்து கொள்வாயாக.

இவையெல்லாம் பிரிட்டிஷ் மக்களாட்சியின் கீழ் இருக்கின்ற ஒவ்வோர் அஹ்மதி முஸ்லிமின் நன்றியறிதலின் உணர்வுகளாகும். நீங்கள் இங்கு வந்து அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றை வெளிப்படுத்தியதற்கு நான் உங்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிக்க நன்றி.

தமிழாக்கம்: A.Nasir Ahmad



# நாடுகளுக்கிடையே நல்லுறவுகள் மட்டுமே அமைதிக்கான வழியாகும்

---

## கேபிடல் ஹில்

## வாஷிங்டன், D.C; அமெரிக்கா– 2012





The first Muslim Congressman, Keith Ellison meeting Ḥaḍrat Khalīfatul-Masīḥ Vaba




Brad Sherman (Democratic member of the United States House of Representatives) presenting American flag to Ḥaḍrat Khalīfatul-Masīḥ Vaba




Ḥaḍrat Mirza Masroor Ahmad, Khalīfatul-Masīḥ Vaba delivers his keynote address at U.S. Capitol Hill




Ḥaḍrat Mirza Masroor Ahmad, Khalīfatul-Masīḥ Vaba leading silent prayer at U.S. Capitol Hill



Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] during his official tour of U.S. Capitol Hill



Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] in U.S. Capitol Hill after his historic address to the US Statesmen and Bureaucrats

# முன்னுரை

2012-ஆம் ஆண்டு ஜூன் 27-ஆம் தேதி, கேபிடல் ஹில், வாஷிங்டன் **D.C** -ல் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வு நடந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழித்தோன்றலும், உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் தலைவருமான ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் மக்கள் சபை முன்னணி உறுப்பினர்கள், மேல்சபை உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், மத தலைவர்கள், பேராசிரியர்கள், கொள்கை ஆலோசகர்கள், உயர் அதிகாரிகள், தூதரக அதிகாரிகள், அறிவார்ந்த பிரதிநிதிகள், அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் அதிகாரிகள், பத்திகையாளர்கள் மற்றும் ஊடகத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோரின் முன்னிலையில் உரையாற்றினார்கள். முதன் முறையாக இதுபோன்ற ஒரு கூட்டம் மிகவும் முக்கியமான அமெரிக்க தலைவர்களுக்கும், மக்கள் சபையின் மக்கள் கட்சியின் தலைவரான மாண்பு மிகு நான்ஸி பிலோனி அவர்களுக்கும் உலக அமைதிக்கான இஸ்லாமிய தூதுச் செய்தியை அறியும் ஒரு வாய்ப்பு கிடைத்தது. மக்கள் சபைக்கு சகல மரியாதையுடன் கலீஃபா அவர்களை அழைத்துச் சென்று, அவர்களது அமெரிக்க வருகையை கவுரவிக்கும் வகையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு முன்னர் கேபிடல் ஹில் கட்டடத்தை அவர்கள் முழுமையாக சுற்றிப் பார்த்தார்கள். அந்தத் தீர்மானத்தின் அறிமுகப் பகுதியில் கூறப்படுவதாவது:

“நாங்கள் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் ஆன்மீகத் தலைவரும், நிர்வாகத் தலைவருமான ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்களை வாஷிங்டன் **D.C-** க்கு வரவேற்கிறோம். உலக அமைதி, நீதி, அஹிம்சை, மனித உரிமைகள், மத சுதந்திரம் மற்றும் மக்களாட்சிக்காக அவரது அர்ப்பணிப்பை நாங்கள் அங்கீகரிக்கிறோம்.”

## கேப்பிடல் ஹில் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களின் பெயர் பட்டியல் வருமாறு

✱ ராபர்ட் கேஸி – சீனியர் அமெரிக்க மேல் சபை உறுப்பினர் (பென்ஸில் வேனியா ஜனநாயகக் கட்சி)

✱ ஜான் கோனின் - அமெரிக்க மேல் சபை உறுப்பினர் (டெக்ஸாஸ் குடியரசு கட்சி)

✱ நான்ஸி பெலோஸி - அமெரிக்க மக்கள் சபை தலைவர் (கலிஃபோர்னியா ஜனநாயக கட்சி)

✱ கீத் எல்லிஸன் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (மின்னி சோட்டா ஜனநாயக கட்சி)

✱ பிராட்லே ஷெர்மன் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (கலிஃபோர்னியா ஜனநாயகக் கட்சி)

✱ ஃப்ராங்க் உல்ஃப் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (வார்ஜீனியா குடியரசு கட்சி)

✱ மைக்கேல் ஹோண்டா - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (கலிஃபோர்னியா ஜனநாயகக் கட்சி)

✱ டிமோதி மர்ஃபி - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (பென்ஸில்வேனியா குடியரசு கட்சி)

✱ ஜின்னட் ஸ்மிட்த் – அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (ஓஹியோ குடியரசு கட்சி)

✱ ஜேனிஸ் ஹான் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (கலிஃபோர்னியா ஜனநாயகக் கட்சி)

✱ ஜேனிஸ் ஸகோஸ்கி - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (இல்லியனால் ஜனநாயகக் கட்சி)

✱ ஜாக்கி ஸ்பீயர் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (கலிஃபோர்னியா ஜனநாயகக் கட்சி)

✱ ஸோ லோப்கன் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (கலிஃபோர்னியா ஜனநாயகக் கட்சி)

✸ ஷீலா ஜாக்ஸன்லீ - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (டெக்ஸாஸ் ஜனநாயக் கட்சி)

✸ கேரி பீட்டடர்ஸ் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (மிக்ஸிகன் ஜனநாயக கட்சி)

✸ தாமஸ் பெர்ரி - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (விஸ்கோலின் குடியரசு கட்சி)

✸ ஆதம் ஸ்சிப் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (கலிஃபோர்னியா ஜனநாயகக் கட்சி)

✸ மைக்கேல் கேபுனோ - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (மஸா சூ ஸெட் ஜனநாயகக் கட்சி)

✸ ஹோவர்ட் பெர்மன் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (கலிஃபோர்னியா ஜனநாயகக் கட்சி)

✸ ஜூடி சு -அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (கலிஃபோர்னியா ஜனநாயகக் கட்சி)

✸ ஆன்ரே கர்ஸான் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (இன்டியானா ஜனநாயக கட்சி)

✸ லாரா ரிச்சர்ட்ஸன் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (கலிஃபோர்னியா ஜனநாயகக் கட்சி)

✸ லாயிட் போ - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (டெக்ஸாஸ் ஜனநாயக் கட்சி)

✸ பார்னே ஃபிராங் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (மஸா சூ ஸெட் ஜனநாயகக் கட்சி)

✸ புரூஸ் பிரேலி - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (ஐயோவா ஜனநாயக கட்சி)

✸ டென்னிஸ் குசினிச் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (ஓஹியோ ஜனநாயகக் கட்சி)

✸ ட்ரென்ட் ஃபிராங்க்ஸ் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (அரிஸோனா குடியரசு கட்சி)

✸ கிரிஸ் மர்ஃபி - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (கன்னடிக்கட் ஜனநாயகக் கட்சி)

✱ ஹான்க் ஜான்ஸன் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (ஜார்ஜியா ஜனநாயக கட்சி)

✱ ஜேம்ஸ் கிளைபன் - அமெரிக்க மக்கள் சபை உறுப்பினர் (தெற்கு கரோலினா ஜனநாயக கட்சி)

✱ மேதகு போக்காரி கொட்டு ஸ்டீவன் - சிரால்யோன் நாட்டு அமெரிக்க தூதுவர்

✱ டாக்டர் காத்ரினா லான்டோஸ் ஸ்வெட் - அமெரிக்காவின் உலக மத சுதந்திரக் கமிஷனின் தலைவி

✱ மாண்புமிகு டிம் கேய்ன் - வர்ஜீனியாவின் முன்னாள் ஆளுநர்

✱ தூதர் ஸூஸன் பர்க் - அதிபர் பாராக் ஒபாமாவின் அணு பரவல் தடை சிறப்பு பிரதிநிதி

✱ தூதர் ஸூஸான் ஜான்ஸன் குக் - உலக மத சுதந்திரத்திற்கான அமெரிக்க தூதர்

✱ மாண்புமிகு காலித் அல் ஜலாமா - அமெரிக்காவுக்கான பஹ்ரைன் தூதரகத்தின் துணைத் தலைவர்

✱ ரெவரண்ட் மோன்ஸிக்னா ஜீன் ஃபிராங்கோஸ் லான்தியூம் - அமெரிக்காவுக்கான புனிதப் பார்வை அப்போஸ்தலிக நன்ஸியேட்சரின் துணைத் தலைவர்

✱ ஸாரா அல் ஒஜைலி - அமெரிக்காவுக்கான ஓமன் தூதரக மக்கள் பொது நல இணைப்பு அதிகாரி

✱ ஜனாப் ஸலீம் அல் கின்தி - அமெரிக்காவுக்கான ஓமன் தூதரக முதன்மை செயலர்

✱ ஃபவ்ஸியா ஃபயாஸ் - அமெரிக்காவுக்கான பாகிஸ்தான் தூதர்

✱ மாண்புமிகு செதா ஜெய்த் - அமெரிக்காவுக்கான மொராக்கோ நாட்டு தூதர்

✱ மாண்புமிகு நபில் முனீர் - பாதுகாப்பு சபையின் நான்காவது அமைச்சர் ஐக்கிய நாடுகள் சபைக்கான பாகிஸ்தனின் நிரந்தர மையம்

✱ மாண்புமிகு ஜோஸப் ரெவ்லி - அமெரிக்காவுக்கான ஸ்விட்ஸர்லாந்த்தின் தூதர்

★ மாண்புமிகு அலிஸா அய்ரஸ் - அமெரிக்காவின் வெளிவிவகார துணை உதவி செயலர் (தெற்கு மற்றும் மத்திய ஆசியா

★ தூதர் கார்ல் இன்டர்ஃபோர்த் - அமெரிக்கா-இந்தியா கொள்கைகள் மையத்தின் மூத்த ஆலோசகர்

★ மாண்புமிகு டோனால்ட் ஏ கேம்ப் - முக்கிய பொது விவகார முன்னேற்றம் மற்றும் உலக கல்வியின் மூத்த இணைப்பாளர்

★ தூதர் ஜாக்கி வோல்காட் - அமெரிக்காவின் உலக மத சுதந்திரத்திற்கான குழுவின் நிர்வாக இயக்குநர்

★ டாக்டர் அஸீஸா அல்ஹிப்ரி - அமெரிக்காவின் உலக மத சுதந்திரக்குழுவின் ஆணையர்

★ திரு ஈளையா லெக்கர் - மாநில நிவாகி மான்ட்கோமரி, மெரிலாண்ட்

★ விக்டோரியா அல்வரடோ - உலக மத சுதந்திரத்திற்கான அலுவலக இயக்குநர், அமெரிக்க வெளி விவகாரம்

★ டாக்டர் இமாத் தீன் அஹ்மது - இயக்குநர், சுதந்திரத்தின் கோபுக்ர அறிவகம்

★ டாக்டர் ஸைனப் அல்வானி - இஸ்லாமிய கல்வி உதவிப் பேராசிரியர் ஹார்வர்ட் பல்கலைக் கழகம், இஸ்கூல் ஆஃப் டிவினிட்டி

★ டெபோரா L. பெனடிக்ட் - இணை ஆலோசகர் அமெரிக்காவின் குடியுரிமை கழக உள்விவகார பாதுகாப்புத் துறை

★ லோரா பெர்க் - அமெரிக்க வீ விவகார அமைச்சகத்தின் முஸ்லிம் சமூகத்தின் சிறப்பு பிரதிநிதியின் மூத்த ஆலோசகர்

★ டாக்டர் சார்ல்ஸ் பட்டர்வொர்த் - மேரிலேண்டு பல்கலைக்கழக அரசாங்கம் மற்றும் அரசியல் பேராசிரியர்

★ ஃபாதர் ஜான்குரோலின் - அமெரிக்க கத்தோலிக்க பிஷப்கள் கூட்டமைப்பின் மதத்திற்கிடையேயான விவகாரங்கள் மற்றும் அனைத்து கிறிஸ்துவ அமைப்பின் தலைமை செயலகத்தின் நிர்வாக இயக்குநர்

★ மேஜர் ஃபிரான்ஸ் கேய்ஸ் (ஓய்வு) - அமெரிக்க கப்பற் படையின் மூத்த விஞ்ஞான ஆலோசகர்

✸ டாக்டர் ஸூகுரவேதனா வாக்ன் - உலக மத சுதந்திரம் மற்றும் தென் கிழக்கு ஆசியா திட்டங்களின் இயக்குநர்

✸ திரு பிரான்க் ஜன்னுஸி - அமெரிக்காவின் உலகளாவிய கைதிகள் பொது மன்னிப்பு அமைப்பின் வாஷிங்டன் அலுவலக தலைவர்

✸ திரு. T. குமார் - அமெரிக்காவின் உலகளாவிய கைதிகள் பொது மன்னிப்பு அமைப்பின் வாதாடும் இயக்குநர்

✸ ஜார்ஜ் லெவன்தல் - மான்ட் கோமரியின் மாகாண கவுன்ஸிலின் உறுப்பினர்

✸ திரு. ஆமர் லத்தீஃப் - விசிடிங் ஃபெலோ - அமெரிக்க,இந்திய கொள்கைகள் படிப்பின் (வித்வானிசேர்) உலக முக்கிய பொதுப் பாதுகாப்பு விவகார முன்னேற்றம் மற்றும் உலக கல்வி

✸ திரு.டிம்லென்டர் கிங் - அமெரிக்காவுக்கான பாகிஸ்தான்வெளி உறவுத் துறையின் பிரிவு அலுவலகம்

✸ திரு. ஜலால் மாலிக் - அமெரிக்க இராணுவ தேசிய பாதுகாப்பு சேனையின் வெளி விவகார அதிகாரி

✸ நவீது மாலிக் - அமெரிக்க வெளிவிவகார அமைச்சகத்தின் வெளிநாட்டு சேவை அதிகாரி

✸ டாலிய மோகஹத் - முஸ்லிம்களைப் பற்றிய படிப்பு கேலப் மையம் ஆகியவற்றின் மூத்த ஆய்வாளர் மற்றும் நிர்வாக இயக்குநர்

✸ திரு பால் மன்ன்டீரியோ - வெள்ளை மாளிகை பொது மக்களுக்கான நிகழ்ச்சியின் இணை இயக்குநர்

✸ மேஜர் ஜெனரல் டேவிட் குவான்டக் - அமெரிக்க இராணுவ பள்ளிகளின் மேலதிகாரி

✸ டினா ரவிரெஸ் - பெக்கட் ஃபண்டின் உலக மற்றும் அரசு உறவின் இயக்குநர்

✸ ரப்பி டேவிட் ஸபர்ஸ்டைன் - ஜூடாயிஸத்தின் சீர்திருத்தம் பற்றிய மத செயல்பாடுகள் மையத்தின் இயக்குநர் மற்றும் ஆலோசகர்

✸ சாப்ளின் பிரிகேடியர் ஜெனரல் அல்போன்ஸ் ஸ்டீபன்சன் - இயக்குநர் சாப்ளின் தேசிய பாதுகாப்பு பீரோ அலுவலகம்

✱ திரு. நாக்ஸ் தேம்ஸ் - அமெரிக்க, உலக மத சுதந்திரட்த்றகான கமிஷனின் கொள்கை மற்றும் ஆராய்ச்சியின் இயக்குநர்

✱ திரு. எரிக்டிரீன் - அமெரிக்க நீதி துறையின் மத துவேஷம் மற்றும் குடிகளின் உரிமை பிரிவு சிறப்பு தூதர்

✱ டாக்டர் ஹஸன் அப்பாஸ் - தேசிய இராணுவ பல்கலைக்கழகம் பிராந்திய மற்றும் பகுப்பாய்வின் பேராசிரியர்

✱ திரு. மாலிக் சிராஜ் அக்பர் - ரீகண் ஃபாஸல் ஃபெலோ- தேசிய இயற்கை ஜனநாயகம்.

✱ திரு மாத்திப். கே. அஸதா - குடியரசு கட்சியின் கேரிபீட்டர்ஸின் குழு பிரதிநிதி

✱ ஸ்டேஸி பர்டெட் - அரசு மற்றும் தேசிய விவகார கலங்கத்திற்கெதிரான பேரவையின் இயக்குநர்

✱ எலிஸபெத் காஸிடி - அமெரிக்காவின் உலக மத சுதந்திர கமிஷனின் கொள்கை மற்றும் ஆராய்ச்சியின் துணை இயக்குநர்

✱ ஆய்மி சியூ - அமெரிக்க இஸ்லாமிய காங்கிரஸின் ஊடக மற்றும் தொலைத்தொடர்பு, மக்கள் தொடர்பு இயக்குநர்

✱ திரு. கார்னிலஸ் கிரீமின் - வெளிவிவகார அமைச்சகம். ஜனநாயகம் மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் பிரிவு. பாகிஸ்தானுக்கான வெளிவிவகார துணை இயக்குநர்

✱ சதானந்த் தூமே - அமெரிக்க என்டர்பிரைஸ் இன்ஸ்டிடூட்டின் உள்ளூர் அதிகாரி

✱ டாக்டர் ரிச்சர்ட் கேத்ரோ - நாயக் கல்லூரியின் டீன், வாஷிங்டன் D.C

✱ திரு. ஜோ கிரிபோஸ்கி - மத மற்றும் மக்கள் கொள்கையகத் தலைவர்

✱ திருமதி. சாரா கிரிபோஸ்கி - மத மற்றும் மக்கள் கொள்கையகப் பிரதிநிதி

✱ டாக்டர். மேக்ஸ் கிராஸ் - கூடுதல் பேராசிரியர், முஸ்லிம்-கிறிஸ்தவ பரிமாற்ற மையமான இளவரசர் அல்வலீது பின் தலால் மையம் ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழகம்

✱ டாக்டர். ரியாஸ் ஹைதர் - ஜார்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பேராசிரியர்

✱ ஹுமா ஹக் - உதவி இயக்குநர், அட்லாண்டிக் கவுன்சில்-தெற்கு ஆசிய மையம்

✱ திரு. ஜே கன்ஸாரா - இணை இயக்குநர் ஹிந்து அமெரிக்க அறக்கட்டளை

✱ திரு. ஹமீது கான் - மூத்த அதிகாரி, சட்ட திட்ட மையம் அமெரிக்க அமைதிக்கான இன்ஸ்டிடூட்

✱ திரு. வால்ரிக் கிர்க்பேட்ரிக் - அகதிகள் மற்றும் அமெரிக்காவின் மனித உரிமைகள் கண்காணிப்பின் துணைவர்

✱ திரு. அலெக்ஸ் குரோனமர் - யூனிட்டி புரொடெக்ஷன்ஸ்

✱ திரு. பால் லிபென் - உலகளாவிய மத சுதந்திரத்தின் அமெரிக்க கமிஷனின் நிர்வாக எழுத்தாளர்

✱ செல்வி. அமி லில்லிஸ் - அமெரிக்க வெளிவிவகார அமைச்சகத்தின் வெளிவிவகார அதிகாரி

✱ திரு. கிரஹாம் மேஸன் - அல்லிஸன் ஸ்வாட்ஸ் குடொயரசு கட்சியின் சட்ட உதவியாளர்

✱ லாரன் மார்கோ - மதச் செய்தி சேவை

✱ திரு. டான் மெரிகா - **C.N.M.Com**

✱ திரு. ஜோஸப் **V.** மோன்ட் வில்லி - மூத்த இணை இயக்குநர் மெரிமேக் கல்லூரி யூத- கிறிஸ்தவ- முஸ்லிம் கல்வி மையம்

✱ திரு.ஆரோன் மையர்ஸ் - நிகழ்ச்சி அலுவலர், ஃபிரீடம் ஹவுஸ்

✱ அட்டியா நாசர் - மெரிக்க வெளியுறவு அமைச்சகம் பிராந்திய ஒருங்கிணைப்பு அதிகாரி

✱ மேலனி நேஸர் **-** மூத்த இயக்குநர், அமெரிக்க பாலிஸி மற்றும் அட்வகஸி - **H I A S**

✱ டாக்டர். எலியட் பாரிஸ் - போவி ஸ்டேட் யுனிவர்ஸிட்டி

✱ திரு. ஜான் பின்னா - அமெரிக்க இஸ்லாமிய காங்கிரஸின் அரசு மற்றும் உலகளாவிய உறவின் இயக்குநர்

✱ திரு. ஆரிஃப் ராஃபிக் - கூடுதல் நிபுணர் மிடில் ஈஸ்ட் யுனிவர்சிட்டி

✱ மாயா ராஜரத்தினம் – உலகளாவிய கைதிகள் பொது மன்னிப்பகம்

✱ ரகேல் ஸவுகர் – அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் வெளிவிவகார அதிகாரி

✱ டாக்டர். ஜேரோம் ஷீலி – தொழில் நுட்பக் கல்விக்கான கல்லூரி டீன் போவி ஸ்டேட் பல்கலைக்கழகம்

✱ ஸமன்தா ஸ்னிட்ஷர் – அமெரிக்காவின் உலக் மத சுதந்திரக் குழுவுன் பணியாளர்

✱ டாக்டர். மேரி ஹோப் ஷோபல் – மூத்த திட்ட அதிகாரி, உலக நெருக்கடி மற்றும் அமைதியை ஏற்படுத்தும் அமெரிக்க நிர்வாகம்

✱ ஸாரா ஸ்குல் ஸிங்கர் – உலக மற்றும் அரசின் உறவின் இணைப்பாளர். பெக்கர் ஃபண்ட்

✱ டாக்டர் ஃபிராங் ஸெலின் – அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் கிர்கிஸ்தான் பிரிவு அதிகாரி

✱ அன்னா-லீ-ஸ்டேங்ல் – உலகளாவிய கிறிஸ்தவ ஒற்றுமை மையம்

✱ கலின்டா ஸ்டீபன்ஸ்ன் – டாம் லன்டோர்ஸ் மனித உரிமைகள் கமிஷனின் பணியாளர்

✱ திரு. ஜோர்டன்-டாமா – டாம் லன்டோஸ் மனித உரிமைகள் கமிஷனின் முக்கிய பொறுப்பாளர்

✱ திரு. ஷான் டன்டன் – **A FP**

✱ டாக்டர் வில்ஹெல்மஸ் வால்கென்பர்க் – அமெரிக்க கத்தோலிக்க பல்கலைக்கழகத்தின் மத, கலாச்சாரப் பிரிவின் பேராசிரியர்

✱திரு அந்தோணி வான்ஸ் – அமெரிக்காவிலுள்ள பஹாாயிகளின் வெளிவிவகார இயக்குநர்

✱ திரு. ஜிஹாது ஸாலே வில்லியம்ஸ் – இஸ்லாமிய ரிலீஃப் அமெரிக்காவின் அரசு விவகார பிரதிநிதி

✱ செல்வி. அமிலியா வேங் – பாராளுமன்ற உறுப்பினர் ஜூடி சூவின் முக்கியப் பணியாளர்

✱ மோ ஷர்மா – பாராளுமன்ற உறுப்பினர் ஜூடி சூவின் மன்றப் பணியாளர்

# அமெரிக்க மக்கள் சபை

# தீர்மானங்கள் – 709

112–ஆவது மக்களவை
(காங்கிரஸ்)
இரண்டாவது அமர்வு

# H Res. 709

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் ஆன்மீக மற்றும் நிவாகத் தலைவர் புனிதர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்களை வாஷிங்டன் D.C. க்கு வரவேற்கிறோம். மேலும் உலக அமைதி, நீதி, அஹிம்சை, மனித உரிமைகள், மத சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்திற்கு அவர் ஆற்றும் அர்ப்பணிப்பை அங்கீகரிக்கின்றோம்.

## ஜூன் 27,2012 பிரதிநிதிகள் சபையில்

ஜோ லோஃப்கிரன் - கலிஃபோர்னியா (அவர்களுக்காக) திரு. ஷெர்மென், திரு. கன்னொலி - வர்ஜினியா. திரு. ஹின்ஸே, செல்வி. ஹிஷொ, செல்வி. ஸ்பையர், செல்வி. ரிச்சர்ட்ஸன், திரு. ஷிஃப், ஷாகவுட்ஸ்கி, திரு.ஹோன்டா, திரு. உல்ஃப், திரு. பீட்டர்ஸ், திரு. டெண்ட், செல்வி. சூ, திரு. பெர்மென், திரு. ஃபிராங்க்ஸ் - அரிஜனோ. செல்வி. ஜாக்ஸன்ரீ- டெக்ஸாஸ், செல்வி. ஷுவட்ஜ், திரு. பிரேலி - லோவா, மேலும் திரு. மேக் கவர்ன் ஆகியோர் கீழ்க்கண்ட தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளனர். வெளியுறவு துறைக்கான கமிட்டிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## தீர்மானம்

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் ஆன்மீக மற்றும் நிவாகத் தலைவர் புனிதர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்களை வாஷிங்டன் D.C. க்கு வரவேற்கிறோம். மேலும் உலக அமைதி, நீதி, அஹிம்சை, மனித உரிமைகள், மத சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்திற்கு அவர் ஆற்றும் அர்ப்பணிப்பை அங்கீகாரம் செய்கிறோம்.

ஜூன் 16, 2012-லிருந்து ஜூலை 2, 2012 வரை உலக அளவில் பல கோடிக்கனக்கான உறுப்பினர்களை கொண்ட ஒரு பன்னாட்டு ஆன்மீக இயக்கத்தின் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் ஆன்மீக மற்றும் நிர்வாக தலைவர் புனிதர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள்.

ஏப்ரல் 22, 2003 -இல் இந்த புனித மகான், மிர்ஸா குலாம் அஹ்மது அவர்களின் ஐந்தாவது கலீஃபாவாக தனது ஆயுட்காலம் முழுவதுக்குமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்தப் புனிதர் அமைதியை வளர்க்கும் முஸ்லிம் முக்கிய பிரமுகர். இவர் தமது ஜுமுஆ பேருரைகள், சொற்பொழிவுகள், புத்தகங்கள் மற்றும் பொதுக் கூட்டங்கள் வாயிலாக தொடர்ந்து அஹ்மதிய்யத்தின் மேன்மைகளான மனித குலத்திற்கு தொண்டு, உலக மனித உரிமைகள் மற்றும் அமைதியான, நீதமான சமுதாயத்தை உருவாக்குவது தொடர்பாக தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயம் தொடர்ந்து நேர்மையற்ற முறையில் நடத்தப்படுதல், கொடுமைகள் இழைக்கப்படுதல், கொடூரங்கள் புறக்கணித்தல் மற்றும் வன்முறைக்கு இலக்காக்கப்படுதல் போன்ற கஷ்டங்களால் அவதிப்படுத்தப்படுகின்றனர்.

மே 28, 2010 அன்று பாகிஸ்தானிலுள்ள லாஹூரில் அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த இரண்டு பள்ளிவாயில்களில் அஹ்மதிய்யா எதிர்ப்பு பயங்கர வாதிகளால் 86 அஹ்மதி முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

இது போன்ற அவர்களுக்குக் கெதிரான தொடர்ந்த கொடுமைகள் இருந்தும் அஹ்மதி முஸ்லிம்கள் தூய கலீஃபாவின் அறிவுரைப்படி, வன்முறையை சகிக்கின்றனர்.

தூய கலீஃபா உலகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து அதிபர்கள், பிரதமர்கள், பாராளுமன்றத்தினர் மற்றும் நாட்டின் தூதுவர்கள் ஆகியோரை சந்தித்து மனிட குலத்திற்கு சேவை செய்து வருகின்றார்கள்.

தூய கலீஃபா அமெரிக்க சுற்றுப் பயணத்தின்போது, நல்லுறவை வலுப்படுத்துவதற்காக எல்லா மக்களுக்கும் அமைதி மற்றும் நீதியை

நிலைநாட்டும் வழிகளை காணும் விதமாக முக்கிய அமெரிக்க அரசு தலைவர்களையும் மற்றும் பல்லாயிரக்கணக்கான அமெரிக்க முஸ்லிம்களையும் சந்திக்க உள்ளனர்.

ஜூன் 27, 2012-ல் இந்தப் புனிதர், **'கேபிடல் ஹில்'**-ல் உள்ள புகழ் பெற்ற, **'ரேபார்ன் ஹவுஸ்'**-ல் தரப்படும் இரு சபைகளின் வரவேற்பில் 'அமைதிக்கான வழி, நாடுகளுக்கிடையில் நீதமான உறவு' என்ற தலைப்பில் முக்கிய உரையாற்றினார்கள்.

எனவே, தற்போது அவ்வாறே ஆவதற்கான முடிவை பிரதிநிதிகள் சபை ஆமோதிக்கின்றது.

பிரதிநிதிகளின் சபை முடிவு

1. புனிதர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்களை வாஷிங்டன் -க்கு வரவேற்கின்றோம்.

2. மேலும் அவர்கள், தனி நபர் அமைதி மற்றும் உலக அமைதி பற்றியும், தனி நபர் நீதி மற்றும் உலக நீதி பற்றி கூறியவற்றை பாராட்டுகிறது.

3. மேலும் அவர்கள், அஹ்மதி முஸ்லிம்களை கடுமையான கொடுமைகளுக்கு ஆளானபோதும் எந்தவிதமான வன்முறையையும் செய்யாதிருக்குமாறு வலியுறுத்தி கட்டுப்படக் கூறியதற்காக.

# நாடுகளுக்கிடையே நல்லுறவுகள் மட்டுமே அமைதிக்கான வழியாகும்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்....

மதிப்பிற்குரிய விருந்தினர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு. அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உங்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

எனது உரையைத் தொடங்குவதற்கு முன்பாக, நீங்கள் அனைவரும் நேரத்தை ஒதுக்கி நான் கூறப்போவதைக் கேட்பதற்காக இங்கு வருகை தந்தமைக்கு எனது நன்றியை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மிகப் பரந்ததும் விரிவானதுமான ஒரு கருத்தைக் கொண்ட ஒரு தலைப்பில் சொற்பொழிவாற்ற நான் பணிக்கப்பட்டுள்ளேன். இந்தக் கருத்து பல்வேறு அம்சங்களைக் கொண்டதாகும். எனவே மிகக் குறைந்த நேரத்தில் அவை அனைத்தையும் விளக்கிக் கூறுவது இயலாத ஒன்றாகும். ‘உலகில் அமைதியை நிலைநாட்டுவது’ குறித்து உரை நிகழ்த்துமாறு என்னிடம் கோரப்பட்டுள்ளது. நிச்சயமாக இக்கருத்து உலகம் எதிர்கொள்ளும் மிக இன்றியமையாத அவசரத் தேவையகும். எனினும் நேரம் குறைவாக இருப்பதால், ‘நீதியுடன் நாடுகளுக்கிடையில் சரிசமமான உறவுகளைப் பாதுகாத்து அமைதியை உருவாக்குதல்’ குறித்து இஸ்லாத்தின் நிலைப்பாட்டை நான் சுருக்கமாக உங்கள் முன் எடுத்து வைப்பேன்.

உண்மை என்னவெனில், அமைதியும் நீதியும் பிரிக்க முடியாதவை ஆகும். அவற்றுள் ஒன்று இல்லாமல் மற்றஒன்றைப் பெற முடியாது. இந்தக் கருத்தை அறிவுள்ள, புத்திக் கூர்மையுள்ள எல்லா மக்களும் நிச்சயம் புரிந்து கொள்கின்றனர். உலகில் குழப்பத்தை ஏற்படுத்தக் கங்கணம் கட்டியிருப்பவர்கள் நீங்கலாக, வேறு எவரும் நீதியும், ஒருவருக்கொருவர் நல்ல பரிமாற்றமும் எந்தவொரு சமுதாயத்திலோ, நாட்டிலோ அல்லது முழு உலகிலோ இருக்கும்போது

அங்கு குழப்பமும் அமைதியற்ற நிலையும் தோன்றும் என்று கூற மாட்டார்கள். இருந்தபோதிலும் இன்று உலகில் பல்வேறு பகுதிகளில் குழப்பமும் அமைதியற்ற நிலையும் இருப்பதை நம்மால் காண முடிகிறது. இந்தக் குழப்பம் என்பது உள் நாட்டில் இருப்பதைப் போன்றே பல்வேறு நாடுகளுக்கிடையிலும் உள்ளது. அரசாங்கங்கள் தமது கொள்கைகளை நீதியின் அடிப்படையிலேயே வகுத்திருப்பதாக் கூறிக் கொண்டபோதிலும் அங்கு குழப்பமும் கிளர்ச்சியும் இருப்பதைக் காண முடிகிறது. அவை, அமைதியை நிலைநாட்டுவதே தமது தலையாய குறிக்கோள் எனக் கூறுகின்றன. எனினும் பொதுவாகப் பார்க்கும்போது அமைதியற்ற நிலையும் பதற்றமும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது என்பதிலும், குழப்பம் பரவிக் கொண்டே செல்கின்றது என்பதிலும் சந்தேகமில்லை. எனவே இந்த வகையில் நீதியின் தேவை எங்கோ சரியாக நிறைவேற்றப்படவில்லை என்பது நிரூபணமாகிறது. எனவே ஏற்றத்தாழ்வு எங்கு, எப்போது இருந்தாலும் அதனை உடனே அகற்ற வேண்டிய அவசரத் தேவை தற்போது எழுந்துள்ளது. எனவே உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் என்ற முறையில் நீதியை அடிப்படையாகக் கொண்டு சமாதானத்தை வெற்றி கொள்ளும் வழிமுறைகளைக் குறித்து சில கருத்துகளை கூற நாடுகிறேன்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் முழுக்க முழுக்க ஒரு மார்க்க அமைப்பாகும். இந்த காலகட்டத்தில் தோன்றி உண்மையான இஸ்லாத்தின் போதனைகளைப் பற்றி உலகிற்கு ஒளியூட்ட வேண்டிய மஸீஹும், சீர்திருத்தவாதியும் தோன்றி விட்டார்கள் என்பது எங்களது உறுதியான நம்பிக்கையாகும். காதியான் என்னும் ஊரைச் சார்ந்த அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநராகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி அவர்களே அந்த சீர்திருத்தவாதி ஆவார்கள் என்று நாங்கள் உறுதியாக நம்பி அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். அவர்கள் தம்மைப் பின்பற்றுபவர்களிடம் திருக்குர்ஆனை அடிப்படையாகக் கொண்ட உண்மையான இஸ்லாத்தின் அசல் போதனைகளின்படி நடந்து அதனை மக்களுக்கு எட்டச் செய்யும்படி வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். எனவே அமைதியை நிலைநாட்ட, நாடுகளுக்கிடையிலான உறவுகளை நீதியின் அடிப்படையில் அமைத்துக் கொள்ள நான் கூறவிருக்கும் கருத்துகள் அனைத்தும் திருக்குர்ஆனின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

உலகம் சமாதானத்தில் நிலைபெற, நீங்கள் அனைவரும் தொடர்ச்சியாக உங்கள் கருத்துகளைக் கூறி பெரும் முயற்சிகள் மேற்கொண்டு வருகிறீர்கள். உங்களது ஆக்கப்பூர்வமான, அறிவார்ந்த ஆற்றல்கள் அரிய பெரிய கருத்துக்களையும் திட்டங்களையும் அமைதி குறித்த கண்ணோட்டத்தையும் உங்களுக்கு வழங்க உதவி புரிகின்றன. எனவே இந்த விஷயம் குறித்து உலக அளவில் அல்லது அரசியல் அளவில் பேச என்னைத் தூண்டவில்லை. ஆனால் எனது முழுமையான நோக்கம் 'மார்க்கத்தின் அடிப்படையில் அமைதியை எவ்வாறு நிலைநாட்டுவது' என்பது குறித்தே ஆகும். இதற்காக நான் ஏற்கனவே கூறியபடி திருக்குர்ஆனின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு சில முக்கியமான வழிகாட்டல்களை உங்கள் முன் வைப்பேன்.

மனித அறிவும் புத்திக் கூர்மையும் முழுமையானது அல்ல. அதற்கு ஓர் எல்லை உண்டு என்பதை நாம் எப்போதும் முக்கியமாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எனவே முடிவுகள் எடுக்கப்படும்போது, எண்ணங்கள் வகுக்கப்படும்போது சில காரணிகள் மனிதனின் மூளைக்குள் நுழைகின்றன. அவை நீதியுடன் முடிவெடுக்கும் ஆற்றலை திரையிட்டு மறைத்து மனிதனை தனது சொந்த நலன்களை நிறைவேற்றுவதன் பக்கம் கொண்டு சென்று விடுகின்றன. கடைசியில் அது அநீதியான தீர்வுக்கும் முடிவுக்கும் இட்டுச் செல்கின்றது. ஆனால் இறைவனின் சட்டம் முழுமையானதாகும். அதில் எவ்விதமான சுய நலனும் நியாயமற்ற நடைமுறையும் இருப்பதில்லை. இதன் காரணம் என்னவெனில், இறைவன் தனது படைப்பினங்களின் மீது நன்மையையும், நலனையும் மட்டுமே நாடுபவனாக இருகின்றான். எனவே அவனது சட்டம் முற்றிலும் நீதியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த முக்கியமான கருத்தை உலக மக்கள் எந்த நாளில் உணர்ந்து கொள்வார்களோ அந்த நாளில்தான் உண்மையான, என்றும் நிலைத்திருக்கும் அமைதிக்கான அடித்தளம் இடப்படும். மற்றபடி, நாம் பார்க்கின்றோம். உலகில் அமைதியை ஏற்படுத்த தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவற்றால் நன்மை பயக்கும் எந்த விளைவையும் ஏற்படுத்த முடியவில்லை.

முதல் உலகப் போர் முடிந்த பின்னர் சில நாட்டுத் தலைவர்கள், இனி எதிர்காலத்தில் நாடுகளுக்கிடையில் சிறந்த சமாதான உறவுகள்

தழைத்திட வேண்டும் என விரும்பினர். அவ்வாறு உலகில் அமைதியை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாக 'நாடுகளின் ஒற்றுமை இயக்கம்' (League of Nations) தோற்றுவிக்கப்பட்டது. இதன் முதன்மையான குறிக்கோள் உலகில் அமைதியை நிலைநாட்டுவதும், எதிர்காலத்தில் போர் ஏற்படுவதைத் தவிர்ப்பதுமாகும். துரதிஷ்டவசமாக 'நாடுகளின் ஒற்றுமை இயக்க' (League of Nations) விதிகளிலும் அது நிறைவேற்றிய தீர்மானங்களிலும் குறைபாடுகளும் உறுதியற்ற நிலையும் இருந்தன. எனவே அவற்றால் எல்லா மக்களின் உரிமைகளையும், நாடுகளின் உரிமைகளையும் ஒன்றுபோல் பாதுகாக்க இயலவில்லை. இந்த ஏற்றத்தாழ்வின் காரணமாக நீண்டகால அமைதியை அதனால் அடைய இயலவில்லை. 'நாடுகளின் ஒற்றுமை இயக்கத்தின்' (League of Nations) முயற்சிகள் தோல்வியடைந்தன. இது நேரடியாகவே இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்து விட்டது.

இரண்டாம் உலகப் போரின்போது ஏற்பட்ட மாபெரும் அழிவையும், பேரிழப்பையும் நாம் அறிவோம். உலகளவில் சுமார் ஏழரை கோடி மக்கள் அதில் மாண்டு போயினர். அவர்களில் பெரும்பான்மையினர் அப்பாவி பொதுமக்கள் ஆவர். உலகின் கண்களைத் திறக்க அந்தப் போர் ஒன்றே போதும். நீதியின் அடிப்படையில் அனைத்து பிரிவினருக்கும் அவரவருக்குரிய உரிமைகளை வழங்கக் கூடிய அறிவார்ந்த கொள்கைகள் வகுக்கப்பட்டு உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு அதுவே காரணமாக அமைந்திருக்க வேண்டும். அமைதியை நிலைநாட்ட அப்போதைய உலகின் அரசாங்கங்கள் ஓரளவு முயற்சிகளை மேற்கொண்டன. அதன் காரணமாக ஐக்கிய நாட்டு சபை (United Nations) உருவாக்கப்பட்டது. ஆயினும் ஐக்கிய நாட்டு சபையின் உயர்ந்த, சிறப்பு மிக்க குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட முடியவில்லை என்பது விரைவிலேயே தெளிவாகி விட்டது. உண்மையில் சில அரசுகள் வெளிப்படையாக விடுக்கும் அறிக்கைகள் இதன் தோல்விக்குச் சான்றாகும்.

நாடுகளுக்கிடையிலான உறவுகளில் நீதத்துடன் நடப்பது குறித்து இஸ்லாம் என்ன கூறுகிறது? அதன் மூலம் எவ்வாறு உலக அமைதியை நிலைநாட்டலாம்? இறைவன் திருக்குர்ஆனில் தெளிவாக இவ்வாறு கூறுகிறான்:''நமது தேசிய அடையாளமும் இனப் பின்புலமும்

ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக மட்டுமே அல்லாமல் அதனால் எவ்வகையிலும் எந்தவிதமான சிறப்பும் ஏற்படுவதில்லை.'' (திருக்குர்ஆன் 49:14 காண்க)

இவ்வாறு அனைத்து மக்களும் பிறப்பில் சமமானவர்களே என திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இறுதி உரையில், அனைத்து முஸ்லிம்களிடமும் நினைவில் வைக்குமாறு கூறிய போதனை என்னவென்றால், ஓர் அரபி அரபி அல்லாதவரை விட எவ்விதத்திலும் உயர்ந்தவர் அல்லர்; அவ்வாறே ஓர் அரபி அல்லாதவர் அரபியை விட எவ்விதத்திலும் உயர்ந்தவர் அல்லர் என்பதாகும். ஒரு வெள்ளையர் கருப்பரை விடவும் உயர்ந்தவர் அல்லர்; கருப்பர் வெள்ளையரை விடவும் உயர்ந்தவர் அல்லர் என்றும் அன்னார் போதித்துள்ளார்கள். எனவே எல்லா நாட்டினரும், இன மக்களும் சமமானவர்களே என்பது இஸ்லாத்தின் தெளிவான போதனையாகும். மேலும் எவ்வித பாரபட்சமோ, விருப்பு வெறுப்போ இல்லாமல் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதுவே பல்வேறு தரப்பினர்களுக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும் இணக்கத்தை ஏற்படுத்தவும், அமைதியை நிலைநாட்டவும் தேவையான உன்னதமான போதனையாகும்.

ஆனால் இன்று வலிமை மிக்க நாடுகளுக்கும், வலிமை குன்றிய நாடுகளுக்குமிடையில் பிரிவும், வேற்றுமையும் இருப்பதை நாம் காண்கிறோம். உதாரணமாக, ஐக்கிய நாட்டு சபையில் சில குறிப்பிட்ட நாடுகளுக்கிடையில் வேற்றுமை பாராட்டப்படுகிறது. இவ்வாறு பாதுகாப்பு சபையில் சில நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாகவும், சில நாடுகள் தற்கால உறுப்பினர்களாகவும் உள்ளனர். இந்தப் பாகுபாடு உள்ளூர ஒருவித பதற்றத்தையும், ஏமாற்றத்தையும் தோற்றுவிக்கிறது. சில நாடுகள் இந்த ஏற்றத்தாழ்வுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதையும் வழக்கமாக நாம் கேட்கிறோம். இஸ்லாம் எல்லா விஷயங்களிலும் முழுமையான நீதியையும், சரிசமமான நிலையையும் போதிக்கின்றது. திருக்குர்ஆன் அதிகாரம் 5 வசனம் 3-ல் மற்றொரு முக்கியமான வழிகாட்டுதல் தரப்பட்டுள்ளது. இந்த வசனம் நீதியின் வரையறைகளை முழுமையாகக் கடைபிடிக்குமாறு கூறுகிறது. 'எந்த மக்கள், பகைமையிலும் வெறுப்பிலும் எல்லை மீறிச் சென்று விட்டனரோ

அவர்களுடனும் கூட மிக்க நல்ல முறையில் மிக்க நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும்.' மேலும் நன்மையின் பக்கமும், நல்லொழுக்கத்தின் பக்கமும் உங்களுக்குத் தரப்படும் ஆலோசனை எங்கிருந்து எவர் மூலம் வந்தாலும் சரியே - அதனை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், அதைப் போன்று பாவத்தின் பக்கமும் அநீதியின் பக்கமும் எங்கிருந்து, எவர் ஆலோசனை கொடுத்தாலும் அதனை நீங்கள் நிராகரித்து விட வேண்டும் என்றும் திருக்குர்ஆன் போதிக்கின்றது.

இயல்பாக ஒரு கேள்வி எழுகிறது. அதாவது - இஸ்லாம் எதிர்பார்க்கின்ற நீதியின் தரம் என்ன? இது பற்றி திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது: 'நீங்கள் உங்களுக்கு எதிராகவோ, உங்கள் பெற்றோருக்கு எதிராகவோ, நீங்கள் அதிகமாக நேசிப்பவர்களுக்கு எதிராகவோ சாட்சியம் கூற நேர்ந்தாலும் நீதியையும் உண்மையையும் நிலைநாட்டுவதற்காக நீங்கள் அதனை அல்லாஹ்வுக்காக கண்டிப்பாக செய்ய வேண்டும்.'(4:136 காண்க) தங்கள் உரிமைகளை தக்க வைத்துக் கொள்வதற்காக பணக்கார, ஆற்றல் மிகுந்த நாடுகள் ஏழையான வலிமை குன்றிய நாடுகளின் உரிமைகளை அபகரிக்கக் கூடாது. மேலும் அவை ஏழை நாடுகளுடன் அநீதியான முறையில் நடந்து கொள்ளவும் கூடாது. அதே நேரத்தில் ஏழையான பலம் குன்றிய நாடுகள் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் ஆற்றல் மிக்க, வளம் படைத்த நாடுகள் மீது தீங்கிழைக்க முயற்சி செய்யவும் கூடாது. மாறாக, இரு தரப்பினரும் நீதியின் விதிகளை முழுமையாகக் கடைபிடித்து நடக்க முயற்சி செய்ய வேண்டும். நாடுகளுக்கிடையிலான தொடர்பில் அமைதியை நிலைநாட்டுவதில் இது முக்கியமான விஷயமாகும்.

நாடுகளுக்கிடையில் நீதியின் அடிப்படையில் சமாதானத்தை நிலைநாட்ட தேவைப்படுகின்ற மற்றோர் அம்சத்தைக் குறித்து திருக்குர்ஆன் அதிகாரம் 15 வசனம் 89-ல் இவ்வாறு கூறுகிறது: எந்த தரப்பினரும் பிறரது வளங்களையும், செல்வங்களையும் பொறாமைக் கண்கொண்டு பார்க்கக் கூடாது. அதைப் போன்று எந்த நாடும் மற்றொரு நாட்டிற்கு உதவி செய்வதாகவோ ஆதரவு அளிப்பதாகவோ பொய்யான காரணங்களைக் கூறி அந்நாட்டின் வளங்களை அபகரிக்க முயற்சி செய்யக் கூடாது. எனவே அரசாங்கங்கள் 'சிறந்த தொழில் நுட்பத்தை அளித்தல்' என்ற பெயரில் அநீதியான வணிக ஒப்பந்தங்களும்,

உடன்படிக்கைகளும் செய்து பிற நாடுகளிடமிருந்து பயனடையக் கூடாது. அதைப் போன்றே அரசங்கங்கள் 'சிறப்பான தொழில் நுட்பத்தை அளித்தல், உதவி செய்தல்' என்ற பெயரில் வளர்ந்து வரும் நாடுகளின் இயற்கை வளங்களையும், செல்வங்களையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சி செய்யக் கூடாது. குறைந்த கல்வியறிவு கொண்ட மக்களுக்கும் அல்லது அரசுகளுக்கும் தமது இயற்கை வளங்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்காக கற்றுக் கொடுக்க வேண்டிய தேவை இருந்தால் அதனை நிறைவேற்ற வேண்டும்.

நாடுகளும் அரசுகளும் தம்மை விட வளம் குறைந்த நாடுகளுக்கு சேவை செய்யவும் உதவி செய்யவும் எப்போதும் முன் வர வேண்டும். எனினும் இந்தத் தொண்டு தமது நாட்டின் இலாபத்திற்காகவோ அல்லது அரசியல் ஆதாயத்திற்காகவோ அல்லது தனிப்பட்ட நோக்கங்களை அடைவதற்காகவோ இருக்கக் கூடாது. கடந்த 60 அல்லது 70 ஆண்டுகளாக ஐக்கிய நாட்டு சபை பல திட்டங்களை மேற்கொண்டும் பல அமைப்புகளை நிறுவியும் ஏழை நாடுகளின் முன்னேற்றத்திற்கு முயற்சிகள் செய்திருப்பதைப் பார்க்கிறோம். இந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக, வளரும் நாடுகளின் இயற்கை வளங்களை அவர்கள் கண்டறிந்துள்ளனர். இருப்பினும் இந்த முயற்சிகளுக்கு மாற்றமாக, எந்தவோர் ஏழை நாடும் வளர்ந்த நாடுகளின் நிலையை அடையவில்லை. இதற்கு ஒரு காரணம், அந்த வளர்ச்சி அடையாத நாடுகளின் பலதரப்பட அரசுகள் செய்த பரவலான ஊழல்களாகும். இருப்பினும் வளர்ந்த நாடுகள் தமது சுய இலாபத்துக்காக இத்தகைய அரசுகளுடன் தொடர்ந்து தொடர்பு வைத்துக் கொண்டிருக்கின்றன என்பதை வருத்தத்துடன் கூறிக் கொள்கிறேன். வணிக பறிமாற்றங்கள், சர்வதேச உதவி, வியாபார ஒப்பந்தங்கள் ஆகியவையும் தொடர்ந்து நடைபெறுகின்றன. இதன் விளைவாக ஏழை எளிய, நசுக்கப்பட்ட பிரிவினரின் விரக்தியும் அமைதியின்மையும் மேலும் மேலும் அதிகரித்து இந்த நாடுகளில் கிளர்ச்சியும், உள்நாட்டுக் குழப்பமும் தலைதூக்குகின்றன. வளர்ந்து வரும் நாடுகளின் ஏழை மக்கள் எந்த அளவு விரக்தி அடைந்துள்ளனர் என்றால், அவர்கள் தமது சொந்த தலைவர்களுக்கெதிராக மட்டுமல்லாமல் வல்லரசுகளுக்கெதிராகவும் திரும்பியுள்ளனர். இதனால் தீவிரவாதிகள் பயனடைந்து வருகிறார்கள். மக்களின் விரக்தியை தமக்கு சாதகமாக்கிக் கொண்டு தமது

அமைப்புகளில் சேருமாறும், வெறுப்பு நிறைந்த தமது கொள்கைகளை ஆதரிக்குமாறும் அவர்கள் மக்களை தூண்டுகின்றனர். இதன் இறுதி விளைவாக உலக அமைதி தற்போது அழிக்கப்பட்டு விட்டது.

அமைதியை நிலைநாட்டுவதற்கு இஸ்லாம் பல வழிகளின் பக்கம் நமது கவனத்தை ஈர்க்கிறது. அதற்கு முழுமையான நீதி அவசியமாகும். எப்போதும் நேர்மையுடன் சாட்சி கூறுவது அதற்கு அவசியமாகும். பிறருடைய செல்வங்கள் மீது பொறாமைக் கண் கொண்டு பார்க்காமல் இருப்பது அதற்கு அவசியமாகும். வளர்ந்த நாடுகள் தமது சுய இலாபங்களை ஒதுக்கி வைத்து விட்டு, அதற்கு பதிலாக தன்னலமற்ற உணர்வுடன் ஏழை நாடுகளுக்கு சேவையும், உதவியும் செய்து வருவது அதற்கு அவசியமாகும். இந்த அனைத்து அம்சங்களும் நிறைவேற்றப்பட்டால்தான் உண்மையான அமைதி நிலைநாட்டப்படும்.

மேலே கூறியுள்ள அனைத்து முயற்சிகளையும் மீறி ஒரு நாடு வரம்பு கடந்து மற்றொரு நாட்டின் மீது தாக்குதல் நடத்தி அதன் வளங்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வர முயற்சி செய்தால் மற்ற நாடுகள் இந்தக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யும்போது அவை நீதியுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய போதனைகளின்படி நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான சூழ்நிலையைக் குறித்து திருக்குர்ஆன் அதிகாரம் 49 வசனம்10-ல் இவ்வாறு கூறுகிறது: இரண்டு நாடுகளுக்கிடையிலுள்ள சண்டைகள் வளர்ந்து அதன் விளைவாகப் போர் மூண்டால் மற்ற அரசுகள் ஒன்று சேர்ந்து அவற்றைப் பேச்சு வார்த்தை, ராஜீய ரீதியான அணுகுமுறை ஆகியவற்றின் பக்கம் வருவதற்கு வற்புறுத்த வேண்டும். அதன் மூலமாக ஓர் உடன்படிக்கை ஏற்பட்டு அவையிரண்டிற்குமிடையில் இணக்கம் ஏற்படுவதற்கு வழிவகை காணப்பட வேண்டும். எனினும் அவற்றுள் ஒரு தரப்பினர் உடன்படிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்து போர் செய்தால் மற்ற அனைத்து நாடுகளும் ஒன்று சேர்ந்து கட்டுப்படாத அந்த நாட்டிற்கு எதிராகப் போர் செய்து அதனைத் தடுத்து நிறுத்த வேண்டும். போரைத் துவக்கிய அந்த நாடு தோற்கடிக்கப்பட்டு பரஸ்பர உடன்படிக்கைக்கு ஒப்புக் கொண்டால் பின்னர் அனைத்துத் தரப்பினரும் நீண்ட கால

அமைதியும் நல்லிணக்கமும் ஏற்படத்தக்க ஓர் உடன்படிக்கையை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். எந்தவொரு நாட்டின் கைகளும் கட்டப்படும் அளவிற்கு கடினமான, அநீதியான நிபந்தனைகள் அதற்கு விதிக்கப்படக் கூடாது. ஏனெனில் இதன் விளைவாக காலப்போக்கில் அமைதியற்ற நிலை உருவாகிப் பின்னர் அது பரவி விடும். இந்த அமைதியற்ற நிலையின் விளைவாக மேலும் அதிகப்படியான குழப்பங்கள் தோன்றும்.

இரு பிரிவினருக்குமிடையில் இணக்கத்தை மற்றோர் அரசாங்கம் முயன்றால், அது நேர்மையுடனும் எந்தப் பாரபட்சமுமின்றி, நடந்து கொள்ள வேண்டும். இரு சாராரில் ஒரு பிரிவு சமரசம் ஏற்படுத்த முயலும் அந்த அரசாங்கத்திற்கு எதிராகப் பேசினாலும் கூட அந்த மூன்றாவது அரசாங்கம் பாரபட்சமற்ற தன்மையை வெளிப்படுத்த வேண்டும். எனவே அந்த மூன்றாவது நாடு அப்படிப்பட்ட தருணங்களில் கோபத்தை வெளிப்படுத்தவோ, பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடவோ, முறையற்று செயல்படவோ கூடாது. அனைத்து பிரிவினருக்கும் அவரவருக்குரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

எனவே நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் பொருட்டு சமரசப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் நாடுகள் தமது சுய விருப்பங்களைக் கருத்தில் கொள்ளவோ, இரு நாடுகளுள் ஒன்றிலிருந்து அநீதியான முறையில் பலனடைய முயற்சி செய்யவோ கூடாது. அவை அநீதியான முறையில் தலையிடவோ, இரு சாராருள் ஒன்றின் மீது முறையற்ற வகையில் நெருக்கடி தரவோ கூடாது. எந்தவொரு நாட்டின் இயற்கை வளங்களையும் அபகரிக்க முனையக் கூடாது. இத்தகைய நாடுகள் தேவையற்ற, முறையற்ற கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடாது. ஏனெனில் இதில் நீதியும் இல்லை. இதனால் நாடுகளுக்கிடையில் உறவுகள் மேம்படவும் முடியாது.

நேரத்தைக் கருத்திற்கொண்டு நான் இந்த விஷயங்களைப் பற்றி சுருக்கமாகவே கூறியுள்ளேன். சுருக்கமாக, 'உலகில் சமாதானத்தை நிலைநாட்டுதல்' என்ற சிறந்த இலக்கை எய்த விரும்பினால் நாம் நமது தனிப்பட்ட, சொந்த நாட்டு விருப்பங்களை ஒதுக்கி விட்டு முற்றிலும் நீதியின் அடிப்படையிலான பரஸ்பர உறவுகளை மேம்படுத்த வேண்டும். இல்லையெனில், அணி சேர்வதன் காரணமாக எதிர்காலத்தில் கூட்டணிகள் உருவாகி விடும். அல்லது அணிகள்

உருவாகத் தொடங்கி விட்டன என்ற என்னுடைய கருத்தில் உங்களில் சிலர் உடன்படுவீர்கள். இதனால் உலகில் குழப்பம் அதிகரித்துக் கொண்டே சென்று இறுதியில் அதன் முடிவு மிகப் பெரும் அழிவாகவே இருக்கும். இப்பேரழிவினாலும், போரினாலும் ஏற்படும் பாதிப்புகள் பல தலைமுறைகள் வரை நீடிக்கும். எனவே நான் எற்கனவே விளக்கிக் கூறியபடி, உலகின் மிகப் பெரும் வல்லரசாகிய அமெரிக்கா நீதியுடனும், நல்லெண்ணத்துடனும் தனது பங்கை ஆற்ற வேண்டும். அவ்வாறு செய்தால் உலகம் உங்களது சிறந்த முயற்சிகளை மிகுந்த பெருமிதத்துடன் நினைவு கூரும். இந்த எதிர்பார்ப்பு உண்மையாக வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும்.

உங்கள் அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகட்டும். மீண்டும் நன்றி கூறுகிறேன்.

எங்களின் வழக்கப்படி, நிகழ்ச்சியின் முடிவில் நாங்கள் அமைதியாகப் பிரார்த்தனை செய்வோம். எனவே இப்போது நான் அமைதியாகப் பிரார்த்தனை செய்யவிருக்கிறேன். அஹ்மதிகள் என்னைப் பின்பற்றி பிரார்த்தனை செய்வார்கள். எங்கள் விருந்தினர்களாகிய நீங்கள் அனைவரும் உங்கள் முறைப்படி பிரார்த்தனை செய்யலாம்.

தமிழாக்கம்: A.Nasir Ahmad



# உலகளாவிய ஒற்றுமையே அமைதிக்கான திறவுகோல்

---

## ஐரோப்பிய பாராளுமன்றம்

## பிரஸ்ஸல்ஸ் – பெல்ஜியம் 2012





Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] being welcomed by Martin Schulz, President of European Parliament




His Holiness leading silent prayer at conclusion of the European Parliament event.
Seated to his right: Dr. Charles Tannock (MEP-UK), left: Rafiq Hayat (National Amir AMA UK)




Ḥaḍrat Mirza Masroor Ahmad, Khalīfatul-Masīḥ V[aba] delivers the keynote address at the European Parliament event





Press Conference with Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] at European Parliament.
Seated with His Holiness is Dr. Charles Tannock (MEP-UK and Chair
of European Parliament Friends of Ahmadiyya Muslims Group)




Tunne Kelam (MEP Estonia & Vice-Chair of
European Parliament Friends of Ahmadiyya
Muslims Group) meeting with His Holiness



Phil Bennion (MEP West Midlands and
member of European Parliament's South Asia
Delegation) meeting with His Holiness



# முன்னுரை

2012-ஆம் ஆண்டு டிசம்பர் 3,4 ஆகிய தேதிகளில் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் தலைவரும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களின் வழிவந்தவரும் ஆகிய ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அல்லாஹ் இவரது உதவியாளனாக இருப்பானாக) அவர்கள் **Brussels** (பிரஸ்ஸல்ஸ்)-ல் உள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்திற்கு முதன்முறையாக வருகை புரிந்தார்கள். அங்கு 30 நாடுகளைச் சார்ந்த 350-க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் நிறைந்த அரங்கில் ஒரு முக்கிய உரை ஆற்றினார்கள். இந்த நிகழ்ச்சி ஐரோப்பிய பாராளுமன்ற அனைத்து கட்சியினரால் புதிதாக உருவாக்கப்பட்ட, **''Friends of Ahmadiyya Muslims''** (அஹ்மதிய்யா முஸ்லிம்களின் நண்பர்கள்) என்ற குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த அமைப்பின் தலைவர் டாக்டர் சார்லஸ் டேன்னக் (யூ.கே. பாராளுமன்ற உறுப்பினர்). இந்த அமைப்பு அனைத்து கட்சி மற்றும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டது. இது அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தினரைப் பற்றி ஐரோப்பிய பாராளுமன்றத்தில் மேம்படுத்தவும், ஐரோப்பாவிலும் மற்றும் உலக அளவிலும் அவர்களது நலனை ஊக்குவிக்கவும் உருவாக்கப்பட்டது. இந்த வருகையின்போது **ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அல்லாஹ் இவரது உதவியாளனாக இருப்பானாக) அவர்கள்** பல பாராளுமன்ற உறுப்பினர்களையும் முக்கியப் பிரமுகர்களையும் சந்தித்தார்கள். அவர்களின் பெயர் வருமாறு:

1. டாக்டர் சார்லஸ் டேன்னக் (MEP. U.K) ஐரோப்பா பாராளுமன்றத்தின் வெளிவிவகார கமிட்டியின் உறுப்பினர். மனித உரிமைகள் துணைக் கமிட்டியின் உறுப்பினர். நேட்டோ அமைப்பின் பாராளுமன்ற குழுவின் துணைத் தலைவர் **'அஹ்மதிய்யா முஸ்லிம்களின் நண்பர்கள் குழு'**வின் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தலைவர்.

2. டுன்னே கேலம் (எஸ்தோனியாவின் MEP) ஐரோப்பிய பாராளுமன்றத்தின் வெளிவிவகார கமிட்டியின் உறுப்பினர். பாதுகாப்பு மற்றும் இராணுவ துணைக் குழுவின் உறுப்பினர். ஐரோப்பிய பாராளுமன்றத்தின் **'அஹ்மதிய்யா முஸ்லிம்களின் நண்பர்கள் குழு'**வின் துணைத் தலைவர்.

3. கிளாட் மோரேஸ் (MEP. U.K) அரேபிய தீபகற்பத்தின் உறவுகளின் குழுவின் துணைத் தலைவர். உள் விவகார, நீதி மற்றும் சமுதாய சுதந்திர கமிட்டியின் உறுப்பினர். ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தொழிலாளர் கட்சியின் துணைத் தலைவர். ஐரோப்பிய பாராளுமன்ற **'அஹ்மதிய்யா முஸ்லிம்களின் நண்பர்கள் குழு'**வின் துணைத் தலைவர்.

4. பார்பரா லோச்பிளர் (MEP. Germany) ஐரோப்பிய பாராளுமன்றத்தின் மனித உரிமைகள் துணைக் கமிட்டியின் தலைவர்.

5. ஜீன் லேம்பர்ட் (MEP. U.K) தெற்கு ஆசியா குழுவின் ஐரோப்பா பாராளுமன்ற தலைவர்.

6. ஃபில் ரெனின் (MEP. U.K) ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தெற்காசியக் குழுவின் உறுப்பினர் மற்றும் ஐரோப்பிய லிபரல் டெமாக்ரடிக் தலைவர்.

டிசம்பர் 4-ஆம் தேதியின் முக்கிய நிகழ்வான, ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவுக்கு முன் ஐரோப்பிய பத்திரிகையாளர்கள் அறையில் அனைத்து பத்திரிகையாளர்களின் கலந்துரையாடல் நிகழ்ந்தது. பிரிட்டன், ஸ்பெயின், ஃபிரான்ஸ், பெல்ஜியம், பாகிஸ்தான் மற்றும் பல நாடுகளிலிருந்து வந்திருந்த பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட 45 நிமிடங்கள் நடந்த பத்திரிகையாளர்களின் பல வகைப்பட்ட கேள்விகளுக்கு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஸ் அவர்கள் பதிலளித்தார்கள். BBC யினர் கேட்ட, **'இந்த உலகில் இஸ்லாத்தின் பங்கு'** என்ற கேள்விக்கு பதிலளிக்கையில், ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், இஸ்லாத்தின் அமைதி என்ற தூதுச் செய்தியானது உலகளாவியது. ஆதலால்தான் எங்களது கோட்பாடு, **'எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு'** எனக் கூறினார்கள். ஸ்பெயின் நாட்டு ஊடகத்திற்கு பதிலளிக்கையில்,

எல்லா முக்கிய மதங்களும் அதன் தூய வடிவில், **‘அமைதி’** என்ற தூதைத்தான் போதித்துள்ளன. எனவே உண்மையான முஸ்லிம் எல்லா இறைதூதர்களையும் நம்புகிறார் எனக் கூறினார்கள். ஒவ்வொரு இறைதூதரும், **இறைவன் ஒருவன்** என்ற செய்தியைத்தான் கொண்டு வந்தார்கள் என அவர்கள் கூறினார்கள். மால்டா நாட்டின் ஊடகத்தின் கேள்விக்கு பதிலளிக்கையில், ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், அஹ்மதி முஸ்லிமின் கடமை, மனித குலத்தை இறைவனுக்கு அருகில் கொண்டு வருவதும் உலகில் உள்ள மக்களை, ஒருவர் மற்றவரது உரிமையை பாதுகாக்க உள்ள கடமையைப் பற்றி நினைவூட்டுவதுமேயாகும் என்றார்கள்.

அரங்கு நிறைந்த சூழலில் முக்கிய நிகழ்வு நடந்தது. ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தலைவர், துணைத் தலைவர் மற்றும் **‘அஹ்மதிய்யா முஸ்லிம்களின் நண்பர்கள் குழு’** வினர் அனைவரும் மேடையில் நின்று உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அல்லாஹ் இவரது உதவியாளனாக இருப்பானாக) அவர்களை வரவேற்றார்கள். ஐரோப்பிய பாராளுமன்றத்தின் அதிபர் மார்டின் ஸூல்ஸ் (MEP) அவர்கள் ஹஸ்ரத் சாஹிப் அவர்களை தனியாக சந்தித்தார்கள். ஹஸ்ரத் சாஹிபின் முக்கிய உரைக்குப் முன் பல ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களும், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தினர் கூறும் **‘அமைதியான இஸ்லாம்’** பற்றி பெருமையுடன் பாராட்டிப் பேசினர். ஐரோப்பிய பாராளுமன்ற அஹ்மதிய்யா முஸ்லிம் நண்பர்கள் குழுவின் தலைவரான டாக்டர் சார்ல்ஸ் டேன்னக் (MEP) அவர்கள், **‘அஹ்மதி முஸ்லிம்கள் உலகில் சகிப்புத்தன்மைக்கு ஒரு வரவேற்கத்தக்க உதாரணம்’** என்று கூறினார்கள். தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அல்லாஹ் இவரது உதவியாளனாக இருப்பானாக) அவர்கள் ஆற்றிய வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையை நாங்கள் தருகிறோம்.

# உலகளாவிய ஒற்றுமையே அமைதியின் திறவுகோல்

அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்......

கண்ணியத்திற்குரிய விருந்தினர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ. இறைவனின் சாந்தியும் சமாதானமும் உங்கள் மீது உண்டாவதாக.

ஐரோப்பிய பாராளுமன்றத்தில் உங்கள் எல்லாரின் முன்பாக எனக்கு சொற்பொழிவாற்ற வாய்ப்பளித்த இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்களுக்கு முதலாவதாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளாக இங்கு வருகை தந்துள்ள பிரமுகர்களுக்கும், பெரும் முயற்சிகள் மேற்கொண்டு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்திருக்கும் விருந்தினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓர் அமைப்பு என்ற முறையில் நாங்கள் எப்போதும் உலகின் கவனத்தை சமாதானம் மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்துவதன் பக்கம் ஈர்த்து வருகிறோம் என்பதை அஹ்மதிய்யா ஜமாஅத்தை நன்கு தெரிந்தவர்களும் அல்லது ஓரளவுக்கு அறிந்து கொண்டு அஹ்மதி முஸ்லிம்களுடன் தொடர்பில் இருப்பவர்களும் நன்கு அறிந்திருப்பர். மேலும் எங்களால் இயன்ற வரை இந்த இலக்கை அடைவதற்கான எல்லா முயற்சிகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் என்ற முறையில் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் நான் இந்த விஷயங்களை எடுத்துக் கூறி வருகிறேன். உண்மையில் அமைதி மற்றும் பரஸ்பரம் அன்பு காட்டுதலின் தேவைகளை நான் கூறுவதற்குக் காரணம், அஹ்மதிய்யா ஜமாஅத்தால் பெறப்பட்ட ஏதேனும் புதிய போதனைகளின் காரணமாக அல்ல. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனருடைய வருகையின் முக்கிய நோக்கம், அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உருவாக்குவது

என்பது உண்மைதான். ஆயினும் உண்மையில் எங்களின் அனைத்து செயல்பாடுகளும் இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட போதனைகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த தூய போதனைகள் அன்னாருக்குப் பின் 1400 ஆண்டுகளில் துரதிஷ்டவசமாக பெரும்பான்மையான முஸ்லிம்களால் மறக்கடிக்கப்பட்டு விட்டன. எனவே இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை ஏற்படுத்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின்படி, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனரான காதியானைச் சேர்ந்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களை வல்லமை மிக்க அல்லாஹ் அனுப்பினான். உலகில் அமைதி மற்றும் ஒற்றுமையை ஓங்கச் செய்வதற்கான இஸ்லாத்தின் போதனைகளைக் குறித்து நான் பேசும்போது, இக்கருத்தை நீங்கள் மனதில் இருத்திக் கொள்ள வேண்டும் என நான் வேண்டுகிறேன்.

'அமைதி' மற்றும் 'பாதுகாப்பு' என்பதற்கு பல அம்சங்கள் இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். அதன் ஒவ்வோர் அம்சமும் முக்கியமாக இருப்பதைப் போன்று, அதனுடன் இணைந்த மற்ற அம்சங்களும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். உதாரணமாக, சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்ட அடிப்படையான தேவை, ஒவ்வொரு வீட்டிலும் அமைதியும், ஒற்றுமையும் நிலைபெற்றிருத்தலாகும். ஒரு வீட்டின் சூழல் என்பது வரம்புக்கு உட்பட்ட ஒன்றல்ல. அது அதன் சுற்று வட்டாரத்தின் அமைதியின் மீது பாதிப்பை ஏற்படுத்தும் தன்மையைக் கொண்டது. பின்னர் அது அப்பகுதியிலுள்ள பெரிய நகரத்தையே பாதித்து விடுகிறது. வீட்டில் குழப்பம் தோன்றும்போது அது அப்பகுதியில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பின்னர் அதைச் சார்ந்த நகரத்தையும், மாநகரத்தையும் பாதிக்கின்றது.

இதைப் போன்றே அந்த நகரத்தின் அல்லது மாநகரத்தின் அமைதியின் நிலை முழு நாட்டையும் தாக்கத்திற்குள்ளாக்குகிறது. கடைசியாக நாட்டின் நிலை அந்தப் பகுதியின் அல்லது முழு உலகின் சமாதானம் மற்றும் ஒற்றுமையின் நிலைகளில் தாக்கத்தை

ஏற்படுத்துகிறது. எனவே நீங்கள் அமைதியின் ஓர் அம்சத்தைப் பற்றிப் பேசுவதாக இருந்தாலும் அதன் வட்டம் எல்லைக்குட்பட்டதல்ல என்பதையும் அது விரிந்து கொண்டே செல்வதையும் காண்பீர்கள். இதைப் போன்று எங்கு அமைதிக்குப் பங்கம் எற்பட்டுள்ளதோ அங்கு பிரச்சனைக்கு பல வழிகள் கையாளப்படலாம். அது அமைதி மற்றும் பாதுகாப்பில் எந்த அம்சம் மீறப்பட்டுள்ளது என்பதைப் பொருத்ததாகும். இதனைக் கருத்திற்கொண்டு பார்க்கும்போது இந்த விஷயங்களைப் பற்றி விளக்கமாக எடுத்துரைக்க இப்போதுள்ள நேரத்தை விட அதிகமான நேரம் தேவைப்படும் என்பது தெளிவாகும். இருப்பினும் இது தொடர்பான இஸ்லாத்தின் போதனைகளுள் சில அம்சங்களை எடுத்துரைப்பதற்கு முயற்சி செய்வேன்.

இன்றைய உலகில் இஸ்லாத்திற்கு எதிராக பல ஆட்சேபனைகள் எழுப்பப்படுவதைப் பார்க்கிறோம். உலகில் காணப்படும் குழப்பங்களுக்கும், மோதல்களுக்கும் மார்க்கமே காரணம் என்றும் கூறப்படுகிறது. ‘இஸ்லாம்’ என்பதன் பொருளே சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்றிருக்கும்போது இந்த ஆட்சேபனைகளும் செய்யப்படுகின்றன. மேலும் இஸ்லாம் எத்தகைய மார்க்கம் என்றால், அமைதியை நிலைநாட்டத் தகுந்த திட்டவட்டமான வழிகாட்டலைக் கற்றுத் தந்து, அதனை அடைவதற்கான விதிமுறைகளையும் வரையறுத்துள்ளது.

இஸ்லாத்தின் உண்மையான, அழகிய போதனைகளின் வடிவத்தை உங்கள் முன் வைப்பதற்கு முன்பாக தற்கால உலகின் நிலை குறித்து சற்று விளக்க விரும்புகிறேன். இந்த விஷயங்களை நீங்கள் நன்கு அறிந்திருப்பீர்கள். எனினும் இஸ்லாத்தின் அமைதி மற்றும் ஒற்றுமை குறித்து நான் பேசும்போது நீங்கள் அவற்றை நினைவில் வைத்திருக்க ஏதுவாக இருக்கும் என்பதற்காகவே கூறுகிறேன். இன்றைய உலகம் ஒருசர்வதேச கிராமம் போன்று ஆகி விட்டதை நாம் அறிவோம்; அதனை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். நாம் அனைவரும் வேறுபட்ட வழிகளின் மூலம் இணைக்கப்பட்டுள்ளோம். அது நவீன போக்குவரத்து சாதனங்கள் மூலமாக இருக்கலாம். நவீன ஊடகங்கள், இணைய தளங்கள் மற்றும் பிற தொலைத் தொடர்பு வழிகள் மூலமாக இருக்கலாம். இந்த எல்லா அம்சங்களும் உலக நாடுகளை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நெருக்கமாக ஆக்கி விட்டன.

பெரிய நாடுகளில் எல்லா வம்சாவழிகளை மார்க்கங்களை, நாடுகளைச் சார்ந்த மக்கள் ஒன்று கூடி வாழ்ந்து வருவதை நாம் காண்கின்றோம். இன்னும் பல நாடுகளில் அங்குள்ள மக்கள் தொகையில் கணிசமான அளவுக்கு வெளிநாட்டிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் வாழ்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்கள் எந்த அளவுக்கு அந்த நாட்டுடன் ஒன்றி விட்டார்கள் என்றால், அவர்களை அந்த நாட்டு மக்களோ அரசாங்கமோ அகற்றுவது கடினமானதாகும்; அகற்றவே முடியாது. அயல்நாட்டு மக்களை குடிபெயர்வதைக் குறைப்பதற்கு பல முயற்சிகள் செய்யப்பட்ட போதிலும் அதற்குப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டபோதிலும் ஒரு நாட்டின் குடிமகன் இன்னொரு நாட்டிற்கு குடிபெயர்ந்து செல்வதற்கான இன்னும் பல வழிகள் இருக்கின்றன. சட்டத்திற்குப் புறம்பாக குடிபெயர்ந்து செல்பவர்களைத் தவிர, நியாயமான காரணத்திற்காக ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு குடிபெயர்ந்து செல்பவர்களுக்கு உதவிடும் அளவுக்கு சர்வதேச சட்டங்கள் இருப்பதையும் நாம் காண்கிறோம்.

அதிக அளவிலான வெளிநாட்டினர் குடிபெயர்ந்து வந்ததன் விளைவாக சில நாடுகளில் அமைதியின்மையும் குழப்பமும் பரவி வருவதையும் நாம் பார்க்கிறோம். இதற்கான பொறுப்பு குடிபெயர்ந்து வந்தவர்கள், உள்ளூர் மக்கள் ஆகிய இருவரையும் சாரும். ஒரு பக்கம் குடிபெயர்ந்து வந்தவர்களில் சிலர் உள்நாட்டினருடன் சிறிதளவு கூட இணைங்கிப் போக மறுப்பதன் மூலம் அவர்களை கோபமூட்டி விடுகின்றனர். மற்றொரு பக்கம் அந்த உள்ளூர் மக்களுள் சிலரிடம் சகிப்புத்தன்மையோ, திறந்த மனப்பான்மையோ இருப்பதில்லை. எனவே அவ்வப்போது அபாயகரமான அளவுக்கு வெறுப்புணர்ச்சி பொங்கி எழுகிறது. குறிப்பாக மேற்கத்திய நாடுகளுக்குக் குடிபெயர்ந்து வந்தவர்களில் – அதிலும் சில முஸ்லிம்களின் எதிர்மறையான நடவடிக்கையின் காரணத்தால் உள்ளூர் வாசிகள் இஸ்லாத்திற்கெதிரான பகைமையையும், வெறுப்பையும் வெளிப்படுத்துகின்றனர். இந்தக் கோபமும் எதிர் நடவடிக்கையும் சிறிய அளவில் மட்டும் இருப்பதில்லை. இது உச்ச கட்டத்தை எட்ட முடியும்; அவ்வாறே எட்டியும் விடுகிறது. எனவேதான் மேற்கத்திய தலைவர்கள் இந்தப் பிரச்சனை குறித்து வழக்கமாகப் பேசி வருகின்றனர்.

எனவே நாம் பார்க்கிறோம். ஜெர்மனியில் வாழும் முஸ்லிம்கள் ஜெர்மனியின் ஓர் அங்கமாவார்கள் என ஜெர்மனியின் அதிபர் கூறுகிறார். மேலும் இங்கிலாந்தின் பிரதமர், முஸ்லிம்கள் இணைந்து வாழ்வதன் அவசியம் பற்றி வலியுறுத்துகிறார். இன்னும் சில நாட்டுத் தலைவர்கள் முஸ்லிம்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் அளவுக்குக் கூட சென்று விட்டனர். உள்நாட்டு மோதல்களின் நிலைமை இன்னும் மோசமாகி விடவில்லை என்றபோதிலும் அது குறித்துக் கவலைப்பட வேண்டியதுள்ளது. இந்த விஷயங்கள் சூடுபிடித்து அமைதியை அழிப்பதற்குக் காரணமாகி விடலாம். இந்த விரோதங்களின் பாதிப்பு மேற்கத்திய உலகத்துடன் மட்டும் நின்று விடாது. மாறாக, முழு உலகிலும் – குறிப்பாக முஸ்லிம் நாடுகளிலும் இதன் பாதிப்பு இருக்கும் என்பதிலும் எந்த சந்தேகமுமில்லை. இதன் விளைவாக மேற்கத்திய உலகிற்கும் கிழக்கத்திய உலகிற்கும் இடையிலான உறவு கடுமையாக சீர்குலைந்து விடும். எனவே நிலைமையை சீராக்கவும், சமாதானத்தை வளரச் செய்வதற்கும் அனைத்து பிரிவினரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். ஒருவருக்கொருவர் கண்ணியத்தைப் பாதுகாக்கும் கொள்கைகளை அரசாங்கங்கள் வகுக்க வேண்டும். அதன் மூலம் பிறருடைய உணர்வுகளைக் காயப்படுத்தவோ, பிறருக்கு எவ்வழியிலாவது துன்பமிழைப்பதோ சட்ட விரோதமாக்கப்பட வேண்டும்.

குடிபெயர்ந்து செல்பவர்கள் உள்ளூர் மக்களுடன் ஒன்றிணைந்து விடும் விருப்பத்துடன் அங்கு செல்ல வேண்டும். அதே வேளையில் உள்ளூர் மக்கள் திறந்த மனதுடனும், சகிப்புத்தன்மையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.மேலும் முஸ்லிம்களுக்கெதிராக சில கட்டுப்பாடுகளை விதிப்பது மட்டும் அமைதிக்கு வழிகோலாது. ஏனெனில் அவை மட்டும் மக்களின் மனங்களையோ, எண்ணங்களையோ மாற்றி விடாது. இது முஸ்லிம்களுக்கு மட்டும் பொருந்தக் கூடியது அல்ல. எப்போதெல்லாம் ஒருவர் அவரது மார்க்கம் காரணமாகவோ அவரது நம்பிக்கையின் காரணமாகவோ நசுக்கப்படுவாரோ அப்போதெல்லாம் அது ஓர் எதிர்விளைவை தோற்றுவித்து அதன் காரணமாக அமைதி வெகுவாக பாதிப்புக்குள்ளாகும். நான் ஏற்கனவே கூறியபடி, சில நாடுகளில் அங்குள்ள மக்களுக்கும் குடிபெயர்ந்து வந்த முஸ்லிம்களுக்கும் இடையில் விரோதங்கள் அதிகமாகி வருகின்றன. இரு சாராரும்

சகிப்புத்தன்மை குறைந்தவர்களாகவும், ஒருவரையொருவர் புரிந்து கொள்ள அக்கறை காட்டாதவர்களாகவும் இருக்கின்றனர். ஐரோப்பிய தலைமை இந்த உண்மை நிலையை ஒப்புக் கொள்ள வேண்டும். மேலும் மார்க்கங்களுக்கிடையில் பரஸ்பரம் மரியாதையையும் சகிப்புத்தன்மையையும் நிலைநாட்டுவது தமது பொறுப்பு என்பதை உணர வேண்டும். ஒவ்வோர் ஐரோப்பிய நாட்டிற்குள்ளும், ஐரோப்பிய நாடுகளுக்கும், முஸ்லிம் நாடுகளுக்கும் இடையில் நல்லெண்ணச் சூழல் வளர்வதற்கும் உலகின் அமைதி சீர்குலையாமல் இருப்பது அவசியமாகும்.

இந்த மோதல்களுக்கும் பிரிவினைகளுக்கும் காரணம், மார்க்கங்களும் மத நம்பிக்கைகளும் மட்டும் அல்ல என்றே கருதுகிறேன். மேலும் மேற்கத்திய நாடுகளுக்கும், முஸ்லிம் நாடுகளுக்கும் இடையிலான வேற்றுமைகளும் கூட இதற்குக் காரணமல்ல. உண்மையில் இந்த வேற்றுமைகளுக்கான முக்கியமான காரணம், உலகளாவிய பொருளாதார நெருக்கடியாகும். பொருளாதார மந்த நிலை அல்லது கடன் காரணமாக பேரிழப்பு ஆகியவை இல்லாமல் இருக்கும்போது எவரும் குடிபெயர்ந்து வருபவர் குறித்து அவர் முஸ்லிமா அல்லது முஸ்லிம் அல்லாதவரா அல்லது ஆப்பிரிக்கரா என்று கவலைபட்டதில்லை. ஆனால் இப்போது நிலைமை முற்றிலும் மாறி விட்டது. இந்த நிலை ஏற்பட இதுவே காரணமாகும். இதன் விளைவாக ஐரோப்பிய நாடுகளுக்கிடையிலான உறவுகளும் கூட பாதிப்பிற்குள்ளாகி விட்டன. எனவே சில ஐரோப்பிய நாடுகளில் உள்ள மக்களுக்கும் பிற ஐரோப்பிய நாடுகளில் உள்ள மக்களுக்கும் இடையில் நாளுக்கு நாள் கடுங்கோபமும், கசப்புணர்வும் அதிகரித்து வருகிறது. நம்பிக்கையின்மை என்ற நிலையே எங்கும் காணப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தை நிறுவியது ஐரோப்பிய நாடுகளின் ஒரு பெரிய சாதனையாகும். இதன் மூலம் ஐரோப்பிய கண்டம் ஒன்றிணைக்கப்படுகிறது. எனவே நீங்கள் ஒருவர் மற்றவரின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதன் மூலம் இந்த ஒற்றுமையை நிலைபெறச் செய்ய சாத்தியமான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். பொதுமக்களிடம் காணப்படும் அச்சங்களும் கவலைகளும் அகற்றப்பட வேண்டும். ஒருவர் மற்றொருவரின் சமுதாயத்தைப் பாதுகாக்க அவற்றின் நீதியான நியாயமான

கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் ஒவ்வொரு நாட்டு மக்களின் கோரிக்கைகளும் நீதியும், நியாயமும் கொண்டவையாக இருக்க வேண்டும்.

ஐரோப்பாவின் வலிமை அது ஒன்றிணைந்து ஒன்றாக இருப்பதில்தான் உள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்த ஒற்றுமை உங்களுக்கு ஐரோப்பாவில் மட்டும் பயன் தராது. மாறாக, உலக அளவில் இந்த கண்டத்திற்கு அது ஆற்றலையும். பலனையும் தரும். உண்மையில் இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் கூறுவதாக இருந்தால் முழு உலகமும் ஒன்றுபடுவதற்காக நாம் பாடுபட வேண்டும். சுதந்திர வணிகம் மற்றும் வியாபாரத்திலும் உலகம் ஒன்றுபட வேண்டும். உலகின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு சுதந்திரமாக செல்வதிலும் குடிபெயர்ந்து செல்வதிலும் தீர்க்கமான, பொருத்தமான திட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அதன் மூலமாக முழு உலகமும் ஒன்றுபட முடியும். சுருக்கமாக, நாடுகள் ஒன்றுக்கொன்று ஒத்துழைப்பதற்கான வழிவகைகளைத் தேடினால், பிரிவினை வரும் இடங்களெல்லாம் ஒற்றுமையால் நிரப்பப்பட்டு விடும். இந்த முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டால் தற்போது நிலவுகின்ற மோதல்கள் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு அதன் இடத்தில் அமைதியும் பரஸ்பரம் மரியாதையும் ஏற்பட்டு விடும். ஆனால் ஒவ்வொரு நாடும் நீதியுன் தனது பொறுப்பையும் உணர்ந்தால் மட்டுமே இது சாத்தியமாகும். இது இஸ்லாமிய போதனையாக இருந்தபோதிலும் இஸ்லாமிய நாடுகளே ஒற்றுமையை உருவாக்க முடிவதில்லை என்பதை வருத்தத்துடன் நான் கூற வேண்டியதுள்ளது. இஸ்லாமிய நாடுகள் ஒத்துழைப்பு கொடுத்து ஒற்றுமையாக இருந்திருந்தால் தமது நாட்டிலுள்ள பிரச்சனைகளுக்கும் தேவைகளுக்கும் அவை மேற்கத்திய நாடுகளின் ஆதரவையும் உதவியையும் எப்போதும் நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.

இந்த சொற்களுடன் நான் தற்போது உலகில் நீடித்த சமாதானம் நிலைபெற உண்மையான இஸ்லாமிய போதனைகளைப் பற்றிக் கூற விரும்புகிறேன். முதலாவதாக அடிப்படையான போதனை என்னவெனில், முஸ்லிம் என்றால் யார் எனில் எவருடைய நாவிலிருந்தும் கைகளிலிருந்தும் அமைதியை விரும்பும் பிற மக்கள் அனைவரும் பாதுகாப்பாக இருப்பாரோ அவரேயாவார். முஸ்லிம்

என்பதற்கு இந்த இலக்கணத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். இந்த அடிப்படையான, அழகிய போதனைக் கேட்ட பின்னரும் எவராவது இஸ்லாத்திற்கு எதிராக எந்த ஆட்சேபனையையாவது கூற முடியுமா? நிச்சயமாக முடியாது. தமது நாவையும் கைகளையும் அநீதியையும் வெறுப்பையும் பரப்புவதற்காக பயன்படுத்துகின்றவர் தண்டிக்கப்பட வேண்டும் என்று இஸ்லாம் கூறுகிறது. எனவே உள்ளூர் மட்டத்திலிருந்து சர்வதேச எல்லை வரை எல்லா தரப்பினரும் இந்த அழகிய போதனையின் வட்டத்திற்குள் தம்மை இருக்கச் செய்தால் மார்க்க அளவிலான எந்தக் குழப்பமும் தோன்றாது; அரசியல் அளவிலான எந்த சண்டையும் இருக்காது. பேராசையாலும் அதிகாரத்தின் மீதான ஆசையாலும் உருவாகின்ற எந்தக் குழப்பமும் ஏற்படாது. இந்த உண்மையான இஸ்லாமிய போதனைகளை கைக்கொண்டு நடந்தால் ஒவ்வொரு நாட்டிலும் மக்கள் ஒருவருக்கொருவர் உணர்வுகளையும், உரிமைகளையும் பாதுகாப்பர். அரசாங்கங்கள் எல்லாக் குடிமக்களையும் பாதுகாக்கின்ற தமது கடமையை மேற்கொள்ளும். சர்வதேச அளவில் நாடுகள் தமக்கிடையே உண்மையான அனுதாபத்தையும், பரிவையும் பரிமாறிக் கொண்டு இணைந்து செயல்படும்.

சமாதானம் தழைக்க இஸ்லாம் கூறும் இன்னொரு மகத்தான போதனை என்னவெனில், எல்லா பிரிவினரும் தற்பெருமையையும் அகம்பாவத்தையும் எந்த வடிவத்திலும் வெளிப்படுத்தாமல் இருப்பது அவசியமாகும். இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிக அழகிய முறையில் விளக்கிக் கூறியுள்ளார்கள். அவர்களின் புகழ் பெற்ற கூற்று, ஒரு கருப்பர் ஒரு வெள்ளையரைவிட உயர்ந்தவர் அல்லர்; ஒரு வெள்ளையர் கருப்பரை விட உயர்ந்தவர் அல்லர். அதே போன்று ஐரோப்பாவைச் சேர்ந்தவர் பிற நாடுகளைச் சேர்ந்தவர்களை விட உயர்ந்தவர் அல்லர்; ஆப்பிரிக்காவைச் சேர்ந்தவர் அல்லது ஆசியாவைச் சேர்ந்தவர் பிற நாடுகளைச் சேர்ந்தவர்களை விட உயர்ந்தவர்கள் அல்லர். நாடு, நிறம், இனம் ஆகியவற்றின் வேறுபாடுகள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்கும், அடையாளம் காட்டுவதற்காகவுமேயாகும்.

இந்த நவீன உலகில் நாம் ஒருவரை ஒருவர் சார்ந்திருக்கின்றோம் என்பது உண்மையாகும். பெரிய சக்திகளான ஐரோப்பாவும்

அமெரிக்காவும் கூட பிற நாடுகளை விட்டு அகன்று தனித்து இயங்க முடியாது. ஆப்பிரிக்க நாடுகள் தனித்டிருந்து வளர்ச்சி அடைதல் என்பது இயலாத ஒன்றாகும். அது போன்று ஆசிய நாடுகளோ அல்லது உலகின் எந்தப் பகுதியின் நாடுகளோ தனித்திருந்து இயங்கவே முடியாது. எடுத்துக்காட்டாக, உங்கள் பொருளாதாரம் வளம் பெற வேண்டுமென நீங்கள் விரும்பினால், சர்வதேச வணிகம் செய்ய உங்களுக்கு நாட்டம் இருக்க வேண்டும். உலக நாடுகள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன என்பதற்கு தெளிவான சான்று, கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள ஐரோப்பிய அல்லது உலகப் பொருளாதார நெருக்கடியின் காரணத்தால் ஏறக்குறைய உலகின் ஒவ்வொரு நாடும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் அறிவியல் துறையில் முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் அல்லது மற்ற துறைகளில் நிபுணத்துவத்தை பெற விரும்பும் நாடுகள் ஒன்றுடன் ஒன்று ஒத்துழைப்பு நல்கி உதவி புரிவதும் அவசியமாகும்.

ஆப்பிர்க்கா, ஐரோப்பா, ஆசியா அல்லத் உலகின் எந்தப் பகுதியினைச் சேர்ந்த மக்களாக இருப்பினும் சரி அவர்கள் அனைவருக்கும் மகத்தான அறிவுத் திறனை அல்லாஹ் வழங்கியுள்ளான் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இறைவனால் வழங்கப்பட்ட இந்த திறண்மைகளை ஒவ்வொரு தரப்பினரும் மனிதகுல முன்னேற்றத்திற்காக முழுத் திறமையுடன் பயன்படுத்தினால் முழு உலகமும் அமைதியின் பூங்காவாக மாறிவிடும். எனினும் குறைவாக வளர்ச்சி பெற்ற நாடுகளின் முன்னேற்றத்தை அல்லது வளர்கின்ற நாடுகளின் முன்னேற்றத்தைத் தடுக்க வளர்ந்த நாடுகள் முயற்சி செய்தால் அந்த நாடுகளிலுள்ள வளமிக்க, பிரகாசமான மனித ஆற்றல்களுக்கு வாய்ப்பளிக்காவிட்டால் பின்னர் விரக்தி பரவி அதன் விளைவாக ஏற்படும் அமைதியின்மை சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் குந்தகத்தை ஏற்படுத்தி விடும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

அமைதி வளர இஸ்லாம் கூறும் மற்றுமொரு போதனை என்னவெனில், பிறர் மீது இழைக்கப்படும் அநீதிக்கும், உரிமைகள் பறிக்கப்படுவதற்கும் இடம் கொடுக்கக் கூடாது. அதே போன்று நமது சொந்த உரிமைகள பறிக்கப்படுவதை நாம் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதைப் போன்று பிறரது உரிமைகள் பறிக்கப்படுவதையும் ஏற்றுக்

கொள்ளக் கூடாது. இஸ்லாம் போதிப்பது என்னவெனில், பழிதீர்ப்பது அவசியமென்றால், எந்த அளவுக்கு வரம்பு மீறப்பட்டுள்ளதோ அந்த அளவிற்கே பதிலடி கொடுக்க வேண்டும். எனினும் மன்னிப்பின் காரணமாக சீர்திருத்தம் ஏற்படுமென்றால் மன்னிப்பையே தேர்ந்தெடுக்க வேண்டும். உண்மையான, முக்கியமான குறிக்கோள் சீர்திருத்தம், சமரசம், நீடித்த அமைதியை வளரச் செய்தல் ஆகியவையாகவே இருக்க வேண்டும். ஆயினும் இன்று உண்மையில் என்ன நடைபெறுகிறது? எவராவது தீமையோ அநீதியோ இழைத்து விட்டால் பாதிப்புக்கு ஆளானவர் எந்த அளவுக்கு அவரிடம் அநீதியுடன் வரம்பு மீறப்பட்டதோ அதை விட அதிகமான அளவிற்கு வரம்பு மீறிப் பழிவாங்கி விடுகிறார்.

இஸ்ரேலுக்கும் பாலத்தீனத்திற்கும் இடையில் இன்றைய நாட்களில் மேலோங்கியிருக்கும் போர் சூழலில் இதைத்தான் நாம் காண்கிறோம். சிரியா, லிபியா அல்லது எகிப்தில் நிலவும் சூழ்நிலைகள் அவை உண்மையில் உள்நாட்டுப் பிரச்சனைகள் என்று கூற முடிந்தாலும் அவற்றிற்கெதிராக வல்லரசு நாடுகள் தமது கடும் கோபத்தையும், கவலையையும் வெளிப்படையாகத் தெரிவித்துள்ளன. இருந்தபோதிலும் பாலஸ்தீன மக்கள் விஷயத்தில் அவை அக்கறை கொண்டவையாக இருப்பதாகத் தெரியவில்லை. இந்தத் தெளிவான இரட்டை வேடத்தின் விளைவாக பலமிக்க சக்திகளுக்கெதிராக முஸ்லிம் நாடுகளின் பொதுமக்களின் உள்ளத்தில் இந்தக் கோபமும் வெறுப்பும் மிகவும் அபாயகரமானதாகும். அது எப்போது வேண்டுமானாலும் கொதித்தெழுந்து வெடித்து விடலாம். இதன் முடிவு எப்படி இருக்கும் ? வளர்ந்து வரும் நாடுகள் மீது எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தும்? அவை எஞ்சியிருக்க முடியுமா? வளர்ந்த நாடுகளில் எந்த அளவில் பாதிப்பு ஏற்படும்? இந்தக் கேள்விகளுக்கான பதில்களை இறைவனே அறிவான். என்னால் இந்தக் கேள்விகளுக்கு பதில் கூற முடியாது. சந்தேகமின்றி ஒன்றைக் கூற முடியும். அது என்னவெனில் உலகில் சமாதானம் அழிந்து போய்விடும்.

நான் எந்தவொரு குறிப்பிட்ட தனி நாட்டிற்கும் ஆதரவாகவும் பேசவில்லை என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். நான் கூற விரும்புவது என்னவெனில் எல்லாவிதமான கொடுமையிழைத்தலும் - அது எங்கு இருந்தாலும் - பாலஸ்தீன மக்களால் இழைக்கப்பட்டாலும், இஸ்ராலிய

மக்களால் இழைக்கப்பட்டாலும் சரி அல்லது வேறெந்த நாட்டால் இழைக்கப்பட்டாலும் சரி அவை முற்றிலுமாக இல்லாமல் நிறுத்தப்பட வேண்டும். இந்தக் கொடுமைகள் நிறுத்தப்படாமல் அவற்றைப் பரப்ப அனுமதிக்கப்பட்டால் அந்த நெருப்பின் தீப்பிழம்பு முழு உலகையும் எந்த அளவுக்கு வியாபித்து விடும் என்றால் மக்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டிருக்கும் பிரச்சனைகளை விரைவில் மறந்து விடுவர். ஆனால் அதற்கு பதிலாக அதை விடப் பயங்கரமான துன்பங்களை மக்கள் சந்திப்பர். உயிரிழைப்பு நம்மால் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு இருக்கும்.

எனவே இரண்டாம் உலகப் போரில் பெருமளவில் இழப்பை சந்தித்த ஐரோப்பிய நாடுகளுக்கு கடந்த காலத்திலிருந்து படிப்பினையைப் பெற்று உலகத்தை அழிவிலிருந்து காப்பாற்றும் கடமை உள்ளது. இதற்காக அவர்கள் நீதியின் தேவையை நிறைவேற்ற வேண்டும். தமது பொறுப்புகளை விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இஸ்லாம் எப்போதும் நீதியுடன் நல்ல முறையில் செயல்படுவதை வலியுறுத்திக் கூறுகிறது. எந்தவொரு சாராரிடமும் ஒருதலைப்பட்சமாக, சாதகமாக நடந்து கொள்ளக் கூடாது என்று இஸ்லாம் போதிக்கின்றது. தவறிழைக்கும் ஒருவர் மற்றொரு நாட்டின் மீது எந்த அளவுக்கு எத்தகுதியில் அநீதியிழைக்க முயற்சித்தாலும் சரியே, மற்ற நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து அவ்வாறு அநீதியுடன் செயல்பட அவரை அனுமதிக்காது என்பதை அவர் அறிய வேண்டும். ஐக்கிய நாட்டு சபையின் உறுப்பு நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பயன்பெறு நாடுகள் பலமிக்க நாடுகளின் ஆதிக்கத்தின் கீ ழ் உள்ள நாடுகள் - ஏன் வளம் குன்றிய நாடுகள் கூட இதனை ஏற்றுக் கொண்டால் மட்டுமே அமைதி உருவாக முடியும்.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையில் வீட்டோ (Vito) அதிகாரம் கொண்ட நாடுகள் தமது செயல்களுக்குத் தாமே பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம் என்பதை உணர்ந்தால் மட்டுமே உண்மையில் நீதி நிலைநாட்டப்பட முடியும். இன்னும் ஒருபடி மேலே சென்று நான் கூறுகிறேன். வீட்டோ (Vito) அதிகாரம் இருப்பது அமைதி நிலைநாட்டப்படுவதை ஒருபோதும் அனுமதிக்காது; அல்லது அதற்கு துணை நிற்காது. ஏனெனில் அனைத்து நாடுகளும் சம அந்தஸ்தில் இல்லை. இந்தக் கருத்தை இவ்வாண்டு அமெரிக்காவிலுள்ள கேப்பிடல்

ஹில் என்னுமிடத்தில் முன்னணி அரசியல்வாதிகள் மற்றும் கொள்கை நிபுணர்களுக்கு மத்தியில் நான் உரை நிகழ்த்தும்போதும் கூறியிருந்தேன். ஐக்கிய நாட்டு சபையின் வாக்கெடுப்பின் நிகழ்வை நாம் பார்க்கின்றபோது வீட்டோ (Vito) அதிகாரம் எப்போதும் நசுக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையிலோ அல்லது சரியான வழியில் நடப்பவர்களுக்கு ஆதரவாகவோ உபயோகிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. உண்மையில் வீட்டோ (Vito) அதிகாரம் சில தருணங்களில் கொடுமையைத் தடுப்பதற்கு பதிலாக கொடுமைக்கு ஆதரிக்கவும் அதற்கு துணை போகவும் தவறாகப் பயன்பட்டுள்ளது. இந்த விஷயம் மறைவான, தெரியாத விஷயம் ஒன்றுமல்ல. பல விமர்சகர்களும் இது குறித்து வெளிப்படையாகப் பேசியும் எழுதியும் உள்ளனர்.

சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கு இஸ்லாம் கூறும் இன்னோர் அழகிய போதனை, கோபத்தை அடக்கிக் கொள்ள வேண்டும் என்பதாகும். கோபத்தை நீதி மற்றும் நேர்மையின் மீது ஆதிக்கம் செலுத்த விட்டு விடக் கூடாது. உண்மையான முஸ்லிம்கள் இதன்படியே செயல்பட்டார்கள் என்பதற்கு இஸ்லாத்தின் ஆரம்ப கால வரலாறு சாட்சி பகர்கிறது. இதன்படி செயல்படாதவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் கடுமையாக கண்டிக்கப்பட்டார்கள். ஆனால் இன்று துரதிஷ்டவசமாக நிலைமை அப்படி இல்லை. அமைதியை நிலைநாட்டுவதற்காக அனுப்பப்படும் படைகளும் இராணுவத்தினரும் தமக்கு வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களுக்கு முற்றிலும் மாற்றமான முறையில் நடந்து கொள்வதை இன்று நாம் பார்க்கிறோம். உதாரணமாக, சில நாடுகளில் அந்நிய நாட்டுப் படையினர் தம்மால் கொல்லப்பட்டு இறந்த உடல்களுடன் கொடூரமான முறையில் அவமரியாதையுடன் நடந்து கொள்கின்றனர். இந்த வழியில் அமைதி நிலைநாட்டப்பட முடியுமா? இந்த மாதிரியான செயல்களுக்கான எதிர்விளைவு பாதிக்கப்பட்ட நாட்டுடன் மற்றும் நின்று விடாது. மாறாக, உலக அளவில் அதன் தாக்கம் வெளிப்படும். ஒருவேளை முஸ்லிம்கள் இவ்வாறான முறைகேட்டிற்கு உள்ளானால் இஸ்லாமிய போதனைகளுக்கு மாற்றமாக இந்த முஸ்லிம் பயங்கரவாதிகள் அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வர். இதன் காரணமாக உலக அமைதி சீர்குலைந்து விடுகிறது. பிறகு அநீதிக்கு ஆளானவர்களுக்கும் அநீதி இழைத்தவர்களுக்கும் உதவி

செய்வதன் மூலமே அமைதி நிலைநாட்டப்பட முடியும் என இஸ்லாம் போதிக்கின்றது. அத்தகைய உதவி பாரபட்சமற்ற, சுய இலாபங்களை விட்டொழித்து பகைமையை விட்டகன்றவாறு இருத்தல் வேண்டும். அனைத்து பிரிவினருக்கும் உரிய சம அந்தஸ்தை, சூழலை வழங்குவதன் மூலமுமே அமைதியை ஏற்படுத்த முடியும்.

நேரத்தின் அருமையைக் கருத்தில் கொண்டு, இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் கூறுகிறேன். பிறரது செல்வங்களையும் வளங்களையும் பொறாமைக் கண் கொண்டு பார்க்கக் கூடாது என்று இஸ்லாம் போதிக்கின்றது. பிறருக்கு சொந்தமானவற்றின் மீது பேராசை கொள்ளக் கூடாது. ஏனெனில் இதுவும் அமைதி சீர்குலைந்து விடக் காரணமாகி விடும். வளமிக்க நாடுகள் வளர்ச்சி குன்றிய நாடுகளிலுள்ள வளங்களை அபகரித்து தமது சொந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முயற்சி செய்தால் பின்னர் இயற்கையாகவே அமைதியின்மை பரவி விடும். வளர்ந்த நாடுகள் தமது சேவைக்குப் பகரமாக அந்த வளங்களின் சிறிய பகுதியை பொருத்தமான வழிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அந்த வளங்களின் பெரும் பகுதி அந்தந்த வளர்ச்சி குன்றிய நாடுகளில் வாழ்க்கைத் தரம் மேம்பட பயன்படுத்தப்பட வேண்டும். அந்த நாடுகள் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு இணையாக தமது அந்தஸ்தில் முன்னேற்றம் அடைய உதவி செய்யப்பட வேண்டும். ஏனெனில் அப்போதுதான் அமைதியை நிலைநாட்ட முடியும். அந்த நாடுகளின் தலைமை நேர்மையற்றதாக இருக்குமென்றால், அப்போது மேலை நாடுகள் அல்லது வளர்ந்த நாடுகள் உதவி வழங்கி அவற்றைக் கண்காணித்து, அவற்றின் வளர்ச்சிக்கு துணை நிற்க வேண்டும்.

இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. இருப்பினும் நேரம் இல்லாத காரணத்தால் நான் சிலவற்றை மட்டும் கூறியுள்ளேன். நிச்சயமாக நான் கூறிய கருத்துகள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் ஆகும். உங்களின் உள்ளங்களில் ஒரு கேள்வி எழலாம். எனவே நான் அது குறித்து இப்போதே கூறி விடுகிறேன். இவையெல்லாம் இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் என்றால், இஸ்லாமிய உலகில் ஏன் இன்று இத்தனை பிரிவுகளும் குழப்பங்களும் இருப்பதை நாம் காண்கிறோம்? என நீங்கள் வினவலாம். இதற்கான பதிலை நான் ஆரம்பத்திலேயே கூறி விட்டேன். ஒரு சீர்திருத்தவாதி

தோன்ற வேண்டிய அவசியத்தைக் குறித்துக் கூறினேன். அந்த சீர்திருத்தவாதி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் என்று நாங்கள் நம்புகிறோம். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்த நாங்கள் இஸ்லாத்தின் இந்த உண்மையான போதனைகளை எந்த அளவுக்கு அதிகமாகப் பரப்ப முடியுமோ அந்த அளவுக்கு அதிகமாகப் பரப்பி வருகிறோம். நான் உங்கள் அனைவரிடமும் வேண்டிக் கொள்கிறேன். நீங்கள் அனைவரும் தத்தமது வட்டத்திற்குள் இந்த கருத்துகளைக் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள். அதன் மூலமாக உலகின் அனைத்துப் பகுதிகளிலும் நீடித்து நிற்கும் சமாதானத்தை உருவாக்கி விடலாம்.

நாம் இதனை செய்யத் தவறினால் உலகின் எந்தப் பகுதியும் போரின் கொடூரமான அழிவின் விளைவுகளை விட்டும் பாதுகாப்பாக இருக்காது. உலக மக்கள் அனைவரும் தமது சுய நலன்களையும் விருப்பங்களையும் விட்டு விட்டு வரவிருக்கும் அழிவிலிருந்து உலகை காப்பாற்ற முயற்சி செய்ய வல்லமை மிக்க அல்லாஹ் உதவி புரிய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். இன்றைய உலகில் வளர்ந்த மேற்கத்திய நாடுகளிடமே பெரும் ஆற்றல் உள்ளது. எனவே மற்றவர்களை விட உங்களுக்குத்தான் இந்த முக்கியமான விஷயங்களின் பக்கம் உடனடி கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பு உள்ளது.

இறுதியாக, உங்கள் நேரத்தை செலவிட்டு இங்கு வந்து எனது உரையை செவிமடுத்த அனைவருக்கும் நான் நன்றி கூறிக் கொள்கிறேன். அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக.

உங்களுக்கு மிக்க நன்றி.

**தமிழாக்கம்:** A.Nasir Ahmad




# ''முஸ்லிம்கள் தங்களை மேற்கத்திய சமூகத்தினருடன் இணைத்துக் கொள்ள முடியுமா?''

---

## பைத்துர் ரஷீது பள்ளிவாயில்

## ஹம்பர்க்–ஜெர்மனி 2012





Ḥaḍrat Mirza Masroor Ahmad, Khalīfatul-Masīḥ V[aba]
delivers the keynote address at Baitur-Rasheed Mosque






ECHTE REUE REINIGT VON SÜNDEN
MUSLIME FÜR
FRIEDEN
FREIHEIT
LOYALITÄT
15



# ‘‘முஸ்லிம்கள் தங்களை மேற்கத்திய சமூகத்தினருடன் இணைத்துக் கொள்ள முடியுமா?’’

அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்.......

கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் அனைவருக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ.

அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உங்கள் மீது உண்டாவதாக. எங்களின் அழைப்பை ஏற்று இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க வந்த விருந்தினர்கள் அனைவருக்கும் முதலாவதாக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களில் பலரும் இந்த அமைப்பைப் பற்றி நன்கு தெரிந்திருப்பீர்கள். அல்லது அஹ்மதி முஸ்லிம்களுடன் கொண்ட நட்பின் காரணமாக, முன்பே தொடர்பில் இருப்பவர்கள். அண்மைக் காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்துடன் அறிமுகமானவர்கள். இந்த அமைப்பைப் பற்றி இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலை உங்கள் உள்ளத்தில் கொண்டிருப்பீர்கள் என நான் உறுதியாக நம்புகிறேன். உங்கள் அனைவரின் வருகையையும் பார்க்கின்றபோது அஹ்மதி முஸ்லிம்களை சந்திப்பதிலோ, தொடர்பு கொள்வதிலோ அல்லது அவர்களுடைய பள்ளிவாயிலுக்கு செல்வதிலோ எத்தகைய ஆபத்தும், அச்சுறுத்தலும் இல்லை என்பதை நீங்கள் நன்கு நம்புகிறீர்கள் என்பதை அது பறைசாற்றுகிறது.

உண்மை என்னவென்றால், இன்றைய சூழலில் இஸ்லாத்தைப் பற்றிய பெரும்பாலான செய்திகளும், கருத்துகளும் எதிர்மறையான, தவறான தகவலையே தருகின்றன. எனவே உங்களுள் முஸ்லிம் அல்லாதவருக்கு அஹ்மதிய்யா பள்ளிவாயிலுக்கு செல்வது கஷ்டங்களைக் கொடுக்கும்; பெரிய அளவிலான பாதிப்புகளும் கூட

ஏற்படும் என்ற எண்ணம் எளிதில் உருவாகலாம். இருப்பினும் நான் கூறியது போன்று, நீங்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்பதன் மூலம் உங்களுக்கு அஹ்மதி முஸ்லிம்கள் மீது எவ்வித அச்சமும் இல்லை; நீங்கள் அவர்களை ஓர் அச்சுறுத்தலாகக் கருதவில்லை என்பது நிரூபணமாகிறது. இவை நீங்கள் அஹ்மதிகளை மதிக்கின்றீர்கள். மேலும் அவர்கள் உங்களைப் போன்று, பெரும்பாலான மக்களைப் போன்று நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்; மதிப்பிற்குரியவர்கள் என்று நம்புகிறீர்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு நான் கூறுகின்றபோது இன்று வருகை தந்திருக்கும் உங்களுள் சிலருக்குக் கூட இதில் பங்கேற்பதால் சில எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டு விடுமோ என்ற சஞ்சலமும் சிந்தனையும் தோன்றியிருக்கும் என்பதையும் நான் மறுப்பதற்கில்லை. தீவிரவாத சிந்தனையும், ஈடுபாடும் கொண்ட ஒருவருக்கு அருகில் அமர வேண்டியிருக்குமோ என்ற கவலை அதற்குக் காரணமாக இருக்கலாம். உங்களுள் யாராவது இது போன்ற அச்சத்தைக் கொண்டிருந்தால் உடனடியாக அதனை உங்கள் உள்ளத்திலிருந்து அகற்றி விடுங்கள். இவ்விஷயத்தில் நாங்கள் மிகவும் விழிப்புடன் இருக்கிறோம். ஒருவேளை அப்படிப்பட்ட யாராவது ஒரு தீவிரவாதி இப்பள்ளிவாயிலிலோ, அதைச் சார்ந்த இடத்திலோ நுழைய முயற்சி செய்வார் என்றால் அவரை இந்தக் கட்டடத்திலிருந்து வெளியேற்ற நாங்கள் கடும் முயற்சி எடுப்போம். எனவே நீங்கள் பாதுகாப்பின் கரங்களுக்குள் இருக்கின்றீர்கள் என்பதில் உறுதி கொள்ளுங்கள்.

உண்மையில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் ஒரு நபர் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் தீவிரவாதச் செயலைச் செய்தாலோ, சட்டத்தை மீறினாலோ, அமைதிக்கு குந்தகம் விளைவித்தாலோ அவர் ஜமாஅத்திலிருந்து வெளியேற்றப்படுவார். அத்தகைய உறுதியான முடிவை எடுக்க நாங்கள் கடமைப்பட்டவர்களாக உள்ளோம். ஏனென்றால் ‘இஸ்லாம்’ என்ற சொல்லுக்கு நாங்கள் மகத்தான கண்ணியத்தை வழங்குகிறோம். அதன் பொருள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பதாகும். இஸ்லாம் என்ற சொல்லின் உண்மையான செயல்பாட்டை எங்கள் ஜமாஅத் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. இத்தகைய உண்மையான இஸ்லாம் தோன்றவிருப்பதைப் பற்றி இஸ்லாத்தைத் தோற்றுவித்த தூய

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் 1400 ஆண்டுகளுக்கு முன்பாகவே முன்னறிவிப்பு செய்துள்ளர்கள். அந்த முன்னறிவிப்பில் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள், 'ஒரு காலம் வரும். அப்போது முஸ்லிம்களுள் பெரும்பாலார் உண்மை இஸ்லாத்தையும் அதன் தூய போதனைகளையும் மறந்து விடுவார்கள்' எனக் கூறியுள்ளார்கள். அந்த முன்னறிவிப்பின்படி இந்த காலகட்டத்தில் அல்லாஹ் ஒருவரை சீர்திருத்தவாதியாக, மஸீஹாக, மஹ்தியாக அனுப்பி உண்மை இஸ்லாத்தை மீண்டும் உலகில் நிலைநாட்டுவான் எனக் கூறப்பட்டுள்ளது.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சார்ந்த நாங்கள் அதனை நிறுவிய காதியானைச் சார்ந்த மிர்ஸா குலாம் அஹ்மது அவர்கள்தான் மாபெரும் முன்னறிவிப்பை நிறைவேற்றுவேற்றுவதற்காக அனுப்பப்பட்ட தூதர் என்றும் நம்புகிறோம். அல்லாஹ்வின் பேரருளால் இந்த ஜமாஅத் தழைத்தோங்கி உலகில் 202 நாடுகளில் பரவி விட்டது. (இது 2012-ல் ஆற்றிய சொற்பொழிவு. தற்போது 2017-ஆம் ஆண்டில் இந்த ஜமாஅத் 207 நாடுகளில் பரவி விட்டது.- மொழிபெயர்ப்பாளர்.) இவற்றுள் ஒவ்வொரு நாட்டிலும் எல்லா பின்புலங்களைக் கொண்டவர்களும், பல இனங்களை சேர்ந்த மக்களும் அஹ்மதிய்யதை ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்கள் அஹ்மதி முஸ்லிம்களாக இருப்பதுடன் தமது நாட்டின் மீது பற்று கொண்ட குடிமக்களாகவும் இருக்கின்றனர். இஸ்லாத்தின் மீது கொண்ட பற்றுக்கும் தங்கள் நாட்டின் மீது கொண்ட பற்றுக்கும் இடையே எவ்விதமான முரண்பாடோ, ஏற்றத்தாழ்வோ இருக்கவில்லை. உண்மையில் இவ்விரண்டு விதமான பற்றும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. அஹ்மதி முஸ்லிம்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் அந்த நாட்டுச் சட்டங்களுக்கு முற்றிலும் மதிப்பளிக்கும் குடிமக்களாகத் திகழ்கின்றனர். இத்தகைய பண்புகள் எங்கள் ஜமாஅத்தில் பெரும்பாலான மக்களிடம் நிலைபெற்றிருக்கின்றன என்பதை சிறிதளவு கூட சந்தேகத்திற்கிடமின்றி என்னால் உறுதியாகக் கூற முடியும்.

இத்தகைய பண்புகளின் காரணமாகவே அஹ்மதி முஸ்லிம்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு குடிபெயர்ந்து செல்லும்போதும் அல்லது ஓர் இடத்திலுள்ள மக்கள் அஹ்மதிகளாக

மாறும்போதும் அவர்கள் புதிய சமூகத்தில் இணைவதில் அவர்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. மேலும் தங்களை ஏற்றுக் கொண்ட நாட்டின் நலன்களை முன்னெடுத்துச் செல்வதில் தாம் எந்த அளவுக்கு செயலாற்ற முடியும் என்பது குறித்தும் அவர்களுக்கு எவ்வித கவலையும் ஏற்படுவதில்லை. அஹ்மதிகள் எங்கு சென்றாலும் ஓர் உன்னதமான குடிமகன் எவ்விதம் இருக்க வேண்டுமோ அவ்விதம் அவர்கள் தங்கள் நாட்டை நேசிக்கிறார்கள். மேலும் அந்த நாட்டின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டிற்காகவும் அவர்கள் தமது வாழ்வைக் கழிக்கிறார்கள். நீங்கள் இப்படித்தான் வாழ வேண்டும் என்று எங்களுக்கு கற்றுத் தந்தது இஸ்லாம் ஆகும். உண்மையில் அது இதனை மேம்போக்காகக் கூறவில்லை. மாறாக, வாழும் நாட்டுக்கு முழுமையான பற்றுடனும் அர்ப்பணித்தலுடனும் இருக்க வேண்டும் என்றும் இஸ்லாம் எங்களுக்குக் கட்டளை இடுகின்றது. ‘உண்மையில் ஒரு நாட்டின் மீது ஒருவர் கொள்ளும் அன்பு ஈமானின் (இறைநம்பிக்கையின்) ஒரு பகுதியாகும்’ என தூய நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

உங்கள் நாட்டை நேசிப்பது உங்கள் அடிப்படை விஷயமாக இருக்கின்ற நிலையில், ஓர் உண்மையான முஸ்லிம் நம்பிக்கைக்கு மாற்றமாக அவரது நாட்டின் மீது பற்றற்ற நிலையை - நம்பிக்கை துரோகச் செயலை எவ்வாறு வெளிப்படுத்த முடியும்? அஹ்மதி முஸ்லிம்களைப் பொருத்தவரை எங்களின் பெரிய அளவிலான நிகழ்ச்சிகளிலெல்லாம் எங்களின் இயக்கத்தைச் சார்ந்த அத்தனை உறுப்பினர்களும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், பெரியவர் அனைவரும் எழுந்து நின்று இறைவனை சாட்சியாக்கி உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர். அந்த உறுதிமொழியில் அவர்கள் தங்கள் உயிரையும், செல்வத்தையும், நேரத்தையும், கவுரவத்தையும் மார்க்கத்திற்காக மட்டுமல்ல; அவர்களது நாட்டுக்காகவும் தியாகம் செய்வதாக வாக்குறுதி அளிக்கின்றனர். எனவே எந்த மக்களிடமிருந்து தொடர்ந்து உறுதிமொழி பெறப்படுகிறதோ - தங்கள் நம்பிக்கைக்காகவும், தங்கள் நாட்டுக்காகவும் எப்போதும் எல்லா தியாகங்களையும் செய்யத் தயாராக இருக்கும்படி வாக்குறுதி பெறப்படுகிறதோ - அம்மக்களை விட, எவர் நாட்டின் மீது அதிக பற்று கொண்ட குடிமகனாக இருக்க முடியும்?

இங்கு ஜெர்மனியில் அதிகமான முஸ்லிம்களும் பாகிஸ்தான், துருக்கி மற்றும் பிற ஆசிய நாடுகளிலிருந்து வந்தவர்களாக இருக்கின்ற நிலையில், அவர்களது நாட்டுக்காக தியாகம் செய்ய வேண்டிய தருணம் வருகின்றபோது அவர்கள் ஜெர்மனியை விட்டு தங்கள் நாட்டுக்காகவே தியாகம் செய்ய விரும்புவார்கள் என்ற கேள்வி சில மக்களின் மனதில் எழலாம். இதனை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அதாவது எப்போது ஒருவர் ஜெர்மனியின் அல்லது பிற நாட்டின் குடியுரிமை அந்தஸ்தைப் பெறுவரோ அப்போது அவர் அந்த நாட்டின் முழுமையான குடிமகனாக ஆகி விடுகிறார். இவ்வாண்டின் ஆரம்பத்தில் காப்லென்ஸ் (Koblenz)- ல் உள்ள ஜெர்மன் இராணுவத் தலைமையகத்தில் நான் ஆற்றிய உரையில் இவ்விஷயத்தைக் குறிப்பிட்டேன். ஜெர்மனிக்கு, ஒருவர் எந்த நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வந்தாரோ அந்த நாட்டுடன் போரிடும் நிலை வரும்போது ஜெர்மன் குடியுரிமை பெற்ற ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று இஸ்லாத்தின் போதனைகளின் அடிப்படையில் நான் விளக்கியிருந்தேன். ஜெர்மனி குடியுரிமையைப் பெற்று குடியேரியவரின் பிறந்த நாட்டின் மீது ஜெர்மனி போர் தொடுத்தால், இஸ்லாமிய போதனைப்படி என்ன நேரிடும்? ஜெர்மனியில் குடியேரிய அந்தக் குடிமகன் தனது பிறந்த நாட்டின் மீது அனுதாபப்பட்டால், ஜெர்மனிக்கு தீங்கு விளைவிக்க நேரிடும் என எண்ணினால் குடியேறிய அவர் உடனே தனது குடியுரிமையை அல்லது குடியேற்ற உரிமையை துறந்து தனது பிறந்த நாட்டிற்குச் சென்று விட வேண்டும். எப்படி இருப்பினும், அவர் குடியேறிய நாட்டில் இருக்க விரும்பினால் குடியேறிய நாட்டிற்கு எந்தவிதமான தேச துரோகத்தையும் செய்ய இஸ்லாம் அனுமதிக்கவில்லை. இது முற்றிலும் முழுமையான சந்தேகத்திற்கிடமில்லாத போதனையாக உள்ளது. ஒரு குடிமகன் தன் நாட்டுக்கெதிராக திட்டம் தீட்டுவதையும், எந்த வகையிலான கலகம் செய்வதையும், கேடு விளைவித்தலையும் இஸ்லாம் அனுமதிக்கவில்லை - அது அவர் குடியேறிய நாடாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரியே. ஒருவர் தாம் குடிபெயர்ந்த நாட்டுக்கு எதிராக செயல்பட்டாலும், கேடு விளைவித்தாலும் அவர் துரோகியாகக் கருதப்பட வேண்டும்; அவருக்கு அந்த நாட்டின் சட்டத்தின்படி தண்டனை கொடுக்கப்பட வேண்டும். குடிபெயர்ந்து

வந்த ஒரு முஸ்லிமின் நிலையை இது தெளிவாக்குகிறது. இனி ஜெர்மன் நாட்டையோ அல்லது வேறொரு நாட்டையோ சார்ந்த ஒருவர் இஸ்லாத்தைத் தழுவினால் அவருக்கு தமது சொந்த நாட்டிற்கு முழுமையான பற்றை வெளிப்படுத்துவதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை.

சில நேரங்களில் கேட்கப்படுகின்ற மற்றொரு கேள்வி, ஒரு மேற்கத்திய நாடு ஒரு முஸ்லிம் நாட்டுடன் போர் தொடுத்தால் மேற்கத்திய நாட்டில் வாழும் முஸ்லிம்கள் மேற்கொள்ள வேண்டிய நிலை என்ன என்பதாகும். இந்தக் கேள்விக்கு விடையாக முதலில் எங்கள் ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியதை நான் கூறியாக வேண்டும். அவர்கள் கூறுகிறார்கள்: 'நாம் இருக்கக்கூடிய இந்த காலகட்டத்தில் மார்க்கப் போர்கள் அனைத்தும் முடிவுக்கு வந்து விட்டன.' வரலாற்றில் முஸ்லிம்களுக்கும் மற்ற மதத்தைச் சார்ந்த மக்களுக்கும் பல போர்கள் நடைபெற்ற காலங்களும் இருந்தன. அப்படிப்பட்ட போர்களில் முஸ்லிம் அல்லாதாரின் நோக்கம் முஸ்லிம்களைக் கொன்று இஸ்லாத்தை அழித்து விடுவதாகவே இருந்தது.

ஆரம்ப கால போர்களில் முஸ்லிம்கள் பெரும்பாலும் முஸ்லிம் அல்லாதவர்கள் வரம்புமீறி செயல்பட்டதன் விளைவாக முஸ்லிம்கள் தங்களையும் தங்கள் மார்க்கத்தையும் கட்டிக் காத்துக் கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லாமல் போனது. அப்படிப்பட்ட சூழ்நிலை தற்போது இல்லை என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். ஏனெனில் இஸ்லாத்தை அழிப்பதற்காக சூளுரைக்கவோ, போர் தொடுக்கவோ முனையும் எந்த அரசாங்கமும் தற்போது இல்லை. இதற்கு மாற்றமாக இன்று மேலை நாடுகளிலும் முஸ்லிம் அல்லாத நாடுகளிலும் மார்க்க சுதந்திரங்கள் அதிகமாகப் பேணப்படுகின்றன. அவை அஹ்மதி முஸ்லிம்களை முஸ்லிம் அல்லாத நாடுகளில் இஸ்லாத்தின் போதனைகளைப் பரப்ப அனுமதி அளிக்கின்றன. இவ்வாறு மார்க்க சுதந்திரம் பேணப்படுவதற்கு எங்கள் ஜமாஅத் பெரும் நன்றி பாராட்டுகிறது. இதன் காரணமாக சமாதானத்தையும் ஒற்றுமையையும் நிலைநாட்டும் இஸ்லாத்தின் உண்மையான அழகிய போதனைகளை மேற்கத்திய உலகத்திற்கு அறிமுகப்படுத்த முடிகிறது. உண்மையில் இந்த மார்க்க

சுதந்திரம், சகிப்புத்தன்மை ஆகியவற்றின் காரணமாகவே இன்று உங்கள் முன்பாக நின்று இஸ்லாத்தின் தூதுச் செய்தியை என்னால் எடுத்து வைக்க முடிகிறது. எனவே இன்றைய நாட்களில் மார்க்கப் போர் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது தெளிவாகிறது.

மற்றொரு நிலை உருவாகக் காரணம், முஸ்லிம்களை அதிகமாகக் கொண்ட நாடோ, கிறித்தவர்களை அதிகமாகக் கொண்ட நாடோ அல்லது வேறொரு நாடோ மார்க்க சம்பந்தமற்ற போரில் ஈடுபடுவதே ஆகும். இவ்வாறு கிறித்தவ நாடுகளில் அல்லது மாற்று மார்க்கத்தவர்களின் நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் அப்படிப்பட்ட தருணங்களில் எவ்வாறு நடந்து கொள்வது? இதற்கு பதில் கூறுமுகமாக இஸ்லாம் ஒரு மகத்தாக போதனையைத் தருகிறது. அதாவது ஒருவர் எந்தவிதமான வரம்பு மீறலுக்கும், கொடுஞ்செயலுக்கும் துணை போகக் கூடாது. எனவே கொடுமையும் அடக்குமுறையும் ஒரு முஸ்லிம் நாட்டால் இழைக்கப்படுகிறதென்றால் அது நிறுத்தப்பட வேண்டும். அக்கொடுமைக்குக் காரணம் கிறித்தவ நாடாக இருந்தாலும் அதுவும் தடுக்கப்பட வேண்டும்.

ஒரு தனி நபர் எவ்வாறு அவரது நாட்டிலுள்ள கொடுஞ்செயலை, அநீதியை தடுத்து நிறுத்த முடியும்? என்ற ஒரு கேள்வி எழுகிறது. இதற்கான விடை மிகவும் எளிதாகும். இன்றைய நாட்களில் மேற்கத்திய உலகம் முழுவதிலும் மக்களாட்சி பரவியுள்ளது. ஒரு நியாய உணர்வு கொண்ட குடிமகன் அவரது அரசு, அடக்குமுறையான வழியில் செயல்படக் கண்டால் அப்போது அவர் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி அவரது நாட்டை சரியான பாதையில் செல்ல வழிகாட்ட வேண்டும். மக்கள் கூட்டமாக சேர்ந்தும் இதை வெளிப்படுத்தலாம். ஒரு குடிமகன் அவரது நாடு மற்றொரு நாட்டின் ஆளுகையின் வரம்பை மீறுவதைக் கண்டால் அவர் தனது கருத்தைக் கூறி அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும். அமைதியான முறையில் எழுந்து நின்று உங்களது செயல்பாட்டை எடுத்துக் கூறுவது என்பது கலகம் செய்வதோ, போராட்ட வழிமுறையோ அல்ல. உண்மையில் இது உங்கள் நாட்டின் மீது கொண்ட பற்றின் வெளிப்பாடே ஆகும். ஒரு நேர்மையான குடிமகனால் அவரது நாட்டின் புகழுக்கு களங்கம் ஏற்படுவதை – உலக சமுதாயங்களுக்கு மத்தியில் இழிவுக்குள்ளாவதை பொறுத்துக் கொள்ள முடியாது. தனது நாட்டை இதன் பக்கம் கவனமூட்டுவதன் மூலம் அவர்

தனது நாட்டின் மீது கொண்ட நேசத்தையும் பற்றையுமே வெளிப்படுத்துகின்றார்.

உலகளாவிய சமுதாயங்கள் மற்றும் அதன் அமைப்புகளைப் பொருத்தவரை இஸ்லாத்தின் போதனை என்னவென்றால், எங்கு ஒரு நாடு நேர்மையற்ற முறையில் தாக்கப்படுகிறதோ அப்போது ஏனைய நாடுகள் ஒன்றிணைந்து வரம்பு மீறும் (போர் செய்யும்) நாட்டைத் தடுக்க முயற்சி செய்ய வேண்டும். அந்த வரம்பு மீறும் நாடு தன் நிலையை உணர்ந்து பின் வாங்கி விட்டால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பழிவாங்குதல் என்ற பெயரில் கடுந்தண்டனைகளைக் கொடுப்பது, நியாயமற்ற தீர்மானங்களை அந்த நாட்டுக்கு எதிராக திணிப்பது கூடாது. எனவே இஸ்லாம் சாத்தியமான எல்லா சூழ்நிலைகளுக்கும் பொருத்தமான தீர்வை, வழிமுறைகளை வழங்குகிறது. இஸ்லாமிய போதனைகளின் சாராம்சம் நீங்கள் அமைதியைப் பரவச் செய்ய வேண்டும். எந்த அளவுக்கென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: ‘எவரது கை மற்றும் நாவின் தீங்கிலிருந்து, அமைதி காக்கும் எல்லா மக்களும் பாதுகாப்பாக இருப்பாரோ அவரே முஸ்லிம் ஆவார்.’

நான் முன்பே கூறியது போன்று இஸ்லாம் கூறுவது என்னவெனில், நீங்கள் கொடுஞ்செயலுக்கும் அடக்குமுறைக்கும் ஒருபோதும் துணை நிற்கக் கூடாது. இது எப்படிப்பட்ட அழகிய அறிவார்ந்த போதனை என்றால், அது ஓர் உண்மையான முஸ்லிமுக்கு அவர் எந்த நாட்டில் வாழ்ந்து வருகிறாரோ அவருக்கு கண்ணியத்தையும் மதிப்பையும் பெற்றுத் தருகிறது. நம்பிக்கைக்குப் பாத்திரமான, கண்ணியத்திற்குரிய மக்கள் அனைவரும் இப்படிப்பட்ட அமைதியான, பிறரது உணர்வுகளை மதிக்கின்ற மக்கள் தங்களது சமூகத்தில் இருப்பதையே விரும்புவார்கள் என்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை.

முஸ்லிம்கள் எவ்வாறு வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்னோர் அழகிய போதனையை வழங்கியுள்ளார்கள். ஓர் உண்மையான நம்பிக்கையாளர் எப்போதும் நல்லவற்றை, தூய்மையானவற்றையே தேட வேண்டும். எங்கெல்லாம் ஒரு முஸ்லிம் ஞானம் மிக்க ஒருசொல்லை, உயர்தரமான ஒன்றை அறிய

நேரிடுகிறதோ அப்போது அவர் அதை தம்முடையதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். ஒரு நபர் தமக்குரிய மரபுரிமையைப் பெறுவதற்குக் காட்டும் அதே உறுதியோடு அறிவுப்பூர்வமான நல்ல ஆலோசனைகளை அது எங்கு காணப்பட்டாலும் அதனைப் பெறுவதற்கும் அதிலிருந்து பயனடைவதற்கும் முயல வேண்டும் என்று முஸ்லிம்கள் போதிக்கப்பட்டிருக்கிறார்கள். குடிபெயர்ந்தவர்களை இணைத்துக் கொள்ளும் நேரத்தில் ஏற்படும் பலவிதமான பிரச்சனைகளுக்கு இது எப்படிப்பட்ட ஓர் அழகிய, உன்னத வழிகாட்டுதலாக இருக்கிறது!

உள்ளூர் மக்களுடன் ஒன்றி விடுவதற்காக ஒருவருக்கொருவர் கண்ணியத்தை வளர்த்துக் கொள்ள எல்லாவிதமான நல்ல அம்சங்களையும் ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் ஒவ்வொரு நாட்டிலிருந்தும், நகரத்திலிருந்தும் தேடி கற்றுக் கொள்ள வேண்டும் என்று முஸ்லிம்கள் போதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வாழ்க்கை நெறிகளை முஸ்லிம்கள் கற்றுக் கொண்டால் மட்டும் போதாது. அவர்கள் அவற்றை தமது வாழ்வில் கடைபிடிக்க முயற்சி செய்யவும் வேண்டும். இந்த வழிகாட்டல் ஒற்றுமையையும் ஒருவருக்கொருவர் நம்பிக்கை மற்றும் நேசம் பாராட்டுதலையும் மனதில் பதியச் செய்கின்றன. உண்மையான ஒரு நம்பிக்கையாளர் மார்க்கத்தில் உள்ள கடமைகளை செய்வதுடன் தமது சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய நல்ல அம்சங்களையும் செய்ய முற்படுவார் என்றால் அவரை விட சமாதானத்தை விரும்புபவர் வேறு யாராக இருக்க முடியும்? அவரை விட அமைதியை விரும்புபவர், பாதுகாப்பை உறுதி செய்பவர் வேறு எவராக இருக்க முடியும்?

தகவல் தொடர்பு வசதிகளின் காரணமாக, இன்றைய உலகம் ஒரு சர்வதேச கிராமமாகவே (Global Village) அறியப்படுகிறது. இது குறித்து சில முன்னறிவிப்புகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 1400 ஆண்டுகளுக்கு முன்பே ‘ஒரு காலம் வரும். அப்போது உலகம் ஒன்றாகி விடும். நெடுந்தொலைவு என்பதெல்லாம் குறைவாகத் தோன்றும்’ என்று கூறியுள்ளார்கள். மேலும் அவர்கள், விரைவான நவீன தகவல் பறிமாற்றத்தின் காரணமாக முழு உலகையும் மக்களால் காண முடியும் எனக் கூறியுள்ளார்கள். உண்மையில் இது திருக்குர்ஆனின் முன்னறிவிப்பாகும். அதனைப் பற்றி அவர்கள் விளக்கமாகக் கூறியுள்ளார்கள். தூய நபி (ஸல்) அவர்கள் அந்த நேரம் வரும்போது

மக்கள் தங்களது இழந்து போன சொத்தைக் தேடிக் கண்டு பிடிப்பது போன்று ஒருவர் மற்றவரது நல்ல இயல்புகளைக் கற்று தம்முடன் ஒன்றிணைத்துக் கொள்ள பாடுபட வேண்டும் என போதித்துள்ளார்கள். வேறுவிதமாகக் கூறுவதாக இருந்தால், எல்லாவிதமான நல்ல விஷயங்களையும் கைக்கொள்ள வேண்டும். எல்லா தீமைகளையும் விட்டு விட வேண்டும். திருக்குர்ஆன் இக்கட்டளையை இவ்வாறு விவரிக்கின்றது: ஓர் உண்மையான முஸ்லிம் என்பவர் நல்லவற்றை கடைபிடித்து தீயவற்றைத் தடுக்கக் கூடியவராக இருக்கின்றார். இவற்றையெல்லாம் மனதில் இருத்திக் கொண்ட பின் எந்த நாடு அல்லது சமூகம் சமாதானத்தை விரும்பக் கூடிய முஸ்லிம்களை, இஸ்லாம் மார்க்கத்தை நாங்கள் பொறுத்துக் கொள்ள மாட்டோம்; எங்களோடு அதை ஒருபோதும் இணைத்துக் கொள்ள மாட்டோம் என்று கூற முடியும்?

சென்ற ஆண்டு பெர்லின் மேயரை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவரிடம் நான் விளக்கினேன். இஸ்லாத்தின் போதனை என்னவென்றால், ஒவ்வொரு நல்ல விஷயமும் – அது எந்த நாட்டை சார்ந்ததாக இருந்தாலும் அதனை உங்களின் சொந்த சொத்தாகப் பேண வேண்டும். அதற்கு அவர் இவ்வாறு பதில் கூறினார்: நீங்கள் இந்த போதனையின்படி நடந்தால் முழு உலகமும் உங்களுக்குக் கைகோர்த்து ஆதரவு நல்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஜெர்மனியின் சில பகுதியிலுள்ள மக்கள், முஸ்லிம்களுக்கும் இஸ்லாம் மார்க்கத்திற்கும் சமூகத்துடன் ஒன்றிணைகின்ற தகுதி இல்லை எனக் கூறி வருவதைக் கேட்டு நான் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். நிச்சயமாக பயங்கரவாதிகள் அல்லது தீவிரவாதிகள் எடுத்து வைக்கும் இஸ்லாம் ஜெர்மனியில் மட்டும் அல்ல; எந்த நாட்டுடனும் இணைவதற்கான ஆற்றல் கொண்டதாக இல்லை. உண்மையில் ஒரு காலம் வரும்; அப்போது இப்படிப்பட்ட தீவிரவாத சிந்தனைகளுக்கு எதிராக முஸ்லிம் நாடுகளிலிருந்து கூட பலமான குரல் எழுப்பப்படும். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த உண்மை இஸ்லாம் நிச்சயமாக நேர்மையும் நற்பண்பும் கொண்டவர்களை தன் பக்கம் ஈர்க்கக் கூடியதாக இருக்கிறது. இக்காலகட்டத்தில் இஸ்லாத்தின் அடிப்படை போதனைகளுக்கு உயிரூட்டுவதற்காக அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட

மஸீஹ் (அலை) அவர்களை தூய நபி (ஸல்) அவர்களுக்கு முற்றிலும் கட்டுப்பட்டவராக அனுப்பினான். எனவே அவர்களது ஜமாஅத் உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை கடைபிடித்து அதனை போதனை செய்து வருகிறது.

உண்மையான இஸ்லாம் எந்த சமூகத்துடனும் ஒன்றுபட முடியாது என்று நியாய உணர்வுள்ள ஒருவர் வாதிக்க முடியாது என்பது தெளிவாகும். உண்மை இஸ்லாம் நேர்மையையும் நன்மையையும் பரப்புவதுடன் எல்லா வகையான தீய, தவறான செயல்களையும் தடுக்கின்றது. மேலும் உண்மை இஸ்லாம் முஸ்லிம்களிடம் தீமையும், கொடுஞ் செயலும் எங்கிருந்தாலும் அவற்றை தடுக்கும்படி போதிக்கின்றது. அவ்வாறிருக்கும்போது அது ஒன்றிணைவதில் தவறி விடும் என்ற கேள்விக்கே இடமில்லை. மாறாக, உண்மை இஸ்லாம் ஒரு காந்தம் போன்று சமூகங்களை தன் பக்கம் கவர்ந்து கொள்ளும் என்பதே சரியானதாகும். இஸ்லாம் போதிப்பது என்னவென்றால், ஒருவர் தனக்காக மட்டும் சமாதானத்தைப் பெற நாட்டம் கொண்டவராக இருப்பது கூடாது. அவர் தனக்காக எந்த அளவு முழுமையாக பாடுபட்டு முயற்சி செய்வாரோ, அந்த அளவு மற்ற மக்களுடனும் சமாதானத்தை, ஒற்றுமையை நிலைநாட்ட கடுமையாக பாடுபட வேண்டும். இந்த தன்னலமற்ற மனப்பான்மை மூலமாகத்தான் உலகில் சமாதானத்தை நிலைநாட்ட முடியும். ஏதாவது ஒரு சமூகம் இந்த போதனைகளை பாராட்டாமல், இத்தகைய அணுகுமுறையை ஏற்காமல் இருக்கிறதா? நிச்சயமாக ஒரு நல்ல சமூகம் ஒருபோதும் ஒழுக்கக்கேட்டை விரும்பாது; அதனுள் தீமை பரவுவதை பொறுத்துக் கொள்ளாது. மேலும் நன்மையும் அமைதியும் பரவுவதை ஒருபோதும் எதிர்க்காது.

நன்மை எது என்பதை விளக்குகின்றபோது மதத்தை சார்ந்திருப்பவர்களுக்கும், மதத்தைச் சாராதவர்களுக்குமிடையே அதில், கருத்து வேற்றுமை ஏற்படலாம். இஸ்லாம் கூறும் நன்மை மற்றும் நல்லொழுக்க அம்சங்களில் இரண்டு நல்லொழுக்க அம்சங்கள் முத்தாய்ப்பாய் உள்ளன. ஒன்று, வல்லமைமிக்க இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள். இரண்டாவது, மனித இனத்திற்கு செலுத்த வேண்டிய உரிமைகள். இதனைப் பற்றி விளக்குகின்றபோது முதல் விஷயம் குறித்து மதவாதிகளுக்கும் மதத்தைச் சாராதவர்களுக்கும் இடையே வேற்றுமை உள்ளது. அடுத்த அம்சமான

மனிதனுக்கு ஆற்ற வேண்டிய உரிமையில் எந்தக் கருத்து வேற்றுமையும் இல்லை.

அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய கடமைகள் - அவை வணக்க வழிபாடுகளுடன் தொடர்புடையவையாகும். எல்லா மதங்களும் அதனைச் சார்ந்தவர்களை இவற்றில் வழிநடத்துகின்றன. மனிதனுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைப் பொருத்தமட்டில், மதங்களும் சமுதாயங்களும் சிலவற்றை மனித குலத்திற்கு கற்றுத் தருகின்றன. இஸ்லாம் மனித குலத்திற்கு செய்ய வேண்டிய தொண்டு பற்றிய ஆழிய கருத்துக்க்ளை விளக்கமாக எடுத்துரைக்கின்றது. அந்த அனைத்து போதனைகளையும் இங்கு எடுத்துக் கூறுவது இயலாத ஒன்றாகும். எனினும் சமூகத்தில் அமைதி தவழ்வதுக்கு ஏதுவாக இஸ்லாம் நிலைநாட்டியுள்ள சில முக்கியமான உரிமைகளை குறித்து நான் கூறுகிறேன்.

நீங்கள் மற்றவர்களின் உணர்வுகளுக்கு கண்ணியமளிக்க வேண்டும்; அவற்றைக் கருத்திக் கொள்ள வேண்டும் என்று இஸ்லாம் போதிக்கின்றது. இதில் மத உணர்வுகளும், சமூகம் சம்பந்தப்பட்ட மற்ற பொதுவான விஷயங்களும் அடங்கி விடும். ஒருமுறை ஒரு யூதருக்கும் ஒரு முஸ்லிமுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் யூதருடைய மத உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் அந்த யூதர் சார்பாக நடந்து கொண்டார்கள். அந்த யூதருடைய எண்ணங்களுக்கு மதிப்பளித்து ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள், தாமே இறுதி வேத நூலைக் கொண்டு வந்திருப்பதை அறிந்திருந்தும் அந்த முஸ்லிமை அழைத்து, மோசே தீர்க்கதரியை விட தன்னை உயர்ந்தவர் என்று கூற வேண்டாம் எனக் கடிந்துரைத்தார்கள். இப்படிப்பட்ட வழிமுறைகளில் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் மற்றவர்களின் மத உணர்வுகளை கருத்தில் கொண்டார்கள். சமூகத்தில் அமைதியை நிலைபெறச் செய்தார்கள்.

இஸ்லாத்தின் மற்றொரு மகத்தான போதனை ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை அது வலியுறுத்துவதாகும். இதனை செயல்படுத்துவதற்கான அதன் போதனை என்னவென்றால், சமூகத்தில் ஒடுக்கப்பட்டவர்களின் நிலைமை மேன்மை அடைவதற்கான வழிவகைகளைத் தேட வேண்டும். அந்த நலிவடைந்த மக்களை கண்டறிந்து தன்னலம்

கருதாமல் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்களை எவ்வகையிலும் சுரண்டக் கூடாது. துரதிஷ்டவசமாக இன்றைய சமூகத்தில் நலிவடைந்தவர்களுக்கு உதவி செய்வதற்கான திட்டங்களும் வேலை வாய்ப்புகளும் கடன் வழங்குவதை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அக்கடனை திருப்பிச் செலுத்தும்போது வட்டி நிர்ணயிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கல்வியை முழுமை செய்வதற்காக மாணவர்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது. மக்கள் தொழில் தொடங்க கடன் வாங்குகிறார்கள். எனினும் அக்கடனை திருப்பிச் செலுத்த பல வருடங்களாகின்றன. பல வருட கஷ்டத்திற்குப் பின் அல்லது பொருளாதார நெருக்கடிக்குப் பின் கடைசியில் அவர்கள் முந்தைய அதே கடன் சுமையில் அல்லது அதை விட மோசமான பொருளாத நிலையிலேயே இருக்கிறார்கள். உலகின் பல பாகங்களும் பொருளாதார நெருக்கடியால் பீடிக்கப்பட்டபோது இப்படிப்பட்ட எண்ணற்ற உதாரணங்களை நாம் கண்டிருக்கிறோம்; கேட்டும் இருக்கிறோம்.

பொதுவாக இஸ்லாத்துக்கு எதிராக - அது பெண்களை நல்ல முறையில் சரிசமமாக நடத்துவதில்லை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டில் எந்த விதமான அடிப்படையும் இல்லை. இஸ்லாம் பெண்களுக்கு கண்ணியத்தையும், மதிப்பையும் வழங்குகிறது. நான் ஒன்றிரண்டு உதாரணங்களைத் தருகிறேன். பெண்கள் ஒரு சொத்தாகவும், தனியார் உரிமையாகவும் கருதப்பட்ட அந்த காலகட்டத்திலேயே இஸ்லாம் பெண்களுக்கு தனது கணவனின் தவறான நடத்தையின் காரணமாக, விவாக ரத்து செய்யும் உரிமையை வழங்கியுள்ளது. வளர்ந்த நாடுகளில் கூட சென்ற நூற்றாண்டில்தான் இந்த உரிமை பெண்களுக்கு வழங்கப்பட்டது. இன்னும் கூறுவதென்றால், பெண்களுக்கு எந்தவிதமான தகுதியும், மதிப்பும் இல்லாத அக்காலத்தில் இஸ்லாம் பெண்களும் பரம்பரைச் சொத்துக்கு உரிமை உள்ளவர்கள் எனக் கூறியது. இப்படிப்பட்ட உரிமையை ஐரோப்பிய பெண்கள் சமீக காலத்தில்தான் பெற்றனர்.

அண்டை வீட்டாருக்கும் அவர்களது உரிமைகளை வழங்கும்படி இஸ்லாம் வலியுறுத்துகிறது. உங்கள் அண்டை வீட்டார் யார்? அவர்களின் உரிமைகள் என்ன? என்பது பற்றி விளக்கமான வழிகாட்டுதலை திருக்குர்ஆன் வழங்குகிறது. அண்டை வீட்டார்

என்பது உங்களுக்கு அருகில் இருப்பவர்கள்; அருகிலுள்ள வீடுகள். இதில் உங்களுக்கு தெரிந்தவர்களும், தெரியாதவர்களும் அடங்கி விடுவர். உண்மையில் இது உங்களைச் சுற்றியுள்ள 40 வீடுகளை உள்ளடக்கியதாக இருக்கும். மேலும் நீங்கள் யாரோடு பயணம் மேற்கொள்வீர்களோ அவர்களும் அண்டை வீட்டாரே ஆவார். அவர்களையும் கருத்தில் கொள்ளும்படி கட்டளை உள்ளது. 'அண்டை வீட்டாரின் உரிமை பற்றி எந்த அளவுக்கு வலியுறுத்திக் கூறப்பட்டதென்றால், அவர்களும் சொத்தில் வாரிசுதாரர்களாக ஆக்கப்படுவார்களோ என நான் நினைத்தேன்' என்று ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். மேலும் 'ஒருவர் மூலமாக அண்டை வீட்டார் பாதுகாப்பாக இல்லை என்றால் அவர் நம்பிக்கை கொண்டவராக - முஸ்லிமாக இருக்க முடியாது' என தூய நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இஸ்லாத்தின் மற்றொரு கட்டளை, பிறர் நலனுக்காக நாம் செய்ய வேண்டிய கடமையை நிறைவேற்ற எல்லா பிரிவினரும் ஒருவருக்கொருவர் உதவி, ஒத்தாசை புரிந்து நலிந்தோரின், பாதிப்புக்குள்ளானோரின் நிலையை மேம்படுத்த உதவ வேண்டும் என்பதாகும். எனவே இக்கட்டளையை செயல்படுத்தி, நிறைவேற்ற உலகின் ஏழ்மையான, ஒதுக்கப்பட்ட பகுதிகளில் தொடக்கக் கல்வியையும், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் வழங்கி வருகிறது. நாங்கள் பள்ளிக் கூடங்களை நிறுவி அவற்றை நடத்தி வருகின்றோம். நலிந்த மக்கள் உயர் நிலையை அடைந்து தம் சொந்தக்கால்களில் நிற்பதற்காக உயர் கல்விக்கான உதவித் தொகையும், ஊக்கத் தொகையும் வழங்கி வருகிறோம்.

இஸ்லாம் கூறும் மற்றொரு கட்டளை, நீங்கள் உங்கள் வாக்குறுதிகளையும், உடன்படிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்பதாகும். இதில் நீங்கள் ஒருவருக்கொருவர் செய்த எல்லா வாக்குறுதிகளும் அடங்கும். அத்துடன் ஒரு முஸ்லிம் நாட்டின் குடிமகன் என்ற நிலையில் செய்யும் நாட்டுப் பற்றுக்கான வாக்குறுதிகளையும் நிறைவேற்ற வேண்டும். இது பற்றி சில விஷயங்களை நான் முன்பு கூறியுள்ளேன்.

இஸ்லாம் எப்படிப்பட்ட இரக்க சிந்தனை கொண்ட மார்க்கமாக, நேசமிக்க மார்க்கமாக விளங்குகிறது என்று எடுத்துக்காட்டவே இந்த சில

கருத்துக்களை நான் கூறியுள்ளேன். அதிகமாக வருத்தம் தரும் விஷயம் என்னவென்றால், எந்த அளவு இஸ்லாம் தனது போதனையை எடுத்து வைத்து சமாதானத்தை உலகில் நிலைநாட்டப் பாடுபடுகிறதோ அதே வேகத்தில் இஸ்லாத்தின் எதிரிகளும், இஸ்லாத்தை சரியாக அறியாதவர்களும் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகளை அதற்கெதிராக சுமத்துகின்றனர். நான் கூறியது போன்று, இக்காலகட்டத்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உண்மை இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எடுத்துக் கூறி அதனைப் பரவச் செய்து கொண்டிருக்கிறது. இத்தருணத்தில் ஒரு சில முஸ்லிம்களின் செயல்பாடு காரணமாக இஸ்லாத்திற்கு எதிராக குரல் எழுப்புபவர்களுக்கு நான் வேண்டிக் கொள்வது என்னவென்றால், நிச்சயமாக அந்த தனி நபர்கள் கேள்வி கேட்கப்பட்டு அச்செயலுக்கு அவர்களே பொறுப்பாளிகளாக ஆக்கப்பட வேண்டும். ஆனால் அதற்காக (இஸ்லாத்திற்கு எதிராக குரல் எழுப்புபவர்களாகிய) அவர்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் இது போன்ற நேர்மையற்ற உதாரணங்களை உபயோகிக்கக் கூடாது.

இஸ்லாத்தின் போதனைகள் ஜெர்மனிக்கோ அல்லது வேறு எந்த நாட்டிற்கோ ஆபத்தை விளைவுக்கும், அச்சுறுத்தலாக இருக்கும் என்று கருதக் கூடாது. ஜெர்மன் சமூகத்துடன் ஒரு முஸ்லிம் ஒன்றிணைய முடியுமா அல்லது முடியாதா என்ற கவலையும் தேவையில்லை. நான் கூறியது போன்று, இஸ்லாத்தின் தனிப்பட்ட சிறப்பு என்னவென்றால், அது முஸ்லிம்களை எல்லா நற்செயல்களையும் தனதாக்கிக் கொள்ளும்படிக் கூறுகிறது. ஆகவே முஸ்லிம்கள் எந்த சமூகத்துடனும் ஒன்றிணைந்து வாழ முடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. யாராவது இதற்கு மாற்றமாக செயல்பட்டால் அவர் பெயரளவில் முஸ்லிமாக இருப்பாரேயொழிய உண்மையான இஸ்லாத்தின் போதனைகளை பின்பற்றி நடப்பவராக இருக்க மாட்டார். முஸ்லிம்களிடம் தவறானதை செய்யும்படிக் கூறினால், அல்லது திருக்குர்ஆன் கூறும் கட்டளைகளான தன்னடக்கம், மார்க்கத்தில் தூய்மை, நேர்மை ஆகியவற்றிற்கு மாறாக நடக்கும்படிக் கூறினால், அவர்கள் நிச்சயமாக அதனை செய்ய மாட்டார்கள். எப்படி இருப்பினும் இவ்விஷயங்கள் அனைத்தும் ஒன்றுபடுதல் என்பதுடன் தொடர்புடைய தொடர்புடையவை அல்ல; மாறாக, தனி மனிதனின் மார்க்க சுதந்திரம் பற்றியவையாகும்.

மார்க்க சுதந்திரத்தில் தலையீடு என்பது முஸ்லிம்கள் மட்டும் எதிர்த்து நிற்க வேண்டிய விஷயமல்ல. உண்மையில் எல்லா நேர்மையாளர்களும், பண்பாளர்களும் தனி நபரின் மார்க்க உரிமைகளில் எந்த அரசாங்கமும், சமூகமும் குறுக்கிடக் கூடாது என்றே வெளிப்படையாகக் கூறுகின்றனர். ஜெர்மனி உட்பட பல்வேறு கலாச்சாரங்களை உடைய மக்களைக் கொண்ட ஒவ்வொரு நாடும் சகிப்புத்தன்மையின் முன்மாதிரியின் தரத்தை நிலைநாட்டி ஒருவர் மற்றவரின் உணர்வுகளுக்கு, உரிமைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதே என்னுடைய பிரார்த்தனையாகும். இப்படிப்பட்ட வழிமுறைகளில் அவர்கள் ஒருவருக்கொருவர் அன்பு, பாசம் மற்றும் சமாதானத்தைப் பேணுபவர்களுக்கு முன்மாதிரிகளாகி விட வேண்டும். இத்தகைய நடைமுறைகளே உலகில் நிரந்தர அமைதிக்கு, பாதுகாப்புக்கு உத்தரவாதம் தருபவையாகும். எனவே பரஸ்பரம் சகிப்புத்தன்மையின் காரணமாக உலகம் எந்த அழிவை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறதோ அதிலிருந்து பாதுகாப்பு பெற முடியும்.

ஒருபயங்கரமான அழிவு நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. எனவே அப்படிப்பட்ட பேரழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு தனி மனிதனும் - அவர் மத வாதியாகவோ அல்லது மதவாதி அல்லாதவராகவோ இருந்தாலும் மிகுந்த கவனத்துடன் நடப்பது அவசியமாகும். உலகிலுள்ள ஒவ்வொரு நபரும் இந்த உண்மையை உணர்வார்களாக.

இறுதியாக நேரத்தை ஒதுக்கி இங்கு வந்து எனது உரையை செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் நான் மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் அருள்பாலிப்பானாக.

மிக்க நன்றி.

தமிழாக்கம்:
J.Syed Anwar Ahmad



# இஸ்லாம்
# அமைதியையும் கருணையையும் கொண்ட ஒரு மார்க்கம்

---

## இலண்டன் பாராளுமன்றம், 2013








The Deputy Prime Minister, Rt. Hon. Nick Clegg in discussion with Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba], House of Commons, London, 11th June 2013



The Home Secretary, Rt. Hon. Theresa May MP with Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba]



The Shadow Foreign Minister Rt. Hon. Douglas Alexander with Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba]



Rt. Hon. Ed Davey MP with Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba]



Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] received at the House of Commons by Rt. Hon. Ed Davey MP
London, 11th June 2013



Rt. Hon. Ed Davey MP escorts Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] through Westminster Hall, House of Commons, London, 11th June 2013



Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] delivering his historic speech to Parliamentarians, VIPs and diplomats at the House of Commons, London, 11th June 2013

# முன்னுரை

2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் நாள் அனைத்துலக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவரும் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹுமான ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் பிரிட்டனில் அஹ்மதிய்யா ஜமாஅத் ஏற்படுத்தப்பட்டு நூற்றாண்டு நிறைவு பெற்றதைக் கொண்டும் விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரிட்டன் பாராளுமன்ற அவையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் 68 முக்கிய விருந்தினர்கள் கலந்து கொண்டனர். அவர்களுள் 30 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாவர். 6 கேபினட் அமைச்சர்கள், இரண்டு அமைச்சர்கள் அடங்குவர். BBC, Sky TV, I TV ஆகிய பல்வேறு ஊடக அமைப்புகள் நிகழ்ச்சியை ஒளிப்பதிவு செய்வதற்காக வருகை தந்திருந்தனர். வருகை தந்திருந்தோரில் எரி சக்தி பருவ நிலை மாற்றத்திற்கான அமைச்சகச் செயலர் ரைட் ஹானரபுள் எட் டேவி MP, துணைப் பிரதமர் ரைட் ஹானரபுள் நிக் கிளெக் MP, உள்துறைச் செயலர் ரைட் ஹானரபில் தெரஸா மே MP, வெளிநாடுகள் விவகாரச் செயலாளர் ரைட் ஹானரபுள் டக்லஸ் அலெக்ஸாண்டர் MP, உள்நாட்டு விவகார சிறப்புக் குழுவின் தலைவர் ரைட் ஹானரபுள் கீத் வாஸ், மிச்சாம் மற்றும் மார்டனின் பாராளுமன்ற உறுப்பினர் மெக்டொனா MP ஆகியோர் அடங்குவர்.

# இஸ்லாம்
# அமைதியையும் கருணையையும் கொண்ட ஒரு மார்க்கம்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் திருப் பெயரால்.......

கண்ணியத்திற்குரிய விருந்தினர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ.

உங்கள் அனைவர் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

பிரிட்டனில் எங்களின் ஜமாஅத்தின் நூற்றாண்டு நிறைவையொட்டி எங்களுடன் தங்களுக்குள்ள நட்பையும், உறவையும் வெளிப்படுத்தும் விதமாக அன்போடு இந்த நிகழ்ச்சியை பாராளுமன்ற அவைகளில் ஏற்பாடு செய்த அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நண்பர்களுக்கு நான் முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த நிகழ்ச்சி வெற்றிக்குரியதென்றும், பயனுள்ளதென்றும் நிரூபிக்கும் வகையில் இதில் கலந்து கொண்டிருக்கும் அனைத்து விருந்தினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களில் பெரும்பாலார் பல வேலைகளிலும் கூட்டங்களிலும் ஈடுபடுவதைத் தவிர்த்து இங்கு அமர்ந்திருப்பதை எண்ணி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தப் பெருந்தன்மையான நடத்தைக்கு என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவிப்பதுடன், இந்த அழகிய பிரமாண்டமான கட்டடத்தில் பணிபுரியும் அனைத்து துறைகளும், மக்களும் இந்த நாட்டிற்கும், மக்களுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளையும் நிறைவேற்றுவார்கள் என்பது எனது உளமார்ந்த நம்பிக்கையும் பிரார்த்தனையும் ஆகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பிற நாடுகளோடு நல்லுறவை வளர்ப்பதில் மிகச் சிறந்த முறையில் நடந்து கொள்வதற்கும், நீதியைப் பேணுவதன் மூலம் அனைத்துத்

தரப்பினருக்கும் நன்மை பயக்கும் விதத்திலான முடிவை எடுப்பார்கள் என்றும் நான் நம்புகிறேன். அதற்காகப் பிரார்த்திக்கிறேன். இந்த உணர்வு கடைபிடிக்கப்பட்டால், அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகியவற்றைக் கொண்ட பயன்களை விளைவிக்கும். மேலும் அமைதியும் வளமும் நிறைந்த உண்மையான சுவர்க்கத்தை நோக்கி உலகை இட்டுச் செல்லும்.

என்னுடைய இந்த விருப்பத்திலும், பிரார்த்தனையிலும் அஹ்மதிகள் அனைவரும் பங்கு கொள்கின்றனர். ஏனென்றால் தமது நாட்டின் மீதும், பொதுவாக மனித இனத்தின் மீதும் அன்பு கொள்வதும் அவசியமாகும் என்று நாங்கள் நம்புகிறோம். உண்மையில் நாட்டுப் பற்று என்பது இறைநம்பிக்கையின் ஓர் அவசியமான பங்கு என்று அஹ்மதி முஸ்லிம்கள் நம்புகின்றனர். ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனை வலியுறுத்திக் கூறியதுடன், இதனை கற்றுக் கொடுத்தும் இருக்கிறார்கள். எனவே பிரிட்டிஷ் குடிமகனாக இருக்கும் ஒவ்வோர் அஹ்மதி முஸ்லிமும் - அவர் பிரிட்டனில் பிறந்தவராக இருந்தாலும் அல்லது வெளிநாட்டிலிருந்து குடியேறியவராக இருந்தாலும் - இந்த நாட்டின் மீது பற்று கொண்டவராகவும், அதன் மீது உண்மையான அன்பு கொண்டவராகவும் இருக்கிறார் என்பதை நான் தெளிவுபடுத்திக் கொள்கிறேன். இந்த மாபெரும் நாட்டின் முன்னேற்றத்தையும் வளத்தையுமே அவர்கள் விரும்புகிறார்கள்.

தற்போது பிரிட்டனில் வாழ்கின்ற பிற நாட்டு மக்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு உள்ளது. இந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 14 முதல் 15 விழுக்காடுகள் வரை இருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே குடியேறிய மக்களை இந்த நாட்டின் மக்களாக ஏற்றுக் கொண்டு பிரிட்டிஷ் சமுதாயத்தின் ஒரு பகுதியாக ஆவதற்கு அனுமதித்துள்ள பிரிட்டிஷ் மக்களின் திறந்த மனம், அவர்கள் காட்டிய சகிப்புத் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடாமலும், பாராட்டாமலும் நான் உரையை தொடர முடியாது. இந்த வகையில் இந்த நாட்டில் குடியேறிய மக்கள், நாங்கள் இந்த நாட்டின் நன்றியுணர்வுள்ள குடிமக்களாக வாழ்கிறோம் என்று நிரூபிக்க வேண்டியது அவர்கள் மீது கடமையாகும். எனவே எல்லா வகையான சண்டை சச்சரவுகளையும் குழப்பங்களையும் எதிர்கொள்வதற்கு அரசு

எடுக்கும் முயற்சிகளுக்கு அவர்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பொருத்தவரை, அதன் உறுப்பினர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் இந்தக் கொள்கையையே கடைபிடிக்கின்றனர்.

நாங்கள் தற்போது பிரிட்டனில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்தவர்கள் எப்போதும் தங்கள் நாட்டின் மீது பற்று கொண்டவர்களாக இருந்துள்ளனர் என்பதையும், எல்லா விதமான தீவிரவாதம், கிளர்ச்சி, குழப்பம் ஆகியவற்றிலிருந்து முற்றிலும் விலகி இருந்தனர் என்பதையும் கடந்த நூறு ஆண்டுகள் நிரூபித்ததுடன், அவை இந்த உண்மைக்கு சாட்சியம் பகர்கின்றன. உண்மையில் இந்தப் பற்றும், அன்பும் நிறைந்த அணுகுமுறைக்கு அடிப்படையான காரணம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஓர் உண்மையான இஸ்லாமிய மார்க்க அமைப்பாக இருப்பதுதான். உண்மையானதும் அமைதி நிறைந்ததுமான இஸ்லாமிய போதனைகளை உலகுக்கு எடுத்துக் கூறுவதாலும், அந்த உண்மையான போதனைகளே உண்மையான இஸ்லாம் என்று ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காகத் தொடர்ந்து பாடுபட்டு வருவதாலும் எங்கள் ஜமாஅத் தனித்து விளங்குகின்றது.

இந்த சில அறிமுக வார்த்தைகளுடன் நான் எனது சொற்பொழிவின் முக்கியக் கருத்தின் பக்கம் திரும்ப விரும்புகிறேன். எங்கள் ஜமாஅத் அமைதி, ஒற்றுமை, ஒருமைப்பாடு ஆகியவற்றின் தூதுவராக விளங்குகிறது. எனவேதான் ‘எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு’ என்பது எங்கள் கொள்கை முழக்கமாக உள்ளது. முஸ்லிம் அல்லாத சிலர் எங்களை அறிந்திருந்தபோதிலும், எங்களோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தபோதிலும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தனது அமைதியும், சகோதரத்துவமும் நிறைந்த போதனையை இஸ்லாத்துடன் நேரடியாகத் தொடர்புபடுத்துவதைக் கண்டு மிகவும் வியப்பு அடைகின்றனர். அவர்களுடைய வியப்பிற்கும் அதிர்ச்சிக்கும் காரணம் என்னவென்றால், பல பெயர்தாங்கி இஸ்லாமிய அறிஞர்களும், அமைப்புகளும் இதற்கு முற்றிலும் வேறுபட்ட வழிமுறையில் பேசியும் செயல்பட்டும் வருவதுடன் முற்றிலும் வேறுபட்ட ஒரு தூதுச்

செய்தியை பரப்பவும் செய்வதை அவர்கள் காண்கின்றனர். இந்த வேறுபாட்டை விளக்குவதற்கு நான் பின்வரும் விஷயத்தை விளக்குகிறேன். அதாவது அஹ்மதி முஸ்லிம்களாகி நாங்கள் இந்தக் காலத்தில் வாளால் செய்யப்படும் ஜிஹாது என்னும் வன்முறைக் கொள்கை முற்றிலும் தவறானது என்றும், நிராகரிக்கப்பட வேண்டியது என்றும் நம்புகிறோம். அதே நேரத்தில் முஸ்லிம் அறிஞர்களில் சிலர் அதனை ஆதரிப்பதுடன் நடைமுறைப்படுத்தவும் செய்கின்றனர். உலகில் பல்வேறு பகுதிகளில், பல தீவிரவாத, பயங்கரவாத அமைப்புகள் தோன்றுவதற்கு அவர்களின் நம்பிக்கைகள் காரணமாக அமைந்து விட்டன.

குழுக்கள் தோன்றுவது மட்டுமல்லாமல் சில தனி நபர்களும் இந்த தவறான நம்பிக்கையை பயன்படுத்திக் கொண்டு அவற்றின்படி செயல்படுவதையும் நாம் காண்கிறோம். பிரிட்டனைச் சேர்ந்த ஓர் அப்பாவி இராணுவ வீரர் இலண்டன் நகர வீதிகளில் மிருகத்தனமாகக் கொல்லப்பட்டது இதன் மிகச் சமீபத்திய ஓர் உதாரணமாகும். இந்தத் தாக்குதலுக்கு இஸ்லாமிய போதனைகளுடன் எந்தவிதமான தொடர்புமில்லை. இன்னும் கூறுவதென்றால், இஸ்லாமிய போதனைகள் இது போன்ற செயல்களை வன்மையாகக் கண்டிக்கின்றன. உண்மையான இஸ்லாமிய போதனைகளுக்கும் சில பெயர்தாங்கி முஸ்லிம்கள் தங்களது சுய நல நோக்கங்களுக்காக பின்பற்றி வரும் தவறான போதனைகளுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை இதுபோன்ற தீய சதித்திட்டங்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. சில உள்ளூர் குழுக்களின் எதிர்நடவடிக்கைகளும் சரியானவையல்ல என்றும், சமுதாயத்தின் அமைதியை அவை சீர்குலைக்கக் கூடியவை என்றும் நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இஸ்லாமிய போதனைகளைப் பற்றி நாங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைதான் சரியானது என்ற எங்களுடைய வாதத்தை ஆதரிக்க இருக்கும் சான்றுதான் என்ன? இஸ்லாத்திற்கு எதிராக மார்க்க அளவிலான போர் தொடுக்கப்படும்போது வாளையோ, பலவந்தத்தையோ பயன்படுத்துவதற்கு அனுமதி உள்ளது என்ற அடிப்படையான கருத்து கவனத்தில் கொள்ளத் தக்கதாகும். இன்றைய உலகில் எந்தவொரு நாட்டினரோ, மதத்தைச் சேர்ந்தவரோ மார்க்க அடிப்படையில் இஸ்லாத்தின் மீது போர் தொடுக்கவோ அதன் மீது

தாக்குதல் நடத்தவோ இல்லை. எனவே முஸ்லிம்கள் மற்றவர் மீது மதத்தின் பெயரால் தாக்குதல் நடத்துவது எந்த விதத்திலும் நியாயமாகாது. ஏனென்றால் அவ்வாறு செய்வது திருக்குர்ஆனின் போதனைகளை மீறுவதாகும்.

எவர்கள் போர் தொடுக்கவும், தங்களது வாளை இஸ்லாத்திற்கு எதிராக உயர்த்தவும் செய்கின்றார்களோ அவர்களுக்கு எதிராக மட்டுமே பலத்தை பயன்படுத்த திருக்குர்ஆன் அனுமதி வழங்கியுள்ளது. இன்னொரு முக்கியமான கருத்து என்னவென்றால், தன் நாட்டிற்கோ, தனது சகோதர குடிமகனுக்கோ ஏதேனும் துன்பம் இழைப்பவர் தெளிவாக இஸ்லாத்தின் போதனைகளுக்கு எதிராக நடந்து கொள்கிறார். ஓர் அப்பாவி மனிதனின் இரத்தத்தை சிந்துபவர் முஸ்லிம் அல்லர் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்படிப்பட்ட மக்களை இறைநம்பிகையில் பலவீனர்களாகவும், பாவிகளாகவும் கருதியுள்ளார்கள்.

இப்போது நான் இஸ்லாத்தின் போதனைகள் எவ்வளவு ஒளிமயமானவையாகவும், தூய்மையானவையாகவும் இருக்கின்றன என்பதை நிரூபிக்கக் கூடிய மற்றும் சில அம்சங்களின் பக்கம் திரும்புகிறேன். சில பெயர்தாங்கி முஸ்லிம் குழுக்கள் எடுத்துக் காட்டும் இஸ்லாம், எந்த வடிவத்திலும், உருவத்திலும் இந்த மார்க்கத்தின் உண்மையான போதனைகளை எடுத்துக் கூறுபவை அல்ல என்பதை நான் விளக்குவேன். அவர்களுடைய நடவடிக்கைகள் எல்லாம் வெறுப்பு நிறைந்த தமது செயல்களை நியாயப்படுத்துவதற்காக இஸ்லாத்தின் பெயரை தவறாகப் பயன்படுத்தி தமது சுயநல எண்ணங்களை நிறைவேற்றுவதை ஒரே நோக்கமாகக் கொண்டே அமைந்திருக்கின்றன என்பது தெளிவாகப் புரியும்.

இஸ்லாம் மத சகிப்புத் தன்மைக்கு மிகவும் முக்கியத்துவம் தருகிறது. அத்தகைய உயர்வான தரத்தை வேறெங்கும் காண இயலாது. பிற மதங்களைப் பொய்யானவை என்று நிரூபிக்காதவரை தமது மதத்தின் உண்மைத்தன்மையை நிரூபிக்க முடியாது என பிற மக்கள் கருதுகின்றனர். இஸ்லாத்தின் அணுகுமுறையோ வேறுவிதமாக இருக்கிறது. ஏனென்றால் இஸ்லாம் முழு மனித இனத்திற்கும் அனுப்பப்பட்ட உண்மையான மார்க்கமாக இருக்கும் அதே நேரத்தில்

உலகிலுள்ள எல்லா மக்களுக்கும், எல்லா நாட்டினருக்கும் இறைவனின் தூதர்கள் அனுப்பப்பட்டார்கள் என்றும் போதிக்கின்றது. இது திருக்குர்ஆனில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அல்லாஹ், இறைதூதர்கள் அனைவரும் அன்பு, நேசம் என்னும் போதனைகளுடன் தன்னால் அனுப்பப்பட்டவர்கள் என்றும், எனவே உண்மையான முஸ்லிம்கள் அனைவரும் அவர்களை கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறான். இஸ்லாம் போற்றுகின்ற அளவுக்கு தாமாக முன்வந்தும், வெளிப்படையாகவும் ஒவ்வொரு மதத்தையும் சமுதாயத்தையும் வேறெந்த மதமும் போற்றுவதில்லை. ஏனென்றால் எல்லா மக்களுக்கும், எல்லா சமுதாயத்தினருக்கும் இறைதூதர்கள் அனுப்பப்பட்டுள்ளனர் என்று முஸ்லிம்கள் நம்புவதால் அந்த இறைதூதர்களை பொய்யானவர்கள் என்பதை அவர்களால் எண்ணிப் பார்க்கக் கூட முடியாது. எனவே முஸ்லிம்கள் எந்த இறைதூதரையும் அவமரியாதை செய்யவோ, கேலி செய்யவோ, இழிவுபடுத்தவோ முடியாது. அதே போன்று பிற மதத்தைப் பின்பற்றுபவர்களின் உணர்வுகளை அவர்களால் புண்படுத்தவும் முடியாது.

ஆனால் முஸ்லிம் அல்லாத சிலரின் போக்கு இதற்கு நேர் எதிராக அமைந்துள்ளது. அவர்கள் இஸ்லாத்தின் தூய தோற்றுநர் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களை மிக மோசமாகக் கேலி செய்வதற்கும், அவதூறு கூறுவதற்கும், முஸ்லிம்களின் உணர்வுகளை மிக மோசமாக காயப்படுத்துவதற்கும் கிடைக்கும் எந்த வாய்ப்பையும் விட்டு வைப்பதில்லை. நாங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையின் காரணமாக மத சகிப்புத்தன்மையையும் ஒருவருக்கொருவர் கொள்ளும் புரிந்துணர்வையும் நாங்கள் உளமாற விரும்புகிறோம். இருந்தாலும் சில தீய சக்திகள் முஸ்லிம்களின் உணர்வுகளுடன் விளையாடும்போது அது சில பெயர்தாங்கி முஸ்லிம்கள் முற்றிலும் தவறான முறையிலும், பொறுப்பற்ற விதத்திலும் அந்தத் தூண்டுதலுக்கு எதிர் வினையாற்றுவதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றது. அவர்கள் ஆற்றும் எதிர்வினைகளுக்கு இஸ்லாத்தின் போதனைகளுடன் எந்தத் தொடர்பும் இல்லை. எவ்வளவுதான் தூண்டப்பட்டாலும் எந்தவோர் அஹ்மதி முஸ்லிமும் இது போன்ற எதிர்மறையான பதில் நடவடிக்கையில் ஈடுபடுவதை நீங்கள் காண முடியாது.

இஸ்லாத்தின் தூய தோற்றுநர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீதும், திருக்குர்ஆனின் மீதும் சுமத்தப்படும் மற்றொரு மோசமான குற்றச்சாட்டு என்னவென்றால், அவர்கள் வன்முறையைத் தூண்டும் போதனைகளை வழங்கினார்கள் என்பதும், இஸ்லாத்தின் தூதுச் செய்தியைப் பரப்புவதற்கு பலவந்தத்தை ஊக்குவித்தார்கள் என்பதும் ஆகும். இந்தக் குற்றச்சாட்டை ஆராய்வதற்கும், உண்மை நிலையைக் கண்டறிவதற்கும் நாம் திருக்குர்ஆனையே பார்ப்போம். எல்லாவற்றின் மீதும் ஆற்றல் மிக்க அல்லாஹ் கூறுகிறான்:

''உமது இறைவன் (கட்டாயமாக) விரும்பியிருந்தால் பூமியில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்றாக நம்பிக்கை கொண்டிருப்பர். எனவே மக்கள் நம்பிக்கை கொள்வதற்காக நீர் அவர்களை கட்டாயப்படுத்துவீரா என்ன?'' *(அதிகாரம் 10 வசனம் 100)*

இறைவன் எல்லாவகையான ஆற்றல்களையும் கொண்டவனாக இருப்பதால் எல்லா மக்களையும் ஒரே மார்க்கத்தைப் பின்பற்றுமாறு அவன் கட்டாயப்படுத்தி இருக்க முடியும்; ஆயினும் நம்பிக்கை கொள்வதற்கும், நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதற்கும் இறைவன் உலக மக்களுக்கு சுதந்திரத்தை வழங்கி இருக்கிறான் என்று இந்த வசனம் தெளிவாகக் கூறுகிறது.

இறைவனே மனிதனுக்கு இந்த சுதந்திரத்தை வழங்கி இருக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ அவர்களைப் பின்பற்றுபவர்களோ எவ்வாறு ஒருவரை முஸ்லிமாகும்படி கட்டாயப்படுத்தவோ, பலவந்தம் செய்யவோ முடியும்? எல்லாவற்றின் மீதும் ஆற்றல் கொண்ட அல்லாஹ் திருக்குர்ஆனில் மேலும் கூறுகிறான்:

''நீர் கூறுவீராக. இந்த உண்மை உமது இறைவனிடமிருந்துள்ளதாகும். எனவே எவர் விரும்புகிறாரோ அவர் நம்பட்டும்; எவர் விரும்புகிறாரோ அவர் நிராகரிக்கட்டும்.'' *(18:30)*

இதுதான் இஸ்லாத்தின் உண்மையான தன்மையாகும். இதுதான் அதன் உண்மையான போதனையாகும். ஒருவருடைய உள்ளம் விரும்புகிறதென்றால் அவர் தாராளமாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளலாம்; ஆனால் அவரது உள்ளம் விரும்பவில்லை என்றால் அவர் தாராளமாக நிராகரிக்கலாம். எனவே கட்டாயப்படுத்துதலுக்கும்

தீவிரவாதத்திற்கும் இஸ்லாம் முற்றிலும் எதிராக இருக்கிறது. மாறாக, சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் அமைதியையும் இணக்கத்தையுமே கடைபிடிக்குமாறு அது கூறுகிறது. வன்முறையையும், கட்டாயப்படுத்துதலையும் போதிப்பதென்பது இஸ்லாத்தால் இயலாத ஒன்றாகும். ஏனென்றால், இஸ்லாம் என்பதன் பொருளே அமைதியோடு வாழ்வதும், பிறருக்கு அமைதியை வழங்குவதுமேயாகும். ஆயினும் எங்கள் மத உணர்வுகள் பரிகாசம் செய்யப்படும்போது அது எங்களுக்கு மிகுந்த வேதனையையும், வருத்தத்தையும் தருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அவமானப்படுத்துவது போன்று ஏதேனும் கூறப்பட்டால் அது எங்கள் இதயங்களை துளைத்துக் காயப்படுத்துகிறது.

இஸ்லாத்தின் தூய தோற்றுநர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே எங்கள் உள்ளங்களில் இறைவன் மீது நேசத்தையும், அவனது படைப்பினங்களின் மீது நேசத்தையும் உருவாக்கினார்கள். அவர்களே முழு மனித இனத்தின் மீதும் எல்லா மார்க்கங்களின் மீதும் அன்பையும் மரியாதையையும் எங்களிடம் பதியச் செய்து நிலைபெறச் செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிரச்சாரம் செய்து இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்டவைத்தபோது அன்னாரின் எதிரிகள் வெளிப்படுத்திய மறுமொழியை விடப் பெரிதாக இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகளுக்கு வேறு என்ன சான்று வேண்டும்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தபோது அவர்களை அநியாயம் செய்வதன் பக்கமும், தவறாக நடந்து கொள்வதன் பக்கமும் தம்மை அழைத்ததாக அவர்கள் கூறவில்லை. மாறாக, பெருமானார் (ஸல்) அவர்களின் போதனைகளை ஏற்றுக் கொண்டால் ஈவிரக்கமற்ற மக்களால் தங்களின் செல்வமும், அந்தஸ்தும் ஆபத்துக்குள்ளாக்கப்படும் அல்லது பறிக்கப்படும் என்பதே அவர்களின் பதிலாக இருந்தது. ஏனெனில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமாதானத்தையும், இணக்கமான வாழ்வையுமே வலியுறுத்தினார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டால் சமாதானத்தைக் கடைபிடிப்பதன் காரணமாக சுற்று வட்டாரத்திலுள்ள குழுக்களோ, நாடுகளோ அதனை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தம்மை அழித்து விடுவார்களோ என்ற அச்சத்தையே அவர்கள் வெளிப்படுத்தினார்கள். இஸ்லாம் வன்முறையைத் தூண்டியிருந்தாலோ, வாளெடுத்துப் போர்

செய்யுமாறு கூறியிருந்தாலோ நிராகரிப்பாளர் இந்தப் பதிலுரையைக் கூறி நியாயப்படுத்தி இருக்க மாட்டார்கள். இஸ்லாத்தின் அமைதி நிறைந்த போதனைகள் என்னவென்றால் உலகியல் சார்ந்த மக்களின் கரங்களால் தம்முடைய அழிவுக்கே தம்மை இட்டுச் செல்லும் என்ற அச்சத்தின் காரணமாகவே தாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அவர்கள் கூறியிருக்க மாட்டார்கள்.

எல்லாம் வல்ல இறைவனின் பண்புகளில் ஒன்று, *'ஸலாம்'* என்று திருக்குர்ஆன் கூறுகிறது. அதன் பொருள்,'அவனே சமாதானத்தின் பிறப்பிடம்' என்பதாகும். இறைவன் உண்மையிலேயே சமாதானத்தின் பிறப்பிடமாக இருந்தால் அவனது சமாதானம் அவனது அனைத்து படைப்பினங்களின் மீதும், முழு மனித குலத்தின் மீதும் சூழ்ந்திருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இன மக்களுக்காக மட்டும் இருக்க முடியாது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. இறைவனின் சமாதானம் என்பது குறிப்பிட்ட சிலரை மட்டும் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதென்றால் அவன் முழு மனித இனத்திற்குமான இறைவன் என்று கூற முடியாது. சர்வ வல்லமையுள்ள அல்லாஹ் இதற்கான பதிலை திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்:

''என் இறைவா! இவர்கள் நம்பிக்கை கொள்ளாத சமுதாயத்தினராக இருக்கின்றனர் என்ற இ(ந்த தூது)வரது கூற்றின் மீது ஆணையாக! நீர் அவர்களை மன்னித்து சாந்தி உண்டாவதாக என்று கூறுவீராக. இதனால் அவர்கள் (உண்மையினை) விரைவில் அறிந்து கொள்வர் (என்று நாம் பதிலளித்தோம்).'' *திருக்குர்ஆன் 43:89&90*

அனைத்து மக்களுக்கும் கருணை, இரக்கம் ஆகியவற்றின் பிறப்பிடமாக விளங்கும் ஒரு போதனையையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்தார்கள் என்பதையும் அதன் மூலம் மனித இனம் முழுவதற்கும் சமாதானத்திற்குக் காரணமாக விளங்குகிறார்கள் என்பதையும் இந்த வசனங்கள் விளக்குகின்றன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அமைதியின் தூதுச் செய்திக்குப் பதிலாக அன்னாரது எதிரிகள் அவர்களுடைய போதனைகளை மறுத்தது மட்டுமல்லாமல், அவர்களை கேலி செய்து இழிவுபடுத்தினர் என்பதையும் இந்த வசனங்கள் எடுத்துக் கூறுகின்றன. உண்மையில் அவர்கள் மேலும் ஒரு படி மேலே சென்று பகைமை கொண்டு எதிர்த்ததுடன், குழப்பத்தையும், கலவரத்தையும் உருவாக்கினர். இவை

எல்லாவற்றையும் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனிடம் பின்வருமாறு மன்றாடினார்கள்:

''நான் அவர்களுக்கு சமாதானத்தை வழங்க விரும்புகிறேன்; ஆனால் அவர்கள் எனக்கு சமாதானத்தை வழங்கவில்லை. அது மட்டுமல்லாமல் அவர்கள் எனக்கு கடும் துன்பத்தையும், வேதனையையும் தரும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.'' இதற்கு பதிலுரையாக அல்லாஹ் அவர்களுக்கு பின்வருமாறு ஆறுதல் வழங்கினான்:

'' அவர்கள் செய்வதையெல்லாம் நீர் பொருட்படுத்தாதீர். நீர் அவர்களை விட்டு விலகி விடும். உமது ஒரே பணி உலகில் சமாதானத்தைப் பரப்புவதும், அதனை நிலைபெறச் செய்வதுமேயாகும். அவர்களுடைய வெறுப்புக்கும், வரம்பு மீறுதலுக்கும் பதிலாக உங்களுக்கு சாந்தி உண்டாவதாக என்று கூறுவதேயாகும். நீர் அவர்களுக்கு சமாதானத்தையே கொண்டு வந்திருப்பதாகக் கூறுவீராக.''

இவ்வாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வாழ்நாள் முழுவதையும் உலகில் சமாதானத்தை பரப்புவதிலேயே கழித்தார்கள். அதுவே அவர்களது உன்னதப் பணியாக இருந்தது. நிச்சயமாக ஒரு நாள் வரும். அப்போது தீவிரவாதத்தைத் தாங்கிய எந்தப் போதனையையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வரவில்லை என்பதை உலக மக்கள் உணர்ந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் செய்வார்கள். அன்னார் கொண்டு வந்ததெல்லாம், அமைதி, அன்பு, கருணை ஆகியவற்றைக் கொண்ட போதனையே என்பதை அவர்கள் உணர்வார்கள். மேலும் இந்த உத்தம தூதரைப் பின்பற்றுபவர்களும் கொடுமைகளுக்கும், அநீதிகளுக்கும் அதைப் போன்றே அன்பில் வழியில் பதில் அளித்தார்கள் என்றால், இஸ்லாத்தின் மகத்தான போதனைகளுக்கெதிராக ஆட்சேபனை செய்பவர்களும் ஒரு நாள் அதன் உண்மையையும், அழகையும் கண்டு மன நிறைவு கொள்வர் என்பதில் சந்தேகமில்லை.

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இந்த போதனைகளைப் பின்பற்றியும் அதன்படி வாழ்ந்து காட்டியும் வருகிறது. புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை, கருணை ஆகியவற்றைக் கொண்ட இந்த

போதனைகளே நாங்கள் உலகின் மூலைமுடுக்குகளிலெல்லாம் பரப்புகிறோம்;வளர்க்கிறோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல ஆண்டுகள் மோசமானதும், பயங்கரமானதுமான கொடுமைகளையும், துன்புறுத்தல்களையும் அநுபவித்த பின்னர் மக்கமாநகர வீதிகளில் வெற்றியாளராக திரும்பி வந்தபோது அவர்கள் காட்டிய வரலாற்றுச் சிறப்பு மிக்க, ஈடிணையற்ற கருணையும், கனிவும் நிறைந்த முன்னுதாரணத்தையே நாங்கள் பின்பற்றி வருகிறோம். பல ஆண்டுகளாக மிகவும் அடிப்படைத் தேவைகளான உணவு, தண்ணீர் ஆகியவற்றைப் பெறுவதற்குக் கூட அவர்களுக்கும், அவர்களைப் பின்பற்றுபவர்களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. இதன் காரணமாக அவர்கள் பல நாட்களை பட்டினியாகக் கழித்தார்கள். அன்னாரைப் பின்பற்றியோருள் பலர் தாக்கப்பட்டார்கள். ஒருவரால் கற்பனை கூட செய்ய முடியாத மிகவும் காட்டுமிராண்டித்தனமான, ஈவு இரக்கமற்ற முறையில் சிலர் கொல்லப்பட்டனர். வயது முதிர்ந்த முஸ்லிம்களும், முஸ்லிம் பெண்களும், முஸ்லிம் சிறுவர்களும் விட்டு வைக்கப்படவில்லை. அவர்களும் இரக்கமற்ற முறையிலும், காட்டுமிராண்டித்தனமாகவும் நடத்தப்பட்டனர். இருந்தாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெற்றி பெற்று மக்காவிற்குள் நுழைந்தபோது பழி தீர்த்துக் கொள்ள முயற்சி செய்யவில்லை. மாறாக, அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்தார்கள்:

''உங்கள் மீது எந்த தண்டனையும் விதிக்கப்பட மாட்டாது. ஏனெனில் நான் உங்கள் அனைவரையும் மன்னித்து விட்டேன். நான் அன்பு, சாந்தி ஆகியவற்றின் தூதராக இருக்கின்றேன். அல்லாஹ் சமாதானத்தின் பிறப்பிடமாக இருக்கும் பண்பைப் பற்றி நான் மிகச் சிறந்த அறிவைப் பெற்றிருக்கிறேன். அவன்தான் சமாதானத்தை வழங்குபவனாக இருக்கின்றான். எனவே நீங்கள் கடந்த காலத்தில் செய்த எல்லா வரம்பு மீறுதல்களையும் மன்னித்து விட்டேன். உங்களுக்கு சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றின் உத்தரவாதத்தை வழங்குகிறேன். நீங்கள் தாராளமாக மக்காவில் இருக்கலாம். உங்கள் மார்க்கத்தைப் பின்பற்றலாம். எவரும் எந்தவிதமான கட்டாயத்திற்கோ, பலவந்தத்திற்கோ ஆளாக்கப்பட மாட்டார்கள்.''

இறைமறுப்பாளர்களுள் சில மோசமானவர்கள் தண்டனைக்கு அஞ்சி மக்காவை விட்டு வெளியேறி விட்டனர். ஏனெனில்

முஸ்லிம்களுக்கு எதிரான கொடுமைகளில் தாம் எல்லையைக் கடந்து விட்டோம் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். ஆனால் ஈடு இணையற்ற இந்த கருணையையும், அன்பையும், அமைதி, இணக்கம் ஆகியவற்றின் இந்த வெளிப்பாட்டையும் கண்ட அந்த இறைமறுப்பாளர்களின் உறவினர்கள் திரும்பி வருமாறு அவர்களுக்கு செய்தி அனுப்பினர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமாதானத்தையும் பாதுகாப்பையும் மட்டுமே வெளிப்படுத்துகிறார்கள் என்று அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. எனவே அவர்கள் மக்காவுக்கு திரும்பி வந்தனர். முன்னர் இஸ்லாத்தின் வைராக்கியமான எதிர்களாக இருந்த அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இரக்க குணத்தையும், கருணையையும் கண்டு தாமாகவே முன்வந்து இஸ்லாத்தை ஒப்புக் கொண்டனர்.

நான் இதுவரை கூறியவை பதிவு செய்யப்பட்ட வரலாற்றின் ஒரு பகுதியாகும். பெரும்பான்மையான முஸ்லிம் அல்லாத வரலாற்றாசிரியர்களும், கிழக்கத்திய நாட்டு அறிஞர்களும் இதன் உண்மைத்தன்மைக்கு சான்று பகர்ந்துள்ளனர். இவையே இஸ்லாத்தின் உண்மையான போதனைகளாகும். இதுவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சீரிய நடைமுறையாகும். எனவே இஸ்லாத்தின் மீதும் அதன் தூய தோற்றுநர் (ஸல்) அவர்கள் மீதும் வன்முறையாளர்கள் என்றும் இதுபோன்ற குற்றச்சாட்டுகளை சுமத்துவது மிக மோசமான அநீதியாகும். இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும்போதெல்லாம் நாங்கள் மிகுந்த வேதனைக்கு ஆளாகின்றோம் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.

எங்கள் அமைப்பான அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மட்டும்தான் இன்று உலகில் இஸ்லாத்தின் உண்மையானதும், அமைதி நிறைந்ததுமான போதனைகளை பின்பற்றியும், வழிகாட்டியும் வருகிறது என்று நான் மீண்டும் கூறிக் கொள்கிறேன்.

மேலும் தீவிரவாத அமைப்புகளும், தனி மனிதர்களும் பின்பற்றிவரும் வெறுப்பு நிறைந்த தீய செயல்களுக்கும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்குமிடையில் எந்தத் தொடர்பும் இல்லை என்பதையும் நான் மீண்டும் கூறிக் கொள்கிறேன்.

சுயநல சக்திகளான தனி மனிதர்களோடும், அமைப்புகளோடும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை இணைத்துக் கூறாமல்

இருப்பதே உண்மையான நீதியாகும். எந்தவொரு மதத்தையோ, அதன் நிறுவனரையோ அநியாயமாக குறைகூறுவதற்கு இது போன்ற செயல்களை ஒரு சாக்காக எடுத்துக் கொள்ளக் கூடாது. உலகளாவிய அமைதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துகின்ற முயற்சியில் எல்லா மக்களுக்கிடையிலும், எல்லா மதங்களுக்கிடையிலும் ஒருவருக்கொருவர் மதித்து நடப்பது இன்றைய காலத்தின் அவசர தேவையாக இருக்கிறது. இல்லையென்றால் பயங்கரமான விளைவுகள் ஏற்படும்.

இன்று உலகம் ஒரு சர்வதேச கிராமம் (Global Village) ஆகவே மாறி விட்டது. எனவே ஒருவருக்கொருவர் மரியாதையோடு நடந்து கொள்ளாமல் இருந்தால், அமைதியை நிலைநாட்டுவதற்காக கைகோர்க்காமல் இருந்தால் அது ஊரையோ, நகரத்தையோ, நாட்டையோ மட்டும் பாதிக்காமல் முடிவில் முழு உலகத்தையும் அழிவின் பாதைக்கு அழைத்துச் செல்லும். கடந்த இரண்டு உலகப் போர்கள் ஏற்படுத்திய பயங்கரமான அழிவுகளை நாம் நன்கறிவோம். சில நாடுகளின் செயல்பாடுகளால் இன்னும் ஓர் உலகப் போரின் அறிகுறிகள் அடிவானத்தில் தென்படுகின்றன.

ஓர் உலகப் போர் மூளுமானால் அதன் நீடித்த, ஆபத்தான விளைவுகளால் மேற்கத்திய உலகமும் மிகவும் பாதிக்கப்படும். அப்படிப்பட்ட ஒரு பேரழிவிலிருந்து நாம் நம்மை காப்பாற்றிக் கொள்வோமாக. பரிதாபமானதும், பேரழிவை ஏற்படுத்தக் கூடியதுமான போரின் விளைவுகளிலிருந்து நமது வருங்கால தலைமுறையினரைப் பாதுகாப்போமாக! மிகவும் பயங்கரமான போர் என்பது அணு ஆயுதப் போரே என்பது வெளிப்படையான விஷயமாகும். உலகம் நடந்து கொள்ளும் விதத்தைப் பார்க்கும்போது அணு ஆயுதப் போர் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் நிச்சயமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட பயங்கரமான விளைவைத் தடுப்பதற்கு நாம் நீதி, ஒற்றுமை, நேர்மை ஆகியவற்றைக் கடைபிடிக்க வேண்டும். மேலும் வெறுப்புணர்வைப் பரப்பவும், உலகின் அமைதியை அழிக்கவும் விரும்பும் குழுக்களை அடக்குவதற்கும், தடுப்பதற்கும் நாம் ஒன்றிணைய வேண்டும்.

வல்லரசு நாடுகள் இந்த முயற்சியில் தங்கள் பொறுப்புகளையும், கடமைகளையும் நீதியும் நேர்மையும் நிறைந்த விதத்தில் நிறைவேற்ற

எல்லாம் வல்ல இறைவன் ஆற்றல் வழங்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்; அதற்காகப் பிரார்த்திக்கிறேன். ஆமீன். உரையை நிறைவு செய்யும் முன் இன்று இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக நேரம் ஒதுக்கி முயற்சி எடுத்துக் கொண்டதற்காக உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறிக் கொள்கிறேன். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் அருள்பாலிப்பானாக!

மிக்க நன்றி.

தமிழாக்கம்:
S.S.H. Muhammad Lebbai



# உலக அமைதி
# இக்காலத்தின் முக்கிய தேவையாகும்

---

## நியூஸிலாந்து தேசிய பாராளுமன்றம்
## வெலிங்டன், நியூஸிலாந்து – 2013







Hon. Kanwaljit Singh Bakshi (MP) receiving the HolyQur'an from Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba]



Iranian ambassador Seyed Majid Tafreshi Khameneh meeting Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba]



Det. Rakesh Naidoo meeting Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] in representation of the Commissioner of Police New Zealand



Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] leading silent prayers at the conclusion of the official function in the Grand Hall, New Zealand Parliament



Dr. Cam Calder MP meeting Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba]



Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] delivering the keynote address at the Grand Hall, in the New Zealand Parliament. 4th Nov 2013



Hon. Kanwaljit Singh Bakshi (MP) with Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] and his entourage in front of the New Zealand Parliament

# முன்னுரை

உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைவர் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (எல்லாம் வல்ல அல்லாஹ் அவரது உதவியாளனக இருப்பானாக) அவர்கள் 04.11.2013 அன்று நியூஸிலாந்தின் வெலிங்டனிலுள்ள தேசிய பாராளுமன்றத்தில் வரலாற்று சிறப்பு மிக்க ஓர் உரையாற்றினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கலீஃபாவான அவர்கள், இன்று உலகின் பல பாகங்களில் வளர்ந்து வரும் பதற்றம், மற்றும் மோதல்கள் உள்ள சூழ்நிலையில், உலக அமைதியை வளர்க்கும் விதமாக நீதியின் கட்டாயத் தேவை உள்ளதை, தன் முன் இருந்த பாராளுமன்றத்தினர், வெளிநாட்டு தூதுவர்கள், கல்வியாளர்கள் மற்றும் பலதரப்பட்ட விருந்தினர்களுக்கு வலியுறுத்திக் கூறினார்கள். ஹஸ்ரத் சாஹிபின் முக்கிய உரைக்குப் பின், மற்ற முக்கிய பிரமுகர்களும் உரையாற்றினார்கள். பாராளுமன்ற உறுப்பினரான கன்வல்ஜித் பக்ஷி அவர்கள், 'ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் இந்த நியூஸிலாந்து பாராளுமன்றத்தில் நம்மிடையே வருகை தந்திருப்பதும் அவர்களுடைய அறிவுரைகளையும் எண்ணங்களையும் நாம் கேட்பதும் நாம் பெருமைப்பட வேண்டிய விஷயமாகும் எனக் கூறினார். பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் தமது உரையில், புனித மிகு தலைவருக்கு நியூஸிலாந்து பாராளுமன்றத்தில் வரவேற்பு அளிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். அஹ்மதிகள் எவ்வாறு இந்த நாட்டின் குடிமக்களாக இருக்கிறார்கள் என்பதைக் கண்டும், தங்களின் அமைதி நிறைந்த போதனைகளை கடைபிடித்து நடப்பதைக் கண்டும் நான் மிகவும் கவரப்பட்டிருக்கிறேன் என்று கூறினார்.

நிகழ்ச்சியின் இறுதியில் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் ஈரான், இஸ்ரேல் நாட்டின் தூதுவர்களை உள்ளடக்கிய பல்வேறு முக்கிய பிரமுகர்களை சந்தித்தார்கள். பாராளுமன்ற உறுப்பினர் கன்வல்ஜித் சிங் அவர்கள் அருளுக்குரிய தலைவருக்கு பாராளுமன்றத்தை சுற்றிக் காண்பித்தார்கள்.

# உலக அமைதி இக்காலத்தின் முக்கிய தேவையாகும்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். அளவற்ற அருளாளனும் மேம்மேலும் கருணைகாட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்......

கண்ணியமிக்க அனைத்து விருந்தினர்களுக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ.

அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உங்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை செய்து உங்கள் அனைவர் மத்தியில் உரையாற்றுகின்ற வாய்ப்பை எனக்கு வழங்கிய ஏற்பாட்டாளர்களுக்கும் - குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினராகிய கன்வல்ஜித் சிங் பக்ஷி அவர்களுக்கும் முதற்கண் எனது நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இரண்டாவதாக, இங்கு வந்து எனது உரையை செவியேற்றுக் கொண்டிருக்கும் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பாராளுமன்ற அவையில் அரசியல் வாதிகளும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அடிக்கடி கூடி நாட்டு வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட திட்டங்களையும், சட்டங்களையும் வகுத்து வருகின்றனர். அது அல்லாமல் பல மதசார்பற்ற உலகத் தலைவர்கள் இங்கு வந்து தங்கள் அறிவு, ஆற்றல், அநுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் உங்களிடையே உரையாற்றியிருப்பார்கள். ஆனால் ஒரு மார்க்கத் தலைவர், அதிலும் ஒரு முஸ்லிம் பிரிவின் தலைவர் உங்கள் மத்தியில் உரையாற்றுவது ஓர் அரிதான நிகழ்ச்சியாகும். எனவே முழுக்க, முழுக்க இஸ்லாமிய அமைப்பும் இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை பரவச் செய்வதையே தன் ஒரே நோக்கமாகக் கொண்ட அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவரான எனக்கு உங்கள் மத்தியில் உரையாற்ற வாய்ப்பளித்தது உங்களுடைய திறந்த மனதையும், உங்களது உயர்ந்த

சகிப்புத்தன்மையையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. எனவே இந்த அன்பின் வெளிப்பாட்டிற்காக நான் உங்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நன்றி அறிவிப்பின் வார்த்தைகளுடன் நான் எனது உரையின் முக்கியப் பகுதிக்கு வருகின்றேன். இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பற்றி சில முக்கிய விஷயங்களைக் கூற விரும்புகிறேன். இக்காலத்தில் தேவையான ஒன்று என்று நான் கருதுகின்ற **'உலக அமைதியை நிறுவுதல்'** என்ற விஷயத்தைப் பற்றி இப்போது நான் உரையாற்றுவேன். மத சார்பற்ற பார்வை கொண்ட உங்களில் பலர் அரசியல்வாதிகள் என்ற தனிப்பட்ட நிலையிலும், அரசாங்கம் என்ற நிலையிலும் இணைந்தும் உலக சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் முயற்சிகள் நல்லெண்ணத்தில் அமைந்திருக்கும். அந்த முயற்சிகளில் நீங்கள் சிறிது வெற்றியையும் அனுபவித்திருப்பீர்கள். சமாதானமும் இணக்கமும் கொண்ட ஓர் உலகத்தை உருவாக்குவதற்கான ஆலோசனைகளை கடந்த காலங்களில் உங்கள் அரசங்கம் பிற வல்லரசு நாடுகளுக்கு வழங்கியிருக்கும்.

இன்றைய உலகின் நிலையும், சூழ்நிலைகளும் மிகவும் மோசமானவையாகவும் முழு உலகிற்கும் கவலை அளிக்கக் கூடியவையாகவும் இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. பெரிய அளவிலான சில மோதல்கள் அரபு உலகில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்றாலும் அந்த மோதல்கள் அந்தப் பகுதியோடு நின்று விடும் என்று புத்திக் கூர்மையும் அறிவும் உள்ளவர் எவரும் கருத மாட்டார் என்பது உண்மையாகும். ஒரு நாட்டின் அரசாங்கத்திற்கும் அந்த நாட்டின் மக்களுக்கும் இடையில் மோதல் பெரிதாகி நாடுகளுக்கிடையேயான மோதலாக உருவெடுக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஏற்கனவே வல்லரசுகளுக்கிடையே இரண்டு அணிகள் உருவாகி வருவதை நாம் காண்கிறோம். ஓர் அணி சிரியாவின் அரசாங்கத்தை ஆதரிக்கின்றது. மற்றோர் அணி புரட்சிக் குழுக்களை ஆதரிக்கின்றது. எனவே இது தெளிவாக முஸ்லிம் நாடுகளுக்கு மட்டுமான பயங்கரமான ஓர் அச்சுறுத்தல் இல்லை. எஞ்சியுள்ள உலகிற்கும் மோசமான ஆபத்தை விளைவிக்கக் கூடிய ஒன்றாகும்.

கடந்த நுற்றாண்டுகளில் நடைபெற்ற இரண்டு உலகப்

போர்களின் இதயத்தை உலுக்கும் சம்பவங்களை நாம் மறக்க முடியாது. அதிலும் குறிப்பாக இரண்டாம் உலகப் போர் உருவாக்கிய மோசமான பேரழிவுகள் முன்னெப்போதும் கண்டிராதவையாகும். மக்கள் நெருக்கம் மிகுந்த செழிப்பான நகரங்களும், மாநகரங்களும் பயங்கரமான ஆயுதங்களை பயன்படுத்தி முற்றிலுமாக அழிக்கப்பட்டு முழுமையான சிதைவுகளாக்கப்பட்டன. இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். மேலும் இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானுக்கு எதிராக அணுகுண்டு பயன்படுத்தப்பட்டு, கேட்டாலே நடுங்கச் செய்யும் விளைவுகளைத் தோற்றுவித்த உண்மையான பேரழிவை உலகம் கண்டது. நடைபெற்ற பயங்கரங்களையும் முழுமையான பேரழிவுகளையும் நினைவுபடுத்துவதற்கு ஹிரோஷிமாவிலும், நாகசாகியிலும் உள்ள அருங்காட்சியகங்கள் போதுமானவையாக உள்ளன.

இரண்டாம் உலகப் போரின்போது ஏறத்தாழ 7 கோடி பேர் கொல்லப்பட்டனர். அவற்றுள் 4 கோடி பேர் சாதாரண குடிமக்கள் என்று கூறப்படுகிறது. ஆக, இராணுவ வீரர்களை விட அதிகமான அளவுக்கு பொது மக்கள் தங்கள் உயிரை தியாகம் செய்துள்ளனர். மேலும் போரின் பின் விளைவுகள் உண்மையிலேயே மிகவும் மோசமானவையாக இருந்தன. போரின் காரணமாக ஏற்பட்ட போருக்குப் பிந்தைய இறப்புகள் பல இலட்சங்களாகும். ஏனென்றால் அணுகுண்டுகள் பயன்படுத்தப்பட்டு பல ஆண்டுகள் ஆன பின்பும் கதிர் வீச்சினால் ஏற்பட்ட பயங்கரமான தீய விளைவுகள் புதிதாகப் பிறந்த குழந்தைகளை பாதித்தன. இன்றைய உலகில் சில சிறிய நாடுகள் கூட அணு ஆயுதங்களை வைத்திருக்கின்றன. அவற்றின் தலைவர்கள் அவற்றை பயன்படுத்துவதில் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள் தங்களின் செயல்களின் அழிவை உண்டாக்கும் விளைவுகளைப் பற்றி சிறிதும் கவலைப்படாதவர்களாக இருப்பதாகத் தோன்றுகிறது.

எனவே இன்று ஓர் அணு ஆயுதப் போர் நிகழ்வதாக நாம் கற்பனை செய்தால் காணக் கிடைக்கும் காட்சி நம்மை அதிர்ச்சிக்கும், கவலைக்கும் உள்ளாக்குகிறது. இன்று சிறிய நாடுகள் வைத்திருக்கும் அணு குண்டுகள் கூட இரண்டம் உலகப் போரில் பயன்படுத்தப்பட்டவற்றை விட மிகவும் சக்தி வாய்ந்தவையாக

உள்ளன. எனவே இப்படிப்பட்ட மோதலும் நிச்சயமற்றதன்மையும் கொண்ட சூழ்நிலை உலகில் அமைதியை நிலைநாட்ட விரும்பி, அதற்காகப் பாடுபட்டு வரும் மக்களுக்கு மிகுந்த கவலையளிப்பதாக உள்ளது.

ஒரு பக்கம் மக்கள் அமைதியை நிலைநாட்டுவதைப் பற்றிப் பேசுகின்றனர். மறு பக்கம் அகம்பாவமும், பெருமையும் கொண்டு தங்களுடைய தற்பெருமை கொண்ட வழிகளில் மூழ்கியுள்ளனர். இத்தகைய பரிதாபமான நிலையே இன்று உலகில் நிலவுகிறது. ஆற்றல் மிக்க எல்லா அரசாங்கங்களும் தங்களுடைய மேன்மையையும் ஆற்றல்களையும் நிரூபிப்பதற்கான எல்லா முயற்சிகளையும் செய்ய ஆயத்தமாக இருக்கின்றன. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு உலகில் நீடித்த அமைதியை நிலைநாட்டுவதற்கும், எதிர்காலத்தில் போர்களைத் தவிர்ப்பதற்கும் உலக நாடுகள் ஒன்று சேர்ந்து ஐக்கிய நாடுகள் சபை (United Nations) என்று அழைக்கப்படும் ஓர் அமைப்பை உருவாக்கின. ஆனாலும் லீக் ஆஃப் நேஷன்ஸ் (League of Nations) என்ற அமைப்பு தன் நோக்கத்தில் பரிதாபமாகத் தோற்றது போன்று ஐக்கிய நாடு சபையின் மதிப்பும் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. உலகில் அமைதியை நிலைநிறுத்துவதற்காக எத்தனை அமைப்புகள் அமைக்கப்பட்ட போதிலும் நீதியின் தேவைகள் நிறைவேற்றப்படாவிட்டால், அந்த முயற்சிகள் பயனற்றுப் போகும்.

நான் லீக் ஆஃப் நேஷன்ஸ் (League of Nations) அமைப்பின் தோல்வியைப் பற்றி இப்போது குறிப்பிட்டேன். உலக அமைதியைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக முதல் உலகப் போர் முடிந்த உடன் இந்த அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி மோசமான அழிவையும் இழப்பையும் ஏற்படுத்திய இரண்டாம் உலகப் போர் ஆரம்பமாவதை அதனால் தடுக்க முடியவில்லை. அந்தப் போரினால் நியூஸிலாந்தும் உயிரிழப்பை சந்தித்தது. ஏறக்குறைய 11 ஆயிரம் பேர் இறந்ததாகக் கூறப்படுகிறது. அநேகமாக அனைவரும் இராணுவத்தை சேர்ந்தவர்களே ஆவர். நியூஸிலாந்து போரின் மையப்பகுதியிலிருந்து வெகு தொலைவில் இருந்ததால் அதிகமான உயிரிழப்பை அது சந்திக்கவில்லை. ஆனால் நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியதைப் போன்று போரில் இறந்தவர்களில் இராணுவத்தினரை விட அப்பாவி பொது மக்களே அதிகம். கற்பனை

செய்து பாருங்கள். பெண்களையும் குழந்தைகளையும் உள்ளடக்கிய ஒரு குற்றமும் செய்யாத அப்பாவிக் குடிமக்கள் கண்மூடித்தனமாக கொல்லப்பட்டனர்.

இந்தக் காரணத்தினால் போரில் நேரடியாக ஈடுபட்ட நாடுகளில் வாழுகின்ற மக்களின் மனதில் போர் என்றாலே இயல்பான ஒரு வெறுப்பைக் காண்பீர்கள். நிச்சயமாக ஒரு நாடு தாக்கப்படுகிறதென்றல், அதனைப் பாதுகாப்பதற்காகவும், அதன் விடுதலைக்காகவும் எல்லா விதமான தியாகங்களையும் செய்ய அதன் குடிமக்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பது நாட்டுப் பற்றின் தேவையாகும். ஆயினும் அந்த மோதலை இணக்கமான, அமைதியான முறையில் தீர்க்க முடியுமென்றால் தேவையில்லாமல் இறப்பையும் அழிவையும் வருந்தியழைக்க வேண்டியதில்லை. முற்காலத்தில் போர்கள் நடைபெறும்போது பெரும்பாலும் இராணுவத்திற்கே இழப்பு ஏற்பட்டது. ஆனால் இன்றைய போர்களில் வான் வழியாக குண்டுகள் வீசுதல், விஷ வாயு, இரசாயண ஆயுதங்கள் ஆகியவை கூட உள்ளன. மேலும் நான் கூறியபடி மிகவும் பயங்கரமான ஆயுதமான அணு மையக் குண்டுகளை பயன்படுத்துகிற சாத்தியக்கூறும் உள்ளது. இதன் விளைவாக கடந்த காலப் போர்களை விட இன்றைய போர்கள் முற்றிலும் மாறுபட்டவையாக உள்ளன. ஏனென்றால் இன்றைய போர்கள் மனித குலத்தையே பூமியிலிருந்து அழித்து விடக் கூடிய ஆற்றல்களைக் கொண்டுள்ளன. அமைதியை நிலைநிறுத்துவது தொடர்பான திருக்குர்ஆனின் ஓர் அழகிய போதனையை இந்த இடத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். திருக்குர்ஆன் கூறுகிறது:

''நன்மையும் தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்கும் இடையில் பகைமை உள்ளதோ அவர் அதன் விளைவாக உமது நெருங்கிய நண்பராக ஆகி விடுவார்.'' *(திருக்குர்ஆன்41:35)*

இவ்வாறு பகைமையையும் காழ்ப்புணர்ச்சியையும் இயன்றவரை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனத் திருக்குர்ஆன் போதனை செய்கிறது. ஒருவருடன் அறிவுடனும் அன்புடனும் பேசுவது நிச்சயமாக நல்ல விளைவை தருவதோடு அவர்களுடன் நேச மிகு விளைவை ஏற்படுத்தி வெறுப்பையும் காழ்ப்புணர்ச்சியையும் அகற்றும்.

இக்காலத்தில் வாழும் நாம் நம்மை மிகவும் முன்னேறியவர்களாகவும் பண்பட்டவர்களாகவும் கருதுகிறோம் என்பதில் ஐயமில்லை. குழந்தைகளின் உடல்நலம் பேணுவதற்கும் அவர்களுக்கு கல்வி வழங்குவதற்கும் தாய்மார்மார்களின் உடல்நலத்திற்கும் உலக அளவில் அற நிலையங்களையும் அமைப்புகளையும் நிறுவியிருக்கின்றோம். மனித இனத்தின் மீது கொண்ட இரக்கம், கருணை காரணமாக ஏற்படுத்தப்பட்ட எண்ணற்ற அற நிலையங்களும் உள்ளன. இவற்றையெல்லாம் செய்துள்ள நாம் காலத்தின் இன்றியமையாத் தேவைக்கு சிறிது நேரம் ஒதுக்கி, பேரழிவிலிருந்தும் பெரும் நாசத்திலிருந்தும் நம்மையும் பிறரையும் காப்பது எப்படி என்று சிந்திக்க வேண்டும். கடந்த ஆறேழு, பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இப்போது உலகம் மிகவும் நெருங்கி வந்துள்ளது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் நியூஸிலாந்து ஆசியாவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் மிக தொலைவில் இருந்த ஒரு நாடாக இருந்தது. ஆனால் இன்று அது ஒன்றிணைந்த உலக சமூகத்தின் ஒரு பகுதியாக அமைந்திருக்கிறது. எனவே போர் மூளும்போது எந்தவொரு நாடும், எந்தவொரு பகுதியும் பாதுகாப்பாக இல்லை.

உங்கள் தலைவர்களும், அரசியல்வாதிகளும் நாட்டின் பாதுகாவலர்களாக உள்ளனர். நாட்டின் பாதுகாப்பிற்கும் அதன் தொடர்ந்த முன்னேற்றத்திற்கும் உயர்வுக்கும் அவர்களே பொறுப்பாளர்கள் ஆவர். எனவே ஒரு சிறு பகுதியில் ஏற்படும் போர்களிலிருந்துதான் மிகவும் பரந்துபட்ட, விரிவாக நாசங்களும் சேதங்களும் ஏற்படுகின்றன என்ற முக்கியமான விஷயத்தை அவர்கள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். வரவிருக்கும் மோசமான பேரழிவைத் தடுத்து நிறுத்துவதற்கு போரைத் தடுத்தாக வேண்டும் என்பதை சில வல்லரசு நாடுகள் உணர்கின்ற விதத்தில் அவர்களுக்கு உணர்வையும் அறிவையும் வழங்கிய இறைவனுக்கு நாம் நன்றி தெரிவித்தாக வேண்டும்.

குறிப்பாக சிரியாவைத் தாக்குவதிலிருந்து பிற வல்லரசு நாடுகளில் சிலவற்றை தடுத்து நிறுத்துகின்ற முயற்சிகளில் ரஷ்ய ஜனாதிபதி ஈடுபட்டார். நாடுகள் பெரியவையாக இருந்தாலும்

சிறியவையாக இருந்தாலும் அவை சமமாக நடத்தப்பட வேண்டும் என அவர் தெளிவாக்கியுள்ளார். நீதியின் தேவைகள் நிறைவேற்றப்படாமல், மற்ற நாடுகள் சுயமாகப் போர் தொடுத்தால் லீக் ஆஃப் நேஷன்ஸ் (League of Nations) சந்தித்த அதே மோசமான நிலையை ஐக்கிய நாடுகள் சபையும் சந்திக்கும் என்றும் அவர் கூறினார். அவரது இந்த ஆய்வின் முடிவு முற்றிலும் சரியானதென்று நான் கருதுகிறேன். அவருடைய கொள்கைகள் எல்லாவற்றையும் நான் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அறிவுப்பூர்வமான வார்த்தைகள் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். அவர் இன்னும் ஒருபடி மேலே சென்று, நாடுகளுக்கு மத்தியில் நீதியும், சமத்துவமும் நிலவுவதற்கு வசதியாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்ஸிலில் இடம்பெற்றுள்ள அந்து நிரந்த உறுப்பினர்கள் பெற்றிருக்கும் வீட்டோ (Vito) அதிகாரத்தை நிரந்தரமாகமுடிவுக்கு கொண்டு வர வேண்டும் எனக் கூறியிருக்க வேண்டும் என்று மட்டுமே நான் விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு வாஷின்டன் D.C -ல் உள்ள கேபிடல் ஹில்லில் உரை நிகழ்த்துகின்ற ஒரு வாய்ப்பினைப் பெற்றேன். பல செனட் உறுப்பினர்களும்,(Senators) பாராளுமன்ற உறுப்பினர்களும், அறிஞர்களும், கற்றறிந்த பெருமக்களும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அனைத்து தரப்பு மக்களும் சமமாக நடத்தப்படும்போதுதான் நீதியின் தேவைகள் நிறைவேற்றப்படும் என்று நான் அவர்களிடம் தெளிவாக எடுத்துக் கூறினேன். பெரிய நாடுகளுக்கும், சிறிய நாடுகளுக்கும், செல்வம் மிக்க நாடுகளுக்கும், ஏழை நாடுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை பெரிதுபடுத்தினாலும், நியாயமற்ற வீட்டோ (Vito) அதிகாரத்தை தொடர்ந்து வைத்துக் கொள்ள நினைத்தாலும் உறுதியாக அமைதியற்ற நிலையும் பதற்றமும் அதிகரிக்கும் என்று அவர்களிடம் தெரிவித்தேன். உண்மையில் அப்படிப்பட்ட பதற்றங்கள் உலகில் ஏற்கனவே தலைதூக்க ஆரம்பித்து விட்டன.

எனவே அமைதியை நிலைநாட்டுவதன் பக்கம் உலகத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டியது உலகளாவிய முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் என்ற வகையில் எனது கடமையாகும். இஸ்லாம் என்பதன் பொருளே சாமாதானம், பாதுகாப்பு என்பதால் இதனை எனது கடமை என்று கருதுகிறேன். சில முஸ்லிம் நாடுகள் வெறுப்பு நிறைந்த

தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுகின்றன என்றால், அதன் காரணமாக இஸ்லாமிய போதனைகள் குழப்பத்தையும் மோதலையும் வளர்க்கின்றன என்ற முடிவுக்கு வந்து விடக் கூடாது. சற்று முன் நான் திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை எடுத்து வைத்தேன். அமைதியை ஏற்படுத்துவது எப்படி என்ற படிப்பினை அதில் அடங்கியுள்ளது.

மேலும் இஸ்லாத்தின் தூய நிறுவனர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்மைப் பின்பற்றுபவர்களை எப்போதும் சலாம் கூறுமாறு போதித்துள்ளார்கள். இதன் பொருள், எப்போதும் சமாதானத்தைப் பரப்ப வேண்டும் என்பதாகும். அவர்களுடைய அருளுக்குரிய முன்மாதிரியிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவெனில், அவர்கள் முஸ்லிம் அல்லாத அனைவருக்கும் - அவர்கள் யூதராக இருந்தாலும், கிறிஸ்தவராக இருந்தாலும், வேறு எந்த மதத்தையோ, நம்பிக்கையையோ சார்ந்தவராக இருந்தாலும் அவர்களுக்கு சலாம் கூறுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள் என்பதேயாகும். ஏனெனில் அனைத்து மக்களும் இறைவனுடைய படைப்பின் ஒரு பகுதியாவர் என்பதையும், இறைவனின் பெயர்களில் ஒன்று, அவன் ‘சலாம்’ (சமாதானத்தின் பிறப்பிடம்–திருக்குர்ஆன் 59:24 காண்க) ஆவான் என்பதையும், மனிதயினம் முழுவதற்கும் அவன் சமாதானத்தையும் பாதுகாப்பையும் விரும்புகிறான் என்பதையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உணர்ந்திருந்தார்கள்.

சமாதானம் தொடர்பான இஸ்லாத்தின் போதனைகளை நான் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் நேரமின்மையின் காரணமாக ஒரு சில விஷயங்களை மட்டுமே கூறியுள்ளேன் என்பதை தெளிவு படுத்துகிறேன். உண்மையில் இஸ்லாம் முழுவதும் அனைத்து மனிதர்களுக்கும் சமாதானத்தையும் பாதுகாப்பையும் வலியுறுத்தக் கூடிய போதனைகளால் நிரம்பி காணப்படுகிறது. நீதியை நிலைநாட்டுவது பற்றி திருக்குர்ஆன் கூறுவது என்ன? அதிகாரம் 5 வசனம் 9-ல் அல்லாஹ் கூறுகிறான்:

‘‘நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருங்கியது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிகின்றான்.’’

எனவே நீதியின் மிக உயர்ந்த தரத்தை இந்த வசனங்களில் திருக்குர்ஆன் விவரிக்கின்றது. தங்களை முஸ்லிம்கள் என்று அழைத்துக் கொண்டு அதே நேரத்தில் கொடுமைகளையும், வன்முறைகளையும் இழைப்போருக்கு இந்தக் கட்டளையில் இடமே இல்லை. இஸ்லாத்தை வன்முறையும், தீவிரவாதமும் கொண்ட மார்க்கம் என்று கருதி குற்றம் சுமத்தும் மக்களுக்கும் இந்த வசனம் இடமளிக்கவில்லை. மேலும் நீதி, நேர்மை ஆகியவற்றின் தரத்திற்கு மிக உன்னதமான வரையறைகளை திருக்குர்ஆன் விதித்துள்ளது. நீதியோடு நடந்து கொள்ள மட்டும் அது கூறவில்லை; நடுநிலையை எந்த அளவுக்கு அது வலியுறுத்துகிறதென்றால், அது பின்வருமாறு கூறுகிறது:

''நம்பிக்கையாளர்களே! நீங்கள் நீதியை நிலைநாட்டுவதில் நிலைத்திருங்கள். உங்கள் சாட்சியம் உங்களுக்கோ, உங்கள் பெற்றோருக்கோ, நெருங்கிய உறவினருக்கோ எதிராக இருப்பினும் அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுபவராக இருங்கள். (யாருக்காக சாட்சி கூறப்பட்டதோ) அவர் செல்வராயினும் ஏழையாயினும் சரி. அல்லாஹ் அவ்விருவருக்கும் (உங்களை விட) அதிக அளவில் நன்மையை விரும்பக் கூடியவன் ஆவான். நீங்கள் நேர்மையுடன் செயல்படும் பொருட்டு அற்ப ஆசைகளைப் பின்பற்றாதீர்கள். நீங்கள் உண்மையை மறைத்தாலோ, தட்டிக் கழித்தாலோ நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கு அறிகின்றான் (என்பதை நினைவில் கொள்ளுங்கள்).''

எனவே சமுதாயத்தின் அடிப்படை நிலையிலிருந்து சர்வதேச நிலை வரை உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்குத் தேவையான நீதியின் தீர்க்கமான வரையறைகளாக இது அமைந்துள்ளது. இஸ்லாத்தின் தூய நிறுவனர் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இந்த போதனையின்படி எல்லாப் பகுதிகளுக்கும் அதைப் பரப்பினார்கள் என்பதற்கு வரலாறு சான்று பகர்கின்றது. இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான சீடரும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநருமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் இந்தக் கொள்கையை பரப்பவும் போற்றவும் செய்தார்கள். தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு அதைப் பரப்புமாறும் போதித்தார்கள். இதன் காரணமாகவே அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் அனைத்து மக்களிடமும்

அல்லாஹ்வின் உரிமைகளையும் அவனது படைப்பினங்களின் உரிமைகளையும் நிறைவேற்றுவதன் அவசியத்தையும் நீதியின் மிகச் சிறந்த படித்தரத்தை நிறுவுவதையும் வலியுறுத்துகிறது. நம்மில் ஒவ்வொருவரும் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் எந்த நம்பிக்கையைக் கொண்டிருந்தாலும் மற்றவருக்குரிய உரிமைகளை நிலைநிறுத்துவதில் உரிய கவனம் செலுத்தி அதன் மூலம் இந்த உலகம் அமைதி, நல்லிணக்கம் ஆகியவற்றின் உறைவிடமாகத் திகழ வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும்.

இந்தச் சில வார்த்தைகளோடு நான் நிறைவு செய்கின்றேன். மேலும் என்னை இங்கு அழைத்ததற்காகவும் என் உரையைக் கேட்பதற்காக இங்கு வருகை தந்ததற்காகவும் நான் மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழாக்கம்:

S.S.H. Muhammad Lebbai



# உலக சமாதானமும் பாதுகாப்பும் இக்காலத்தில் நெருக்கடி தரும் பிரச்சனைகள்

டச்சு தேசிய பாராளுமன்றம், பிந்நன்ஹொஃப், தி ஹேக், நெதர்லாந்து – 2015





Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] at a special session of the Standing Committee for Foreign Affairs at the Netherlands National Parliament.



Members of the Standing Committee for Foreign Affairs at the Netherlands National Parliament with Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba]




Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] delivering his historic address at a special session of the Standing Committee for Foreign Affairs at the Netherlands National Parliament.



Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] answering a question about a range of political and religious issues.

# முன்னுரை

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவரான ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 6, அக்டோபர் 2015 அன்று நெதர்லாந்து தேசிய பாராளுமன்றத்தில், அந்நாட்டின் தலைநகரமான டென் ஹேக்கில் வெளியுறவுத் துறை சபையின் கூட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கவுரவ உறுப்பினர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு முன்னால் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையை நிகழ்த்தினார்கள். விழாவின் துவக்கத்தில் திரு. வென்பொம்மல் அவர்கள் பாராளுமன்றத்தில் கண்ணியமிக்க கலீஃபத்துல் மஸீஹ் அவர்களை வரவேற்று சபை உறுப்பினர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். மேலும் அவர் பிற நாட்டுப் பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், அல்பேனியா, குரோஷியா, அயர்லாந்து, மாண்டினேக்ரோ, ஸ்பெயின், சுவீடன் ஆகியவற்றின் கவுரவ உறுப்பினர்களையும் வரவேற்றார்கள்.

# உலக சமாதானமும் பாதுகாப்பும் இக்காலத்தில் நெருக்கடி தரும் பிரச்சனைகள்

## 6, அக்டோபர் 2015 அன்று நெதர்லாந்து பாராளுமன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவு

தஷஹ்ஹுது, தவ்வுது ஆகியவற்றை ஓதிய பிறகு ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் கூறினார்கள்:

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

அளவற்ற அருளானும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்.......

கண்ணியமிக்க அனைத்து விருந்தினர்களுக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு.

அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உங்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

இன்று இந்த நிகழ்ச்சியில் உரையாற்ற எனக்கு அழைப்பு விடுத்த ஏற்பாட்டாளர்களுக்கு நான் முதற்கண் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய உலகில் சில குறிப்பிட்ட சிக்கலான விஷயங்கள் முன்னிறுத்தைப்பட்டு இவை இக்காலத்தில் முக்கிய பிரச்சனைகள் என முத்திரையிடப்படுவதை நாம் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, சிலர் புவி வெப்பமயமாதல் மற்றும் தட்பவெப்ப நிலைகளின் மாற்றங்கள் போன்ற அச்சுறுத்தல் குறித்து வலியுறுத்தி வருகின்றனர். வேறு சிலரோ அதிகரித்து வரும் சண்டை சச்சரவுகள், உலகின் நிச்சயமற்ற சூழல் குறித்து கவலையை தெரிவிக்கின்றனர். நாம் இதனை சீர்தூக்கிப் பார்த்தோமென்றால் உலக சமாதானமும் பாதுகாப்பும் உண்மையில் இக்காலத்தில் அதிக நெருக்கடி தரும் பிரச்சனைகளாக நமக்குத்

தென்படுகின்றன. சந்தேகமின்றி உலகம் கடந்த ஒவ்வொரு நாளும் நிலைகுலைந்ததாக, அபாயம் நிறைந்ததாக உள்ளது. இதற்கு உள்ளார்ந்த காரணங்கள் பல இருக்கின்றன. உதாரணமாக, பொருளாதார நெருக்கடி, பொருளாதார உறுதியின்மை போன்றவை உலகில் பல பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பது முக்கிய அம்சமாகும்.

மற்றோர் அடிப்படைக் காரணம், சில உலகத் தலைவர்கள் தம் மக்களிடமும் அந்நியரிடமும் அநீதியான முறையில் நடந்து கொள்வதாகும். மார்க்கத் தலைவர்களில் சிலர் மாபெரும் ஒட்டுமொத்த நன்மையை விட தம் சொந்த நலனுக்கு முன்னுரிமை வழங்குவது, தமக்குள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதில் கவனமற்றவர்களாக இருப்பது ஆகியவை இன்னும் சில காரணங்களாக இருக்கலாம். நாடுகளுக்கிடையிலான உறவுகளைப் பொருத்த மட்டில் மோதலுக்கான முக்கியக் காரணம், பணக்கார மற்றும் ஏழை நாடுகளுக்கிடையிலான ஏற்றத்தாழ்வாகும். பலமிக்க நாடுகள் ஏழை நாடுகளின் இயற்கை வளங்களை அவற்றின் மதிப்புக்கேற்ப அவர்களுக்குரிய பங்கை செலுத்தாமல் அவற்றிலிருந்து எப்போதும் பயனடையத் துடிக்கின்றன.

எனவே உலக அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் காரணிகளின் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் நான் குறிப்பிட்டுள்ளேன். அது எத்தகைய காரணமாக இருந்தாலும் சரி, உலக அமைதியின்மையே இத்தலைமுறைக்கு பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்துகிறது என நான் உறுதியாக நம்புகிறேன். இதனை செவிமடுக்கின்ற உங்களுள் பலரும் முஸ்லிம் நாடுகளிலும்தான் இப்படிப்பட்ட உறுதியற்ற தன்மை இருக்கின்றது! உலக அமைதியின்மைக்குக் காரணம் முஸ்லிம் உலகில் காணப்படும் குழப்பம்தான் என்றும் கூறலாம்.

உண்மையில் உலகளாவிய முஸ்லிம் அமைப்புகளில் ஒன்றான அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் என்ற முறையில் எனக்கும் இதன் மீது பொறுப்பு உள்ளது என்று நீங்கள் கருதலாம். தீவிரவாதக் குழுக்கள் தோன்றவும் பயங்கரவாதம் தலைதூக்கவும் காரணம், இஸ்லாமிய போதனைகளின் ஈர்ப்பேயாகும் என்றும் நீங்கள் நம்பலாம். எவ்வாறிருந்தபோதிலும் இத்தகைய குழப்பத்தையும் வெறுப்பையும் இஸ்லாத்துடன் தொடர்புபடுத்திக் கூறுவது மாபெரும்

அநீதியாகும்.

இப்போது மார்க்கங்களின் வரலாறு பற்றிக் கூற வேண்டிய அவசியமில்லை. ஆனால் எந்த மார்க்கங்களின் வரலாற்றையும் சரியாக ஆராய்ந்தால், அதில் ஒவ்வொருமார்க்கத்தைப் பின்பற்றும் மக்களும் அதன் அசல் போதனைகளை காலப்போக்கில் விட்டு விட்டனர் என்று கூறுவதே போதுமானதாகும். அதன் விளைவாக அவற்றுள் பிரிவுகளும் பிணக்குகளும் உண்டாயின.பெரும் கொடுமை இழைக்கப்பட்டது. மக்கள் பலர் மடிந்தனர்.

இதனை முன்னிறுத்தியவாறு காலம் செல்லச் செல்ல முஸ்லிம்களும் உண்மையான போதனைகளை விட்டு விட்டனர் என்று முழு மனதுடன் நானும் ஒப்புக் கொள்கிறேன். அதனால் ஏமாற்றமும் போட்டி மனப்பான்மையும் உருவாயின. அதைத் தொடர்ந்து பிரிவினை வாதம், வன்முறை, அநீதி ஆகியவற்றிற்கு வழிவகுத்தன. ஆயினும் ஓர் உண்மையான முஸ்லிமின் பார்வையின் அடிப்படையில், இஸ்லாத்தின் இந்த பரிதாபகரமான நிலைக் கண்டு என்னுடைய ஈமான சிறிதும் குறைந்து விடவில்லை. ஏனெனில் 1400 ஆண்டுகளுக்கு முன்பே இஸ்லாத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் இது குறித்து முன்னறிவித்துள்ளார்கள். அதன்படி இஸ்லாத்தின் போதனைகள் சீர்குலைவுக்கு உள்ளாகும். முஸ்லிம்கள் இழிநிலைக்கு உள்ளாவார்கள். ஆயினும் ஆன்மீகத்தின் அந்த இருண்ட காலகட்டத்தில் இறைவன் ஒரு வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகவும், இமாம் மஹ்தியாகவும் அனுப்புவான் என்றும் முன்னறிவித்துள்ளார்கள்.

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின்படி, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இஸ்லாத்தின் அசலான, அமைதியான, அமைதி நிறைந்த போதனைகளைக் கொண்டு எங்களுக்கு ஒளியூட்டினார்கள். எனவே அஹ்மதி முஸ்லிம்களாகிய நாங்கள் அமைதியின்மை, அட்டூழியம் செய்யும் மக்களுடன் இல்லை. மாறாக, உலகில் சமாதானத்தை விரும்பக் கூடிய மக்களாக இருக்கிறோம். நாங்கள்தான் உலகின் நோயைக் குணப்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறோம். நாங்கள்தான் மனித குலத்தை ஒன்றிணைக்க வந்தவர்களாவோம். நாங்கள்தான் வெறுப்பு, துவேஷம் ஆகியவற்றை அன்பு நேசமாக மாற்ற

விரும்புபவர்களாவோம். மேலும் நிச்சயமாக நாங்கள்தான் உலகில் அமைதியை நிலைநாட்ட சாத்தியமான ஒவ்வொரு முயற்சியையும் மேற்கொள்பவர்களாவோம். ஒரு மார்க்கத் தலைவர் என்ற முறையில் நான் கூற விரும்புவது என்னவெனில், ஒருவரையொருவர் குற்றம் சுமத்தி கோபமூட்டுவதற்கு பதிலாக உண்மையான, நீடித்திருக்கும் உலக அமைதியை நிலைநாட்டுவதற்காக நமது முழு கவனத்தையும் செலுத்த வேண்டும்.

இதனைக் குறித்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுனர் ஓர் உயர்வான போதனையை வழங்கியுள்ளார்கள். அதாவது அமைதி ஏற்படச் செய்ய மனிதகுலம் முடிந்த அளவுக்கு முயற்சி செய்து இறைவனின் நற்பண்புகளை தன்னிடம் வெளிப்படுத்துவதும் அதன்படி செயல்படுவதும் அத்தியாவசியமாகும். மனித இனம் தொடர்ந்து நன்மையில் நிலைபெற இந்த வழியை உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டும். மேலும் மனித குலத்தின் நலனும் வளமும் பௌதீகமாகவும் ஆன்மீகமாகவும் நேரடியாக இந்த இறைபண்புகளை கடைபிடித்தலோடு பிணைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவனது பண்புகளின் மூலமாகத்தான் அமைதியின் எல்லா நிலைகளும் வெளிப்டுகின்றன.

இதனை திருக்குர்ஆனின் முதல் வசனம் எடுத்துக் கூறுகிறது. அதில் அல்லாஹ்வை எல்லா உலகங்களுக்கும் இறைவன் எனக் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள், அவனே ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு படைப்பினத்திற்கும் உணவளிப்பவன்; நிலைநிற்கச் செய்பவன். அவன் முஸ்லிம்களுக்கு மட்டும் இறைவன் அல்லன். மாறாக, கிறிஸ்தவர்கள், யூதர்கள், இந்துக்கள் ஆகிய எல்லா மக்களுக்கும் அவனே இறைவன் ஆவான் - அவர்கள் எந்த மதத்தை, நம்பிக்கையை சார்ந்தவர்களாக இருந்தாலும் சரியே.

தன் படைப்பினங்களின் மீது இறைவன் கொண்ட அன்பும் பரிவும் நிகரற்றதும், தனித்தன்மை வாய்ந்ததும் ஆகும். அவன் அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். அவன் சமாதானத்தின் ஊற்று ஆவான். எனவே இஸ்லாம் ஒரு முஸ்லிமிடம் வல்லமை மிக்க இறைவனின் பண்புகளை தன்னிடம் வெளிப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கின்றபோது ஓர் உண்மையான முஸ்லிம் பிறருக்கு தீங்கிழைப்பது சாத்தியமற்றதாகும். அதை விட மேலாக ஓர்

உண்மை முஸ்லிமின் நம்பிக்கை அவரை மனித குலத்துடன் நேசத்துடன் நடக்கும்படி வலியுறுத்துகின்றது. ஒவ்வொருவருடனும் கண்ணியத்துடன், பரிவுடன், அனுதாபத்துடன் நடக்கும்படி போதிக்கின்றது.

இஸ்லாம் அமைதியின் மார்க்கம் என்றால் பிறகு திருக்குர்ஆன் எதற்காக போர் செய்ய அனுமதி வழங்குகிறது? என்ற கேள்வி எப்போதும் கேட்கப்படுகின்றது. அந்த அனுமதி எந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வழங்கப்பட்டது என புரிந்து நான் இப்போது விளக்கியதன் ஒளியில் தெரிந்து கொள்ள வேண்டும். நீடித்த அமைதியை நிலைபெற வைப்பது அதிமுக்கியத்துவம் வாய்ந்ததும் உயர்வானதுமாகும். சில தருணங்களில் நீண்ட கால அமைதிக்கு தண்டனை கொடுப்பது அல்லது எச்சரிக்கை விடுப்பது கூட தேவைப்படுகிறது.

இதன்படி போர் புரிய இறைவன் அனுமதி அளித்துள்ளான் என்றால் அது அமைதியை மீட்கவும் தற்காப்பிற்காகவுமே அன்றி வேறில்லை. சில பிரிவினர் அல்லது தனி நபர்கள் வன்முறையை, கொடுஞ் செயலை திருக்குர்ஆனுடனும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனும் தொடர்புபடுத்திக் கூறுவது மாபெரும் அநீதியாகும். திருக்குர்ஆனையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையையும் நடுநிலையுடன் பாரபட்சமின்றி படித்தால் இஸ்லாம் எல்லாவிதமான தீவிரவதத்திற்கும் இரத்தம் சிந்துதலுக்கும் முற்றிலும் எதிரானது என்பதை நாம் கண்டு கொள்ளலாம்.

நேரம் குறைவாக இருப்பதால் நான் விபரமாகக் கூற முடியாது. எனினும் இஸ்லாத்தின் சில அடிப்படையான போதனைகளைக் கூறுகிறேன். அவை சந்தேகத்திற்கிடமின்றி இஸ்லாம் அமைதியின் மார்க்கம் என்பதற்கு சான்று பகரும். நான் இப்போது கூறியது போன்று, இஸ்லாம் தீவிரவாதத்தையும் போரையும் தூண்டுகிறது என்ற குற்றச்சாட்டு கூறப்படுகிறது. எனினும் அது உண்மைக்கு அப்பாற்பட்டதாகும். எந்நிலையிலும் தற்காப்புப் போர் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கட்டளையிட்டுள்ளான். (2:191 காண்க). இதனை வலியுறுத்தி எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டுள்ளதோ அவர்களுக்கு போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள் மீது

அநீதியிழைக்கப்பட்டுள்ளது எனத் திருக்குர்ஆன் கூறுகின்றது. (22:40 காண்க). ஏற்கனவே மார்க்க சுதந்திரம் இருக்கும் இடங்களில் முஸ்லிம்களுக்கு போர் செய்ய அனுமதியில்லை எனவும் அல்லாஹ் கூறுகிறான்.

எனவே எந்த முஸ்லிம் நாடும், அமைப்பும், தனி நபரும் நாட்டுக்கெதிராக அல்லது மக்களுக்கெதிராக எவ்விதமான அராஜகச் செயலையோ கிளர்ச்சியையோ சட்டத்தை மீறிய செயலையோ செய்ய உரிமை இல்லை. ஐரோப்பாவிலும், மேற்கத்திய நாடுகளிலும் உள்ள அரசாங்கங்கள் மதச்சார்பற்றவையாகும். அதனால் அந்த நாட்டுச் சட்டங்களை மீறி நடப்பது, அரசை எதிர்த்து கடுமையான ஆர்ப்பாட்டம் நடத்துவது, கலகம் செய்யத் தூண்டுவது ஆகியவற்றைச் செய்ய ஒரு முஸ்லிமுக்கு எவ்வித உரிமையுமில்லை.

இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி ஒருவர் முஸ்லிமல்லாத நாட்டில் வாழ்ந்து கொண்டு, தமக்கு மார்க்க சுதந்திரம் இல்லை எனக் கருதினால் அவர் அதிருப்தி கொண்டு சட்ட விரோத செயலில் ஈடுபடக் கூடாது. மாறாக, நாட்டை துறந்து வெளியேறி தமக்கு உகந்த சூழல் இருக்கும் இடத்திற்கு சென்று விட வேண்டும்.

திருக்குர்ஆனில் முஸ்லிம் சமுதாயங்கள் இவ்வறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. அவை தாக்குதலுக்குள்ளானால் அதற்கான பதிலடி அந்த அரசுகளை தற்காத்துக் கொள்ளத் தகுந்த முறையில் அந்த தாக்குதலின் அளவுக்கே இருத்தல் வேண்டும். (திருக்குர்ஆன் 16:127 காண்க), எனவே தண்டனை வழங்கினால் அது குற்றமிழைக்கப்பட்ட வரம்புக்கே இருக்க வேண்டும் என மிகத் தெளிவாகத் திருக்குர்ஆன் கூறுகிறது. உங்கள் எதிரி தீய எண்ணத்தில் உங்களைத் தாக்க முனைந்து பின்னர் அதனைத் தவிர்த்து சமாதானத்தின் பக்கம் திரும்பினால் அவர்கள் எந்த நோக்கத்தினால் வந்தாலும் சரியே உடனே அதை ஏற்றுக் கொண்டு சமாதான ஒப்பந்தத்தின் பக்கம் வாருங்கள் எனத் திருக்குர்ஆன் கூறுகிறது. (8:62)

முக்கியத்துவம் வாய்ந்த கொள்கையை விளக்கும் திருக்குர்ஆனின் இந்த வசனம் நாடுகளுக்கிடையே அமைதியையும் பாதுகாப்பையும் வழங்குகிறது. இன்றைய உலகில் சில நாடுகள் மற்றவற்றின் பகைமைப் போக்கை கருத்தில் கொண்டு அதற்கு பதிலடியாக தீவிர ஆக்கிரமிக்கும் திட்டத்தை வளர்த்துக்

கொள்கின்றன. இதற்கு பல எடுத்துக்காட்டுகள் உள்ளன. அவை நம்மை அழிக்கும் முன்பு நாம் அவற்றை அழித்து விடுவோம் என்ற முடிவோடு அவை இயங்குகின்றன என்றே தோன்றுகிறது.

ஆனால் இஸ்லாத்தின் போதனைப்படி அமைதிக்கான எந்த வாய்ப்பும் வீண்போய் விடக் கூடாது. அதற்கான வழிமுறைகள் மங்கலாக ஆகி விட்டாலும் அதனைப் பற்றிப் பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். திருக்குர்ஆனில் அல்லாஹ் வலியுறுத்திக் கூறுவதாவது, ஒரு நாட்டின் மீது அல்லது மக்களின் மீது கொண்ட பகைமை உங்களை நீதியிலிருந்தும், நேர்மையுடன் நடப்பதிலிருந்தும் தவறும்படித் தூண்ட வேண்டாம். எல்லா சந்தர்ப்பங்களிலும் எவ்வளவு கடினமாக இருந்தாலும் நீதி, நேர்மையை முற்றிலுமாக கடைபிடிக்க வேண்டும். (5:9 காண்க). போர்க் காலங்களில் கூட நீதி நேர்மையுடன் நடந்து கொள்வது அவசியமாகும். போர் முடிந்த பின் அதில் வெற்றி பெற்றவர் தொடர்ந்து நியாயமாகவே நடந்து கொள்ள வேண்டும். எவ்வகையிலும் கொடுமை இழைத்தல் கூடாது.

இன்றைய உலகில் இத்தகைய உயர் நல்லொழுக்க நெறிகளை , நேர்மையின் தரத்தைக் காண முடியவில்லை. போர் முடிந்த பின் தோல்வியுற்ற நாட்டின் வளர்ச்சியைத் தடுப்பதற்கான கட்டுப்பாடுகளும், தடைகளும் திணிக்கப்பட்டு, அதன் காரணமாக வளர்ச்சி குறைந்து உண்மையான சுதந்திரத்தை அவற்றால் எட்ட இயலவில்லை. இத்தகைய செயல்கள் சர்வதேச உறவை பாதிப்பதுடன் ஏமாற்றத்தை அதிகரிக்கச் செய்து எதிர்மறையான விளைவை உண்டாக்குகின்றன.

உண்மையில் சமூகத்தில் ஒவ்வொரு மட்டத்திலும் நீதி இல்லை என்றால், சமாதானத்தை நிலைபெறச் செய்ய முடியாது. மற்றொரு முக்கியமான இஸ்லாமிய போதனையை திருக்குர்ஆன் விவரிக்கின்றது. போர்க் கைதிகளை அந்த முஸ்லிம்கள் அந்தப் போர் நிலைகளுக்கு வெளியே கொண்டு செல்வது ஆகுமானதல்ல. அதனால் தீவிரவாத, பயங்கரவாத அமைப்புகள் எவ்வித முகாந்திரமும் இன்றி கைதிகளை பிடித்துச் செல்வது இஸ்லாத்தின் போதனகளுக்கு முற்றிலும் எதிரான செயலாகும். அவர்கள் கைதிகளை மட்டும் பிடித்துச் செல்லவில்லை. அவர்களின் மீது மனிதத்தன்மையற்ற சொல்லொணாக் கொடுமைகள் இழைக்கப்படுகின்றன எனவும் அறிக்கைகள் கூறுகின்றன.

தீவிரவாதிகளின் இக்கொடுஞ் செயல் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும். இத்தீய செயலுக்கு மாற்றமாக திருக்குர்ஆனின் போதனை, நீங்கள் கைதிகளை ஆகுமான முறையில் பிடித்தாலும் அவர்களுடன் கருணையோடு நடந்து கொள்ள வேண்டும்; மேலும் முடிந்தவரை அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதாகும். இன்னுமொரு போதனையை திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது: நாடுகளுக்கிடையே அல்லது பிரிவினருக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டால் மூன்றாவது அமைப்பு நடுநிலையாக நின்று மோதலுக்கு அமைதியான தீர்வை எட்டச் செய்ய வேண்டும்.

உடன்படிக்கையின்போது இரு பிரிவினரும் ஒன்றையொன்று வரம்புமீறி நடந்து அமைதிக்கான பேச்சு வார்த்தையை மீறத் துணிந்தால் அப்போது ஏனைய நாடுகள் ஒன்றிணைந்து வரம்பு மீறும் நாட்டை தேவைப்பட்டல் ஆற்றலைக் கொண்டு அடக்க வேண்டும். எனினும் அந்த வரம்பு மீறும் பிரிவு பின்வாங்கி விட்டால் அவர்களை இழிவுபடுத்தக் கூடாது; கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடாது. மாறாக, சுதந்திர நாடாக, தடையற்ற சமூகமாக உருவெடுக்க அனுமதிக்க வேண்டும். இக்கொள்கை உலகிற்கு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்றால், குறிப்பாக வல்லரசுகள், சர்வதேச அமைப்புகள் இதிலிருந்து பயன் பெறலாம்.

உலகில் சமாதானம் மலர மார்க்கத்தை உறுதி செய்து கூறப்படும் முக்கிய கோட்பாடு திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. போருக்கான அனுமதி கொடுக்கப்படவில்லை என்றால், பள்ளிவாயில்களோடு, கிறிஸ்தவ ஆலயங்களும், மடாலயங்களும், கோயில்களும், மற்றெல்லா மார்க்கங்களின் வணங்குமிடங்களும் கடுமையான ஆபத்திற்கு உள்ளாகியிருக்கும். (22:41 காண்க). அதனால் எங்கு வலிமை மிக்க அல்லாஹ் பலவந்தத்தை பயன்படுத்த அனுமதியளித்துள்ளானோ அது இஸ்லாத்தை மட்டும் பாதுகாப்பதற்காக அல்ல; மாறாக, மார்க்கங்களை பாதுகாப்பதற்கே ஆகும்.

உண்மையில் இஸ்லாம் அனைத்து மக்களைச் சார்ந்த மக்களுக்கும் சுதந்திரத்தில், தனித்துவத்தில் பாதுகாப்பில் உத்தரவாதம் வழங்குகிறது. மேலும் அவரவருடைய உரிமைகளைப் பாதுகாக்கிறது. அவர் தேர்வு செய்யும் வழியை, மார்க்கத்தை அவர் பின்பற்றி

நடக்கலாம் என்ற உரிமையை வழங்குகிறது. நான் திருக்குர்ஆனிலிருந்து ஒரு சில கருத்துக்களை மட்டும் கூறியுள்ளேன். இவை உலகின், சமூகத்தின் அனைத்து தர மக்களையும் ஒன்றிணைக்கக் கூடியவையாகும். இந்த போதனைகள் சமாதானத்தின் மதிப்பு மிக்க பொன்னால் ஆன திறவுகோல்கள் ஆகும். இவற்றை திருக்குர்ஆன் உலக மக்களிடம் ஒப்படைத்துள்ளது.

இந்த போதனைகளின்படி ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களும், அவர்களின் தோழர்களும் தூய்மையாக, நேர்த்தியாக வாழ்ந்து காட்டினார்கள். இறுதியாக நான்மீண்டும் வலியுறுத்திக் கூறுவது என்னவென்றால், உலகம் அமைதியை, பாதுகாப்பை நிலைநாட்டுவதற்காக ஏங்கிக் தவிக்கிறது. இதுவே இன்றைய காலத்தின் உடனடிப் பிரச்சனையாகும். எல்லா நாடுகளும் எல்லா மக்களும் ஒன்றிணைந்து ஒருமாபெரும் நன்மைக்காக மார்க்கத்தின் பெயரால் அல்லது வேறு காரணத்தால் இழைக்கப்படும் கொடுமை, அடக்குமுறை, அநீதி ஆகியவற்றிக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும். இதில் மார்க்கத்தை ஏளனம் செய்வதும் அடங்கும். அது ஏமாற்றத்தை, கடுங்கோபத்தைத் தூண்டுகிறது. மேலும் தீவிரவாதிகளின் வெறுக்கத்தக்க நடவடிக்கைகள், மார்க்கத்தின் பெயரால் செய்யப்படும் தீய செயலினை பொய்யாக நியாயப்படுத்துவது ஆகியவையும் அடங்கும். இன்னும் நாம் எல்லா நாடுகளுடனும் உண்மையுடன் நடந்து, உதவிக்கான வழிமுறைகளைத் தேட வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு நாடும் தனது ஆற்றலை அறிந்து கொண்டு முன்னேற முடியும். நாம் காணும் பொறாமை குணமும், போட்டி மனப்பான்மையும் செல்வத்தை அபகரிப்பதற்கான பேராசையால் ஏற்பட்டவையாகும். இது பற்றி திருக்குர்ஆன் மதிக்கத்தக்க போதனையைத் தருகிறது. ‘ஒருவர் மற்றவரின் செல்வங்களை பேராசைக் கண் கொண்டு பார்க்கக் கூடாது. இதனைக் கடைபிடிப்பதன் மூலம் உலக அமைதியை ஏற்படுத்த முடியும்.

சமூகத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் நீதியின் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அப்போது ஒவ்வொரு குடிமகனும் மத, இன, நிற பேதமின்றி மதிப்பு மரியாதையுடன் தன் சொந்தக் காலில் நிற்க இயலும். இன்று முதல் தர நாடுகள் தமது முதலீட்டை ஏழை

நாடுகளுக்கு, வளரும் நாடுகளுக்கு அதிமாக வழங்குவதைப் பார்க்க முடிகிறது. இதில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விஷயம் நீதியுடன் செயல்பட்டு உதவியைத் தேடுவதாக இருக்க வேண்டும். தமது சொந்த நாட்டு நலனுக்காக இலாப நோக்கத்தில் அவர்களின் இயற்கை வளங்களை அபகரிப்பது, குறைந்த ஊதியத்தில் பணியாளர்களை நியமிப்பது ஆகியவை கூடாது. அதனைக் கொண்டு அந்த மக்கள் முன்னேற, வளம் பெற உதவ வேண்டும்.

வளர்ச்சி அடைந்த நாடுகள் இவ்வாறு நடந்தால் அது ஏழை நாடுகளுக்கு மட்டும் கிடைக்கின்ற பலன் அல்ல; அதில் அவர்களுக்கும் பரஸ்பரம் நன்மை கிடைக்கும். இது உறுதிப்பாட்டையும், நம்பிக்கையையும் வளர்க்கும். மனதில் தோன்றும் ஏமாற்றத்தை அகற்றும்.

இவ்வாறு நடந்தால், ‘செல்வம் கொழிக்கும் நாடுகள் அவற்றைத் தவிர வேறெதனையும் கவனத்தில் கொள்வதில்லை. அநீதியான முறையில் நலிந்த, ஏழை நாடுகளின் வளங்களை சுரண்டி இலாபம் ஈட்டுகின்றன’ என்ற தோற்றத்தை அது நீக்கும்; இன்னும் அதனால் உள் நாட்டுப் பொருளாதாரம் அபிவிருத்தி அடையும்; அதன் காரணமாக உலகப் பொருளாதாரம் எழுச்சி பெறும். சீரான பணப் புழக்கத்திற்கு வழி வகுக்கும்.

நிச்சயமாக இதனால் உலகம் தழுவிய சமூக ஒற்றுமை, இரக்க குணம், மனிதத்துவம் ஆகியவை உதயமாகும். எல்லாவற்றிற்கும் மேலாக இவைதான் உண்மையான உலக சமாதானத்தின் அடித்தளமாகும். நாம் இவற்றிற்கு செவிசாய்க்கவில்லை என்றால் இன்றைய உலகின் சமாதானம் பேரழிவை ஏற்படுத்தும் உலகப் போராக உருவெடுத்து அதன் தாக்கம் பின்வரும் தலைமுறைகளிலும் தொடரும். அதனால் விளையும் தீங்கிற்கு நம் வம்சாவளிகள் நம்மை ஒருக்காலும் மன்னிக்கவே மாட்டார்கள்.

இந்த சொற்களுடன் நான் உங்களிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறேன். அல்லாஹ் உண்மையான சமாதானத்தை உலகில் தோன்றச் செய்வானாக.

மிக்க நன்றி.

தமிழாக்கம்:
J.Syed Anwar Ahmad



# உலகளாவிய சீர்கேட்டின் காலத்தில் சமாதானத்தின் திறவுகோல்கள்

## டோக்கியோ, ஜப்பான் – 2015





Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] leading silent prayer at a special reception in Tokyo, Japan.





Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] watering a plant at a special reception in Tokyo, Japan.



Ḥaḍrat Khalīfatul-Masīḥ V[aba] delivering keynote address at a special reception in Tokyo, Japan.

# முன்னுரை

23 நவம்பர் 2015 அன்று ஒடைபா, டோக்கியோவில் உள்ள ஹில்டன் ஹோட்டலில் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவரான கண்ணியத்திற்குரிய ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களை கவுரவிக்கும்பொருட்டு நடத்தப்பட்ட ஒரு சிறப்பான வரவேற்பு நிகழ்ச்சியின்போது அறுபதுக்கும் மேற்பட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர். இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கண்ணியத்துக்குரிய கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் 70 ஆண்டுகளுக்கு முன்னர் ஹிரோஷிமா, நாகசாஹி ஆகிய இடங்களில் நடந்த அணுகுண்டுத் தாக்குதலை நினைவு கூர்ந்தார்கள். முன்னதாக டோக்கியோ குழுமத் தொழில் நிறுவனர்களின் தலைவர் Dr. Mike sata Yasuhiko PhD (டாக்டர் மைக் ஸடா யாஸூஹிகோ) அவர்களும் 2011-ஆம் ஆண்டு பூகம்பம் மற்றும் சுனாமியால் பாதிப்புக்குள்ளான Tohoku (டொஹொகு) என்னுமிடத்தைச் சேர்ந்த Mr. Endo Shinichi (திரு. எண்டோ ஷினிசி) ஆகிய இரு விருந்தினர்களும் பார்வையாளர்களிடையே உரையாற்றினார்கள்.

# உலகளாவிய சீர்கேட்டின் காலத்தில் சமாதானத்தின் திறவுகோல்கள்

## 23, நவம்பர் 2015 ஹோட்டல் ஹில்டன், டோகியோ, ஜப்பானில் ஆற்றிய உரை

தஷஹ்ஹுது, த அவ்வுஸ் மற்றும் பிஸ்மில்லாவை ஓதிய பிறகு ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:

கண்ணியமிக்க விருந்தினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு.

அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உங்கள் அனைவர் மீதும் உண்டாவதாக.

முதற்கண் இன்றைய நிகழ்ச்சிக்கு நம் அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும் நமது விருந்தினர்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி கூறிக் கொள்கிறேன். நாம் இப்போது நிச்சயமற்ற ஆபத்தான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதன் காரணம் உலகின் நிலை மிகுந்த கவலைக் குரியதாக இருக்கிறது. பகைமையும், குழப்பமும் உலகை முற்றிலும் ஆக்கிரமித்து, நாடுகளுக்கிடையிலான அமைதியையும் பாதுகாப்பையும் அச்சுறுத்துகிறது.

முஸ்லிம் உலகை நாம் பார்ப்போமென்றால், பல நாடுகளிலும் அரசாங்கங்களே அவர்களது சொந்த மக்களோடு கடும் போர் செய்கின்றன. இரத்தம் சிந்துதல், அறிவற்ற வன்செயல் ஆகியவற்றின் மூலமாக அந்நாட்டின் கட்டமைப்புகள் முற்றிலும் அழிந்து கொண்டிருக்கின்றன. ஆதிக்கப் போட்டியில் நிலவும் வெற்றிடத்தை பயங்கரவாத குழுக்கள் தமக்கு சாதமாக பயன்படுத்தி குறிப்பிட்ட பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அவர்களின் சொந்த, பெயரளவிலான அரசையும், ஆட்சியையும் அமைத்துக் கொள்கின்றன. வெறுக்கத்தக்க வகையில் அவர்கள் நடந்து

கொள்கின்றனர். கற்பனையில் தோன்றும் மிருகத்தனமான கொடுமைமைகளை செய்கின்றனர். அவர்களின் சொந்த நாட்டில் மட்டுமல்லாமல் இப்போது ஐரோப்பாவுக்கும் வந்து விட்டனர். தற்போது பாரிஸில் நடந்த மிருகத்தனமான தாக்குதல் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையிலான பகை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இன்னும் சமீப காலத்தில் தென் சீனக் கடலில் அமெரிக்க போர்க் கப்பலின் வரம்பு மீறல் காரணமாக அமெரிக்காவுக்கும் சீனாவுக்குமிடையில் அதிகமான பதற்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் சர்ச்சைக்குரிய தீவுகள் குறித்து நீண்ட காலமாக இருந்து வரும் எல்லைப் புற விரோதம் நீங்கள் நன்கு அறிந்ததே ஆகும்.

இந்தியா பாகிஸ்தானுக்கு இடையிலான காஷ்மீர் விவகாரம் நிலையான விரோதத்திற்கு மூல காரணமாகும். அது தணியக் கூடிய எந்த அறிகுறியும் தென்படவில்லை. அதைப் போன்று இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான பதற்றங்கள் அப்பகுதியின் அமைதியையே அழித்து விட்டன.

ஆப்பிரிக்காவில் பயங்கரவாத குழுக்கள் தமது வலிமையைக் கொண்டு குறிப்பிட்ட பகுதிகளை தம் கட்டுப்பாட்டில் வைப்பதுடன், பரந்த அளவில் நாசத்தையும் பேரழிவையும் விளைவிக்கின்றன. நான் இக்காலத்தில் உலகம் எதிர் நோக்கியுள்ள சில விவகாரங்களை மட்டும் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் உண்மையில் கருத்து வேற்றுமைக்கும் அமைதியின்மைக்கும் இன்னும் பல உதாரணங்கள் உள்ளன.

அதனால், உலகம் வன்முறையாலும் குழப்பத்தாலும் சூழப்பட்டுள்ளது என்ற ஒருமுடிவுக்கே வர வேண்டியதுள்ளது. நவீன காலத்தில் போர் நடவடிக்கைக்கான வாய்ப்பு முந்தைய காலங்களை விட மிக அதிகமாக, பரந்த அளவில் உள்ளன. உலகின் ஒரு பகுதியில் நடக்கும் சண்டைகள் அப்பகுதியோடு அல்லது உள்ளூருடன் மட்டும் நின்று விடுவதில்லை. மாறாக, அதன் தாக்கமும், பின் விளைவுகளும் தொலை தூரம் வரை பரவி விடுகின்றன.

தகவல் தொடர்பு சாதனங்களும், துரித செய்தி ஊடகங்களும் உலகை ஓர் உலகளாவிய கிராமமாக மாற்றி விட்டன. முற்காலத்தில்

போர் என்பது நேரடியாக அதில் ஈடுபடுபவர்களின் எல்லைக்குட்பட்ட பகுதியில் மட்டுமே நடந்தது. ஆனால் உண்மையில் இப்போது ஒவ்வொரு பகைமை மற்றும் சண்டையின் பாதிப்பு முழு உலகையும் ஆட்கொண்டு விட்டது. உண்மையாகவே ஒரு பகுதியில் நடக்கும் போரின் பின் விளைவுகள் உலகின் ஏனைய பகுதிகளின் சமாதானத்தையும் ஒற்றுமையையும் பாதிக்கும் என நான் பல ஆண்டுகளாக எச்சரிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறேன்.

நாம் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், இருபதாம் நூற்றாண்டில் நடந்த இரண்டு உலகப் போர்களிலும் பயன்படுத்தப்பட்ட போர் ஆயுதங்கள் இன்றைய காலத்தின் நவீன ஆயுதங்கள் அல்லது நாசமாக்கும் ஆயுதங்களைப் போன்று இருக்கவில்லை. இருப்பினும் இரண்டு உலகப் போர்களில் மட்டும் ஏறத்தாழ 7 கோடி மக்கள் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவ்வாறு உயிரிழந்தவர்களில் பெரும்பாலார் பாமர மக்களே ஆவர். எனவே பேரழிவும் பெரும் நாசமும் இன்றைய நாட்களில் எண்ணிப் பார்க்க முடியாத அளவில் இருக்கும்.

இரண்டாம் உலகப் போரின்போது அமெரிக்காவின் வசம் அணு ஆயுதங்கள் இருந்தன. அவை மோசமான அழிவைத் தரக் கூடியவையாக இருந்தனவென்றாலும், இந்நாட்களில் உள்ள அணு ஆயுதங்களின் சக்திக்கு அருகில் கூட அவை வர முடியாது. அது மட்டுமின்றி, இப்போது வல்லரசுகள் மட்டும் அணு குண்டுகளை வைத்திருக்கவில்லை. மாறாக, அநேக சின்னஞ் சிறு நாடுகளும் கூட அவற்றை வைத்திருக்கின்றன.

ஒருவேளை வல்லரசு நாடுகள் ஏனையவற்றை பயமுறுத்துவதற்காக இத்தகைய ஆயுதங்களை வைத்திருக்கலாம். ஆனால் சிறிய நாடுகள் அத்தகைய கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. அவை அணு ஆயுதங்களை பயன்படுத்தாது என்று நாம் எடுத்துக் கொள்ள முடியாது. எனவே உலகம் பேரழிவின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

இரண்டாம் உலகப் போரின் முடிவில் உங்கள் நாடாகிய ஜப்பான் மிக பயங்கரமான அழிவையும், கற்பனைக் கெட்டாத துயரத்தையும் எதிர் நோக்க வேண்டியது வந்தது. மனித குலமே வெட்கப்படும் அளவுக்கு நடந்த அணு ஆயுதத் தாக்குதல் மூலம் நூற்றுக்கணக்கில் - ஏன் -

ஆயிரக்கணக்கில் உங்களது மக்கள் ஈவு இரக்கமில்லாமல் கொல்லப்பட்டனர். உங்களது இரு நகரங்கள் சிதைக்கப்பட்டு அழிக்கப்பட்டன. முற்றிலும் கொடிய இந்த அவலத்தைக் கண்டு அதனை சுமந்து கொண்ட பின்பும் அது போன்ற தாக்குதல் ஜப்பானிலோ அல்லது உலகில் எந்தப் பகுதியிலோ மீண்டும் நிகழ வேண்டும் என ஜப்பானிய மக்களாகிய நீங்கள் ஒருபோதும் விரும்ப மாட்டீர்கள். நீங்கள்தான், உண்மையில் இந்த அணு ஆயுதப் போரின் பயங்கரமான, நாசகரமான விளைவுகளை உணர்ந்துள்ளீர்கள்.

நீங்கள்தான், அதன் நேரடி பாதிப்புகளும், பின் விளைவுகளும் ஒருதலைமுறைக்கு மட்டுமல்ல; மாறாக, இனி வரும் தலைமுறையையும் அது பாதிக்கின்றது என்பதை அறிந்துள்ளீர்கள். நீங்கள்தான் அணு ஆயுதங்களால் முன்னெப்போதும் நிகழ்ந்திராக தீமைக்கு சாட்சியாவீர்கள். ஆகவே ஜப்பானிய மக்களை விட வேறெந்த நாடும் அமைதியின் பாதுகாப்பின் உயர் மதிப்பை அதிகமாக தெரிந்திருக்க முடியாது.

ஜப்பான் தற்போது அதிலிருந்து மீண்டு, உயர்வான வளர்ச்சியடைந்த நாடாக மாறியுள்ளது என்பது நன்றியுடன் கூறத் தகுந்ததாகும். எனவே உங்களின் கடந்த கால நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு பார்ப்பதாக இருந்தால், ஜப்பான் சமாதானத்தை உலகில் நிலைபெறச் செய்வதில் தன் பங்கை ஆற்ற வேண்டும்.

ஆயினும் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்த பின் தொடர்ந்து ஜப்பானுக்கெதிராக சில தடைகளும், கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன என்பது மிகவும் வருத்தத்திற்குரியதாகும். அதனால் உங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் ஆயத்தங்களை செய்வது அல்லது உலகை பொதுவாக ஒரே வடிவில் வடிவமைப்பது உங்களுக்குக் கடினமாக இருந்திருக்கலாம். இருந்தபோதிலும் உங்கள் நாடு சர்வதேச பிரச்சனைகளிலும், அரசியல் விவகாரங்களிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆகவே நீங்கள் உங்களின் மிகுதியான செல்வாக்கை நல்ல, சாத்தியமான வழியில் கொண்டு வர பாடுபட வேண்டும்.

இந்த ஆண்டில் வரலாற்றில் அந்த கொடூரமான நிகழ்வு நடந்து 70 ஆண்டுகள் ஆகி விட்டன. ஹிரோஷிமாவிலும் நாகசாகியிலும் அணுகுண்டுகள் போடப்பட்டு பேரழிவு, பெருந்துயரம், கடும் வேதனை

ஆகியவை அந்த நாட்களில் உங்கள் நாட்டின் மீது இழைக்கப்பட்டது. அந்தப் பேரழிவின், படுகொலையின் சரியான வரைபடத்தை நீங்கள் அருங்காட்சியகங்களில் உருவாக்கி இருப்பதாலும் அணு குண்டுகளின் வீரியம் இன்று வரை தொடர்ந்து கொண்டிருப்பதாலும் எத்தகைய ஆபத்தான போர் நடவடிக்கையும் மோதலுமாக இவை இருந்திருக்க முடியும் என்று ஜப்பானிய மக்கள் புரிந்து கொள்கிறார்கள்.

நான் முன்பே குறிப்பிட்டது போன்று, இந்த அவலத்தை நீங்கள் சுமந்து கொண்டதுடன் உண்மையில் போருக்குப் பின் ஜப்பான் மீது கொடுமையான, முற்றிலும் தேவையற்ற கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டன. ஆண்டுகள் பல சென்றாலும் அவை போரின் நாசமான விளைவுகளை நினைவூட்டிக் கொண்டிருக்கும். ஜப்பானுக்கு எதிரான அணு ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டபோது அக்காலத்தில் இருந்த அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர், எங்களின் இரண்டாவது கலீஃபா (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் இந்தத் தாக்குதலை கடுமையான சொற்களால் வன்மையாகக் கண்டித்தார்கள். அவர்கள் கூறினார்கள்:

''எங்களின் மார்க்க, நன்னடத்தை குறித்த போதனைகள் எங்களை முழு உலகின் முன்பாக அறிவிக்கும்படிக் கூறுவது என்னவெனில், இந்தக் கொடூரமான செயலையும், இரத்தம் சிந்துதலையும் எந்த சந்தர்ப்பத்திலும் - அது எதுவாக இருப்பினும் நியாயப்படுத்தவே முடியாது. சில அரசாங்கங்கள் நான் கூறுவதை விரும்பாவிட்டாலும் அது என்னிடத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது.''

மேலும் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் கூறினார்கள்: ''இனி வருங்காலங்களில் போரில் எவ்வித குறைவும் ஏற்படுவதாகத் தென்படவில்லை; இன்னும் சொல்லப்போனால் பலாத்காரமும் குரோதமும் அதிகமாகிக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றோம்.''

அவர்கள் கூறிய எச்சரிக்கைகள் முற்றிலும் உண்மை என்று இன்றைய நாட்களில் நிரூபணமாகின்றது. மூன்றாம் உலகப் போர் பற்றி முறையாக அறிவிக்கப்படவில்லை என்றாலும் உண்மையில் ஓர் உலகளாவிய போர் ஏற்கனவே நடந்து கொண்டிருக்கிறது. முழு உலகிலும் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும்

கொல்லப்படுகின்றனர்; சித்திரவதைக்குள்ளாகின்றனர். மேலும் நெஞ்சத்தை உலுக்கும் கொடுமைகளுக்கு ஆளாகின்றனர்.

எங்களைப் பொருத்தமட்டில், உலகில் நிகழும் ஒவ்வொரு கொடுஞ் செயலுக்கும், அடக்குமுறைகளுக்கும் - அது எங்கு நடந்தாலும் சரியே - அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தனது கண்டனத்தைத் தெரிவிக்கின்றது. ஏனெனில் இஸ்லாத்தின் போதனைகள் அநீதிக்கு எதிராகக் குரல் கொடுப்பதையும் தேவையுடையவர்களுக்கு அல்லது அநீதிக்கு ஆளானவர்களுக்கு உதவி செய்வதையும் வலியுறுத்துகிறது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இரண்டாவது தலைவர் இரண்டாவது உலகப் போரின்போது ஜப்பானுக்கு எதிராக அணு குண்டுகள் உபயோகிக்கப்பட்டதற்கு வன்மையாக கண்டனம் தெரிவித்தார்கள் என்று நான் முன்பே குறிப்பிட்டிருந்தேன்.

இன்னும் உலகில் மிகப் பிரபலமான, நன்கு அறியப்பட்ட, உயர் அந்தஸ்தைப் பெற்ற, செல்வாக்கு மிக்க ஓர் அஹ்மதி முஸ்லிம் ஜப்பானுக்கும் அம்மக்களுக்கும் ஆதரவாக இவ்விஷயத்தைத் தாமே கையாண்டார்கள். நான் சர். சவுத்ரி முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் அவர்களைப் பற்றிக் கூறுகிறேன். அவர்கள் பல்வேறு முக்கியமான சர்வதேச உயர் பதவிகள் வகித்ததுடன் பாகிஸ்தானின் முதல் வெளியுறவுத் துறை அமைச்சராகவும், பின்னர் ஐக்கிய நாடுகளின் பொது சபையில் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்கள். இரண்டாம் உலகப் போரின் முடிவில் சில சக்திகள் ஜப்பான் மீது முறையற்ற கட்டுப்பாடுகளைத் திணிக்க முயற்சிகளை மேற்கொண்டன. இதற்கு அவர்கள் வெளிப்படையாகக் கண்டனத்தைத் தெரிவித்தார்கள்.

1951-ஆம் ஆண்டில் சான்ஃபிரான்ஸிஸ்கோ சமாதான உச்சி மாநாட்டில் பாகிஸ்தானின் பிரதிநிதிக் குழுவின் தலைவர் என்ற முறையில் சவுத்ரி சர். முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

''ஜப்பானுடன் சமாதானம் செய்து கொள்வது நீதியின் அடிப்படையில், சமரசத் தீர்வின் அடிப்படையில் இருத்தல் வேண்டுமேயொழிய பழிக்குப் பழி வாங்குதல், அடக்குமுறை ஆகியவற்றில் இருத்தல் கூடாது. அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பில் தொடர்ச்சியாக தோற்றுவிக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களின் பயனாக

ஜப்பான் பிரகாசமான முன்னேற்றத்தில் வெற்றி கண்டு, சமாதானத்தை விரும்பும் நாடுகள் மத்தியில் சரிசமமான நிலையினை எய்தும் தகுதியினைப் பெற்று விடும். அதன் விளைவாக வருங்காலத்தில் ஜப்பான் முக்கிய பங்கை வகிக்கும் நாடாக ஆகி விடும்.''

அவர்களின் உரை திருக்குர்ஆனின் போதனையையும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புனித வாழ்க்கையையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. இஸ்லாத்தின் உண்மையான போதனைகளின்படி, அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ''போரில் வெற்றி கண்டவர் எவ்விதத்திலும் அநீதியில் ஈடுபடக் கூடாது. தோல்வியுற்றவர்களின் எதிர்கால முன்னேற்றத்தை, வளர்ச்சியை தடுத்து நிறுத்தும் பொருட்டு தேவையற்ற தடைகளை அவர்களின் மீது திணிக்கக் கூடாது.''

சவுத்ரி சர். முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையை ஜப்பானின் நலனுக்காக ஆற்றியுள்ளார்கள். ஏனெனில் அவர்கள் ஓர் அஹ்மதி முஸ்லிம் என்ற முறையில் வெறுமனே பாகிஸ்தானின் பிரதிநிதியாக மட்டும் இருக்கவில்லை; அத்துடன் முதலாவதும் மிக முக்கியமானதுமான கண்ணியத்திற்குரிய இஸ்லாத்தின் போதனைகளின் பிரதிநிதியாகத் திகழ்ந்தார்கள்.

எனவே முன்னர் நான் கூறியபடி, நீங்கள்தான் அந்த மக்கள்; போர் நடவடிக்கைகளின் விளைவுகளை, கொடுமைகளை மற்றவர்களை விட நன்கு உணர்ந்தவர்கள்.மேலும் எல்லா மட்டத்திலும் ஒவ்வொரு சாத்தியமான வழியிலும் ஜப்பானிய அரசாங்கம் எல்லாவிதமான மனிதாபிமானமற்ற செயலையும், அடக்குமுறையையும், அநீதியையும் எதிர்த்து, அவற்றைத் தடுப்பதற்கு முயல வேண்டும். அவர்கள் எதிர்கொண்ட இத்தகைய வெறுக்கத்தக்க தாக்குதல்கள் வருங்காலத்தில் உலகில் எங்கும் மீண்டும் நடக்கக் கூடாது என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

எப்போதெல்லாம் போருக்கான தீச்சுடர் எரியூட்டப்படுகிறதோ அப்போது ஜப்பானின் தலைவர்களும் மக்களும் அந்த பதற்றமான சூழ்நிலையை எளிதானதாக மாற்றிஅமைதியை நிலைநாட்ட தங்கள் கடமையை ஆற்ற வேண்டும். சில மக்களின் எண்ணப்படி, இஸ்லாம் அநாகரிகமான, கொடுமை இழைக்கும் மார்க்கமாகப் பார்க்கப்படுகிறது.

அவர்களின் இத்தகைய முடிவுக்கு ஆதாரமாக முஸ்லிம் உலகில் நிலவும் தடையற்ற பயங்கரவாதத்தையும், போர் நடவடிக்கைகளையும் கோடிட்டுக் காட்டுகிறார்கள்.

எவ்வாறிருப்பினும் அவர்களது எண்ணம் முற்றிலும் தவறானதாகும். உண்மையில் சமாதானத்தைக் குறித்து இஸ்லாத்தின் போதனைகளுக்கு ஈடு இணை உலக வரலாற்றில் எங்கும் காணக் கிடைக்காது. அதனால்தான், எங்களின் இரண்டாவது கலீஃபா அவர்களும், சவுத்ரி சர். ஸஃபருல்லாஹ் கான் அவர்களும் (ஜப்பானாகிய) உங்கள் நாட்டிற்கு எதிராக நடந்த கொடுமைக்கு வன்மையாக எதிர்ப்புக் குரல் கொடுத்தார்கள்.

நான் இப்போது மிகவும் சுருக்கமாக உண்மையில் இஸ்லாத்தின் போதனைகள் என்ன என்பதைக் குறித்து விளக்க முயற்சி செய்கிறேன்.

அடிப்படைக் கொள்கையாக இஸ்லாம் கூறுவது, எல்லை நிர்ணய அரசியலுக்காக அல்லது பொருளாதார ஆதாயத்திற்காக அல்லது இயற்கை வளங்களை தம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காகச் செய்யப்படும் போர் அனைத்தையும் நியாயப்படுத்தவே முடியாது என்பதாகும். திருக்குர்ஆனில் மேன்மைக்குரிய அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்:

போரின்போது கொடுக்கப்படும் எந்தவொரு தண்டனையும் குற்றம் இழைக்கப்பட்ட அளவுக்கே கொடுக்கப்பட வேண்டும். எந்த வகையிலும் அந்த வரம்பை கடந்து விடக் கூடாது. போர் முடிவுக்கு வந்த பின்னர் மன்னித்தலும், பொறுமையைக் கடைபிடித்தலும் சிறந்தது எனத் திருக்குர்ஆன் கூறுகின்றது. (16:126 காண்க)

அது போன்று திருக்குர்ஆனில் எப்போது இருதரப்புகளுக்கிடையில் உறவு முறிவு, போருக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுமோ அப்போது எதிர் தரப்பினர் சமரசத்தை நாடும் பட்சத்தில், மற்ற அமைப்பு அதை ஏற்றுக் கொண்டு அல்லாஹ்விடத்தில் நம்பிக்கை வைத்தல் வேண்டும். எதிர் தரப்பினரின் இத்தகு நடவடிக்கை மற்றும் உண்மைதன்மை குறித்து எதுவும் யூகம் கொள்ளக் கூடாது என்று திருக்குர்ஆன் கூறுகிறது. (8:62 காண்க). மாறாக, ஒரு சமாதானத் தீர்வு எட்டப்படுவதற்காக பாடுபட வேண்டும். திருக்குர்ஆனின் இந்த போதனை

நாடுகளுக்கிடையில் அமைதியை நிலைநாட்டுவதற்கு முக்கிய கோட்பாடாக விளங்குகிறது.

திருக்குர்ஆனில் வல்லமை மிக்க அல்லாஹ் இவ்வாறு கட்டளையிடுகின்றான்: ஒரு நாட்டின், மக்களின் மீதுள்ள பகைமை உங்களை நீதியின், நேர்மையின் கோட்பாடுகளை கைவிடும்படித் தூண்ட வேண்டாம். இஸ்லாம் எல்லா சந்தர்ப்பங்களிலும் - அது எத்தகைய இக்கட்டான சவாலுக்குரிய நேரமாக இருப்பினும் நீதி, நேர்மையின் அம்சங்களை வலுவாகப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று போதிக்கின்றது. உண்மையில் நீதியுடன் நடப்பதில்தான் உறவுகள் மேம்படுகின்றன; வஞ்சகச் செயல்கள் களையப்படுகின்றன; போருக்கான ஆயத்தங்கள் ஒழிக்கப்படுகின்றன. திருக்குர்ஆனில், போரில் வென்ற பின்னர் போர்க் கைதிகளை விடுவிக்க ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயம் செய்து கொள்ளுங்கள். அத்தொகை நியாயமானதாக இருக்கட்டும். அவ்வாறிருந்தால் அதனை அவர்கள் எளிதில் கொடுத்து விடுவார்கள். அதனை நீங்கள் தவணை முறையில் செலுத்த அனுமதித்தால் மிகவும் நல்லது என்று கூறப்பட்டுள்ளது. (24:34 காண்க).

அமைதியை ஏற்படுத்த ஓர் உன்னதமான போதனையை திருக்குர்ஆன் நமக்கு இவ்வாறு கற்றுத் தருகிறது. நாடுகளுக்கிடையே, அமைப்புகளுக்கிடையே குழப்பம் நிலவினால் மூன்றாம் தரப்பு சமரச முயற்சியில் ஈடுபட்டு, சமாதானத் தீர்வை எட்டச் செய்ய வேண்டும். உடன்பாடு ஏற்பட்டு பின்னர் ஒரு தரப்பினர் நியாயமற்ற முறையில் சமரச உடன்படிக்கையை மீறினால் அப்போது ஏனைய நாடுகள் ஒன்று கூடி, தேவைப்பட்டால் ஆற்றலை பயன்படுத்தி முதலில் வரம்பு மீறுபவரை தடுக்க வேண்டும். என்றாலும் வரம்பு மீறும் செயலில் ஈடுபடும் பிரிவு பின்வாங்கி விட்டால், அதன் மீது முறையற்ற தடைகளை விதித்தல் கூடாது. அதற்கு பதிலாக, அதனை சுதந்திர நாடாக, விடுதலை பெற்ற சமூகமாக முன்னேற அனுமதிக்க வேண்டும். இன்றைய உலகில் இத்தகைய கோட்பாடுகள் குறிப்பாக வல்லரசுகளுக்கும், ஐக்கிய நாட்டு சபை போன்ற சர்வதேச அமைப்புகளுக்கும் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவையாகும். மதிப்பு மிக்க இந்த போதனையை அவர்கள் செயல்படுத்தினால் உண்மையான சமாதானமும், நீதியும் உலகில் நிர்மாணிக்கப்பட

முடியும்.மேலும் தேவையற்ற ஏமாற்றங்கள் தானாகவே அழிந்து போய் விடும்.

இதைப் போன்று, உலகில் அமைதியை எப்படி உருவாக்கலாம்? எல்லாப் போர்களையும் எப்படி முடிவுக்குக் கொண்டு வரலாம்? என்பது குறித்து திருக்குர்ஆனில் இன்னும் ஏராளமான கட்டளைகள் உள்ளன. அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய நமது இறைவன் அமைதிக்கான திறவுகோலை நம்மிடம் ஒப்படைத்துள்ளான். ஏனெனில் அவனே, தனது படைப்பினங்கள் எல்லாவித வெறுப்பையும் கருத்து வேற்றுமையையும் களைந்து ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று விரும்புகிறான்.

இவற்றை எடுத்துரைத்த பிறகு நான் உங்களிடம் கேட்டுக் கொள்வது என்னவென்றால், சமாதானத்தை, ஒற்றுமையை உலகில் பரவச் செய்ய நீங்கள் உங்கள் செல்வாக்கை பயன்படுத்த வேண்டும். உலகில் எங்கு குழப்பம், சண்டை சச்சரவு ஏற்பட்டாலும் நீதிக்காக எழுந்து நின்று அமைதியை நிலைநாட்ட கடுமையாக உழைக்க வேண்டும். இது நமது ஒருங்கிணைந்த பணியாகும். அப்போதுதான் 70 ஆண்டுகளுக்கு முன் நடந்த அந்த பயங்கரமான போர் - அதன் பேரழிவின் விளைவுகள் பல ஆண்டுகளாக இன்றும் கூடத் தொடர்கின்றன - அது போன்ற ஒரு போரிலிருந்து நாம் பாதுகாப்பாக இருக்க முடியும். ஒரு சிறிய அளவிலான மற்றோர் உலகப் போர் ஏற்கனவே துவங்கி விட்டது. நிலைமைகள் இன்னும் மோசமாகி முழு உலகையும் சூழ்ந்து கொள்ளும் முன்பாக, வெறுக்கத்தக்க பயங்கர ஆயுதங்கள் நம் வருங்கால சந்ததிகளை அழிப்பதற்காக மீண்டும் பயன்படுத்தப்படுவதற்கு முன்பாக நாம் நமது கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

எனவே நாம் நமது கடமையை நிறைவேற்றுவோம்; ஒன்றிணைவோம். எதிர் அணிகளில் ஒன்றிணைவதற்கு பதிலாக எல்லாரும் ஒன்றுசேர்ந்து ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பை நல்குவோம். நமக்கு இதை விடுத்து வேறு வழியில்லை. ஏனெனில் மூன்றாம் உலகப் போர் முழுமையான ஆற்றலுடன் வந்தால் அதனால் ஏற்படும் பேரழிவும், பெரும் நாசமும் கற்பனைக்கு எட்டாததாக இருக்கும். முன்பு நடந்த போர்களை இதனுடன் ஒப்பிடும்போது அவை மிகவும் சிறியவைதான். அதில் எவ்வித சந்தேகமும் இல்லை என்று அப்போது

நாம் எண்ணிப் பார்ப்போம்.

உலகம், இன்னும் அதிகமாக காலம் தாழ்த்துவதற்கு முன்பாக, இக்கட்டான சூழ்நிலையை உணர்ந்து கொள்ள முன் வர வேண்டும். மனித இனம் வல்லமை மிக்க இறைவன் முன்பு குனிந்துவிட வேண்டும். அவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும் ஒருவர் மற்றவருக்கு செய்ய வேண்டிய கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும். அதற்காக நான் பிரார்த்தனை செய்கிறேன்.

அல்லாஹ் மார்க்கத்தின் பெயரால் குழப்பங்களை ஏற்படுத்துவோருக்கும், எவர் எல்லை நிர்ணய அரசியலுக்காக அல்லது பொருளாதார இலாபமடைவதற்காக போரிட முனைவாரோ அவருக்கும் ஞானத்தையும் அறிவையும் வழங்குவானாக. எப்படிப்பட்ட அறிவற்ற, நாசத்தை விளைவிக்கும் பணியை அவர்கள் பின் தொடர்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்வார்களாக. அல்லாஹ் உண்மையான, நீடித்திருக்கும் அமைதியை உலகில் எல்லாப் பகுதிகளிலும் தழைத்தோங்கச் செய்வானாக. ஆமீன்.

இந்த சொற்களுடன் இன்றைய நிகழ்ச்சியில் நீங்கள் கலந்து கொண்டமைக்கு மீண்டும் நான் உங்கள் அனைவருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

மிக்க நன்றி.

தமிழாக்கம்:

J.Syed Anwar Ahmad

# உலக தலைவர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்கள்

# புனித 14–ஆவது போப் பெனடிக்ட் அவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம்

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

بسم الله الرحمن الرحيم
نحمده ونصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
هو الناصر

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

31 அக்டோபர் 2011

புனித 14-ஆவது போப் பெனடிக்ட் அவர்களுக்கு,

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கருணையும் அருளும் உங்கள் மீது உண்டாவதாக என்பதே பிரார்த்தனையாகும்.

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் தலைவர் என்ற முறையில், திருக்குர்ஆனின் செய்தியை புனித 14-ஆவது போப் அவர்களுக்கு நான் எட்ட வைக்கின்றேன். திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

''வேதத்தையுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் ஒன்றுபட்ட ஒரு கருத்தின் பக்கம் வாருங்கள். (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறெவரையும் வணங்க மாட்டோம். அவனுக்கு வேறெதனையும் இணை வைக்க மாட்டோம். அல்லாஹ்வை விட்டு விட்டு நம்மில் சிலர், வேறு சிலரை கடவுள்களாக ஆக்கிக் கொள்ள மாட்டோம்.'' *(திருக்குர்ஆன் 3:65)*

இஸ்லாம் இன்று உலகில் மிகவும் பரவலாகவும், உன்னிப்பாகவும் கண்காணிக்கப்படுகிறது. மேலும் தீய குற்றச்சாட்டுகளால் தொடராகத் தாக்கப்பட்டு வருகிறது. எப்படி இருப்பினும், **இந்தக் குற்றச்சாட்டுகள், இஸ்லாத்தின் போதனைகள் எதையும் படிக்காதவர்களால் செய்யப்படுகின்றன. துரதிஷ்டவசமாக சில இஸ்லாமிய அமைப்புகள் தங்களின் சுயநலத்திற்காக மட்டும் இஸ்லாத்தை தவறான வகையில் படம்பிடித்துக் காட்டியுள்ளன.** இதன் காரணமாக முஸ்லிம் அல்லாத மற்றும் மேற்கத்திய நாடுகளுடைய மக்களின் உள்ளங்களில் முஸ்லிம்களின் மீது அவநம்பிக்கை அதிகரித்துள்ளது. இது எதுவரை என்றால் மிகவும் கற்றறிந்த மக்கள் கூட இஸ்லாத்தின் தூய தோற்றுநர் ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மீது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கூறும் அளவுக்கு சென்று விட்டது.

**மனிதனை இறைவனுக்கு அருகில் கொண்டு செல்வதும் மனித நேயத்தை உருவாக்குவதும்தான் ஒவ்வொரு மதத்தின் நோக்கமாக உள்ளது. எந்த மதத்தின் தோற்றுநரும் தன்னைப் பின்பற்றியவர்களை அடுத்தவர் உரிமையைப் பறிப்பதற்கோ, கொடுமை செய்வதற்கோ போதிக்கவில்லை!** எனவே தவறாக வழிநடத்தப்பட்ட சில சிறுபான்மை முஸ்லிம்களின் செயல்களை அளவுகோலாக வைத்து இஸ்லாம் மற்றும் அதன் தோற்றுநர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது தாக்கக் கூடாது. இஸ்லாம் எல்லா இறைதூதர்களையும் மதிக்குமாறு கூறுகிறது. எனவேதான் புனித பைபிள் அல்லது திருக்குர்ஆனில் கூறப்பட்ட இயேசு கிறிஸ்து (அலை) அவர்கள் வரையுள்ள அனைத்து இறைதூதர்கள் மீதும் நம்பிக்கை வைப்பது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கட்டாயம் ஆகிறது. **நாங்கள் புனித முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தாழ்மையான ஊழியர்கள் ஆவோம்; எனவே நாங்கள் புனித முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களால் மிகவும் துயரப்பட்டுள்ளோம்.** அதற்குப் பகரமாக நாங்கள் அவர்களின் நற்பண்புகளை உலகிற்கு எடுத்து வைத்துக்கொண்டிருக்கின்றோம். மேலும் புனித குர்ஆனின் அழகிய போதனைகளையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

ஒருவர் குறிப்பிட்ட ஒரு போதனையை சரியாகப் பின்பற்றாமல் அதைச் சார்ந்தவர் எனக் கூறினால் அவர்தான் தவற்றில் உள்ளாரேயன்றி அந்த போதனையில் அல்ல. **'இஸ்லாம்' என்பதன் பொருளே, அமைதி, அன்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவையாகும்.** திருக்குர்ஆனின் முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரை அன்பு, நேசம், அமைதி, நட்புறவு மற்றும் தியாக மனப்பான்மையையே போதிக்கின்றது. எவர் ஒருவர் இறையச்சத்தைக் கடைபிடிக்கவில்லையோ அவர் அல்லாஹ்வை விட்டு வெகு தூரம் செலுத்தப்படுவார். மேலும் இதன் மூலம் இஸ்லாமிய போதனைகளிலிருந்தும் அவர் வெகு தூரம் சென்று விடுவார் என புனித குர்ஆன் அடிக்கடி கூறுகிறது. **எனவே எவராவது இஸ்லாத்தை தீவிரவாதம் மற்றும் இரத்த வெறி பிடித்த போதனைகளால் நிரம்பிய கொடூரமான மதம் என சித்தரித்தால், அப்படிப்பட்ட சித்தரிப்பிற்கு இஸ்லாத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை.**

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உண்மையான இஸ்லாத்தையே பின்பற்றுகிறது. மேலும் அது எல்லால் வல்ல இறைவனை மகிழ்விப்பதற்காகவே தனது பணியை செய்கிறது. ஏதாவது கிறிஸ்தவ தேவாலயமோ அல்லது வணக்கஸ்தலமோ பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அப்போதும் அவர்களோடு தோளோடு தோள் சேர்த்து அவர்களுடன் நாங்கள் இருப்பதை அவர்கள் காண்பார்கள். ஏதாவது ஒரு செய்தி எங்களது பள்ளிவாயிலிலிருந்து ஒலிக்கிறதென்றால், அது அல்லாஹ் மிகப் பெரியவன் என்றும் அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை; முஹம்மது (ஸல்) அவர்கள் அவனுடைய திருத் தூதர் ஆவார் என்பது மட்டுமே இருக்கும். தம்மை அறிவாளிகள், மெத்தப்படித்தவர்கள் மற்றும் சுதந்திரப்படுத்தப்பட்டவர்கள் எனக் காட்டிக் கொள்பவர்கள், 'மத தோற்றுநர்களை கேலியும் கிண்டலும் செய்ய சுதந்திரம் வழங்கப்பட்டவர்கள்' என்ற ஒரு விஷயம்தான், உலகில் அமைதியைக் கெடுப்பதில் ஒரு பெரும் பங்கு வகிக்கிறது. சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்றால் ஒருவரது சகிப்புத்தன்மையை அதிகப்படுத்த வேண்டும். மேலும் ஒருவரது மனதிலுள்ள எல்லா வெறுப்பின் உணர்வுகளை களைய வேண்டியது அவசியமாகும். மற்றவரது இறைதூதர்களின் மதிப்பையும் மரியாதையையும் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது. இந்த உலகம் அமைதியின்மையையும் கடினத்தையும் கடந்து கொண்டிருக்கிறது. அன்பு மற்றும் நேசம் கொண்ட சூழலை உருவாக்கினால் இந்த பயம் மற்றும் கவலையை போக்கலாம். சுற்றி இருப்பவர்களிடம் அன்பு மற்றும் சமாதானத்தின் செய்தியை எட்ட வைத்தால் பெரும் நல்லிணக்கத்துடன் வாழக் கற்றுக் கொள்ளலாம். மேலும் இவ்வழியில் மேன்மையை நாம் அறியலாம்.

இன்று, உலகில் சிறு அளவிலான போர்கள் கிளம்பியுள்ளன; மற்றும் **சில இடங்களில் வல்லரசுகள் அமைதியைக் கொண்டு வர முயலுவதாகக் கூறி வருகின்றன. மேலோட்டமாக நமக்கு ஒன்று கூறப்படுகிறது. ஆனால் திரை மறைவில் அவர்களது முன்னுரிமைகளும், கொள்கைகளும் இரகசியமாக நிறைவேற்றப்படுகின்றன. இந்தச் சூழலில் உலகில் அமைதியை நிலைநாட்ட முடியுமா என்பது கேள்வி.** கவலையுடன் தற்போதுள்ள உலகின் சூழலை நாம் கூர்ந்து கவனித்தால், மற்றோர் உலகப்

போருக்கான அடிக்கல் நாட்டப்பட்டு விட்டதைக் காணலாம். இரண்டாம் உலகப் போருக்குப் பின் சமத்துவ வழியில் நீதியைப் பின்பற்றி இருந்தால், நாம் தற்போதுள்ள உலகின் நிலையைக் கண்டிருக்க மாட்டோம். இதன் மூலம், மீண்டும் அது போர் என்னும் நெருப்பால் சூழப்பட்டிருக்காது. நிறைய நாடுகள் அணு ஆயுதங்களையும் கடுங்கோபம், பழியுணர்ச்சி ஆகியவற்றைக் கொண்டுள்ளதன் விளைவாக பகைமை பெருகிக் கொண்டே செல்கிறது. **மேலும் உலகம் அழிவின் உச்சியில் உட்கார்ந்துள்ளது. இந்தப் பேரழிவு ஆயுதங்கள் வெடித்தால், அநேக எதிர்கால சந்ததியினர் நிரந்தர ஊனத்தை தம் மீது திணித்ததற்காக அவர்கள் நம்மை மன்னிக்க மாட்டார்கள்.** படைத்தவனின் உரிமை மற்றும் அவனது படைப்பினங்களின் உரிமையின் மீது கவனம் செலுத்துவதற்கு உலகிற்கு இன்னும் நேரம் உள்ளது.

நான் கருதுவது என்னவெனில், தற்போது உலகின் முன்னேற்றத்தின் பக்கம் கவனம் செலுத்துவதை விட அதிமுக்கியமாக அதன் அழிவிலிருந்து காப்பாற்ற நாம் அவசரமாகவும் அவசியமாகவும் முயற்சி எடுக்க வேண்டும். மனித குலம் தனது படைத்தவனை அறிந்து கொள்வது, அவசர தேவையாக உள்ளது. ஏனெனில், அவன் ஒருவன்தான் மனித குலம் நிலைத்து நிற்க உத்தரவாதம் தரக்கூடியவன். இல்லையென்றால், இந்த உலகம் சுய அழிவை நோக்கி விரைவாக செல்கிறது. இன்று, மனிதன் உண்மையில் அமைதியை நிலைநாட்டுவதில் வெற்றி கொள்ள விரும்பினால் மற்றவர்கள் மீது குற்றம் காண முயல்வதை விட, அவனிடம் உள்ள ஷைத்தானை அவன் கட்டுப்படுத்த வேண்டும். தனது தீமையை களைவதன் மூலம் ஒருவன் நீதியின் அருமையான உதாரணத்தை வெளிப்படுத்த வேண்டும். நான் உலகத்திற்கு அடிக்கடி நினைவூட்டுவது என்னவென்றால், அடுத்தவர் மீதுள்ள இந்த அதிகப்படியான விரோதம் மனித மேன்மையை வலுக்கட்டாயமாக முழுமையாகப் பறித்து விடுகிறது. எனவே இது உலகை முழுமையான அழிவை நோக்கி இட்டுச் செல்கிறது.

உலகில் நீங்கள் ஒரு செல்வாக்கு நிறைந்த குரலைக் கொண்டுள்ளீர்கள். இறைவனால் ஏற்படுத்தப்பட்ட இயற்கை சமநிலையின் வழியில் தடைகளை ஏற்படுத்தினால் அவர்கள்

விரைவாக பேரழிவை நோக்கி செல்வார்கள் என்பதை நீங்களும் பரந்த இந்த உலகத்திற்குத் தெரியப்படுத்துங்கள் என நான் உங்களிடம் வேண்டுகிறேன். இந்தத் தூதுச் செய்தி, அதிக முன்னுரிமையுடன் பரவலாகவும், விரிவாகவும் முன் எப்போதும் இல்லாத வகையில் பரப்பப்பட வேண்டும்.

உலகில் உள்ள எல்லா மதங்களும், மத நல்லிணக்கத்தின் தேவையில் உள்ளன. உலகின் எல்லா மக்களிடமும் அன்பு, நேசம் மற்றும் சகோதரத்துவம் உருவாக்கப்பட வேண்டும். எனது பிரார்த்தனை என்னவெனில், நாம், நமது பொறுப்பை உணர்ந்து, அமைதி மற்றும் அன்பை நிலைநாட்டுவதிலும், படைத்தவனைப் புரிந்து கொள்ள வைப்பதிலும் நமது பங்கை ஆற்ற வேண்டும். மேலும் இந்த உலகின் அழிவைத் தடுக்குமாறு அல்லாஹ்விடம் நாங்கள் தொடர்ந்து மன்றாடுகிறோம். நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற இந்த அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்ற நான் பிரார்த்தனை செய்கின்றேன்.

தங்களின் நேர்மையுள்ள,



மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின்

தலைவர்

# இஸ்ரேலிய பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதம்

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
ھو الناصر

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

26 பிப்ரவரி 2012

மேதகு, திரு பெஞ்சமின் நெட்டன் யாஹூ
இஸ்ரேலிய பிரதமர்
ஜெருஸலம்

அன்பான பிரதமரே!

நான் சமீபத்தில், உலகில் நிலவும் ஆபத்து மிகுந்த சூழலை பற்றி, இஸ்ரேலிய அதிபர் ஷைமன் பேரஸுக்கு ஒரு கடிதம் எழுதி இருந்தேன். விரைவாக மாறும் சூழலில் உள்ள விஷயத்தை தங்களது நாட்டின் அரசுத் தலைவர் என்ற முறையில் தங்களுக்கும் நான் செய்தியை எட்ட வைப்பது அவசியம் என உணர்கிறேன்.

தங்களது நாட்டின் வரலாறு நபித்துவம் மற்றும் தெய்வீக வெளிப்பாடுகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. நிச்சயமாக இஸ்ரேலிய சந்ததிகளின் இறைதூதர்கள், உங்களது நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி தெளிவான முன்னறிவிப்புகளை செய்துள்ளனர். தமது தூதர்களின் போதனைக்கு கீழ்ப்படியாமை மற்றும் அவர்களது முன்னறிவிப்புகளை பொருட்படுத்தாது இருப்பது ஆகியவற்றின் விளைவாக இஸ்ரேலிய மக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள். உங்களது நாட்டின் தலைவர்கள், இறைதூதர்களுக்குக் கட்டுப்படுவதில் உறுதியாக இருந்திருந்தால் அவர்கள் துரதிஷ்டம் மற்றும் கஷ்டமான சூழலிலிருந்து காப்பற்றப்பட்டிருப்பார்கள். எனவே முன்னறிவிப்புகளையும் இறைதூதர்களின் கடுமையான எச்சரிக்கைகளையும் மற்றவர்களை விட அதிகமாக செவிசாய்த்துக் கேட்பது உங்களது கடமையாகிறது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி ( அவர் மீது சாந்தி உண்டாவதாக) அவர்களின் கலீஃபா என்ற முறையில், இதை நான் எழுதுகிறேன். வாக்களிக்கப்பட்ட மஹ்தி, மஸீஹ் புனித முஹம்மது நபி (அல்லாஹ்வின் அருளும் சாந்தியும் அவர்மீது உண்டாவதாக) அவர்களின் தொண்டராக அனுப்பப்பட்டுள்ளார்கள். புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா மனித குலத்திற்கும் அருட்கொடையாக, இஸ்ரவேலரின் சகோதரர்களிடம் மோசே (அவர் மீது சாந்தி உண்டாவதாக) அவர்களுக்கு ஒப்பாக அனுப்பப்பட்டுள்ளார்கள். *(பைபிள் உபாகமம் 18:18 காண்க).* எனவே இறைவனின் தூதுச் செய்தியை தங்களுக்கு நினைவூட்டுவது எனது கடமையாகிறது. இறைவனின் அழைப்பைக் கேட்டு, நேரான வழியை வெற்றிகரமாக அறிந்து கொண்டவர்களில் ஒருவராக நீங்களும் இருப்பீர்கள் என நான் நம்புகிறேன். நேரான பாதை என்பது வானங்கள், பூமி ஆகியவற்றின் எஜமானனாகிய மகத்தான இறைவனின் வழிகாட்டுதலைக் கொண்ட பாதையாகும்.

நீங்கள் ஈரான் மீது போர் தொடுக்கப்போவதாக தற்போதைய செய்திகளின் வாயிலாக தங்களின் அறிக்கைகளை நாங்கள் கேள்விப்படுகிறோம். உலகப் போரின் பயங்கர விளைவுகள் உங்கள் கண் முன் உள்ளது. கடந்த உலகப் போரில் கோடிக்கணக்கான பாமர மக்கள் கொல்லப்பட்டனர். இலட்சக்கணக்கான யூதர்கள் உயிரை இழந்து விட்டனர். பிரதமர் என்ற முறையில் நீங்கள் உங்கள் நாட்டினரின் உயிரை பாதுகாப்பது உங்களின் கடமையாகும். இப்போதுள்ள உலக சூழல் என்ன குறிப்பிடுகிறதென்றால், ஓர் உலகப் போர் என்பது இரு நாடுகளுக்கிடையே மட்டுமல்ல. மாறாக, பெரும் கூட்டணிகள் உருவாகி விடும். உலகப் போர் உருவாகும் அச்சுறுத்தல் ஓர் அபாயகரமான ஒன்றாகும். அதன் காரணமாக முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்களின் உயிர்கள் உடனடி ஆபத்தில் உள்ளன. இத்தகைய போர் நடக்குமானால் மனிதனின் அழிவிற்கான தொடர் விளைவுகளை ஏற்படுத்தும். இந்த அழிவின் விளைவுகளை எதிர்கால சந்ததியினர் அனுபவிப்பார்கள். அவர்கள் குறைபாடு உள்ளவர்களாகவோ அல்லது உடல் ஊனமுற்றவர்களாகவோ பிறப்பார்கள். இந்தப் போரின் விளைவு சந்தேகத்திற்கிடமில்லாமல் அணு ஆயுதங்களைக் கொண்டே நடக்கும்.

எனவே எனது வேண்டுகோள் என்னவென்றால், உலகத்தை உலகப் போரின் பிடியில் கொண்டு செல்வதை விட, உலகத்தை உலகளாவிய அழிவிலிருந்து காப்பாற்ற இயன்ற அளவு முயலுங்கள். **வேற்றுமைகளை பலவந்தத்தின் மூலமாக தீர்ப்பதை விட, அவற்றைப் பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க நீங்கள் முயல வேண்டும்.** இதன் மூலம் நமது வருங்கால சந்ததியினருக்கு ஊனம் மற்றும் குறைபாடுகளை பரிசாக அளிப்பதை விட ஒளிமயமான எதிர்காலத்தை அவர்களுக்கு வழங்கலாம். நான் உங்களின் போதனைகளின் வாக்கியத்திலிருந்து எனது கருத்துக்களை உங்களுக்கு புரிய வைக்க முயலுவேன். முதலாவதாக, (பைபிள் பழைய ஏற்பாடு) **சங்கீதத்திலிருந்து சில கருத்துகள்:**

''தீமை செய்பவர்களை குறித்து எரிச்சலடையாதீர்கள். தீமை செய்பவர்கள் மீது பொறாமை கொள்ளாதீர்கள். அவர்கள் விரைவில் புல்களைப் போல் வெட்டப்பட்டு, பசும் பூண்டைப் போல் வாடி விடுவார்கள். இறைவன் மேல் நம்பிக்கை வை; நன்மையை செய். தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை அனுபவி. மேலும் இறைவனிடத்தில் மன மகிழ்ச்சியோடு இரு. அவன் உனது உள்ளக் கிடக்கையை உனக்கு தருவான். உன் வழியை இறைவனுக்கு அர்ப்பணித்து விடு. அவன் மீதும் நம்பிக்கை வை. அவன் உனக்கு இதை செய்வான். அவன் உனது இறையச்சத்தை விடியலைப் போல் ஆக்குவான். உன் நீதியை பகலவனைப் போலாக்குவான். இறைவனுக்காக காத்திரு. அவனுக்காக பொறுமையுடன் காத்திரு. தனது வழியில் வளர்ச்சி அடைபவனையும் தீவினை செய்பவனையும் பார்த்து எரிச்சலடையாதே. ஏனெனில் மனிதன் கோப உணர்வை தூண்டக் கூடியவனாக இருக்கிறான். கோபத்தை தவிர்; சாபமிடுவதை விட்டு விடு. எரிச்சலடையாதே. அது தீமை செய்யவே தூண்டும். தீமை செய்பவர்கள் அறுபட்டுப் போவார்கள். இறைவனுக்காக காத்திருப்பவர்கள் பூமியை சொந்தமாக்கிக் கொள்வார்கள். இன்னும் சிறிது நேரத்தில் தீயவர்கள் காணாமற் போய்விடுவார்கள். ஆம். அவனது இடத்தை பார்த்தால் அவன் அங்கு இருக்க மாட்டான். ஆனால் கீழ்ப்படிந்தவர்கள் பூமியை தனதாக்கிக் கொள்வார்கள். அதிகமதிகமான அமைதியால் மன மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.” *(சங்கீதம் 37:1-11)*

இதைப் போன்றே தவ்ராத்தில் நாம் காண்கிறோம்:

'' அவர்களின் உள்ளங்களில் பெரிதும் சிறிதுமான பலவிதமான எடை கற்களை வைத்திருக்க வேண்டாம். உங்கள் வீடுகளில் பெரிதும் சிறிதுமான பல வேறுபட்ட அளவுகளை வைத்திருக்க வேண்டாம். உம்மிடம் சரியான, நீதமான பாரம் இருக்க வேண்டும். அவர்களது நாட்கள் உலகில் நீண்டதாக இருக்கும்படியாக அவர்களது இறைவன் கொடுப்பான். குறையற்ற எடை கல்லும் குறையற்ற நிலுவையும் உன்னிடத்தில் இருக்க வேண்டும். இது போன்று செய்பவர்கள் இறையச்சமின்மையினாலேயே செய்கிறார்கள். இறைவனது வெறுப்பிற்கும் ஆளாகிறார்கள்.'' *(உபாகமம் 25:13-16)*

எனவே உலக தலைவர்கள், குறிப்பாக நீங்கள் பலவந்தத்தால் அரசை பலவந்தமாக நடத்தலாம் என்ற கருத்தைவிட்டு விட வேண்டும். மேலும் பலவீனர்கள் மீது அடக்கு முறை செய்வதிலிருந்து விலக வேண்டும். மாறாக, நீதியையும் அமைதியையும் வளர்க்கவும் பரப்பவும் பாடுபடுங்கள். அவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் அமைதியில் இருப்பீர்கள். நீங்கள் பலம் பெறுவீர்கள். உலகில் அமைதி நிலைநாட்டப்படும்.

உலக தலைவர்களும் நீங்களும் எனது அறிவுரையை புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும். உங்கள் தகுதியைப் புரிந்து அதன்படி உங்களது பொறுப்புகளை நிறைவேற்றுங்கள்.

தங்களின் உண்மையுள்ள,



**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

உலகளாவிய அஹ்மதிய்யாமுஸ்லிம்

சமுதாயத்தின் தலைவர்

# ஈரான் இஸ்லாமிய குடியரசின் அதிபருக்கு எழுதப்பட்ட கடிதம்

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
هو الناصر

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

மேதகு ஈரான் இஸ்லாமிய குடியரசின் அதிபர், 7,மார்ச் 2012
மஹ்மூது அஹ்மது நிஜாத்,

டெஹ்ரான்

அன்பான அதிபரே,

அஸ்ஸலாமு அலைக்கும். வரஹ்மத்துல்லாஹி வபராத்துஹு.

உலகில் நிகழும் ஆபத்தான சூழலின் ஒளியில், தங்களின் அதிகாரத்தால் எடுக்கின்ற முடிவுகள் உங்களின் நாட்டையும், பெருமளவு உலகத்தையும் பாதிக்கும் என்ற காரணத்தாலும் ஈரானின் அதிபர் என்ற நிலையில் உங்களுக்கு கடிதம் எழுதுவது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நான் உணர்ந்தேன். தற்போது போராட்டங்களும் அமைதியின்மையும் உலகில் நிலவுகின்றன. சில இடங்களில் சிறு அளவிலான போர்கள் வெடித்துள்ளன. மற்றும் சில இடங்களில் வல்லரசுகள் அமைதியை நிலைநாட்டுவதாக கூறி போர் செய்கின்றன. ஒவ்வொரு நாடும் அடுத்த நாடுகளுக்கு உதவுவதாகவும் அல்லது எதிர்ப்பதாகவும் கூறி செயல்களில் ஈடுபட்டுள்ளன. ஆனால் நீதியின் தேவை நிறைவேற்றப்படவில்லை. இப்போதுள்ள உலகின் சூழலை கவலையுடன் நோக்குவோமேயானால், மற்றொரு உலகப் போருக்கான அடிக்கல் முன்பே நாட்டப்பட்டதை நாம் காணலாம். சிறிய மற்றும் பெரிய பல நாடுகள் அணு ஆயுதங்கள் மற்றும் கருவிகளை வைத்துள்ளன. போருக்கான சூழல் அதிகமாகிக் கொண்டே செல்கின்றது. இந்த அசாதாரணமான சூழலில் மூன்றாம் உலகப் போர் நம் முன் நிச்சயம் நடைபெறப் போவதாகத் தெரிகிறது. இதன் முடிவு

பேரழிவும், இந்தப் போரின் நெடுங்கால விளைவு வருங்கால சந்ததியினர் ஊனமாகவும், அங்ககீனமாகவும் பிறப்பார்கள் என்பதேயாகும்.

எனது நம்பிக்கை என்னவெனில், உலகில் அமைதியை நிலைநாட்ட வேண்டி அனுப்பப்பட்ட புனித நபிகள் முஹம்மது (ஸல்) அவர்கள், ரஹ்மத்துல் லில் ஆலமீன் (அகில உலகிற்கும் அருட்கொடை) ஆவார்கள். *(திருக்குர் ஆன் 21:108 காண்க).*

அவர்களை பின்பற்றுபவர்கள் என்ற முறையில் நாம் இந்த உலகம் இது போன்ற சூழலால் கஷ்டப்பட விடவும் கூடாது; அதனை விரும்பவும் கூடாது. எனவே **உலகில் ஈரானும் ஒரு குறிப்பிடத்தக்க ஒரு சக்தி என்பதால் மூன்றாவது உலகப் போரைத் தவிர்க்க தனது பங்கை அது ஆற்ற வேண்டும்** என்பதே தங்களுக்கு எனது வேண்டுகோள் ஆகும். **வல்லரசுகள் இரட்டை வேடம் போடுகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மைதான்.** அவர்களது நேர்மையின்மை, உலகம் முழுவதும் நிம்மதியின்மை மற்றும் ஒழுங்கீனத்தை பரப்பியுள்ளது. **எப்படி இருப்பினும் சில முஸ்லிம் அமைப்புகள் இஸ்லாமிய போதனைகளுக்கு மாறாக முறையற்ற வகையில் செயல்படுவதையும் நாம் புறக்கணித்து விட முடியாது.**

உலகின் வல்லரசுகள் இதை தங்களுக்கு சாதகமாக்கி, ஏழை முஸ்லிம் நாடுகளை தங்களின் சுய நலத்தை முழுமைப்படுத்துவதற்காக பயன்படுத்துகின்றனர். இந்த உலகத்தை மூன்றாம் உலகப் போரிலிருந்து காப்பாற்ற உங்கள் முயற்சிகளை முன்னிலைப்படுத்துமாறு தங்களை மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன். திருக்குர்ஆன், முஸ்லிம்களுக்கு போதிப்பது என்னவென்றால், எந்த நாட்டிற்கெதிராகவும் உள்ள பகைமை அவர்களை நீதமாக நடப்பதற்கு அவர்களை தாமதப்படுத்தக் கூடாது. சூரா அல் மாயிதாவில் எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்கு இவ்வாறு போதிக்கின்றான்:

"ஒரு சமுதாயத்தினர் உங்களை தூய பள்ளிவாயிலுக்கு செல்ல விடாது தடுத்தார்கள் என்ற பகைமையினால் வரம்பு மீறாதீர்கள்.

நேர்மையிலும் இறையச்சத்திலும் ஒருவருக்கொருவர் உதவுங்கள். பாவம், வரம்பு மீறுதல் ஆகியவற்றில் ஒருவருக்கொருவர் உதவாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் தண்டனை கடுமையானது." *(திருக்குர்ஆன் அதிகாரம் 5 வசனம் 3 காண்க).*

இதை போன்றே திருக்குர்ஆனின் இதே அதிகாரத்தில் முஸ்லிம்களுக்கு கீழ்க்காணும் கட்டளைகளைக் காண்கிறோம்:

"நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான் சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருக்கமானது. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிவான்." *(அதிகாரம் 5 வசனம் 9 காண்க).*

எனவே வெறுப்பு மற்றும் கோபத்தால் மற்றொரு நாட்டை எதிர்க்கக் கூடாது. **இஸ்ரேல் தனது எல்லைகளை கடந்துள்ளது. மற்றும் அதன் கண்கள் ஈரான் மீது உள்ளதையும் நான் ஒப்புக் கொள்கிறேன்.** நிச்சயமாக, ஏதாவது ஒரு நாடு உங்கள் நாட்டிற்கெதிராக வரம்பு மீறினால் உங்களை தற்காத்துக் கொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது. **எப்படி இருப்பினும் பிரச்சனைகளை கூடிய மட்டும் ராஜதந்திரம் மற்றும் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோளாகும்.** பலத்தைப் பயன்படுத்துவதை விட பேச்சு வார்த்தையை பயன்படுத்த முயல வேண்டும். புனித நபிகள் முஹம்மது (ஸல்) அவர்களின் உண்மை தொண்டராக நியமிக்கப்பட்டவரும், வாக்களிக்கப்ப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தி என்று தன்னைப் பற்றி வாதித்தவருமான இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவரைப் பின்பற்றுபவன் என்ற நிலையில் இந்த வேண்டுகோளை நான் விடுக்கிறேன். மேலும் இவர், நமது எஜமானரும், வழிகாட்டியுமான ரஹ்மத்துல் லில் ஆலமீன் - அகில உலகிற்கும் அருட்கொடையாக வந்த புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காட்டிய வழியில் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட

வந்தவர் ஆவார்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ், முஸ்லிம் சமுதாயத்திற்கு இந்த அழகிய போதனையை புரிய வைப்பானாக.

தங்கள் உண்மையுள்ள,



**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
உலகளாவிய
அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின்
தலைவர்

# அமெரிக்க அதிபருக்கு எழுதப்பட்ட கடிதம்

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
هو الناصر

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

8 மார்ச் 2012

அதிபர் பாரக் ஒபாமா,
அமெரிக்க அதிபர், வெள்ளை மாளிகை,
1600 பென்ஸில்வேனியா அவன்யூ **N.W.**
வாஷிங்டன் **D.C**

அன்பார்ந்த அதிபரே,

உலகில் தற்போது நிலவும் நிலையில்லா சூழ்நிலையின் ஒளியில் நான், தங்களுக்கு உலகின் பெரும் வல்லரசாகத் திகழும் அமெரிக்காவின் அதிபர் என்ற முறையில் கடிதம் எழுதுவது அவசியம் என்ற வகையிலும் இதன் மூலம் தங்களின் அதிகாரத்தால் எடுக்கின்ற முடிவுகள் உங்களின் நாட்டையும், பெருமளவு உலகத்தையும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தாலும் இதை எழுதுகிறேன்.

தற்போது உலகில் பெரும் போராட்டங்களும் அமைதியின்மையும் இருக்கிறது. சிறு அளவிலான போர்கள் சில இடங்களில் வெடித்துள்ளன. இந்தப் போராட்டங்கள் உள்ள பகுதிகளில் துரதிஷ்டவசமாக வல்லரசுகள் அமைதியை நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சிகள் எதிர்பார்த்தபடி வெற்றி பெறவில்லை. உலகளாவிய அளவில் பெரும்பாலும் ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டை எதிர்ப்பதிலும் அல்லது ஆதரிப்பதிலும் ஈடுபட்டுள்ளதை நாம் காண்கிறோம். எப்படி இருப்பினும் நீதியின் தேவை முழுமைப்படுத்தப் படவில்லை. நாம் கவலையோடு இவ்வுலகின் சூழ்நிலையை உற்று நோக்குவோமேயானால் மற்றோர் உலகப் போருக்கான அடிக்கல் ஏற்கெனவே நாட்டப்பட்டுள்ளதை காணலாம். பல நாடுகள் – அவை

சிறியவையோ, பெரியவையோ அனைத்தும் அணு ஆயுதங்களையும் கடுங்கோபத்தையும் பழியுணர்ச்சியையும் கொண்டுள்ளன. நாடுகளுக்கிடையே போருக்கான சூழல் அதிகரிக்கின்றன. இந்த கஷ்டமான சூழலில் மூன்றாம் உலகப் போர் உறுதியாக நம் முன் பின்னப்பட்டுள்ளது. இது போன்ற போர் நிச்சயமாக அணு ஆயுதப் போராகவே இருக்கும். எனவே நாம் உலகம் ஒரு பேரழிவை நோக்கி செல்வதை காண்கிறோம். **இரண்டாம் உலகப் போருக்குப் பின் சமத்துவம் மற்றும் நீதியின் பாதையைப் பின்பற்றி இருந்தால், இன்று உலகில் நிலவும் இந்த சூழலுக்கு நாம் சாட்சி பகர்ந்திருக்க மாட்டோம்.** இதன் மூலம் உலகம் மறுபடியும் போரின் நெருப்பால் சூழப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போரின் முக்கிய காரணம், **'League of Nations'** (நாடுகள் இணைக் குழுமம்) அமைப்பின் தோல்வி மற்றும் 1932-ல் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவே என நமக்கெல்லாம் தெரியும். இன்று முன்னணி பொருளாதார நிபுணர்கள் கூறுவதெல்லாம், இன்றைய பொருளாதார நெருக்கடிக்கும், 1932-ல் நிலவியதற்கும் அநேக ஒற்றுமைகள் உள்ளன என்பதாகும். **அரசியல் மற்றும் பொருளாதார பிரச்சனைகளால் மீண்டும் சிறிய நாடுகளுக்கிடையில் போர் மூண்டுள்ளதை நாம் காண்கிறோம். மேலும் உள்நாட்டு நிம்மதியின்மை, நல்லிணக்கமின்மை இந்நாடுகளில் வளர்ந்தோங்கியுள்ளன. இதன் காரணமாக சில சக்திகள் அரசு கட்டிலில் வீற்றிருக்கிறார்கள். இவர்கள் நம்மை உலகப் போருக்கு இட்டுச் செல்வார்கள்.** சிறிய நாட்டின் சண்டைகளை அரசியல் அல்லது புதுக் குழுக்களும் கூட்டணியும் உருவாக வழிவகுக்கும். இது மூன்றாம் உலகப் போர் வெடிக்க ஒரு முன்மாதிரி ஆகிவிடும். எனவே தற்போது உலகின் முன்னேற்றத்தின் பக்கம் நாம் அவசரமாகவும் அவசியமாகவும் முயற்சிக்க வேண்டுமென்பதே எமது நம்பிக்கை. மனித குலம் தனது ஒரே இறைவனை அறிந்து கொள்வது அவசர தேவையாக உள்ளது. அவன்தான் நம்மை படைத்தவன். இது ஒன்றுதான், மனித குலம் உயிர் வாழ உத்தரவாதமாகும். இல்லையேல் இந்த உலகம் தொடர்ந்து வேகமாக சுய அழிவை நோக்கி செல்லும்.

உங்களுக்கும், நிச்சயமாக மற்ற அனைத்து உலக தலைவர்களுக்கும் எனது வேண்டுகோள் என்னவென்றால், **பலத்தை**

**பயன்படுத்தி அடுத்த நாடுகளை நசுக்குவதை விட, ராஜ தந்திரம், அறிவுடைமை மற்றும் பேச்சுவார்த்தைகள் ஆகியவற்றை பயன்படுத்துங்கள். உலகின் வல்லரசுகளான அமெரிக்கா போன்ற நாடுகள் அமைதியை நிலைநாட்ட தமது பங்கை ஆற்ற வேண்டும்.** உலகின் நல்லிணக்கத்தை கெடுக்க சிறிய நாடுகள் பயன்படுத்தும் பொய்யான காரணங்களை பயன்படுத்தக் கூடாது. தற்போது அணு ஆயுதங்களை அமெரிக்கா மற்றும் வல்லரசுகள் மட்டும் பெற்றிருக்கவில்லை. சிறிய நாடுகள் கூட பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கின்றன. எதைப் பற்றியும் சிந்திக்காத, எண்ணாத அதேநேரத்தில் மற்றவர்களைக் கொல்லுவதில் இன்புறுகின்ற தலைவர்கள் இங்கு ஆட்சியில் இருக்கிறார்கள். எனவே எனது தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால், வல்லரசு மற்றும் சிறிய நாடுகள் **மூன்றாம் உலகப் போரில் ஈடுபடுவதிலிருந்து தடுக்க உங்களால் முடிந்ததை செய்யுங்கள். நாம் இந்தப் பணியில் தோற்றால், இந்தப் போரினால் ஏற்படும் விளைவுகள் ஆசியாவில் உள்ள ஏழை நாடுகளுக்கு மட்டுமல்லாமல் ஐரோப்பாவையும் அமெரிக்காவையும் பாதிக்கும் என்பதில் சந்தேகமில்லை. மாறாக, இந்தச் செயல்களால் நமது வருங்கால சந்ததியினர் இதன் விளைவுகளை சந்திப்பார்கள். மேலும் உலகில் எங்கு பார்த்தாலும் குறைபாடுள்ள, ஊனமுள்ள குழந்தைகள் பிறப்பார்கள். அவர்கள் தங்களின் மூதாதையர்களை, இந்த உலகத்தை உலகப் பேரழிவுக்கு இட்டுச் சென்றவர்களை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.** நமது சுயநலத்தைப் பற்றி கவலைப்படுவதை விட, நமது வருங்கால சந்ததிகளைப் பற்றி எண்ண வேண்டும். நாம் முயன்று அவர்களுக்காக ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் தங்களுக்கும் எல்லா உலகத் தலைவர்களுக்கும் இந்த செய்தியை புரிந்து கொள்ளச் செய்வானாக.

தங்கள் உண்மையுள்ள,



மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
உலகளாவிய
அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின்
தலைவர்

# கனடா நாட்டின் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதம்

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلی علی رسوله الکریم
وعلی عبده المسیح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
ھو الناصر

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

8,மார்ச் 2012

திரு. ஸ்டீபன் ஹார்பர்,
கனடா பிரதமர்
ஒட்டாவா ஆன்டிரியோ

அன்புள்ள பிரதமரே!

உலகில் ஏற்பட்டுள்ள நிலையில்லா சூழலின் ஒளியிலும், தங்களது அதிகாரத்தால் எடுக்கப்படுகின்ற முடிவுகள் உங்களின் நாட்டையும், பெருமளவு உலகையும் பாதிக்கும் என்கின்ற காரணத்தாலும் இதை தங்களுக்கு எழுதுவது தேவை என்பதை உணர்கிறேன். தற்போது உலகில் பெரும் போராட்டங்களும் அமைதியின்மையும் உள்ளன. சில இடங்களில் சிறிய அளவிலான போர்கள் வெடித்துள்ளன. துரதிஷ்டவசமாக வல்லரசுகள், சண்டை நடக்கும் இந்த இடங்களில் அமைதியை நிலைநாட்ட மேற்கொண்ட முயற்சிகள் எதிர்பார்த்தபடி வெற்றி பெறவில்லை. உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ செய்வதை நாம் காண்கிறோம். எப்படி இருப்பினும் நீதியின் தேவை முழுமைப்படுத்தப்படவில்லை. நாம் கவலையுடன் தற்போதுள்ள சூழலை உற்று நோக்கினால் மற்றோர் உலகப் போருக்கான அடிக்கல் ஏற்கனவே நாட்டப்பட்டுவிட்டதை நாம் காணலாம். பல நாடுகள் - அவை சிறியவையாயினும், பெரியவையாயினும் அனைத்தும் அணு ஆயுதங்களையும், கடுங்கோபத்தையும்,

பழியுணர்ச்சியையும் கொண்டுள்ளன. மேலும் நாடுகளுக்கிடையில் போருக்கான சூழல் வளர்கின்றன. இந்த கஷ்டமான சூழலில் நமக்குள் நிச்சயமாக மூன்றாவது உலகப் போர் பின்னப்பட்டுள்ளது. இது போன்ற போர் அணு ஆயுதப் போராகவே இருக்கும். எனவே இந்த உலகம் பயங்கரமான அழிவை நோக்கி செல்வதை நாம் காண்கிறோம். நாம் இரண்டாம் உலகப் போருக்குப் பின் சமத்துவம் மற்றும் நீதியின் பாதையைப் பின்பற்றியிருந்தால் இன்று ஏற்பட்டுள்ள உலகின் நிலையை நாம் கண்டிருக்க மாட்டோம். இதன் மூலம் மீண்டும் போர் எனும் நெருப்பால் நாம் சூழப்பட்டுள்ளோம்.

இரண்டாம் உலகப் போரின் முக்கியக் காரணம், **'League of Nations'** (லீஃப் ஆஃப் நேஷன்ஸ் - நாடுகள் இணைக் குழுமம்) அமைப்பின் தோல்வியும், 1932-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவும்தான் என நமக்கெல்லாம் தெரியும். இன்று பிரபலமான நிபுணர்கள் கூறுவது என்னவெனில், இன்றைய பொருளாதார நெருக்கடிக்கும் 1932-ஆம் ஆண்டில் நிலவியதற்கும் அநேக ஒற்றுமைகள் உள்ளன என்பதாகும். அரசியல் மற்றும் பொருளாதர பிரச்சனைகளால் மீண்டும் சிறிய நாடுகளுக்கிடையில் போர் மூண்டுள்ளதை நாம் காண்கிறோம். மேலும் உள் நாட்டு நிம்மதியின்மையும், நல்லிணக்கமின்மையும் இந்த நாடுகளில் பெருகியுள்ளன. இதன் காரணமாக சில சக்திகள் அரசுக் கட்டிலில் வீற்றிருக்கின்றன. இவர்கள் நம்மை உலகப் போருக்கு இட்டுச் செல்வார்கள். சிறிய நாடுகளின் சண்டைகள் அரசியல் அல்லது ராஜதந்திர அடிப்படையில் தீர்க்கப்படாவிட்டால் இது உலகில் புதிய குழுக்களும் கூட்டணியும் உருவாக வழிவகுக்கும். இது மூன்றாம் உலகப் போர் மூள்வதற்கு வித்திட்ட சாபமாக ஆகிவிடும். எனவே தற்போது உலக முன்னேற்றத்தின் பக்கம் கவனம் செலுத்துவதை விட உலகை இந்த அழிவிலிருந்து காப்பாற்ற நாம் அவசரமாகவும், அவசியமாகவும் முயற்சி செய்ய வேண்டும் என்பதே எமது நம்பிக்கை. மனித குலம் தனது ஒரே இறைவனை அறிந்து கொள்வது அவசரத் தேவையாக இருக்கிறது. அவன்தான் நம்மை படைத்தவன். இது ஒன்றுதான் மனித குலம் உயிர் வாழ உத்தரவாதம். இல்லையேல் இந்த

உலகம் தொடர்ந்து வேகமாக சுய அழிவை நோக்கி செல்லும்.

**இந்த உலகில் கனடா நீதியை நிலைநாட்டக் கூடிய நாடுகளில் ஒன்றாக கருதப்படுகிறது.** பொதுவாக உங்களது நாடு மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை. மேலும் அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த நாங்கள், கனடா நாட்டின் மக்களுடன் ஒரு சிறப்பான நட்பின் பிணைப்பை கொண்டுள்ளோம். எனவே உங்களுக்கு எங்களது வேண்டுகோள் என்னவெனில், சிறிய மற்றும் பெரிய சக்திகள் மிகப் பெரிய அழிவை ஏற்படுத்தும் மூன்றாம் உலகப் போரின் பக்கம் நம்மை இட்டுச் செல்வதை விட்டு தவிர்க்க, தங்களால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்.

**உங்களுக்கும் நிச்சயமாக மற்ற அனைத்து உலக தலைவர்களுக்கும் எனது வேண்டுகோள் என்னவென்றால், அடுத்த நாடுகளை பலத்தைக் கொண்டு நசுக்குவதை விட, ராஜதந்திரம், பேச்சுவார்த்தை மற்றும் அறிவுடைமை ஆகியவற்றை பயன்படுத்துங்கள். கனடா போன்ற உலகின் வல்லரசு நாடுகள் அமைதியை நிலைநாட்ட தங்களது பங்கை ஆற்ற வேண்டும்.** உலகின் நல்லிணக்கத்தைக் கெடுக்க சிறிய நாடுகள் பயன்படுத்தும் பொய்யான காரணங்களை அவர்கள் பயன்படுத்தக் கூடாது. தற்போது வல்லரசுகள் மட்டும் அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கவில்லை. மாறாக சிறிய நாடுகள் கூட பேரழிவு ஆயுதங்களைப் பெற்றிருக்கின்றன. அவ்வப்போது அடுத்தவர்களை கொல்வதில் இன்புறுகின்றவர்களும், எதைப் பற்றியும் கவலைப்படாதவர்களும், சிந்திக்காதவர்களும் அதிகாரத்தில் உள்ளனர். எனவே தங்களுக்கு எனது தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால், மூன்றாவது உலகப் போர் ஏற்படுவதைத் தவிர்க்க உங்களது சக்தியையும் முயற்சியையும் பயன்படுத்துங்கள். இச்செயலில் நாம் தோற்றால் இந்தப் போரினால் ஏற்படும் பாதிப்பும் பின் விளைவுகளும் ஆசியாவிலுள்ள ஏழை நாடுகளை மட்டுமல்ல, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளையும் பாதிக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. மாறாக, இந்த செயல்களால் நமது வருங்கால சந்ததியினர் பயங்கர குறைபாடுள்ள, ஊனமான குழந்தைகள் பிறக்கும். அவர்கள் இந்த

உலகை – உலகப் பேரழிவுக்கு இட்டுச் சென்றவர்களை மன்னிக்க மாட்டார்கள். நமது சுயநலத்தை பற்றி மட்டும் கவலைப்படுவதை விட நமது எதிர்கால சந்ததிகளைப் பற்றியும் எண்ணிப் பார்க்க வேண்டும். மேலும் அவர்களுக்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க பாடுபட வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் தங்களுக்கும், எல்லா உலகத் தலைவர்களுக்கும் இந்தச் செய்தியை புரிந்து கொள்ளச் செய்வானாக.

தங்கள் உண்மையுள்ள,



**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின்
தலைவர்

# இரு புனித பள்ளிவாயில்களின் காப்பாளர் சவூதி அரேபிய மன்னருக்கு எழுதப்பட்ட கடிதம்

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
هو الناصر

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

இரு புனித பள்ளிவாயில்களின் காப்பாளர் 28, மார்ச் 2012

சவூதி அரேபியாவின் மன்னர்
அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ்
ரியாத், சவூதி அரேபியா

மாண்புமிகு மன்னர் அப்துல்லாஹ்,

அஸ்ஸலாமு அலைக்கும் . வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு.

இன்று நான் ஒரு முக்கியமான விஷயத்தின் பக்கம் தங்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக இதை எழுதுகிறேன். ஏனெனில் இரு பள்ளிவாயில்களின் காப்பாளர் மற்றும் சவூதி அரேபியாவின் மன்னர் என்ற வகையில் முஸ்லிம் உம்மத்தில் நீங்கள் ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளீர்கள். இஸ்லாத்தின் இரு புனித பள்ளிவாயில்களான மக்கா முகர்ரமா மற்றும் மதீனா முனவ்வரா ஆகியவை உங்கள் நாட்டில் உள்ளன. அவை முஸ்லிம்களின் அன்பு மற்றும் நம்பிக்கையின் ஒரு பகுதியாகும். இந்த இடங்கள் ஆன்மீக வளர்ச்சிக்கு மையங்களாகவும் முஸ்லிம்களால் பெருமளவு மதிக்கப்படக் கூடியவையாகவும் இருக்கின்றன. இதன் ஒளியில் எல்லா முஸ்லிம்களும், முஸ்லிம் அரசுகளும் உங்களுக்கு சிறப்பான அந்தஸ்தை வழங்கியுள்ளனர். இந்த சிறப்பு ஒரு வகையில் முஸ்லிம் மக்களை சரியான வழியில் நடத்தவும் மறு வகையில் முஸ்லிம் நாடுகளுக்கு இடையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உருவாக்க பாடுபடவும் வேண்டிய தேவையை வேண்டுகின்றன. மேலும் நீங்கள் முஸ்லிம்களுக்கிடையே அன்பு

மற்றும் இரக்கத்தை வளர்க்க பாடுபட வேண்டும். அவர்களுக்கு ருஹமாவு பைனஹும் (அவர்கள் தங்களுக்கிடையில் அன்புள்ளவர்களாவர்) என்ற திருவசனத்தின் பக்கம் ஒளியூட்ட வேண்டும்.

நிறைவாக பயன் பெற உலகம் முழுவதும் அமைதி ஏற்பட்டு முழு மனித சமுதாயமும் பயன் பெற நீங்கள் பாடுபட வேண்டும். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் என்ற முறையிலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் கலீஃபா என்ற முறையிலும் எனது வேண்டுகோள் என்னவென்றால், **அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மற்றும் பிற முஸ்லிம்களுக்கிடையில் சில கொள்கை வேறுபாடுகள் ருந்தாலும், உலக அமைதியை நிலைநாட்டும் முயற்சியில் நாம் ஒன்றுபட வேண்டும்.** இந்த உலகிற்கு உண்மையான இஸ்லாத்தின் போதனைகளை அன்பு மற்றும் நேசத்தின் அடிப்படையில் போதிப்பதில் நாம் முடிந்த அளவு முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதால் மேற்கத்திய மற்றும் உலக நாடுகளில் உள்ள மக்களின் மனங்களில், பொதுவாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இஸ்லாத்தைப் பற்றிய தவறான எண்ணங்களை களையலாம். மற்ற நாடுகளின் மற்றும் அணிகளின் மீதுள்ள பகைமை நாம் நீதமாக நடந்து கொள்ள தடையாக இருக்கக் கூடாது. எல்லாம் வல்ல அல்லாஹ் திருக்குர்ஆனில் சூரா அல்மாயிதா வசனம் 3-ல் இவ்வாறு கூறுகிறான்:

‘‘ஒரு சமுதாயத்தினர் உங்களை தூய பள்ளிக்கு செல்லவிடாது தடுத்தார்கள் என்ற பகைமையினால் வரம்பு மீறாதீர்கள். நேர்மையிலும் இறையச்சத்திலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவுங்கள். பாவம், வரம்பு மீறுதல் ஆகியவற்றில் ஒருவருக்கொருவர் உதவாதீர்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வின் தண்டனை கடினமானது..” (திருக்குர்ஆன் அதிகாரம் 5 வசனம் 3)

இந்த வழிகாட்டலின் நெறிமுறைகளை நாம் கவனத்தில் கொண்டு இஸ்லாத்தின் அழகிய வடிவத்தை உலகிற்கு அளித்து நமது கடைமையை நிறைவு செய்ய முடியும். உலகளாவிய முஸ்லிம்களின் மீதுள்ள இதயங்கனிந்த அன்பு மற்றும் ஆழமான இரக்கத்துடன் கூடிய

உணர்வுடன் இந்த விஷயத்தில் தங்களின் பங்கை ஆற்ற வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

சில அரசியல் வாதிகள் மற்றும் அறிஞர்கள் எனக் கூறிக் கொள்பவர்கள் புனித நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புகழுக்கு களங்கம் கற்பிக்கும் வகையில் இஸ்லாத்திற்கெதிராக வெறுப்பின் விதையை விதைப்பதை இன்று உலகில் நாம் காண்கிறோம். அவர்கள் தங்களின் எண்ணத்தை அடைய, திருக்குர்ஆனின் போதனைகளை முழுமையாக திரித்துக் கூற முயல்கின்றனர். மேலும் **பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரேலுக்கு இடையேயான மோதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கு இடையேயான போர் சூழல் உச்சத்தை அடைந்து விட்டது.** எதுவரையெனில் அவர்களது உறவு நாளுக்கு நாள் மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழலில் முஸ்லிம் உம்மத்தின் மேன்மையான முக்கியமான தலைவர் என்ற வகையில் தங்களை, இந்தப் பிரச்சனைகளை நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையில் எல்லா முயற்சிகளையும் செய்து தீர்க்க வேண்டும். இஸ்லாத்திற்கெதிரான வெறுப்பு எங்கெங்கு, எப்போதெல்லாம் தலைதூக்குகிறதோ அதை களைவதில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தன்னால் முடிந்த எல்லா விதமான முயற்சிகளையும் செய்கிறது. அனைத்து முஸ்லிம் உம்மத்தினரும் ஒன்று சேர்ந்து இதற்கான முயற்சியில் இறங்காதவரை அமைதியை நிலைநாட்ட முடியாது.

இதற்காக தங்களால் முடிந்ததை செய்ய வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். **மூன்றாவது உலகப் போர் நடந்தால் அது நிச்சயமாக முஸ்லிம் நாட்டிலிருந்து உருவாகவில்லை என்பதை நாம் முயன்று உறுதி செய்ய வேண்டும். இன்றோ அல்லது நாளையோ உலகிலுள்ள எந்த முஸ்லிம் தனி நபரோ அல்லது எந்த முஸ்லிம் நாடோ உலகின் பேரழிவுக்குக் காரணமானவர் என்ற பழியை தன் தோள்களில் தாங்கக் கூடாது.** இதன் நீண்ட கால விளைவு, எதிர்கால சந்ததியினரை அங்ககீனமாகவும், ஊனமாகவும் பிறக்க வழிவகுக்கும். இப்போது உலகப் போர் நடந்தால் அது அணு ஆயுதத்தால் நடக்கும். அணு ஆயுதப் போரால் இரண்டாம் உலகப் போரில் அணுகுண்டுகள்

ஜப்பானின் இரண்டு நகரங்களில் ஏற்பட்ட பயங்கர அழிவுகளை நாம் ஏற்கனவே கண்டு அனுபவித்துள்ளோம்.

எனவே சவூதி அரேபியாவின் மன்னரே! உங்களது அனைத்து சக்தி மற்றும் தாக்கத்தை பயன்படுத்தி உலகத்தை இந்த அழிவிலிருந்து காப்பாற்றுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் தனது உதவி மற்றும் ஆதரவை தங்களுக்கு நல்குவானாக. ஆமீன். உங்களுக்கும் முஸ்லிம் உம்மத்தினர் அனைவருக்கும் இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம் (அல்லாஹ் நேர்வழியை வழங்குவானாக) என்ற துஆவுடன் நிறைவு செய்கிறேன்.

வஸ்ஸலாம்

தங்கள் உண்மையுள்ள,



**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
உலகளாவிய
அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின்
தலைவர்

# சீன மக்கள் குடியரசின் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதம்

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
ھو الناصر

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

9. ஏப்ரல் 2012

மேதகு சீன மக்கள் குடியரசின் பிரதமர் திரு வென் ஜியா பாவோ

ஜோங் னான் ஹை, சீனா

அன்பார்ந்த பிரதமர் அவர்களே!

நான் இந்தக் கடிதத்தை அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தைச் சார்ந்த எங்களது பிரதிநிதி மூலம் அனுப்புகிறேன். இவர் இஸ்ரேலிலுள்ள 'கபாபீர்' என்ற இடத்திலுள்ள எங்களது ஜமாஅத்தின் தலைவர் ஆவார். இவர், சீனாவின் சிறுபான்மையின அமைச்சரால் அழைக்கப்பட்டுள்ளார். சிறுபான்மையினரின் துணை அமைச்சருடன் கூடிய குழு ஒன்று கபாபீரிலுள்ள எங்களின் கொள்கை பரப்பு நிலையத்திற்கு வருகை புரிந்தபோது சீன அதிகாரிகளுக்கு எங்களின் இந்தப் பிரதிநிதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளார்.

அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயம், இஸ்லாத்தில் உள்ள ஒரு பிரிவாகும். அது, இக்காலத்தில், முஸ்லிம்களுக்கு வழிகாட்டியாக வந்த மஹ்தி என்றும், கிறிஸ்தவர்களுக்கு வழிகாட்டியாக வந்த மஸீஹ் என்றும், அனைத்து மனித குலத்திற்கும் வழிகாட்டியாக வந்த சீர்திருத்தவாதி என்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின்படி இக்காலத்தில் மஸீஹ், மஹ்தி வந்து விட்டார்கள் என்பதை தீர்க்கமாக நம்புகிறது. எனவே நாங்கள் அவரை ஏற்றுக் கொண்டுள்ளோம். இந்தியாவிலுள்ள காதியானைச் சார்ந்த அவரது திருப் பெயர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) ஆகும். எல்லாம் வல்ல இறைவனின் கட்டளைக்கிணங்க 1889 -ல் அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்திற்கு அடித்தளம் இட்டார்கள். 1908-ல் அவரது மறைவின்போது இலட்சக்கணக்கான மக்கள் இந்த

சமுதாயத்தில் இணைந்திருந்தனர். அவரது மறைவுக்குப் பின் கிலாஃபத் அமைப்பு உருவாக்கப்பட்டது. தற்போது நாங்கள் ஐந்தாவது கிலாஃபத் காலத்தில் இருக்கின்றோம். நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஐந்தாவது கலீஃபாவாக இருக்கிறேன்.

எங்களது போதனைகளில் மிகவும் முக்கியமானதும், அடிப்படையானதுமான விஷயம், இக்காலத்தில் மதப் போர்கள் முடிவுக்கு வர வேண்டும் என்பதாகும். எவராவது தங்களது எந்த போதனையையும் பரப்பவோ, எட்ட வைக்கவோ வேண்டுமெனில் அதை அன்பு, இரக்கம் மற்றும் சமத்துவ சூழலில்தான் செய்ய முடியும் என்பதே எங்களின் நம்பிக்கையாகும். இதன் மூலம் அவர் அமைதி மற்றும் நட்பின் உறவுக்கு திரும்புதல் நல்லிணக்கத்தை தோற்றுவிக்கும் ஊற்றாக இருப்பார். இந்த முக்கியமான விஷயம் உண்மை இஸ்லாத்தின் போதனைகளின் அடிப்படையாகும் என்பதை அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயம் உலகம் முழுவதிலும் பரப்பி, வளர்த்து வருகிறது. இந்த சமுதாயம் தற்போது உலகிலுள்ள 200 நாடுகளில் கோடிக்கணக்கான பின்பற்றுபவர்களை கொண்டு பரந்துள்ளது.

இந்த உலகம் தற்போது பயங்கரமான ஆபத்து மிகுந்த ஒரு காலத்தை நோக்கி பயணிக்கிறது என்ற செய்தியை நான், தங்களுக்கு எட்ட வைக்க விரும்புகிறேன். உலகம் தற்போது எந்நேரமும் எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்ற போர்க் கால சூழலை நோக்கி கடந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக நாம் வேகமாக உலகப் போரின் பக்கம் நெருக்கமாக செல்வதை காண முடிகிறது. தாங்கள் ஒரு மிகப் பெரிய வல்லரசின் தலைவர் ஆவீர்கள். இன்னும் மேலாக தங்களது அரசின் கீழ் உலகின் மக்கள் தொகையில் பெரும் பகுதி உள்ளனர். மேலும் ஐக்கிய நாடுகள் சபையில் தேவைப்படும்போது 'வீட்டோ'(**veto**)வை பயன்படுத்தும் அதிகாரத்தையும் பெற்றுள்ளீர்கள். எனவே இதன் அடிப்படையில் நம் முன் பின்னப்பட்டுள்ள, உலகை அழிவிலிருந்து காப்பாற்ற உங்களின் பங்கை ஆற்ற வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும். நாடு, மத, இன, ஜாதி பாகுபாடின்றி நாம் மனித குலத்தைக் காப்பாற்ற நம்மால் இயன்ற முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

சீனாவில் புரட்சி ஏற்பட்ட பின், பெரும் வளர்ச்சியும், மாற்றமும் ஏற்பட்டுள்ளது. தங்களின் நாட்டின் மிகப் பெரிய தலைவர் **மாண்பு மிகு**

**மா சே தூங் மேன்மையான நன்னடத்தையின் அடித்தலத்தை உருவாக்கினார்கள்.** இதை மற்றொரு வார்த்தையில் கூறுவதென்றால், மனித மதிப்பின் உயர் தகுதி எனலாம். இறைவன் இருப்பதை நம்பாதவர்களாக இருந்தும் உங்களது கொள்கைகள் நன்னடத்தையின் அடிப்படையில் உள்ளன. நான் தங்களுக்கு விவரிக்க வேண்டுவது என்னவெனில், எங்களது இறைவன், இஸ்லாம் சித்தரிக்கும் இறைவன், திருக்குர்ஆனை எல்லா மனித குலத்திற்கும் வழிகாட்டியாக இறக்கியுள்ளான். நீங்கள் நடக்கும் நன்னடத்தைகளை அநேக இடங்களில் திருக்குர்ஆன் மீண்டும் மீண்டும் கூறுகிறது. மேலும் திருக்குர்ஆன் பல நன்னடத்தை வழிகாட்டுதல்களையும் தன்னுள் கொண்டுள்ளது. அது மனித மேன்மையையும் மனித நேயத்தையும் தொடர்வதற்கான ஒரு சீரான போதனைகளைத் தந்துள்ளது. இந்த உலகம் குறிப்பாக முஸ்லிம் உலகம் இந்த திருக்குர்ஆனின் போதனைகளை பின்பற்றினால் எல்லா பிரச்சனைகளும் மோதல்களும் தீர்க்கப்பட்டும். மேலும் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான சூழல் வளரும்.

இன்று அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயம் இந்த நோக்கத்தையும் குறிக்கோளையும் அடைய பெரும்பாடுபட்டு உலகின் எல்லா பகுதியிலும் முயற்சி செய்து வருகிறது. பலவிதமான மக்கள், பலதரப்பட்ட குழுக்கள் ஆகியோருடன் நான் நடத்திய பேச்சு, அமைதி மாநாடு, பல கூட்டங்கள் ஆகியவற்றின் மூலமாக நான் இந்த உலகை இந்த முக்கிய இலக்கின் பக்கம் கவனமூட்டியுள்ளேன். உலகத் தலைவர்கள் அறிவாற்றலுடன் செயல்பட்டு நாடுகளுக்கிடையேயான பரஸ்பர, சிறிய அளவிலான விரோதத்தை உலகச் சண்டையாக ஆக்காமல் இருக்கச் செய்ய வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும். உலகில் அமைதியை நிலைநாட்ட பெரும் வல்லரசு என்ற வகையில் நீங்கள் உங்கள் பங்கை ஆற்ற வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

இந்த உலகை உலகப் போரின் பயங்கரமான விளைவுகளிலிருந்து காப்பாற்றுங்கள். இது போன்ற போர் நடக்குமானால் அது அணு ஆயுத பிரயோகத்தில் முடியும். இதன் விளைவாக சில நாடுகளின் பாகங்கள் உலகின் சில பகுதிகள் உலகின் முகத்திலிருந்து முழுவதுமாக அழிக்கப்பட்டுவிடும். இந்த அணு ஆயுதப் போரின் தாக்கமும் பக்க

விளைவுகளும் உடனடி அழிவுடன் நின்று விடாது. மாறாக, எதிர் கால சந்ததியினர் குறைபாடுள்ள, ஊனமுள்ள குழந்தைகள் பிறப்பது, இதன் நீண்ட கால பாதிப்பாக இருக்கும். எனவே உங்களின் அனைத்து சக்திகளையும் தகுதிகளையும் வளங்களையும் இந்த பயங்கர விளைவுகளிலிருந்து மனித குலத்தை காக்கும் முயற்சியில் பயன்படுத்துங்கள். இப்பணியை தாங்கள் மேற்கொண்டால் முடிவில் உங்கள் நாட்டிற்கு அது அனுகூலமாக இருக்கும். உலகில் உள்ள அனைத்து சிறிய, பெரிய நாடுகள் இந்த செய்தியை புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும்.

வாழ்த்துக்கள் மற்றும் பிரார்த்தனையுடன்,

தங்கள் உண்மையுள்ள,

**மரஸா மஸரூர அஹ்மது**
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
உலகளாவிய
அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின்
தலைவர்

# பிரிட்டன் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதம்

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
هو الناصر

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

15, ஏப்ரல் 2012

பிரதமர் கிரேட் பிரிட்டன் மற்றும் வடக்கு அயர்லாந்து,
ரைட் ஹானரபுள். டேவிட் கேமரூன்
10, டவுனிங்க் தெரு இலண்டன்.
**SW 1A 2AA**
இங்கிலாந்து

அன்பான பிரதமரே!

தற்போது இந்த உலகம் கடக்கும் ஆபத்தான, நிலையில்லா சூழலை கருத்தில் கொண்டு, இதை தங்களுக்கு எழுதுவது அவசியம் என உணர்கிறேன். பிரிட்டனின் பிரதமர் என்ற முறையில் தங்களது நாட்டின், பரவலாக உலகின் எதிர்காலத்தின் மீது பாதிப்பை ஏற்படுத்தும் முடிவை எடுக்கும் அதிகாரத்தில் தாங்கள் இருக்கின்றீர்கள். இன்று, உலகம் அமைதியின் தேவையில் உள்ளது. ஏனெனில் போரின் தீப்பொறி உலகம் முழுவதும் காணப்படுகிறது. சிறிய அளவிலான நாடுகளுக்கிடையேயான மோதல்கள் உலக அளவிலான மோதலாக பயமுறுத்துகின்றன. பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இன்றைய சூழல் 1932-ல் நிலவிய சூழலை ஒத்துள்ளதை நாம் காண்கிறோம். மேலும் வேறு பல இணையான, ஒத்தவை சேரும்போது இன்று ஏற்படும் நிலைமை, இரண்டாம் உலகப் போர் ஏற்படுவதற்கு முன்னுள்ளதோடு ஒத்துள்ளது. இந்த தீப்பொறிகள் உண்மையில் பற்றிக் கொண்டால் நாம் பயங்கரமான மூன்றாம் உலகப் போரின் காட்சியைக் காண்போம். எண்ணிலடங்கா பல சிறிய, பெரிய நாடுகள் அணு ஆயுதங்கள் வைத்திருப்பதால் சந்தேகத்திற்கிடமில்லாமல்

இப்போர் ஓர் அணு ஆயுதப் போராக இருக்கும். இன்று இருக்கும் ஆயுதங்கள் பயங்கர அழிவை ஏற்படுத்தக் கூடியவையாகும். இவை தலைமுறை தலைமுறையாக பிறக்கும் குழந்தைகளை மரபணு மற்றும் உடல்கூறு குறைபாடாக பிறக்க வைக்கும். ஜப்பான் இது போன்ற வெறுக்கத்தக்க அணு ஆயுதப் போரினால் ஏற்பட்ட விளைவுகளை அனுபவித்த ஒரு நாடாகும். இதன் இரண்டு நகரங்கள் இரண்டாம் உலகப் போரில் அணுகுண்டினால் முழுவதுமாக அழிக்கப்பட்டது. இருப்பினும் அப்போது பயன்படுத்திய பரவலாக பேரழிவை ஏற்படுத்திய அணு குண்டு, இன்று சில சிறிய நாடுகளிடம் உள்ளதை விட மிகவும் சக்தி குறைவானதாக இருந்தது. எனவே வல்லரசுகளின் கடமை என்னவென்றால், எல்லாரும் அமர்ந்து அழிவின் விளிம்பில் உள்ள மனித குலத்தை காப்பாற்ற ஒரு தீர்வு காண வேண்டும்.

பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்துவது என்னவென்றால், சில நாடுகளிடமுள்ள அணு ஆயுதங்கள் தங்களது செயல்களால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதைப் பற்றி எண்ணாத, அதற்கான தகுதி இல்லாத, மற்றவர்களை கொல்வதால் மன மகிழும் மக்களின் கைகளில் சென்று விடுமோ என்பதுதான். வல்லரசுகள் நீதியின்படி நடக்கவில்லை என்றால், சிறிய நாடுகளின் அவநம்பிக்கையை களையா விட்டால், பெரிய அளவிலான மற்றும் புத்திசாலித்தனமான கொள்கைகளை பின்பற்றாவிட்டால் நிலைமை நமது அனைத்து கட்டுப்பாட்டையும் விட்டுப் போய் விடும். மேலும் அதன் விளைவாக ஏற்படும் பேரழிவுகள் கற்பனைக்கு அப்பாற்பட்டதாக இருக்கும். அமைதியை விரும்பும் பெரும்பாலான உலக மக்கள் கூட இந்தப் பேரழிவில் சிக்கிக் கொள்வார்கள்.

எனவே, மிகவும் வலியுறுத்திக் கூறும் எனது உளப்பூர்வமான விருப்பம் மற்றும் பிரார்த்தனை என்னவென்றால், எல்லா பெரிய நாடுகளின் தலைவர்களும் இந்த கசப்பான உண்மையை புரிந்து கொள்ள வேண்டும். மேலும் உங்களது நோக்கத்தை, இலக்கை அடைய மூர்க்கமான கொள்கைகளை மற்றும் பலத்தை உபயோகிப்பதை விட்டு நீதியை ஏற்படுத்துகின்ற, அதைப் பாதுகாக்கின்ற கொள்கைகளை கடைபிடிக்க வேண்டும்.

கடந்த சில காலத்திற்கு முன் நோக்குவோமேயானால், பிரிட்டன் அநேக நாடுகளை ஆண்டு தனக்குப் பின்னால் மேன்மையான நீதியை,

மத சுதந்திரத்தை, குறிப்பாக துணைக் கண்டமான இந்தியா, பாகிஸ்தானில் பதித்துள்ளது. அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் தோற்றுநர் அந்த சமயத்தில் மாட்சிமை மிகுந்த விக்டோரியா மகா ராணியை அவரது ஆட்சியின் வைர விழாவில் பாராட்டியதுடன் இஸ்லாத்தின் தூதுச் செய்தியையும் எட்ட வைத்தார்கள். நீதமாகவும், சமத்துவத்துடனுன் ஆட்சி புரிந்த பிரிட்டன் அரசுக்கு தாராள வெகுமதியை அளிக்க இறைவனிடம் சிறப்பாக பிரார்த்தித்தார்கள். அவர்கள் பிரிட்டன் அரசை அதன் நீதமான கொள்கைக்கும், மத சுதந்திரம் அளித்ததற்கும் வெகுவாக பாராட்டினார்கள்.

இன்றைய உலகில் பிரிட்டிஷ் அரசாங்கம் (இந்திய) துணைக் கண்டத்தில் ஆட்சி செய்யவில்லை. ஆனாலும் பிரிட்டன் சமுதாயத்தில் மத சுதந்திரக் கொள்கைகள் ஆழமாக ஊடுருவியுள்ளன. மேலும் அதன் சட்டம், அதன் மூலமாக ஒவ்வொரு மனிதனுக்கும் சம உரிமையையும், மத சுதந்திரத்தையும் அளித்துள்ளது. இவ்வாண்டு மாட்சிமை மிக ராணி இரண்டாவது எலிசபெத் அவர்களின் வைர விழா கொண்டாடப்படுகிறது. உலகிற்கு நேர்மை மற்றும் அதன் நீதியை பறைசாற்ற பிரிட்டனுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் வரலாறு கூறுவது என்னவென்றால், பிரிட்டன் இந்த நீதியை வெளிப்படுத்தும் போதெல்லாம் அதை நாங்கள் எப்போதும் ஏற்றுக் கொண்டுள்ளோம். மேலும் வருங்காலத்திலும் நீதி என்பது பிரிட்டன் அரசின் சிறப்புப் பண்பாக இருக்க வேண்டும் என்பதே எங்களது நம்பிக்கை. மத சம்பந்தப்பட்ட விஷயங்கள் மட்டுமல்லாமல் எல்லா வகையிலும் நீங்கள் உங்களின் நல்ல தரத்தை கடந்த காலத்திலும், இப்போதுள்ள உலக சூழலிலும் மறக்க மாட்டீர்கள். பிரிட்டன் உலகளாவிய அமைதியை நிலைநாட்ட, தனது பங்கை நிச்சயம் ஆற்றும்.

எல்லா நிலையிலும், எல்லா திசையிலும் இந்த வெறுப்பின் தீயை அணைக்க நமது அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். இந்த முயற்சியில் வெற்றி பெற்றால் மட்டுமே வரக் கூடிய சந்ததியினருக்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை அளிக்க நம்மால் உத்தரவாதம் தர முடியும். இந்த முயற்சியில் நாம் வெற்றி காணாவிட்டால் சந்தேகத்திற்கிடமின்றி அணு ஆயுதப் போரினால், நமது செயல்களின் காரணமாக எங்குமுள்ள

வருங்கால சந்ததியினர் பயங்கர விளைவுகளை எதிர்க் கொள்ள வேண்டியது வரும். மேலும் அவர்கள் தங்களது மூதாதையர்களை இந்த உலகை - பேரழிவுக்கு இட்டுச் சென்றவர்களை மன்னிக்க மாட்டார்கள். நான் மீண்டும் நினைவூட்டுகிறேன். பிரிட்டன் வளந்த நாடுகளில், வளரும் நாடுகளில் தனது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய நாடுகளில் ஒன்றாக இருக்கிறது. சமத்துவம் மற்றும் நீதியின் தேவைகளை நிறைவேற்றினால் நீங்கள் உலகை வழி நடத்தலாம். எனவே பிரிட்டன் மற்றும் வல்லரசுகள் உலகில் அமைதியை நிலைநாட்ட தங்கள் பங்கை ஆற்ற வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கும் மற்ற உலகத் தலைவர்களுக்கும் இந்த செய்தியை புரிந்து கொள்ள வைப்பானாக.

நல்வாழ்த்துக்கள் மற்றும் பிரார்த்தனையுடன்,

தங்கள் உண்மையுள்ள,



**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
உலகளாவிய
அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின்
தலைவர்

# ஜெர்மன் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதம்

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
هو الناصر

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

15, ஏப்ரல் 2012

மேதகு ஜெர்மனி பிரதமர்
,ஆன்ஜெலா மார்கல்
புன்டஸ் கான்லெரமண்ட்
வில்லி-பிரான்டிஸ்டிரீட்-1
10557-பெர்லின்

அன்பார்ந்த பிரதமரே!

இன்று உலகில் நிலவும் ஆபத்து மிகுந்த, மிகவும் கவலை அளிக்கக் கூடிய சூழலில், நான் தங்களுக்கு இதை எழுதுவது அவசியம் எனக் கருதுகிறேன். ஒரு குறிப்பிட்ட சக்தியாகவும், உலகில் தனது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு நாடாகவும் விளங்குகின்ற ஜெர்மனியின் பிரதமர் என்ற வகையில், தங்கள் நாட்டையும், பரவலாக உலகையும் பாதிக்கக் கூடிய முடிவை எடுக்கும் அதிகாரத்தை கொண்டுள்ளீர்கள். இன்று உலகம் குழுக்களாக பிளவுற்றுள்ளது. தீவிரவாதம் வளர்கிறது. மேலும் நிதி, அரசியல், பொருளாதார நிலை பாதிக்கப்பட்டுள்ளது. அமைதிக்கு அடித்தளமிட அனைத்து வகையான வெறுப்பையும் களைவது அவசியத் தேவையாக இருக்கிறது. ஒவ்வொரு மற்றும் எல்லாவித மனிதனின் உணர்வுகளை மதிப்பதன் மூலமே இதை அடைய முடியும். எப்படி இருப்பினும், இது சரியாக நேர்மையாக நடத்தப்படாததால், இந்த உலகம் விரைவில் கட்டுப்பாட்டை இழக்க உள்ளது. நீதியின் தேவையை பல நாடுகள் செயல்படுத்தாததை நாம் காண்கிறோம். இதன் காரணமாக மற்றொரு உலகப் போருக்கான அடிக்கல் ஏற்கனவே நாட்டப்பட்டு விட்டது.

அநேக நாடுகள் பெரியவை, சிறியவை அனைத்தும் அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளன. எனவே, தற்போது ஒரு உலகப் போர் மூண்டால் வழக்கமான ஆயுதங்களால் சண்டையிட்டுக் கொள்ளமாட்டார்கள்; அணு ஆயுதங்களால் சண்டையிடுவார்கள். அணு ஆயுதத்தால் ஏற்படும் அழிவு உண்மையில் பேரழிவாகும். அதன் விளைவு போருக்குப் பிந்தைய விளைவாக இருக்காது. மாறாக, அதன் நெடுங்கால விளைவுகளால் எதிர்கால தலைமுறைகள் கஷ்டப்பட வேண்டியது வரும். மிக மோசமான மருத்துவ மற்றும் மரபணு குறைபாடுகளுடன் பிறப்பார்கள்.

எனவே உலக அமைதியை ஏற்படுத்த நீதி தேவைப்படுகிறது என்பதே எனது நம்பிக்கை. எல்லா மக்களின் மத செயல்படுகளையும், அவர்களது உணர்வுகளையும் மதிக்க வேண்டும். பல மேற்கத்திய நாடுகள், பெருந்தன்மையுடன், ஏழை மற்றும் வளர்ச்சி அடையாத நாடுகளின் மக்களை தங்களது நாடுகளின் குடியேற அனுமதித்துள்ளனர். இவர்களில் முஸ்லிம்களும் அடங்குவர். சந்தேகத்திடமில்லாமல், சிறுபான்மையின முஸ்லிம்கள் தேவை இல்லாத செயல்களில் ஈடுபட்டு, மேற்கத்திய நாடுகளுடைய மக்களின் மனங்களில் அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளனர். எப்படி இருப்பினும், அவர்கள் செயல்களுக்கும் இஸ்லாத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது தெளிவு. இந்த தீவிரவாதிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களை உண்மையில் நேசிப்பதில்லை. அவர்கள் அன்பு, நேசம், அமைதி போன்ற தூது உலகிற்கு கொண்டு வந்தார்கள். நிச்சயமாக ஒரு சில விரல் விட்டு எண்ணக்கூடிய, வழி கெடுக்கப்பட்ட மக்களின் செயல்களை அடிப்படையாகக் கொண்டு எங்களது மதத்தையும் அதனைப் பின்பற்றும் பெரும்பான்மையினர் உண்மையான மற்றும் அப்பாவியான முஸ்லிம்களின் உணர்வுகளை புண்படுத்தும் அடிப்படையில் எதிர்க்கக் கூடாது. சமுதாயத்தில் அமைதி என்பது இரு வழிச் செயல்பாடு ஆகும். எல்லா தரப்பினரும் ஒன்று சேர்ந்து பரஸ்பர ஓர் ஒருங்கிணைப்பின் மூலமாகவே இதை ஏற்படுத்த முடியும். மேற்கத்திய மக்களின் மனங்களில் இந்த அவநம்பிக்கையினால் மக்கள் மற்றும் நாடுகளுக்கிடையிலுள்ள உறவு வளர்வதை விட சில முஸ்லிம் அல்லாதவர்களின் செய்கைகள் நாளுக்கு நாள் மிகவும் மோசமாகின்றன. மேலும் முஸ்லிம் உலகிற்கும் முஸ்லிம் அல்லாத மற்றவர்களுக்கு

மத்தியிலும் ஓர் ஆழமான பிளவை ஏற்படுத்துகிறது.

சில முஸ்லிம் நாடுகளின் அணிகள் வழிகெடுக்கப்பட்ட செயல்களால் சில வல்லரசு நாடுகள் தமது சுயநலங்களைத் தவிர்த்து நீதி, நேர்மைக்கு முன்னுரிமை வழங்குவதை நாம் காண்கிறோம். உலகின் சில வல்லரசு நாடுகள் சில நாடுகளின் செல்வம் மற்றும் இயற்கை வளங்களை தமது போட்டி நாடுகள் அடைவதை தடுக்க விரும்புகின்றன. அதனால்தான் உலக அமைதியை நிலைநாட்டுவது அல்லது மக்களுக்கு உதவுவது என்ற அடிப்படையில் அவ்வப்போது முடிவுகள் எடுக்கப்படுகின்றன. மேலும் தற்போதுள்ள உலகின் அரசியல் சூழல் தலை கீழான பொருளாதார சீரழிவால் ஏற்பட்டுள்ளது என்பதே உண்மை. இது நம்மை மற்றோர் உலகப் போரின் பக்கம் இழுக்கிறது.

உண்மையில், உண்மை வெளிப்படுத்தப்பட்டால் சில நாடுகள் நீதியுடன் ஒருவர் மற்றவரிடம் பலன் பெறுவர். எவ்வாறெனில், சரியான தொழில் நுட்ப மற்றும் பொருளாதார உடன்பாடுகள் நியாயத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப் படலாம். நேர்மையற்ற பயனை அவரது வளங்களிலிருந்து பெற முயலக் கூடாது. மாறாக, ஒன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவி செய்து பெற வேண்டும். சுருக்கமாக, இன்று உலகில் நிலவும் ஒழுங்கீனம் ஒரு முக்கியமான செய்கையின் அடிப்படையில் உள்ளது. அது நீதி முழுமையாக இல்லாத குறைதான். இது அமைதியின்மையையும், எதிர்ப்பையும் பரவலாக ஏற்படுத்துகிறது.

எனவே எனது வேண்டுகோள், உலகப் போர் மூழ்வதைத் தடுக்க தங்களால் இயன்ற அளவு முயற்சி செய்யுங்கள். உங்களது எல்லா சக்திகளையும், வளங்களையும், தாக்கத்தையும் பயன்படுத்தி, பயங்கரமான பேரழிவு நம்முன் பின்னப்பட்டுள்ளதிலிருந்து இந்த உலகை காப்பாற்றுங்கள். **சில செய்திகளின் அடிப்படையில் ஜெர்மனி, இஸ்ரேலுக்கு அணு ஆயுதங்களைக் கொண்ட அதி நவீன மூன்று நீர் மூழ்கிக் கப்பல்களை வழங்குவதாக அறிந்தோம்.** ஒரு ஜெர்மனி பேராசிரியர், ‘இது போன்ற முடிவுகளால், இஸ்ரேலுக்கும் ஈரானுக்குமிடையில் உள்ள மோசமான பதற்றம் மேலும் வளர பயன்படும்’ என்று கூறியுள்ளார். நாம் ஒன்றை மட்டும் நினைவிற்கொள்ள வேண்டும். **அணு ஆயுதங்கள் தற்போது**

**வல்லரசுகள் மட்டும் கொண்டிருக்கவில்லை. மாறாக, சில சிறிய நாடுகளும் அவற்றை கொண்டுள்ளன. என்ன கவலை அளிக்கிறதென்றால், சில சிறிய நாடுகளிலுள்ள தலைவர்கள் மற்றவர்களை கொல்வதில் இன்பம் காண்பவர்களாவர். அவர்கள் இது போன்ற ஆயுதங்களை பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் பற்றி கவலைப்படாதவர்கள்.** எனவே மீண்டும் எனது வேண்டுகோள் என்னவென்றால், உலகின் அமைதியை நிலைநாட்ட உங்களால் இயன்ற வரை முயற்சி செய்யுங்கள். இதில் நாம் தோல்வி கண்டால், ஓர் அணு ஆயுத மோதல் பேரழிவை ஏற்படுத்தும் என்பதில் நம் மனதில் எந்த சந்தேகமும் வேண்டாம். அது தலைமுறை தலைமுறையாக குறைபாடுள்ள குழந்தைகள் பிறப்பதற்கு வழிவகுக்கும். அவர்கள் உலகளாவிய பேரழிவுக்கு தம்மை இட்டுச் சென்ற தமது மூதாதையர்களை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். எல்லாம் வல்ல இறைவன் தங்களுக்கும், எல்லா உலக தலைவர்களுக்கும் இந்தச் செய்தியை புரிந்து கொள்ளச் செய்வானாக.

நல்வாழாத்துடனும், பிரார்த்தனையுடனும்.

தங்கள் உண்மையுள்ள,



**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
உலகளாவிய
அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின்
தலைவர்

# ஃபிரான்ஸ் குடியரசின் அதிபருக்கு எழுதப்பட்ட கடிதம்

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
هو الناصر

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

16 மே 2012

ஃபிரான்ஸ் குடியரசின் அதிபர்,
மேதகு நிக்கோலஸ் ஸர்கோஸி, எலிஸி அரண்மனை,
55, ஃபாபோர்க் செயின்ட் ஹானர் வீதி, 75008
பாரிஸ், ஃபிரான்ஸ்.

அன்பார்ந்த அதிபரே!

உலகில் விரைவாக மாறும் சூழலை கருத்தில் கொண்டு உங்களுக்கு எழுதுவது தேவை என எண்ணி இதை எழுதுகிறேன். ஏனெனில் ஃபிரான்ஸ் அதிபர் என்ற வகையில், தங்களின் நாட்டையும், பரவலாக உலகையும் பாதிக்கக் கூடிய முடிவை எடுக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளீர்கள். உலகில் உள்ள அரசுகள் இன்று உலகில் தற்போது நிலவும் மிகவும் கவலை அளிக்கக் கூடிய சூழலுக்கு ஆலோசனை வழங்கக் கூடிய நிலையில் உள்ளன என நான் நம்புகிறேன். நாடுகளுக்கிடையில் நிலவும் அநீதியும் போருக்கான சூழலும் உலக மோதல்களை ஏற்படுத்துமோ என பயமுறுத்துகின்றன. கடந்த நூற்றாண்டில் இரண்டு உலகப் போர்கள் நடந்துள்ளன. முதல் உலகப் போருக்குப் பின், லீக் ஆஃப் நேஷன்ஸ் உருவாக்கப்பட்டது. எப்படி இருப்பினும், நீதியின் தேவை முழுமைபடுத்தப்படவில்லை. இதன் தொடர்ச்சியாக அது இரண்டாம் உலகப் போருக்கு இட்டுச் சென்று, இறுதியாக அணுகுண்டுப் பிரயோகத்தில் முடிந்தது. இதன்

தொடராக, மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் உலக அமைதியை நிலைநாட்டுவதற்கும் ஐக்கிய நாட்டு சபை உருவாக்கப்பட்டது. இதன் மூலம் போர்களைத் தவிர்ப்பதற்கான வழிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் இன்றோ மூன்றாம் உலகப் போருக்கான அடிக்கல் ஏற்கெனவே நாட்டப்பட்டதை நாம் காண்கிறோம். அநேக சிறிய, பெரிய நாடுகள் அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளன. என்ன கவலை அளிக்கிறதென்றால், சில அணு ஆயுத சக்திகளைக் கொண்டுள்ள சிறிய நாடுகள் பொறுப்பற்றவையாக இருக்கின்றன. மேலும் இதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி ஒன்றும் அறியாதவையாக இருக்கின்றன. அணு ஆயுதங்களை பயன்படுத்தினால் பயங்கரமான பின் விளைவுகள் உடனடியாக பல மடங்காகும். அந்த நாள் உலகின் கடைசி நாளாகும் என்பதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இன்றுள்ள தளவாடங்கள் மிகவும் அழிவை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன. இவை தலைமுறை தலைமுறையாக மரபணு மற்றும் உடல் குறைபாடுள்ள குழந்தைகள் பிறப்பதை ஏற்படுத்தும். மேலும் ஜப்பான் ஒரு நாடுதான் அணு ஆயுத போரின் பயங்கரமான அழிவை சந்தித்தது. தற்போது 70 ஆண்டுகள் கழிந்து விட்டன. அணு குண்டின் பாதிப்பு, புதிதாகப் பிறக்கும் குழந்தைகள் மீது இன்றும் காணப்படுகிறது.

எனவே, தங்களால் முடிந்த அளவுக்கு முயன்று, முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாத உலகின் பகைமை மற்றும் அவநம்பிக்கையை அணைக்க முயலுங்கள் என்பதே எனது தாழ்மையன வேண்டுகோளாகும். சில ஐரோப்பிய நாடுகள், இஸ்லாமிய போதனைகள் மற்றும் நம்பிக்கைகள் மீது குறிப்பிட்ட சந்தேகங்களைக் கொண்டுள்ளன. இதன்படி சில கட்டுப்பாடுகளை அவர்கள் மீது விதித்துள்ளன. மற்றவர்கள் இதை செயல்படுத்துவது என எண்ணுகின்றனர். தம்மை முஸ்லிம்கள் என்று கூறும் சில முஸ்லிம் தீவிரவாதிகள் மேற்கத்திய நாடுகள் மீது கொண்டுள்ள வெறுப்பு, அவர்களை முறைகேடான செயல்களை செயல்பட வைக்கும். இது மேலும் மத சகிப்பின்மை மற்றும் ஏற்றுக் கொள்ளாத நிலைக்கும் இட்டுச் செல்லும். எப்படி இருப்பினும் இஸ்லாம் அமைதியை விரும்பும்

மார்க்கமாகும். அது தவறை நிறுத்துவதற்காக இன்னும் ஒரு தவறை செய்யப் போதிக்கவில்லை. அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயமாகிய நாங்கள் இந்தக் கொள்கைகளையே பின்பற்றுகிறோம். எல்லா பிரச்சனைகளுக்கும் அமைதியான தீர்வை நம்புகிறோம். வருத்தம் என்னவென்றால், சில சிறுபான்மை முஸ்லிம்கள், இஸ்லாத்தை தவறாக சித்தரிக்கப்பட்ட உருவமாகக் காட்டுவதுடன் தமது வழிகெடுக்கப்பட்ட நம்பிக்கையில் நடக்கின்றனர். ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் முழு மனித இனத்திற்கும் அருட்கொடையாக வழங்கப்பட்டவர்கள். அவர் மீதுள்ள அன்பால் நான் கூறுகிறேன். இந்தச் செயல்களை நீங்கள் உண்மை இஸ்லாம் என நம்ப வேண்டாம். மேலும் இந்த சில வழிகெட்டவர்களின் செயல்களை அனுமதிக்கப்பட்டதாக எண்ணி பெரும்பான்மை அமைதியான முஸ்லிம்களின் உணர்வுகளை புண்படுத்த வேண்டாம். அண்மையில் ஈவு இரக்கமற்ற ஒருவன் தெற்கு ஃபிரான்ஸில் சில ஃபிரான்ஸ் படை வீரர்களை காரணமில்லாமல் சுட்டுக் கொன்றுள்ளான். இதற்கு பின் சில நாள் கழித்து அவன் ஒரு பள்ளிக்கூடத்தில் நுழைந்து மூன்று அப்பாவி யூதக் குழந்தைகளையும் அவர்களின் ஆசிரியையும் கொன்றுள்ளான். இது போன்ற கொடுமைகளை சில முஸ்லிம் நாடுகளில் தொடர்ந்து நடைபெறுவதை பார்க்கிறேன். எனவே இச்செயல்கள் அனைத்தும் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு வெறுப்பை வளர்க்க தூபம் போடுகின்றன. இதன் அடிப்படையில் அவர்களின் இலக்கை பெரிய அளவில் தீவிரப்படுத்த முயல்கின்றனர். ஒரு முஸ்லிம் என்ற முறையில் தெளிவாகக் கூறுகிறேன். **இஸ்லாம் எந்த வடிவிலும், எந்த வழியிலும் கொடுமை மற்றும் நசுக்குதலை அனுமதிக்கவில்லை. புனித குர்ஆன், ஓர் அப்பாவியை காரணமில்லாமல் கொல்வதை மனித குலத்தையே கொல்வதற்கு ஒப்பாகக் கூறுகிறது.** இந்தக் கோட்பாடு முழுமையானது; விதிவிலக்கில்லாதது.

திருக்குர்ஆன் மேலும் கூறுகிறது: ஏதாவது ஒரு நாடு அல்லது மக்கள் உங்களிடம் பகைமை பாராட்டும்போது, அது நீங்கள் அவர்களுடன் பரிவர்த்தனை செய்யும்போது உங்களை முழுமையான நீதம் மற்றும் நேர்மையுடன் நடக்க தடையாக இருக்கக் கூடாது. பகைமை மற்றும் போட்டி மனப்பான்மை உங்களை பழி தீர்க்கும்

செயலில் இட்டுச் செல்லக் கூடாது. அல்லது சமத்துவமில்லாமல் நடத்தக் கூடாது. மோதல்கள் நல்ல முறையில் தீர்க்கப்பட வேண்டும் என விரும்பினால் கடுமையாக முயன்று ஏற்றுக் கொள்ளக் கூடிய முடிவுகளைக் காண முயலுங்கள். பல மேற்கத்திய நாடுகள் பெருந்தன்மையுடன் ஏழை மற்றும் வளரும் நாடுகளில் உள்ள மக்களை தங்களது நாடுகளில் அவர்களை குடியேற அனுமதித்துள்ளன. இதில் முஸ்லிம்களும் பெருமளவில் உள்ளனர். நிச்சயமாக, அநேக முஸ்லிம்கள் உங்கள் நாடுகளில் வாழ்கின்றனர். எனவே அவர்கள் உங்களின் குடிமக்களாவர். இதில் பெரும்பாலார் சட்டத்திற்குக் கீழ்ப்படிபவர்களும் உண்மையாளர்களுமாவர். மேலும் ‘ஒருவரின் நாட்டின் மீதுள்ள அன்பு, இறை நம்பிக்கையின் ஒரு பகுதியாகும்’ என இஸ்லாம் பட்டவர்த்தனமாகக் கூறுகிறது. அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயம் இதன்படி நடந்து, இந்தத் தூதை உலகம் முழுவதும் பரப்புகிறது. தங்களுக்கும் எனது செய்தி இதுவேயாகும். உண்மை இஸ்லாத்தின் போதனைகள் எல்லா இடங்களிலும் பரவினால் ஒருவர் தன் நாட்டின் மீதுள்ள அன்பை காட்டக்கூடிய தேவையும், உலகிலுள்ள ஒவ்வொரு நாடுகளுக்குள்ளும் அமைதி நிலைநாட்டப்படுவதும் ஏற்பட்டுவிடும்.

உங்களுக்கும் நிச்சயமாக உலக தலைவர்களுக்கும் எனது தாழ்மையான வேண்டுகோள் என்னவெனில், மற்ற நாடுகளை பலத்தால் நசுக்குவதை விட, ராஜதந்திரம், அறிவுடைமை மற்றும் பேச்சுவார்த்தை ஆகியவற்றை பயன்படுத்துங்கள். உலகின் வல்லரசுகள் குறிப்பாக ஃபிரான்ஸ் போன்ற நாடுகள் அமைதியை நிலைநாட்டுவதில் தனது பங்கை ஆற்ற வேண்டும். அவர்கள், சிறிய நாடுகளின் செயல்களை அடிப்படையாகக் கொண்டு உலகின் நல்லிணக்கத்தை சீர்குலைக்கக் கூடாது. நான் மீண்டும் உங்களுக்கு நினைவூட்டுகிறேன். பெரிய, சிறிய நாடுகள், மூன்றாவது உலகப் போரை வெடிக்கச் செய்வதிலிருந்து தடுக்க, கடுமையாக உங்களால் முடிந்த அளவு முயலுங்கள். இந்த செயலில் தோல்வி அடைந்தால் இந்தப் போரினால் ஏற்படும் விளைவுகளும் பாதிப்புகளும் ஆசியாவின் ஏழை நாடுகள், ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுடன் முடிவடையாது. மாறாக, நமது வருங்கால தலைமுறையினர், நமது செயல்களின்

பயங்கர விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதில் நமது மனதில் எந்த சந்தேகமும் வேண்டாம். உலகில் பரவலாக குறைபாடுள்ள குழந்தைகள் பிறக்கும். உலகத் தலைவர்கள் அறிவுடைமையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும். நாடுகளுக்கிடையில் மற்றும் மக்களுக்கிடையில் பரஸ்பர பகைமையை உலக மோதல்களால் வெடிக்க அனுமதிக்காதீர்கள். எல்லாம் வல்ல இறைவன் தங்களையும் உலகத் தலைவர்களையும் இந்தத் தூதை அறிந்து கொள்ளச் செய்வானாக.

வாழ்த்துக்கள் மற்றும் பிரார்த்தனையுடன்.

தங்கள் உண்மையுள்ள,



**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
உலகளாவிய
அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின்
தலைவர்

# மாட்சிமை மிகு பிரிட்டனின் மகாராணி

# மற்றும்

# காமன் வெல்த் கூட்டமைப்பின் தலைவிக்கு

# எழுதப்பட்ட கடிதம்

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
ھو الناصر

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

19, ஏப்ரல் 2012

மாட்சிமை மிகு மகா ராணி இரண்டாவது எலிஸபெத்,
பிரிட்டனின் ராணி மற்றும் காமன்வெல்த் சபையின் தலைவி
பக்கிங்ஹம் அரண்மனை
இலண்டன் **SW1A 1AA**
இங்கிலாந்து

மாட்சிமை மிகு இராணி அவர்களுக்கு,

அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் தலைவர் என்ற வகையிலும் கோடானு கோடி உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் உறுப்பினர்கள் சார்பாக, மாட்சிமை மிகு இராணி அவர்களுக்கு இந்த மகிழ்ச்சி மிக்க வைர விழா கொண்டாட்டத்தின்போது, எனது இதயங்கனிந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். எங்களையும் இந்த பெருமிதம் வாய்ந்த கொண்டாட்டத்தில் பங்கு பெற வைத்ததற்காக எல்லாம் வல்ல இறைவனுக்கு அளவுக்கதிகமாக நன்றி செலுத்துகிறோம். குறிப்பாக பிரிட்டனில் வாழும் குடிமக்களாகிய அஹ்மதி முஸ்லிம்கள் இந்த வைர விழா நிகழ்வில் பெருமையும் பெரு மகிழ்ச்சியும் கொள்கின்றனர். எனவே அவர்கள் சார்பாக இதயங்கனிந்த பாராட்டுகளை மாட்சிமை மிகு இராணிக்கு சமர்ப்பிக்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் பெருந்தன்மையான நமது இராணியை முடிவில்லாத மகிழ்ச்சி மற்றும் மன நிறைவில் வைப்பானாக.

நமது நிலைத்தலுக்காக, இந்த உலகையும் வானத்தையும் எண்ணற்ற அருள்களால் நிரப்பிய மேன்மை மிகு இறைவனிடம் எங்களது இராணி, அவரது பெருந்தன்மையால் பல நாடுகளும், காமன்வெல்த் நாடுகளும் அமைதியுடனும், பாதுகாப்புடனும் ஆட்சி புரியும் அரசிக்கு, இறைவன் எப்போதும் அருள் புரிவானாக என வேண்டுகிறேன். எப்படி எல்லா இளைஞர்களும் மற்றும் முதியோர்களும் இராணியை நேசித்து மதிக்கிறார்களோ, அதே போன்று இறைவனின் வானவர்களும் இராணியை நேசிக்க வேண்டும் என்பதே எங்களின் பிரார்த்தனையாகும். எல்லாம் வல்ல, எல்லா சக்திகளும் நிறைந்த இறைவன், தனது அளப்பரிய ஆன்மீக அருளினால் இராணிக்கு அருள் புரிவானாக. எப்படி உலக அருள்களை அளவில்லாமல் வழங்கியுள்ளானோ அது போன்றே இந்த அருளினால் இம்மாபெரும் நாட்டின் குடிமக்கள் அனைவரும் மேன்மை மிகு இறைவனை அறிந்து கொள்ள வைப்பானாக.

இன, மத, நிற வேறுபாடின்றி பிரிட்டனின் குடிமக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் மதிப்பு மரியாதை காட்ட வேண்டும். எந்த அளவுக்கென்றால், இந்த நேர்மறையான நடத்தையின் தாக்கம், இதன் கடல் எல்லைகளையும் கடந்து உலகில் உள்ள மற்ற நாடுகளில் உள்ள மக்களிடமும் பரவ வேண்டும். இந்த உலகில் இன்று பெரும்பாலும் போர், பகைமை மற்றும் ஒழுங்கீனத்தால் சூழப்பட்டுள்ளது. இதற்கு மாற்றாக அமைதி, அன்பு, சகோதரத்துவம் மற்றும் நட்பின் சுவர்க்கமாக மாற வேண்டும். இராணியின் நோக்கும், செயல்பாடுகளும் இந்த நோக்கத்தை அடைய ஒரு முக்கியமான பங்கை ஆற்ற முடியும் என்பதே எனது உறுதியான நம்பிக்கையாகும்.

கடந்த நூற்றாண்டில் இரண்டு உலகப் போர்கள் நடந்துள்ளன. இதில் பல இலட்சக்கணக்கான உயிர்களை இழந்துள்ளோம். இப்போது நாடுகளுக்கிடையே உள்ள எதிர்பார்ப்புகள் தொடர்ந்து அதிகரித்தால், அது முடிவில் மற்றோர் உலகப் போர் ஏற்பட வழி வகுக்கும். உலகப் போரில் அணு

ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால் அதன் பின் உலகம், சொல்ல முடியாத பேரழிவை காண நேரிடும். இறைவன் இந்தப் பேரழிவை ஏற்படாமல் தடுப்பானாக. மேலும் எல்லா உலக மக்களும் புத்திசாலித்தனத்தை மேற்கொள்வார்களாக. எல்லா நாட்டு மக்களையும் சிறிய நாடாக இருப்பினும் பெரிய நாடாக இருப்பினும் பரஸ்பர அன்பு, அமைதி, நல்லிணக்கம் ஆகியவற்றுடன் வாழுமாறு அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும். இந்த மகிழ்ச்சியான வைர விழா கொண்டாட்டங்களை மனித குலத்திற்கு ஓர் அருளாக பயன்படுத்துங்கள் என்பதே மகா ராணிக்கு எனது தாழ்மையான வேண்டுகோளாகும்.

இந்த அடிப்படையில் முக்கியமான வைர விழா சந்தர்ப்பத்தில் நான் மகா இராணியிடம் தாழ்மையுடன் வேண்டுவது என்னவெனில், எந்த மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருப்பினும் - ஏன் - கடவுளையே நம்பாதவர்களாக இருப்பினும், பிற மதத்தின் மக்களின் உணர்வுகளை எப்போதும் மதித்து நடக்க வேண்டும் என்ற செய்தியை நீங்கள் உலகிற்கு வழங்க வேண்டும். இன்று இஸ்லாத்திற்கெதிராக தவறான எண்ணம் உலகில் பரவலாக உள்ளது. இது ஒரு வகையில் அமைதியை நேசிக்கும் முஸ்லிம்களின் உணர்வுகளைக் காயப்படுத்துகிறது. இன்னொரு வகையில் முஸ்லிம் அல்லாதவர்கள் மனதில் (முஸ்லிகளைப் பற்றிய) அவநம்பிக்கையையும் பிரச்சனைகளையும் வளர்க்கிறது. மாட்சிமை மிகு இராணி எல்லா மதங்களையும், அதனைப் பின்பற்றுபவர்களையும், எல்லா உலக மக்களையும் மதிக்கச் சொன்னால் இது ஒரு மகா இரக்கம் மற்றும் சலுகை கொண்ட செயலாக இருக்கும். மேன்மை மிகு இறைவன், இந்த செயலை நிறைவு செய்ய தனது உதவியை நமது இராணிக்கு வழங்குவானாக.

இக்கடிதத்தின் துவக்கத்தில் கூறியது போன்று, நான் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் தலைவர்

ஆவேன். அதன் தொடர்பாக எங்களின் சமுதாயத்தைப் பற்றி சுருக்கமாக நான் கூற விரும்புகிறேன். புனித நபி முஹம்மது (ஸல்) அவர்கள் மற்றும் முந்தைய இறைதூதர்கள் முன்னறிவித்தபடி, இந்தக் காலத்தில் தோன்றிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் - சீர்திருத்தவாதி காதியானில் பிறந்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள்தான் என்பதை அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயம் உறுதியாக நம்புகிறது. 1889-ல் அவர், ஒரு தூய, நேர்மையான சமுதாயத்தை தோற்றுவித்தார். அதுதான் அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயம். அவரது நோக்கம், இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஓர் உயிரோட்டமுள்ள தொடர்பை ஏற்படுத்துவதாகும். மேலும் ஒருவர், மற்றவரது உரிமைகளை நிறைவு செய்வதில் மக்களை அதன் பக்கம் ஈர்ப்பதும் அதன் மூலம் அவர்கள் நல்லெண்ணம் மற்றும் பரஸ்பர மரியாதையுடன் வாழலாம் என்பதேயாகும். 1908-ல் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் மறைந்தபோது சுமார் 4 இலட்சம் பேர் அவரை பின்பற்றுபவர்களாக இருந்தனர். அவரது மறைவுக்குப்பின் இறைவனின் நாட்டப்படி, 'கிலாஃபத்' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. தற்போது தாழ்மையான தொண்டனாகிய நான், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஐந்தாவது கலீஃபாவாக உள்ளேன். இதன் மூலம் அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயம், உலகம் முழுவதும், அதன் தோற்றுநரின் பணியை மேலும் பரப்புகிறது. எங்களின் தூதுச் செய்தி, அன்பு, சகோதரத்துவம், வெற்றுப்பின்மை ஆகியவையாகும். எங்களின் கோட்பாடு, **'எல்லாரிடத்தும் அன்பு; எவரித்தும் இல்லை வெறுப்பு'** என்பதேயாகும். நிச்சயமாக இது இஸ்லாத்தின் அழகிய போதனைகளை சுருக்கமாக வெளிப்படுத்துகிறது.

இங்கு ஒன்றை பற்றிக் கூறுவது பொருத்தமானதாகும். அது மகிழ்ச்சியான ஒன்றுபட்ட காலகட்டமாகும். அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் தோற்றுநர் அவர்களின் காலத்தில், விக்டோரியா மகா இராணியின் வைர விழா கொண்டாடப்பட்டது. அந்த தருணத்தில் அஹ்மதிய்யா சமுதாயத்தின் தோற்றுநர்,

**‘தொஹ்ஃபயே கைஸரிய்யா (மகா ராணிக்கு ஒரு பரிசு)** என்ற புத்தகத்தை எழுதி, அதில் விக்டோரியா மகா இராணிக்கு பாராட்டு செய்தி வெளியிட்டிருந்தார்கள். ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள், தமது செய்தியில் விக்டோரியா மகா ராணியை, அவரது வைர விழாவிற்கு பாராட்டு தெரிவித்திருந்தார்கள். மேலும் அவரது ஆட்சியில் எல்லா குடிமக்களுக்கும் **இந்திய துணைக் கண்டத்தில் வாழும் மக்களுக்கும் நீதி, மத சுதந்திரம் மற்றும் அமைதியுடன் வாழ வழிவகுத்ததற்கும் பாராட்டு தெரிவித்திருந்தார்கள்.** அவர்கள், இஸ்லாத்தின் அழகிய போதனைகளையும் வலியுறுத்தி, தனது வருகையின் நோக்கத்தையும், தனது வாதத்தையும் எளிதாக புரிந்து கொள்ள வைத்தார்கள். பிரிட்டனின் அரசால், துணைக் கண்டத்தில் உள்ள மக்கள் விடுதலை பெற்றிருந்தாலும், பிரிட்டன் அரசு பலதரப்பட்ட பின்புலங்களையும், மதத்தையும் கொண்டவர்களை இங்கு வாழ அனுமதித்துள்ளதும் அவர்களுக்கு சம உரிமை வழங்கியுள்ளதும் உண்மையாகும். மத சுதந்திரம், பேச்சு சுதந்திரம் மற்றும் அவர்களது மதத்தைப் பரப்புவதற்கும் உள்ள உரிமை ஆகியவை பிரிட்டனின் மேன்மையான சகிப்புத்தன்மைக்கு சான்றாகும்.

இன்று ஆயிரக்கணக்கான அஹ்மதி முஸ்லிம்கள் பிரிட்டனில் வாழ்கின்றனர். இவர்களில் பலர், தங்களின் சொந்த நாட்டில் தங்களுக்கெதிராக கொடுமைகளை எதிர்க் கொண்டதன் விளைவாக இங்கு வந்து தஞ்சம் அடைந்துள்ளனர். மாட்சிமை மிகு இராணியின் பெருந்தன்மையான ஆட்சியில் அவர்கள் அமைதியான வாழ்வை அனுபவிக்கின்றனர். இதில் அவர்கள் நீதி மற்றும் மத சுதந்திரத்தைப் பெற்றுள்ளனர். இந்த பெருந்தன்மைக்காக மீண்டும் ஒருமுறை என் இதயத்திலிருந்து வரும் நன்றிதனை மேன்மை மிகு ராணிக்கு கூறுகிறேன்.

எனது இந்தக் கடிதத்தை ராணிக்கு கீழ்வரும் பிரார்த்தனையுடன் - அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின் தோற்றுநர் அவர்கள் மாட்சிமை மிகு விக்டோரியா மகா ராணிக்கு

வழங்கிய அதே பிரார்த்தனையுடன் நிறைவு செய்கிறேன்:

'' ஆற்றல் மிக்க, மேன்மையான இறைவனே! உன்னுடைய கருணை மற்றும் அருளினால் எங்களின் மதிப்பு மிகு ராணியின் இரக்கமுள்ள, மகிழ்ச்சியான ஆட்சியில் நாங்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வது போன்று அவரையும் எப்போதும் மகிழ்ச்சியில் வைப்பாயாக. எல்லாம் வல்ல இறைவனே! அவர்களின் மீது இரக்கமும் அன்பும் கொள்வாயாக. அவரது கனிவான, பெருந்தன்மையான ஆட்சியில் நாங்கள் அமைதியுடனும் வளர்ச்சியுடனும் வாழ்வது போன்று நீ அவர் மீது இரக்கமும் அன்பும் கொள்வாயாக.''

மேலும் எனது பிரார்த்தனை என்னவென்றால், எல்லாம் வல்ல இறைவன், எங்களது மதிப்பு மிகு ராணியை அவனை மகிழ்விக்கும் வகையில் வழிநடத்துவானாக. எல்லாம் வல்ல இறைவன் ராணியின் வழித்தோன்றல்களையும் உண்மையில் நிலைநிற்கவும், மற்றவர்களை அதன் பக்கம் வழிகாட்டுவதற்கும் வழிகாட்டுவானாக. நீதி மற்றும் சுதந்திரம் ஆகியவை பிரிட்டன் முடியரசுக்கு வழிகாட்டும் நெறியாக தொடர்ந்து இருக்கட்டுமாக. நான் மீண்டும் ஒருமுறை இந்த பெரு மகிழ்ச்சியான தருணத்தில் என் இதயத்திலிருந்து ராணிக்கு பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேன்மைமிகு இராணிக்கு எனது உண்மையான இதயப்பூர்வமான பாராட்டை சமர்ப்பிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,



**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

உலகளாவிய

அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின்

தலைவர்

# ஈரான் இஸ்லாமிய குடியரசின் உச்ச தலைவருக்கு எழுதப்பட்ட கடிதம்

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
هو الناصر

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

14, மே 2012

ஈரான் இஸ்லாமிய குடியரசின் உச்சத் தலைவர்
ஆயதுல்லாஹ் சய்யிது அலி ஹுஸைன் கோமேனி அவர்கள்

டெஹ்ரான், ஈரான்

மதிப்பு மிகு ஆயதுல்லாஹ் அவர்களுக்கு,

அஸ்ஸலாமு அலைக்கும். வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ.

எல்லாம் வல்ல அல்லாஹ், ஈரானில் இஸ்லாத்தின் ஊழியம் செய்ய தங்களை வைத்துள்ளான். தற்போது ஈரானிய அரசும் தங்களின் பாதுகாப்பில் இயங்குகிறது. இஸ்லாத்தின் சரியான போதனைகளை உலகிற்கு, நம்மால் முடிந்த அளவுக்கு முயன்று தெரிவிக்க வேண்டும் என்பதையே இது எதிர்பார்க்கிறது. முஸ்லிம் என்ற முறையில், இந்த உலகை அமைதி, அன்பு மற்றும் நல்லிணக்கத்துடன் வாழ நாம் கடுமையாக முயன்று போதிக்க வேண்டும். குறிப்பாக முஸ்லிம் தலைவர்கள் உடனடியாக இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். இதன் காரணமாக தாங்கள் தங்களது அரசின் கவனத்தை உலகில் அமைதியை ஏற்படுத்துவதில் பொறுப்புடன் திருப்ப வேண்டும் என்பதே எனது வேண்டுகோளாகும். **ஈரான் தாக்கப்பட்டால், தனது நாட்டை தற்காத்துக் கொள்ள அதற்கு உரிமை இருக்கிறது.** எப்படி இருப்பினும், அது ஆக்கிரமிப்பை

ஆரம்பம் செய்யக் கூடாது. **மேலும் அது எந்த மோதலிலும் முதலில் தனது அடியை முன்னால் வைக்கக் கூடாது.** மாறாக, மதவேறுபாடுகளை நீக்கும் வழிகளை மேற்கொண்டு பொது நலத்தில் ஒன்றுபட முயற்சி எடுக்க வேண்டும். இத்தகைய வழிமுறையையே இஸ்லாமிய வரலாற்றில் கடைபிடித்ததாக நாம் காண்கிறோம்.

ஹஸ்ரத் நபி முஹம்மது (ஸல்) அவர்களால் முன்னறிவிக்கப்பட்ட, இந்தக் காலத்தில் தோன்றிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தி (அலை) அவர்களது நம்பிக்கையாளன் மற்றும் அவருக்குப் பின் வந்த கலீஃபா என்ற காரணத்தாலும் நான் இக்கடிதத்தை தங்களுக்கு எழுதுகிறேன். அவர்கள் தோற்றுவித்த இந்த ஜமாஅத், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் என அறியப்படுகிறது. இறைவனின் அருளால் இந்த ஜமாஅத் உலகிலுள்ள 200 நாடுகளில் பரவியுள்ளது. மேலும் இதற்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்ட கோடிக்கணக்கான பின்பற்றுபவர்கள் உலகம் முழுவதும் உள்ளனர். இந்த உலகில் உள்ளவர்களை பரஸ்பர அன்பு மற்றும் அமைதியுடன் வாழ வழிகாட்டுவதே எங்களது நோக்கமாகும். இந்த அளவில் நான் தொடர்ந்து அனைத்து தரப்பு மக்களின் கவனத்தையும் ஈர்த்துள்ளேன். எனவே தற்போது இஸ்ரேலிய பிரதமருக்கும், அமெரிக்க அதிபருக்கும் மற்ற உலகத் தலைவர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளேன். இது விஷயமாக போப் பெனடிக்ட் அவர்களுக்கும் எழுதியுள்ளேன்.

மிகப் பெரும் இஸ்லாமிய நாட்டின் ஆன்மீகத் தலைவர் என்ற முறையில், **அனைத்து முஸ்லிம் உம்மத்தினரும் ஒன்றுபட்டு உழைத்தால் உலகின் அமைதியை நிலைநாட்ட முடியும்** என்பதை தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நான் நம்புகிறேன். நாம் எந்த குறிக்கோளுமின்றி, வெறுப்பின் உணர்வு மற்றும் பகைமைக்கு எண்ணை வார்க்கக் கூடாது. மாறாக, அமைதி மற்றும் சாந்தத்தை நிலைநாட்டும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்க வேண்டும். மேலும் மற்றவர்கள் மீது பகைமை அல்லது எதிர்ப்பின் காரணமாக நீதியுடன் நடப்பதில் குறை இருக்கக் கூடாது. புனித குர்ஆனில் இதுதான் நமக்கு போதிக்கப்பட்டுள்ளது:

''நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான சாட்சி கூறுபவர்களாக நிலைத்து நில்லுங்கள். ஒரு சமுதாயத்தின் பகைமை உங்களை நீதியுடன் நடக்காதவாறு தூண்ட வேண்டாம். நீங்கள் நீதியுடன் நடந்து கொள்ளுங்கள். இதுதான் இறையச்சத்திற்கு மிக நெருக்கமானதாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கு அறிகின்றான்.'' ***(திருக்குர்ஆன் அதிகாரம் 5 வசனம் 9)***

அல்லாஹ் எல்லா முஸ்லிம் மக்களுக்கும் எல்லா முஸ்லிம் அரசுகளுக்கும் எனது செய்தியைப் புரிய வைப்பானாக. இதன் மூலம் அவர்கள், உலக அமைதியை நிலைநாட்டும் முயற்சியில் தங்களது பங்கை ஆற்ற ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மனித குலத்தின் மீதான எனது அன்பும், எல்லா முஸ்லிம் உம்மத்தின் மீது வளர்ந்துள்ள அன்பும், மற்றும் மனித குலத்திற்கு அருட்கொடையாக வந்தவரின் உம்மத்தைச் சார்ந்த ஒருவனாக நான் இருப்பதும்தான் என்னை இந்தக் கடிதத்தை எழுதத் தூண்டியிருக்கிறது. அல்லாஹ் உலகத் தலைவர்களுக்கு எனது வார்த்தைகளைப் புரிய வைப்பானாக. மேலும் அவர்கள் உலக அமைதியை நிலைநாட்ட தங்களின் பங்கை உற்சாகத்துடன் ஆற்றுவார்களாக. இல்லையென்றால், ஏதாவது ஒரு நாட்டின் அவசரம் மற்றும் விளைவுகளைப் பற்றி கவலைப்படாத செயல், இரண்டு நாடுகளுக்கிடையில் போர் ஏற்பட்டால், அந்த மோதல் அந்த நாடுகளுடன் மட்டும் முடிவுறாமல் அந்தப் போரின் தீப்பிழம்பு முழு உலகையும் சூழ்ந்து கொள்ளும். எனவே அது முழுவதும் நிகழக்கூடிய உலகப் போராக மூண்டுவிடும். இந்தப் போர் பொதுவான ஆயுதங்களால் நடைபெறாது. மாறாக, அணு ஆயுதங்களால் நிகழும். அணு ஆயுதப் போரின் விளைவு எப்படிப்பட்ட பயங்கரமான பேரழிவை ஏற்படுத்தக் கூடியதென்றால், அதன் பின்விளைவுகளை அந்தக் காலத்தில் உலகில் வாழும் மக்களை மட்டும் பாதிக்காது. மாறாக, நீண்ட கால விளைவுகள், எதிர்கால சந்ததியினர் குறைபாடுள்ள, ஊனமுற்றவர்களாக பிறக்கும் பயங்கர 'பரிசை' அளிக்கும். இதன் காரணமாக எந்த நாடும் நிகழக் கூடிய அழிவிலிருந்து பாதுகாப்பாக

உள்ளோம் எனக் கருதக் கூடாது.

எனவே மீண்டும் ஒருமுறை அல்லாஹ்வின் பெயராலும் அவனது தூதரின் பெயராலும் மனித குலத்தின் மீதுள்ள இரக்கம் மற்றும் அன்பினாலும் நான் தங்களை வேண்டுகிறேன். உலகில் அமைதி ஏற்பட உங்கள் பங்கை ஆற்றுங்கள்.

நல்வாழ்த்துக்கள் மற்றும் துஆவுடன்.

தங்கள் உண்மையுள்ள,



**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் சமுதாயத்தின்

தலைவர்

# ரஷ்ய கூட்டமைப்பின் அதிபருக்கு எழுதப்பட்ட கடிதம்

MIRZA MASROOR AHMAD
HEAD OF THE AHMADIYYA COMMUNITY
IN ISLAM

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي على رسوله الكريم
وعلى عبده المسيح الموعود
خدا کے فضل اور رحم کے ساتھ
هو الناصر

16 Gressenhall Road
Southfields, London
SW18 5QL, UK

19, செப்டம்பர் 2013

மேதகு
விளர்திமிர் புட்டின்,
ரஷ்ய கூட்டமைப்பின் அதிபர்
கிரம்ளின்
23 லையின்கா வீதி
மாஸ்கோ 103132 ரஷ்யா

அன்பிற்குரிய குடியரசு தலைவர் அவர்களே!

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தலைவர் என்ற நிலையில் நான் தங்களுக்கு இக்கடிதத்தை எழுதுகிறேன்.

204 நாடுகளில் பரவியுள்ள இந்த ஜமாஅத் முழு உலகிலும் அமைதியை விரும்புகின்ற, அமைதியை வளர்க்கின்ற ஜமாஅத் ஆகும்.

உலகில் இன்று நிலவும் சூழலில் பலவகை பேச்சிலும், உரையாற்றலிலும் நான் இந்த உலக மக்களை, தங்களை படைத்தவன் மீதும் படைக்கப்பட்டவற்றின்மீதும் உள்ள தங்களின் பொறுப்புகளையும், கடமைகளையும் பற்றி நினைவூட்டி வருகிறேன். தங்களுடன் நேரடியாக உரையாட எனக்கு சந்தர்ப்பம் கிடைக்க முடியாததற்கு வருந்துகிறேன். எப்படி இருப்பினும், தற்போது சிரியாவில் வெடித்துள்ள சூழ்நிலை, என்னை தங்களுக்கு கடிதம் எழுதத் தூண்டியது.

**தங்களது முயற்சியால், உலகை ஒன்றுபடுத்தி போர்க் களத்திற்கு செல்லாமல், பேச்சு வார்த்தைக்கு கொண்டு வந்ததை நான் பாராட்டுகிறேன்.** ஒரு தாக்குதல் போரை உருவாக்கி அந்த பகுதியில் மட்டுமல்லாமல், உலகப் போரின் பக்கம் இட்டுச் சென்றிருக்கும் முக்கிய மேற்கத்திய பத்திரிகையில், சமீபத்திய தங்களது ஒரு கட்டுரையை படித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அதில் தாங்கள், இதுபோன்ற செயல்கள் மிகவும் ஆபத்தானவை; இவை போர் பரவுவதன் பக்கம் இட்டுச் செல்லும் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். தங்களின் இந்த நிலைப்பாட்டால், வல்லரசுகள் தங்களின் செயல்களை நிறுத்திக் கொண்டன. அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஒரு நிலைப்பாட்டை எடுத்து இராஜ தந்திர வழியியில் இப்பிரச்சனையைத் தீர்க்க ஒப்புக் கொண்டனர். நிச்சயமாக இது இந்த உலகை பயங்கர அழிவிலிருந்து காப்பாற்றியது என நான் நம்புகிறேன். நாடுகள், சுதந்திராமாக தன்னிச்சையாக முடிவுகள் எடுத்திருப்பதால், லீக் ஆஃப் நேஷன்ஸ் (League of Nations - நாடுகள் இணைக் குழுமம்) க்கு ஏற்பட்ட கதியைத்தான் ஐக்கிய நாடுகள் சபையும் அடைந்திருக்கும் என்ற தங்களின் கூற்றை நான் ஒப்புக் கொள்கிறேன். நிச்சயமாக போரின் தீப்பொறி பற்ற வைக்கப்பட்டது. அது அதிஷ்டவசமாக பலவீனமாகி விட்டது. ஆக்கப்பூர்வமான ஒரு முடிவை எடுப்பதன் மூலம் எல்லாம் வல்ல இறைவன் போர் என்ற அபாயத்தை ஒரேயடியாக நீக்குவானாக. தங்களது வீட்டோ ((Veto) அதிகாரத்தை பற்றி மட்டும் கவலைப்படாமல் முக்கிய வல்லரசுகள் சிறிய நாடுகளை அக்கறையுடனும், மரியாதையுடனும் நடத்த முன் வர வேண்டும்.

எதுவாக இருப்பினும், அமைதியை நிலைநாட்டுவதற்கான உங்களது முயற்சிகளுக்கு நன்றி கூறும் விதமாக தங்களுக்கு இக்கடிதத்தை எழுத என்னைத் தூண்டியது. இது ஒரு தற்காலிக முயற்சியாக இருக்கக் கூடாது என நான் பிரார்த்தனை செய்கிறேன். அமைதியை நோக்கி, தாங்கள் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும் என்பதே என் பிரார்த்தனையும் ஆகும். இதை அடைவதற்கான நல்வாய்ப்பை எல்லாம் வல்ல அல்லாஹ்

தங்களுக்கு வழங்குவானாக.

உலக அமைதிக்காக, எப்போதெல்லாம் எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறதோ, நீதியின் மூலமாக அமைதியை நிலை நாட்ட நான், மக்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். எனது சில உரைகள், 'World Crisis and the Pathway to Peace' என்ற நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்த நூலின் ஒரு பிரதியை தங்களுக்கு அன்பளிப்பாக இத்துடன் இணைத்துள்ளேன்.

பிரார்த்தனை மற்றும் நல்வாழ்த்துக்களுடன்
தங்கள் உண்மையுள்ள,



**மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது**
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்
உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின்
தலைவர்

# சொற்களின் விளக்கம்

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்:** காதியானைச் சார்ந்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களின் வாக்களிக்கப்பட்ட இமாம் மஹ்தி, மஸீஹ் எனும் வாதத்தை ஏற்றுக் கொண்ட ஒரு முஸ்லிம் சமுதாயம். இந்த சமுதாயம் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களால் 1889-ல்தோற்றுவிக்கப்பட்டது. தற்போது ஐந்தாவது கலீஃபா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அல்லாஹ் இவரது உதவியாளனாக இருப்பானாக) அவர்கள் தலைமையில் உள்ளது. இந்த சமுதாயம் அஹ்மதிய்யா ஜமாஅத் எனவும் அறியப்படுகிறது. இந்த சமுதாயத்தின் உறுப்பினர் அஹ்மதி முஸ்லிம் என அழைக்கப்படுகிறார்; அல்லது சாதாரணமாக அஹ்மதி என அழைக்கப்படுகிறார்.

**அல் இமாமுல் மஹ்தி:** வாக்களிக்கப்பட்ட சீர்திருத்த வாதிக்கு புனித நபி முஹம்மது (ஸல்) அவர்களால் இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதன் பொருள் நேர்வழிப்படுத்தப்பட்ட தலைவர் என்பதாகும்.

**ஆமீன்:** பிரார்த்தனைக்குப் பின் கூறும் சொல். இதன் பொருள் அல்லாஹ் அவ்வாறே செய்வானாக என்பதாகும்.

**அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ:** இஸ்லாமிய பாரம்பரிய வாழ்த்து. இதன் பொருள் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் கருணையும் அருளும் உங்கள் மீது உண்டாவதாக என்பதாகும்.

**ஹஸ்ரத்:** இறையச்சமும் தூய்மையும் உடைய ஒருவருக்கு பயன்படுத்தப்படும் மதிப்புக்குரிய சொல். அகராதிப்படி இதன் பொருள் புனித மிகு என்பதாகும்.

**நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்):** இஸ்லாத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் முஹம்மது அவர்களுக்கு பயன்படுத்தப்படும் சிறப்புச் சொல். அதன் பொருள் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் அவர் மீது உண்டாவதாக என்பதாகும்.

**திருக்குர்ஆன்:** மனித குலத்திற்கு வழிகாட்டுவதற்காக அல்லாஹ் அனுப்பிய வேதநூல். இந்நூல் சொல்லுக்குச் சொல் ஹஸ்ரத்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு 23 ஆண்டு காலமாக இறைவெளிப்பாட்டின் மூலம் அருளப்பட்டது.

**கலீஃபா:** வழிவழியாக வருபவர். அல்லாஹ்வின் கலீஃபா என்ற சொல் இறைதூதருக்குப் பயன்படுத்தப்படுகிறது. தூதரின் கலீஃபா என்ற சொல் அவருக்குப் பின் வரும் அவரது பணியைத் தொடருபவருக்குக் கூறப்படுகிறது.

**கலீஃபத்துல் மஸீஹ்:** வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பின் தோன்றுபவருக்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் வழங்கும் ஒரு சொற்றொடர்.

**கிலாஃபத்:** இந்த சொல்லின் அகராதி விளக்கம் வழிவழியாக பின்வருபவர்.

**மஹ்தி:** நேர்வழிபடுத்தப்பட்டவர் என்பதே இச்சொல்லின் அகராதிப் பொருள். இறுதி காலத்தில் எதிர்பார்க்கும் சீர்திருத்தவாதிக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய சொல்.

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ்:** இச்சொல் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் காதியானைச் சேர்ந்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களைக் குறிக்கிறது. அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பின் விளைவாக அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட இமாம் மஹ்தி மற்றும் மஸீஹ் ஆவேன் என வாதிட்டார்கள்.